# மனசுக்குள் மழை

காஞ்சனா ஜெயதிலகர்



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மனசுக்குள் மழை |
| ஆசிரியர் | : காஞ்சனா ஜெயதிலகர் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : நவம்பர், 2006 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 232 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கொடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆ 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |


**விலை: ரூ.70.00**




# மனசுக்குள் மழை

# மனசுக்குள் மழை

## 1



குவித்த வேர்க்கடலைக் கூறுகளைப் போல ஆட்கள் அப்பிய பேருந்துகள் அங்கு அடுக்கடுக்காய் நின்றன.

கூட்டத்தில் மோதாமல் உரசாமல் சாமர்த்தியமாய் வளைந்து விரைந்தாள் அமோகா. ஆனால் அப்பேருந்து நிலையத்திலிருந்த கூட்டத்தின் பார்வையிலிருந்து அவளால் ஒதுங்க முடியவில்லை.

அவளது உயரமும் ஒயிலான உடலும் முக்கியமாய் பிரகாசமான அவளது தேன் பழுப்பு விழிகளும் சுருண்டு அடர்ந்த கூந்தலும் அவளை எந்தக் கூட்டத்திலும் தனித்துக் காட்டும். இலைகளின் நடுவே ரோஜாச் செண்டு எடுப்பாய் தெரியாதா என்ன?

ஆனால் அவள் யாரையும் பொருட்படுத்தாமல், தன் காரியமே கண்ணாக தான் ஏற வேண்டிய பேருந்தைத்

தேடி, தான் அமர வேண்டிய இருக்கையையும் பார்த்துக் கொண்டாள். மறுபடி போய் தன் பெரிய பெட்டி பையை அவள் எடுத்து வந்தபோது பலர் ஓடி வந்து உதவினார்கள்.

அழகிய பெண்ணிற்குக் கிடைக்காத உதவியா? யாரது முகத்தையும் ஏறிடாமல் பொதுவாய் ஒரு 'நன்றி' சொன்னவள் தன் இருக்கையில் அமர்ந்து 'செல்' பேசி எண்களைத் தட்டினாள்.

பேருந்து முக்கால்வாசி நிரம்பியிருந்தது. அதன் பல ஜோடி கண்கள் தன்னையே மொய்ப்பதை அவள் உணர்ந்தாலும், யார், எவர் என்று நோட்டமிடவில்லை அவள். தனித்து பயணிக்கப் பழகியவள் கற்ற முக்கிய பாடம் அது - யாரிடமும் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்வதில்லை என்று.

அது அழகான தனக்கு ஆபத்தாய் முடியக் கூடும் என்று உணர்ந்து சிறு அலட்சியமான போக்கைத் தன் பாதுகாப்பு கவசமாக்கி இருந்தாள்.

'பேசி' தொடர்பு கிடைத்ததும் அவள் முகம் மலர்ந்தது.

மெல்லிய குரலில் பேசலானாள்.

''அப்பா?''

''அமு செல்லம் - கிளம்பியாச்சா?''

''ஒரு வழியாய்... இனி சென்னையின் பரபரப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி.''

''அப்படி முடிவெடுக்காதேம்மா - பத்து வருஷங்களாய் சென்னையில் வளர்ந்த பொண்ணு நீ. அந்தக் கலகலப்பிற்குப் பழகிய உன்னால் இந்தக் கடற்கரை குடிசையில் காலம் தள்ள முடியுமா?''



''அதுதானேப்பா நம்ப வீடு? இங்கே பள்ளிக்கூட நாட்களில் நான் வெளியே சுற்ற முடியாது. எப்போதேனும் செங்கல்பட்டு சித்தி வீட்டிற்கு போனதோடு சரி. கல்லூரியில் சிநேகிதிகளோடு சுற்றினேன்னு வைங்க. இப்ப ஆறு மாதங்களாய் கிடைச்ச ஒரு வேலையைச் செய்து, அந்த அனுபவத்தை ரசிச்சேன். ஆனா இனி என் நாட்கள் உங்களோடுதான்.''

''இங்கே உனக்குப் பேச்சுத் துணைக்கும் ஆளிருக்கா தேடா.''

''ஏம்ப்பா... நீங்கதான் நல்லா பேசறீங்களே.''

அவர் சிரித்தது கேட்டது. மேல் உதட்டை மூடும் வெண்ணிற மீசையை இடது கையின் பெருவிரல், ஆட்காட்டி விரலால் ஒதுக்கியபடி அப்பா வாய்விட்டுச் சிரிப்பது இவளது மனக் கண்ணிற்குத் தெரிந்தது - மீசையோடு போட்டியிடும் அடர்த்தியில் வெண்ணிற தாடி, தோள் வரைப் புரளும் வெள்ளைச் சுருள்முடி... அவரது புருவங்கள் மட்டும் இன்னும் கருப்புதான் - அதன் கீழ் பளீரென்ற பழுப்புக் கண்கள் - இவளுடையதைப் போல... இல்லையில்லை இவள்தான் அப்பாவின் அந்த அபூர்வ தேன்நிற விழிகளைக் கொண்டு பிறந்திருக்கிறாள் -

அப்பாவின் மூக்குதான் சற்று தட்டை. அதில் இவள் தன் தாயைக் கொண்டு விட்டாள் போலும். செதுக்கிய கூர் நாசியில் ஒற்றைப் பொடி வைரத்தை மின்ன விட்டிருப்பாள் - மற்றபடி காது, கையில் சன்ன வெள்ளி வளையங்களே அமோகாவின் அலங்காரம்.

அப்பாவைப் பார்த்து மகளும் உடுத்துவது கதர்தான்.

''உன்னைப் பாக்கறவங்க உன்னைக் கலைஞின்னு எண்ணுவாங்க அமு. உயர்நிலை ஓவியர் போலிருக்கறே?'' சீண்டுவார் தந்தை.

''நான் சிறந்த ஓவியர் - லீலாதரணியின் மகள் - அவ்வளவுதான்.''

இவளும் பணிவுடன் பீற்றுவாள்!

கொச்சினை ஒட்டிய ஒரு கடற்கரை கிராமத்தில் வசித்த லீலாதரணியின் ஓவியங்கள் சுடச்சுட விற்றுப் போகும். வாங்குபவர்கள் பெரும்பாலும் அயல்நாட்டவர்.

''இந்தக் கலையை நான் உயிராய் நினைக்கிறேனம்மா'' என்பவரின் படைப்புகளிலும் ஜீவன் ததும்பும். அவரது விரல் வழி வடியும் வண்ணங்களில், வடிவங்களில் உயிரை உணரலாம். ஆனால் அவற்றை அவர் பெரும் விலைக்கு விற்பதில்லை.

''சென்னை ஓவியக் கண்காட்சிகளில் ஒவ்வொன்றும் இருபது, நாற்பதாயிரம்னு விற்கும்ப்பா'' - மகள் எடுத்துச் சொல்வாள்.

''அது வியாபாரம்மா - கலையை சாமர்த்தியமாய் காசாக்கிடறாங்க... நம் தேவை எளியவை - அதற்கேற்ற வருமானம் போதும்.''

''உன்னதக் கலையை உயர்வான விலைக்குத் தர்ரணும்ப்பா.'' விடாமல் வாதாடுவாள்.

''அப்ப பெரும் வசதியுள்ளவங்க மட்டுமே இவற்றை வாங்க முடியும். நடுத்தர வர்க்க மக்களின் வீடுகளையும் என் ஓவியம் அழகூட்டட்டுமே..''

''சிறந்த ஓவியர் மட்டுமல்லப்பா நீங்க நல்ல மனிதரும் கூட...''

மெச்சிக் கொள்வாள் மகள்.

அப்பா அருமையானவர்தான் - மிக எளிய ஆசைகள், நோக்கங்களுடன். அவருடன் கழித்த விடுமுறைகள் மிக



ரம்மியமானவை. கடற்கரையில் வீடு கட்டுவதும், கிளிஞ்சல்களைத் தேடி சேகரிப்பதும், உப்புநீரில் குளிப்பதும், தாங்களே சமைத்துச் சாப்பிடுவதுமாய் கழியும் நாட்களில் சில மணி நேரங்கள் அவர் வரைந்து கொண்டிருப்பார். அப்பாவின் தூரிகைகளைக் கழுவி உதவுபவள், ஒருமுறை அவரது ஓவியப் பெண்ணிற்கு தனது சோவி, சங்குகளை ஆபரணமாய் ஒட்டி வைக்க, மகளை முத்தமிட்டவர் அந்த ஓவியத்தை தன் வரவேற்பறையில் தொங்க விட்டார். அந்த சின்ன வீட்டின் அமைதியை, அன்பை அவள் வேறெங்கும் அனுபவித்ததேயில்லை.

ஆனால் பெற்றவருக்கு அவள் அவரது கிராமத்திற்கு வருவதில் கவலை.

''ஆக வெறுமே இந்தக் கிழவனை நம்பி நீ இங்கே வர்றே.''

''நீங்களும் இனி என் தயவில்தான்'' - செல்லமாய் மிரட்டினாள்.

''இருக்கேன் தாயே - எனக்கு வேறென்ன சந்தோஷம் வேணும்? ஆனால்..''

''சொல்லுங்கப்பா... என்ன பிரச்சனை நான் அங்கே வர்றதில்?''

''நீ பட்டணத்தில் இருந்தால் வேறு சில விஷயங்களுக்கு வசதி...''

''என்ன மாதிரி விஷயங்கள்? படிப்புதான் முடிஞ்சிருச்சே..''

''இந்த பருவத்திற்கான மிக முக்கியமான விசேஷம்ம - கல்யாணம்!''

''கிராமத்திலிருக்கவங்களுக்குக் கல்யாணம் ஆற தில்லையாப்பா?''

''உனக்கு ஏற்றாற்போல ஒரு மணமகன் கிடைக் கணுமே.''

''நல்ல குணமுள்ளவனாய் ஒரு ஆண்மகன் போதும்.''

''ம்ஹூம்... எனக்கு ராஜகுமாரன் போலொரு மாப் பிள்ளை வேணும்மா.''

''சரி அந்த ராஜகுமாரன் கப்பலில் வந்து நம் கொச்சி துறைமுகத்தில் இறங்கட்டுமே.''

மறுபடி சிரித்தார் - ''உன் வாக்கு பலிக்கட்டும்டா அமு... நேரமாச்சே... சீக்கிரம் பஸ்ஸில் ஏறு.''

''ஏறியாச்சுப்பா... பஸ்ஸிலிருந்துதான் பேசறேன்.''

''ஓ... அந்த செல் - போன் வசதிதான்.. இங்கே சிக்னல் இல்லைன்னு பேசிக்கறாங்களே.. இங்கே வர்றது உனக்கு வசதிக் குறைவுதான்.''

''நா அங்கே வர்றது உங்களுக்காய் மட்டுந்தான் அப்பா செல்லம்.''

சின்னக் குரலில் இவள் கொஞ்ச, மறுமுனையில் அப்பா ஆனந்தமாய் சிரித்தார்.

சுத்தப்படுத்தப்பட்ட அச்சிறிய வீட்டை ஒரு முறை சுற்றி வந்தாள் அமோகா. திரும்பிய பக்கமெல்லாம் அது ஒரு கலைஞனின் இருப்பிடம் என்பதைக் காட்டியது. இதமான இசையும் கசிந்து அதற்கு அழகு சேர்த்திருந்தது.

''அட்டா... ஒரு பெண்ணிருந்தால் வாழ்க்கை வித்தி யாசந்தான்.''



''தொந்தரவுன்னீங்க?''

''இன்னல் இல்லாத இன்பந்தான். மற்றபடி எல்லா இடத்திலேயும் வர்ணமும், ஓவியங்களுமாய் சிதறிக் கிடக்கும். போன வாரம் நான் வரைஞ்சதெல்லாம் டவு னிற்கு எடுத்திட்டுப் போனே இல்லியா?''

''ஆமப்பா ஃபோர்ட் கொச்சினின் கடைத் தெருவிற்குப் போனேன்... இருபுறமுமுள்ள கலைநயமான கடைகளைப் பார்க்க ஆசை. உங்களின் ரெண்டே ஓவியங்கள் மட்டும் விற்காமலிருந்தன. பொருத்தமான மரச் சட்டமில்லை யேப்பா... ஆக இப்ப நீங்க வரைந்ததற்கான சட்டங்களை நானே தேர்ந்தெடுத்து போடச் சொன்னேன்.''

''எனக்கொரு சாமர்த்திய காரியதரிசி ம்ம்?''

மகளின் சுருண்ட கூந்தலைக் கோதினார்.

''சீருடை போட்ட பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் போல எல்லாவற்றுக்கும் ஒரே தினுசான சட்ட விளிம்பு சரியில்லை... அந்தந்த ஓவியத்திற்கேற்ற சட்டம்னால் அழகு கூடும்.''

''சரிதான்டா.''

''விலையையும் உயர்த்தி நிர்ணயிக்கலாம்.''

''திறமையான வியாபாரியுந்தான் நீ!''

''கடைத்தெருவில் வேறு விதமான பாராட்டுக் கிடைச் துப்பா.''

''என்னது?''

''ரொம்ப அழகான வியாபாரியாம்!''

தகப்பனின் முகம் சற்றுக் கடினப்பட்டது.

''கடைத்தெருவிற்கு இனி நீ தனிச்சுப் போக வேண்டாம் அமு.''

''எல்லாம் நமக்குத் தெரிஞ்சவங்கதானேப்பா... லீலா தரணியின் மகள்னு எனக்கு ஒரே வரவேற்பு, உபசரிப்பு.''

''ம்ம்... ஆனா கலவையான மக்கள், மனங்கள்... நீ ஜாக்ரதையாய் இருக்கணும்.''

''அதுவும் உண்மைதாம்ப்பா.. செய்திகளெல்லாம் விநோதமாய் வருது -

மனைவி கணவனைக் கொலை, கணவன் மாமனாரைக் குத்திக் கொலைன்னு செய்தித்தாளை வாசிக்கும்போது, உலகத்தில் யாரைத்தான் நம்பறதுன்ர மலைப்பு.''

''அது அபூர்வம்மா - பெருவாரியான தம்பதிகள் நிறைவாத்தான் வாழறாங்க. நானும் உங்கம்மாவும் அத்தனை மகிழ்ந்திருந்தது சாவுக்கேப் பொறுக்கலை - அவளைப் பிய்ச்செடுத்துகிட்டுப் போயிருச்சு. ஆனா சாவும் கூட எங்க நேசத்தை முழுசாய் அழிக்க முடியலை.''

தன் நெஞ்சைத் தொட்ட அவரது நீண்ட விரல்கள் நடுங்கின. மனைவியின் நினைப்பைக் கூடத் தாள முடியாத தந்தையிடம் தன் தாயைப் பற்றி அதிகம் பேசத் துணிந்ததில்லை அமோகா.

'அம்மாவின் குரல் ரொம்ப இனிமையாப்பா? நான் பேசறது அம்மாவைக் கொண்டிருக்குதா?'

'அம்மா என்ன உயரம்? இந்த என் மூக்கு நிச்சயம் அவங்களோடதுதான் - சரியா?'

'அம்மாக்குப் பிடிச்ச நிறம், சாப்பாடு - என்ன?'

'அம்மாவின் குடும்பத்தோடு ஏன் நமக்குத் தொடர்பேயில்லை?'



என்றெல்லாம் குடைந்திருந்தால் அவர் தாள மாட்டார்.

''ஆனால் ஒண்ணு அமு செல்லம் - உனக்கும் எங்களுக்கு வாய்த்தது போல ஒரு காதல் வாய்க்கணும் - வாழ்வு அமையணும். நீயும் உன் ராஜகுமாரனும் மனமொன்றி தீர்க்காயுளோடு வாழணும்.''

''நன்றிப்பா... உங்க ஆசீர்வாதத்திற்கு. நான் இப்ப கொஞ்சம் ஜிம்மு கடைவரை போயிட்டு வரட்டாப்பா?''

''கடுங்காற்றடிக்குதேம்மா - மழை வரும் - பிறகு போகலாம்.''

''என் சிநேகிதி கோபிகாவிற்கு நேற்றே குழந்தை பிறந்திருக்கணும். நம் வீட்டு தொலைபேசி வேலை பார்க்கலை ரெண்டு நாளாய். அங்க போய் ஒரு போன் போட்டு விவரம் கேட்டாச்சுன்னா நிம்மதியாய் தூக்கம் வரும்.''

''குடை எடுத்துக்கோடா... ரொம்ப இருட்டறதுக்குள்ளே ஓடி வந்திரு.''

இவளது கையின் குடையைக் காற்று பிய்த்து எறிய முயன்றது! ஜிம்மு கடையிலும் 'பேசி' தொடர்பு தெளிவாயில்லை. இவள் கிளம்புவதற்குள் மின்சாரத்தை அறுத்து விட்டு விட்டு சீறிக் கிளம்பியது மழை - வானமே கிழிந்து விட்டது போல!

அரிக்கேன் விளக்கின் மஞ்சள் ஒளியில் மூங்கில் கழிகளும் ஓலையுமாய் அந்தச் சின்னக் கடை எப்படிக் கரைந்து போகாமல் நிற்கிறதோ ஆச்சரியத்துடன் எதிரே ஆரவாரித்தக் கடலைப் பார்த்தபடி நின்றாள் - மணி ஏழு கூட ஆகவில்லை என்றாலும் மின்வெட்டும் மழையுமாய் அந்தப் பிரதேசத்தை இருட்டடித்திருந்தன. கடல், கரை, ஆகாயம் என்ற பாகுபாடே தெரியாமல் மூன்றையும் இணைத்திருந்தது நீர். கடைக்கும் கடலுக்கும் இடையே

கிடந்த தார் ரோடும் கூட நனைந்து பளபளவென்று நீர் போலவேத் தோன்றியது. அவ்வப்போது வெட்டிய மின்னல் அத்தனையையும் பால் போல நிறம் மாற்றியது! உலகத்து பாலெல்லாம் தன்னைச் சூழ்ந்திருந்தது போலொரு மயக்கத்தில் அந்த அடை மழையை ரசித்து நின்றாள்.

''பாவம் தரணி ஸார் உன்னையத் தேடுவாரும்மா...'' ஜிம்மு கவலைப்பட்டான்.

''அப்பா சொன்னது போல மழை வந்திடுச்சு... சிநேகிதியோடு பேசவும் முடியலை.''

''நம்மூர்ல இதெல்லாம் சகஜம்மா... ஆனா வர்ர டூரிஸ்ட்டுங்க இதையெல்லாம் பொருட்படுத்தறதில்லை... அவங்களுக்கு இந்தக் கடலும் காத்தும் போதும்.''

தனக்கும் கூட இவையே போதும் போல முறுவலித்தாள் - வெளியே பொழிந்த மழையின் சாரல் இவளை நனைத்திருந்தது. தன்னை ஒட்டிய வெண்ணிற ஆடையுடன், மூங்கில் கழியொன்றில் சாய்ந்து நின்றாள். அரிக்கேனின் பொன் ஒளி அவளில் இங்கும் அங்குமாய் படிந்திருந்தது.

இருளைக் கிழித்தபடி மிதந்து வந்தது ஒரு கார் -

அதிக உறுமலோ அசைவுகளோ அற்ற உயர்ரக வாகனம். வேகம் குறைந்து ஒரு படகின் லாவகத்துடன் அது கடைக்கு அருகே வந்து நின்றது - துளித்துளியாய் இறங்கிய காரின் கண்ணாடிக் கதவை ஒரு வித லயிப்புடன் பார்த்திருந்தாள்.

உள்ளேயிருந்தபடி இவர்களைப் பார்த்தது மனித முகமா அல்லது ஒரு கந்தர்வனா?



அவன் பேசினான் -

''ஓவியர் லீலா தரணியின் வீடு எங்கே - சொல்ல முடியுமா?'' என்று!

## 2



கனவில் நடப்பவள் போல அறைக்குள் இப்படியும் அப்படியுமாய் சுற்றியவள் ஜன்னலருகே நின்றாள் - கூப்பிடும் தூரத்தில் கடல் மங்கலான நிறத்தில் சோம்பலாய் அலைகளை உருட்டியபடி கிடந்தது. கடல் பறவைகள் தங்களுக்கே உரிய விநோத சத்தங்களை எழுப்பியபடி இலக்கின்றி பறந்தன... நனைந்த மணல் நிறம் மாறியிருந்தது. கடற்கரையில் வழக்கமான கூட்டமில்லை.

மழை காலத்தில் உல்லாச பயணிகளின் கூட்டம் இருக்காது தான்.

நேற்றிரவின் மழையால் நிலம் மாறியிருந்தது... அந்த மழை தனக்குள்ளேயும் ஏதோ மாயம் நிகழ்த்தியிருந்ததோ?

மனமும் குளிர்ந்து குழைந்திருந்தது -

உள்ளேயிருந்து ஒரு புது வாசனைக் கிளம்பி அவளைச் கிறங்கடித்துக் கொண்டிருந்தது!

காரின் கண்ணாடி இறங்க, தெரிந்த அவன் முகம் ம படி மறுபடியுமாய் மனக்கண்ணில் தோன்றி இம்சித்தது ஒரு வித சுக இம்சை!

அவனை சந்திப்பதற்காகவே அவள் நேற்று ஜிம் மின் கடைக்குப் போனாளோ?

'கடவுளின் செயல்' 'விதி' என்பதெல்லாம் உண்மை தானோ?

அவனுக்கென்றே காத்திருப்பது போலல்லவா அந்தக் காற்று, மழையில் நின்றாள்?

அவனும்தான் நேரே போகாமல் ஜிம்மு கடையில் ஏன் நின்றான்? போன வாரம் அப்பாவிடம் வேடிக்கையாய் தான் சொல்லிச் சிரித்த ராஜகுமாரன் இவன்தானா?

தன்னைத் தேடி வந்தே விட்டானா?

ச்சே... முன்பின் அறியாதவனைத் தன் ராஜனாய் நினைப்பதெல்லாம் தப்பு. ஆனால் அப்படி வந்து நின்றவன், தன் அப்பாவின் பெயரைச் சொன்னது... அது அசாதாரணம் தானில்லையா?

உள்ளத்தில் பொங்கிய புதுக் களிப்பு அவள் உடலெங்கும் நுரைக்க ஓடி சிலிர்க்க வைத்தது -

கண் செருக அவளது கனவு தொடர்ந்தது.

கதை அத்தோடு முடியவும் இல்லையே... அது ஒரு ஆரம்பம் தான்.

இன்பக் கனவின் துவக்கம்.

''ஓவியர் லீலா தரணியின் வீடு எங்கே?'' என்ற அவனது விசாரிப்பிற்கு மழையின் இரைச்சலை மீறிக் கத்தினான் ஜிம்மு.

''பக்கத்தன்னே - நேரே போய் இடதுபுறம் திரும்பணும்.''

''நன்றி'' மீண்டும் கண்ணாடி உயர, ஜிம்மு மீண்டும் கத்தினான் - ''ஸாரே ஒரு மினிட், இந்தப் பெண்ணின்ட அப்பாதான் தரணி ஸார் - மழைக் கொட்டுது - பெண்ணையும் வீடு கொண்டு சேர்க்காமல்லே?''



புதியவனின் பார்வை இவளில் பதிய, ஜிலீரென்றது!

ஜிம்மு மீது கோபமும்தான் - இந்த முட்டாள் தன்னை ஒரு அறிமுகமற்றவனோடு ஏற்றி அனுப்பத் துணிகிறானே என்று! பயணத்தின் போது பிறர் முகத்தைப் பார்க்கவும் செய்யாதவள் ஒரு புதியவனோடு சேர்ந்து பயணிப்பது என்றால்? திரும்பி அவனை முறைப்பதற்குள் ஜிம்மு கடையை விட்டு வெளியே வந்து இவள் கையிலிருந்த குடையை வாங்கி விரித்து விட்டான்!

''மழை இப்போதைக்குக் குறையாது அமு... அப்பா கவலைப்படும்.. கிளம்பு நீ.''

''ஷ்... ஜிம்மு... இவர் யார்னே எனக்குத் தெரியாது.''

''அவர் கேட்டது நம்ப சாரைத்தானே - அங்கதன்னே போகுது காரு?''

''அதனாலே?'' திடீரெனத் தோன்றிய ஒரு விநோதக் குளிரில் அவளது உடலோடு உதடுகளும் உதற ஆரம்பித்திருந்தன.

''ஆபத்தில்லை அமு.. போய் ஏறிக்கோ.''

''அப்பாக்குப் பிடிக்காது.''

''நானும் கூட வரட்டே?''

''கடைய மூடாம... இப்படியே விட்டுட்டா?''

''நம்ப ஊருல எந்தா பயம்?''

''ம்ம் பயமில்லல்ல? நானே போறேன் ஜிம்மு..'' என்றவள் கடைக்கும் சாலைக்கும் இடையே சற்று தாழ்வான இடத்தில் தேங்கியிருந்த நீரைக் கடந்து காரை நோக்கி நடந்தாள்.

யோசித்துப் பார்த்தால் காரில் அமர்ந்திருந்தவன் இவளை வரச் சொல்லவில்லை! அவன் காரை எடுக்காமல் இருந்ததே தங்களுக்கான அனுமதியாய் எடுத்துக் கொண்டனர் இவர்கள் இருவரும்!

''ரொம்ப நன்றி சாரே... பெண்ணைப் பத்திரமாக் கொண்டு சேர்க்கணும்.'' கார் கதவை மூடியபடி ஜிம்மு சத்தியதற்கும் பதிலில்லை!

மழைக் கம்பிகள் சூழ்ந்திருக்க, கார் நகர்ந்தது.

இவளை ஏற்றி விட்ட பின்பு ஜிம்முவிற்கு பதட்டமாகி விட்டது போலும் - மழை நின்றதுமே ஓடி வீட்டிற்கு வந்தவனின் கண்கள் விரிந்தன - ஏனெனில் காரை ஓட்டி வந்தவன் இவள் வீட்டில் தோளில் தலை துவட்டிய துண்டுடன் தேநீர் பருகிக் கொண்டிருந்தானே!

நேற்றிரவு நடந்த அத்தனையும் கனவா, நிஜமா?

முன்னறைக்குப் போய் பார்த்தாள் - அவர்கள் தேநீர் கோப்பைகள் எல்லாம் அங்கே சாட்சிகளாய் இருந்தன!

குழந்தை வானத்து நட்சத்திரங்களைக் கண்டு புளகிப்பது போல அவற்றைப் பார்த்திருந்தாள்!

அவன் - அனந்தன் - அதுதான் அவனது பெயர் - நள்ளிரவு வரை அங்கேயே பேசியபடி இருந்தான்... இடையிடையே இவள் நீட்டிய தேநீரைப் பருகியபடி.

அப்பாவிற்கும் அனந்தனை மிகப் பிடித்திருந்தது.

அவர்களது பேச்செல்லாம் ஓவியர்களை, ஓவியங்களைப் பற்றியே.

''சென்னையில் நடக்கும் பிரபல ஓவிய கண்காட்சிகளை நான் தவற விடறதேயில்லை. ஸர் - ஆனால்



அதெல்லாம் ரொம்ப வியாபாரத்தனமாகவும் படும். அவற்றின் விலையும் வாங்குபவர்களின் தரமும் ரொம்ப நெருடலானவை - கலை ஆர்வத்தைவிட, சிகரெட்டை இடது கைக்கு மாற்றியபடி பணக்காரங்க கையெழுத்திட்டு நீட்டும் 'செக்'குகள் அவங்க அலட்டலை, ஆடம்பரத்தைத் தான் காட்டும்'' என்று அனந்தன் வருந்த, அப்பா ஒரு பெருமிதத்துடன் மகளைப் பார்த்தார்.

'பார்த்தாயா - என்னைப் போலவே சிந்திக்கும் மற்றொருவன்.' என்பதாய்!

''இன்னைக்கு ஃபோர்ட் கொச்சின் கடைத்தெருவிற்குப் போயிருந்தேன் - அங்கேதான் அந்த அழகான... ஜீவனுள்ள ஓவியங்களைப் பார்த்தேன். கேட்டால் ஓவியராய் உங்க பெயரைச் சொன்னாங்க... நீங்க பக்கத்தில் வசிப்பதாய் கேள்விப்பட்டதும் கிளம்பிட்டேன்.''

''இந்த மழையிலா?'' அமோகா கேட்டு விட்டாள்.

அதுவரை ஒரு பெண்ணும் தங்களோடு அங்கு இருந்ததையே உணராதவன் போல அவளை ஏறிட்டான்.

நனைந்த வெண்ணிற குர்தாவை மாற்றி விட்டிருந்தாள் - கருஞ் சிவப்பில் வெள்ளை நூல் வேலை செய்த பருத்தி சல்வார். வந்ததும் தரப்பட்டிருந்த துவாலையால் மேலும் துடைத்துக் கொண்டான்.

''இதே மழையிலதானே நீங்களும் போன் பேச வந்தீங்க?'' புன்னகைத்தான்.

''ம்ம்.. என் தோழிக்குப் பிரசவ நேரம் - குழந்தை பிறந்திடுச்சாங்கற ஆவல். அவளுக்காய்தான் நான் சென்னையில் மேலும் சில மாதங்கள் தங்கி - அவள் ரிஸைன் செய்த வேலையைச் செய்தேன்.''

''எனக்கும் அதே போலொரு ஆவலும் அவசரமும் தான் - இப்பேர்பட்ட ஓவியரை உடனே சந்திக்கணுங்கற உத்வேகம்!''

அப்பாவின் முகம் சிரிப்பில் விரிந்தது -

பாராட்டுதானே கலைஞர்களுக்கான முக்கிய சன்மானம்?

அதற்குப் பின் இவள் அவர்களது பேச்சில் குறுக்கிடாமல் அமர்ந்து பேச்சைக் கேட்டபடி இருந்தாள்.

மின்சாரம் இல்லாததால் வாசிக்கவோ, இசை கேட்கவோ வாய்ப்பில்லை. தவிர அவன் இங்கிருக்க, வேறு வேலை எதிலும் தான் ஈடுபட முடியாதெனவும் அமோகாவிற்குத் தோன்றியது.

''ரொம்ப சந்தோஷம் தம்பி - கலையின் மேல் இத்தனை ஈடுபாடுள்ள இளைஞர்கள் இருப்பது எனக்கு புத்துணர்வு தருது.. நீங்க வரைவதுண்டா?''

''நான் வெறும் வியாபாரி ஸர் - குடும்பத்திற்கு ஏற்றுமதியில் பரிச்சயம் உண்டு. மீன், நண்டு, இறால் எல்லாம் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யறேன் - அந்த பிஸினஸை கொச்சியில் இருந்தபடி கவனித்தாலும் சென்னையிலும் வேறு வியாபாரம் உண்டு. அப்படி சம்பாதிப்பதை இப்படி செலவழிப்பதில் திருப்தி'' - அவரது ஓவியங்களைச் சுட்டிக் காட்டினான்.

''சென்னையில் என்ன வியாபாரம்?''

''மரச்சாமான்களை செய்து விற்கறோம் - கேரள, தமிழ் சாயலிலுள்ள மர வடிவங்களுக்கு நல்ல வரவேற்பு... ஆக அதையும் ஏற்றுமதி செய்யலாம்னு திட்டமுண்டு. சில



தலைமுறைகளாய் இங்கே ஸெட்டிலான தமிழர்கள் நாங்க... அதாவது உங்களைப் போல...''

''நான் தமிழனான்னு எனக்குத் தெரியாதுப்பா.''

சுவாரஸ்யமாய் அவரையேப் பார்த்தான் இளையவன்.

''என்னைத் தத்தெடுத்து வளர்த்தவர் ஒரு தமிழர் - கர்நாடக சங்கீதத்தில் தேர்ந்த அவர், கல்யாணம் செய்துக்கலை.

தனிமை அவரை வாட்டியிருக்கக் கூடும். மூன்று வயதான என்னை - கடற்கரையில் தொலைத்து அல்லது விடப்பட்ட என்னை எடுத்து வளர்த்தார். கலைஞரான அவரது பரிச்சயத்தால் வேறு கலை வடிவில் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. வெலிங்டன் பகுதியில் வாழ்ந்த ஒரு யூதர் வரைந்த ஓவியங்களால் கவரப்பட்ட நான், அவரிடம் கெஞ்சி, அவரோடு தங்கிப் பணிவிடை செய்து, இந்தக் கலையைப் பயின்றேன்.''

'உங்க பரிச்சயம் கிடைத்தது என் பாக்கியம்' என்ற அனந்தனின் விழிகள் ஒரு கணம் இவள் மீதும் படிந்ததோ?

''ஆனால் நான் கல்யாணம் செய்தது ஒரு பக்கா தமிழ்ப் பெண்ணை.''

''அது உங்க மகளைப் பார்த்தாலே புரியுது.''

''எப்படி?''

''தமிழ் பெண்களுக்கே உரிய கம்பீரமான அழகு, நளினம், திருத்தமான தமிழ் பேச்சு, பண்பு எல்லாமிருக்கே... உங்க மனைவி?''

''ரொம்ப முன்னாலே இறந்துட்டா.''

விரித்த தன் உள்ளங்கைகளைப் பார்த்தபடி சொன்னார் -

''அவ என்னைக் கட்டி எதும் சுகப்படலை... பெரிய இடத்துப் பெண் அவ. தான் வசதியானவனில்லைன்னாலும் என் காதலும் பெரியது... அதாவது உன்னதமானதுங்கற கர்வத்துல அவளைக் கூட்டி வந்துட்டேன்.''

''அப்புறமெப்படி அவங்க சுகப்படலைங்கறீங்க? காதல் மனம் நிரம்ப இருந்தால், மற்ற பிரச்சனைகள் கணுக்கால் அளவு ஆழந்தானே?''

சொன்ன இளைஞனின் கைபற்றிக் கொண்டார் தாணி.

''உன்னோட பேசறது ஆறுதலாவும் இருக்குதுப்பா...''

ஒரு வழியாய் மழை ஓய்ந்திருந்தது - இவள் வார்த்த கோதுமை தோசைகளை சாப்பிட்டுவிட்டு அவன் கிளம்பினான்.

காலை உணவை ஒரு வழியாய் முடித்து அமோகா கை கழுவியபோது அவனது கறுப்பு நிற கார் மறுபடி வாசலில் வந்து நின்றது - பதறிப் போனாள்.

அவனை ஓடிப் போய் வரவேற்க வேண்டும் போலவும், உள்ளே ஓடிப் போய் ஒளிந்து நின்று எட்டிப் பார்த்திருக்க வேண்டும் எனவும் முரணான தவிப்பில் கரைந்தாள் -

மழையில் நெகிழ்ந்த நிலம் போல ஒரே சந்திப்பில் தன் மனமும் குணமும் ஏனிப்படி குழைந்து போயின?

உள்ளே ஓடிப் போய் அப்பாவிடம் அறிவித்தாள் -

''அப்பா நேற்று வந்தாரில்ல... அவர் வந்திருக்கார்.''

''யார் அனந்தனா?''



பரபரப்புடன் எழுந்தவர் தூரிகையைத் துடைத்து வைத்தார் - வர்ணத்தில் தோய்த்ததை. வேலையை முடிக்காமல் அவர் துடைப்பது அரிது.

அனந்தன் என்ற அவனது பெயரை பலப்பல முறை தன் மனது உச்சரித்திருந்தது தெரியாதது போல நின்றாள்!

''போய் உட்காரச் சொல்லும்மா.''

''ம்ம்.'' சாதாரண குரலில் முணங்கியவள் இயல்பாய் முயன்று முன்னறைக்குப் போனாள்.

வெள்ளிக் காகிதத்தில் ஒரு சின்ன மூட்டையை அவளிடம் நீட்டினான் - ''இனிப்பு பிடிக்குமில்லையா அமோகா? நேற்றைய இனிய நினைவுகளின் ஞாபகத்திற்காய் வாங்கிட்டு வந்தேன்.

இவன் கூச்சமின்றித் தன் பெயரைச் சொல்கிறானே? தனக்கு மட்டும் ஏன் அவன் பெயரை நினைக்கையிலேயே பிடரி குறுகுறுக்கின்றது?

''நல்லா தூங்கினியா?''

கோழி திருடிய கள்ளனாய் விழித்தாள்!

அவன் விழிகள் அவளதை ஊடுருவி நகைத்தன!

''நேற்றே எனக்குப் பிடிச்ச ஒரு ஓவியத்தைப் பார்த்து வச்சேன் - இப்ப அதை வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்றான் இவளையேப் பார்த்தபடி.

இவள் முகம் நிலத்தைத் துளைக்கும் தீவிரத்துடன் தாழ்ந்திருந்தது.

''வாப்பா அனந்தன் - எந்தப் படம் அது?''

அவரை வணங்கி விட்டு அவன் விரல்கள் சுட்டிக் காட்டியதைப் பார்த்தவர் தலையாட்டினார் -

''அது விற்பனைக்கில்லை. ஏன்னா அதில் அமுவின் கை வண்ணமும் இருக்குது.''

''ஓ... சித்திரமும் கைப்பழக்கங்கறது பொய்யில்லைப் போல?''

''சித்திரம் என்னுடையதுதான். அந்தப் பெண்ணின் ஆபரணங்களாய் சங்கு, சோவியை ஒட்டினது அமு.''

''ஓ? மிக நூதனமாய் இருந்ததால் ஆசைப்பட்டேன். வேண்டியது தரத் தயாராய் வந்தேன்'' - கைப்பையைத் தட்டிக் காட்டினான்.

''உட்கார்ந்து தேநீர் குடிக்க எந்தத் தடையுமில்லை'' என்ற தரணி இளைஞனின் தோளின் கை வைத்து அமரச் செய்தார்.

அதன் பிறகு தினமும் காலையும் மாலையும் அனந்தன் அங்கு வரத் தவறவில்லை.


இவளும் பார்த்துப் பார்த்து உடுத்திக் கொண்டாள் -

விதவிதமாய் சமைத்துப் பரிமாறினாள் -

சலிக்காமல் பேசினாள் - சிரித்தாள்.

ஆனால் அப்பா கல்யாணப் பேச்சை எடுத்தபோது மட்டும் பிடி கொடுக்காமல் நழுவினாள்...

## 3



''அப்பா என் வயசு இருபத்தி ஒண்ணுதான் - அதற்குள்ளே ஏன் கல்யாணப் பேச்செல்லாம்?''



''ஏன்னா எனக்கு வயசாயிடுச்சே செல்லம்.''

''உங்களுக்குச் சீக்கிரமே முடி நரைச்சிடுச்சு - எனக்கும் நரைச்சிடுமோப்பா?''

''இப்பதான் விதவிதமாய் சாயம் கிடைக்குதே... கலர் பண்ணிக்கோ.'' தன் தூரிகையை மகளின் கூந்தலில் ஒட்டினார்.

''உன் சித்திகூட போனதரம் அது பற்றி பேசினாங்க.''

தரணியை எடுத்து வளர்த்தவர், வேறு ஒரு சிறுவனையும் வளர்த்தார். அந்த தியாகுவிற்கு கலை மீது எந்த ஈர்ப்பும் எழா விட்டாலும், சுமாராய் படிப்பும், பின் ஒரு வேலையும் அமைந்து விட்டன. செங்கல்பட்டில் வசித்த தியாகுவின் மனைவி பங்கஜத்திற்கு அத்தானின் குடும்பம் மீது ஒரு பிரமிப்புதான் -

'அவங்க அழகென்ன, திறமையென்ன, பிரபலம் என்ன என்று' - அவ்வப்போது மகளுடன் வந்து போவதுண்டு. அந்த மகளுக்குத் திருமணமாகி விட்டதால் தன் திருமணத்தைப் பற்றியும் சித்தி கவலைப்பட ஆரம்பித்து விட்டார்கள் போலும்.

''உங்க கல்யாணத்தப்ப அம்மாக்கு என்ன வயசுப்பா?''

''21. அதான் சரியான வயசு - ஆனா அப்போ எனக்கு 36 வயசு! அதுவரை எனக்குக் கல்யாண நினைப்பில்லை... எண்ணமெல்லாம், வடிவம், வர்ண சேர்க்கை, புதுப்புது ஓவிய உத்திகளின் மேல்தான்.''

''ம்ம்..''

''அதிலும் நீ எங்களுக்கு ஏழு வருஷங் கழித்துதான் பிறந்தே அமு.. அப்ப என் வயசு நாற்பத்து மூன்று.''

''இப்ப அறுபத்து நாலுங்கறது அப்படி ஒண்ணும் குடுகுடு கிழட்டு வயசில்லையேப்பா.''

''மனம் முதுமையாகும் வரை தாக்குப் பிடிக்கலாம்... உங்க அம்மா இறந்ததுமே என் வாலிபம், துடிப்பெல்லாம் போயிடுச்சுடா.''

அப்பாவின் கண்கள் கலங்கினதைக் கவனித்தவள் பேச்சை மாற்றினாள் -

''திருமண வாழ்க்கைப் பற்றிய ஒரு வர்ணனை வாசிச்சேன்ப்பா -

''அது பட்டாசுக் கடை போலவாம்! முதல் ரெண்டு வருஷங்களுக்கு மனைவி பூமத்தாப்பாய் சொரிய, கணவர் அதிர் வெடியாய் இருக்கிறார் - குழந்தைகள் என்ற சீனி சரத்தைக் கொளுத்தியதும் மனைவி அதிர் வேட்டாக, கணவன் புஸ்வாணம் ஆகி விடுகிறாள்' எப்படியிருக்குது?''

''அபத்தம் - அது காதல் இல்லாத கல்யாணமா யிருக்கும் - இரு மனசும் ஒத்து, ஒன்றிப் போயிட்டால் பிறகு அதில் அமைதியான ஜோதி மட்டும்தான் - கருகல், தீயல், சத்தமெல்லாம் கிடையாது.''

சத்தமில்லாமல் அப்பாவிடமிருந்து நழுவி விட் டாலும் யோசிக்கத்தான் செய்தாள் -

அப்பா கல்யாணம், வாழ்வு என்கிறாரே எப்படி தனக் கான மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்கப் போகிறார்?

இவள் சம்மதித்ததுமே இவளுக்கு ஏற்றாற் போல ஒரு மணமகன் உருவாகி இவர்களுக்குக் காட்சியளித்து விடுவானா?

அப்படி யாரும் வந்து விட வேண்டாமென கூட பிரார்த் தித்தாள்.



வந்தால் அவனை வெறுக்கவும் கூட தயார்!

ஏன்?

அப்பாவை விட்டுப் பிரிய நேரலாம் என்பதாலா..? அதுவும் ஒரு காரணம். ஆனால் முழுமையான காரணம் அதுவல்ல.

அவள் வேறு யாரையும் விரும்புகிறாளோ?

அனந்தனைப் பார்க்கும், ஏன் அவனை நினைக்கும் போதெல்லாம் உடலும் உள்ளமும் கிள்ளி விட்டாற் போல கிளர்ந்து விடுகின்றன. ஆனால் வாழ்வு முழுமைக்குமான அந்த பந்தத்திற்கு இந்தக் கிளர்ச்சி மட்டும் போதுமா? இனி பிரிவே இல்லை என்று இருவரும் ஒன்ற இந்தப் பரவசம் தாங்குமா?

பெண்மைக்கே உரிய அச்சம் அவளுள் இருந்து கேட் டது. முழுசாய் அவளது இதயம் பறிபோகாமல் கவசமாய் நின்று காக்க முயற்சித்தது.

வேறு ஒருவனை நினைக்கவும் மனமில்லை.

அனந்தனை மணக்கவும் துணிவில்லை... அவன் பெரும் பணக்காரன். குடும்ப, குலப் பின்னணி இல்லாத ஒரு எளியவளை அவன் மணப்பானா? ஆக அந்த ஆசையை நிராசை என்று ஒதுக்கி மறக்க வேண்டியது தான்.

இப்படி அப்பாவோடு இருந்தால் போதும் - நிம்மதி யாய்...

அன்று அனந்தன் வரவில்லை!

ஆரஞ்சு நிற குட்டை குர்தாவில் வெள்ளை பூவே
- அதற்குப் பொருத்தமான வெள்ளை சாரங்கி என்

கவனமாய் உடுத்தி நின்றவளின் மனம் பரபரவென்றாகி பிறகு களைத்துப் போனது! இனமறியாத புது எரிச்சல் புத்தியில் காந்தியது!

''ஏன்டா கிண்ணத்தில் தண்ணீர் வைக்கலியா?'' - வரைய ஆரம்பித்த அப்பா கேட்க, எரிந்து விழுந்தாள் -

''ல்ல - மறந்துட்டேன்... எடுத்துக்கோங்களேன்..'' விட்டேற்றியாய் பதில் சொன்னாள் -

தகப்பனின் பழுப்பு விழிகள் இடுங்கி மகளை ஆராய்ந்தன -

''உங்கம்மா சொல்றது போல பெண்களுக்குக் கல்யாணத்திற்கான வயசு இருபத்தி ஒண்ணுதான்.''

''ஆண்களுக்கு - முப்பத்தி ஆறா?'' - சிடுசிடுத்தாள்.

''இருபத்தியேழு அல்லது எட்டு - நான்தான் எதையும் முறையாய் செய்தவனில்லையேம்மா அழு..''

அவள் மனம் இளகியது.

''உலகின் சிறந்த தந்தைன்ர பட்டத்தை உங்களுக்குத் தர நான் சிபாரிசு பண்றேன்ப்பா.''

''இல்லைடா..''

''ஏன்ப்பா..''

''இன்னும் உனக்குக் கல்யாணத்திற்கு பார்க்க, சேர்க்க ஆரம்பிக்கலையே...''

''ஆரம்பிச்சால் உடனே பையன் சிக்கிடுவானா?''

''நீதானே சொன்னே ராஜகுமாரன் வருவான்னு.''

''நானா? போங்கப்பா... இப்படி நச்சுப் பண்ணுவீங்ன்னு தெரிஞ்சிருந்தால் நான் சென்னையிலேயே வேறு ந வேலை தேடியிருப்பேன்.''



''அப்பவும் போன்ல சொல்லியிருப்பேன்டா.''

''என்னன்னு?''

''அனந்தனை எனக்குப் பிடிச்சிருக்குன்னு!''

பேச முடியாதளவு திகைத்து விட்டாள்! மெள்ள சுதாரித்து பிறகு பதிலளித்தாள் -

''நான் அங்கேயே இருந்திருந்தால்... அவர் யார்னே எனக்குத் தெரிஞ்சிருக்காதே.''

''எடுத்துச் சொல்லியிருப்பேன் - நல்ல பையன் - புத்திசாலின்னு...''

''தினம் வந்து என்னோடு வெட்டிக் கதை பேசறான்னுமா?''

மிருதுவாய் சிரித்தபடி மீசையை நீவிக் கொண்டார் தரணி.

''அவனுக்கும் உன்னைப் பிடிச்சிருக்கும்மா.''

உள்ளம் படபடத்தது... ஆனால் அதே சமயம் நாக்கும் பொரிந்து தள்ளியது.

''உங்களுக்கு அவரைப் பற்றி என்னப்பா தெரியும்? எதை நம்பி என்னை அவரிடம் ஒப்படைப்பீங்க..? அவர் குடும்பத்தைச் சந்திச்சுப் பேசினீங்களா - அவர் படிச்ச இடத்திலோ, வியாபார வட்டத்திலோ அவரைப் பற்றி விசாரிச்சீங்களா?''

பெற்றவரின் முறுவல் மறைந்தது -

அவரது கண்கள் யோசனையில் மங்கின.

கடைகளில் சட்டமிட்டு வைக்கப்பட்டிருந்த தந்தையின் ஓவியங்களை வெவ்வேறு கோணங்களில் நின்று பார்த்தாள் -

திருப்திதான் -

''இனி பழைய விலைக்குத் தர முடியாது நளிம் பாய். குறைஞ்சது பத்தாயிரம் ரூபாயேனும் வரணும்.''

''என்னம்மா இத்தனைக் கறாராய் பேசறே?''

''ல்ல பாய் - சேமிப்புன்னு இருக்கணுமே...''

''ஓ... கல்யாண செலவெல்லாம் வரும்ல?''

''அதில்லை... அப்பாவை செக் - அப்பிற்கு கூட் டிட்டுப் போகணும். அதற்குக் கூட காசில்லைன்னா எப்படி?''

''ஏன் வாப்பா மேலுக்கு என்ன?''

''சொல்ல மாட்டேங்கறார் - அடிக்கடி வலி குறைக்க மாத்திரை போட்டுக்கறார் - திருவனந்தபுரம் ஹாஸ்பிடல் போகணும்.. ஆக காசு அவசியம்.''

''ஆமம்மா.. 'பணம் சேர்ப்பது கஷ்டம் - அது குண் டூசியால் குழி பறிப்பது போல'ன்னு ஒரு ஜப்பானிய பழமொழியே இருக்கே - ''

சொன்னவரை ஆச்சரியமாய் பார்த்தாள் -

''நம்பட்ட உலகமெங்குமிருந்து டூரிஸ்ட்டுங்க வர்றாங் களேம்மா. அவங்க சொல்லக் கேட்டது. சம்பாதிப்பது போல சேமிப்பதும் ஒரு கலை.''

''இங்கே நல்ல விலை வரலைன்னா, சென்னையில் ஒரு கண்காட்சி நடத்தலாம்னு ஒரு யோசனை... அப்பாவின் வைத்தியத்திற்கு எவ்வளவு தேவைப்படுமோ தெரியலை.''

''இங்கே வர்றவங்களில் தரம் புரிஞ்சவங்களிடம் விற்றுத் தரேம்மா - தவிர உன் ஆலோசனைப்படி சட்டம் பாட்ட பிறகு ஓவியம் மேலும் எடுப்பாத் தெரியுது.''



''நன்றி.''

''என்ன, இன்றைக்கான வேலை முடிஞ்சுதா?'' மிக அருகேக் கேட்ட குரல் அவனுடையது!

அனந்தனைப் பார்க்காமல் நடக்க முயன்றாள் - வழி மறித்தான்.

''கோபமா அமு?''

''எனக்கெதற்கு கோபம்?''

''நான் நேற்று வீட்டிற்கு வரலையே?''

''தினம் எங்க வீட்டிற்கு வரணும்னு ஒப்பந்தமா... சம்பளம் தர்றோமா?''

''கிம்பளம் போல ஏதோ கிடைச்சிட்டிருந்தது..'' கண் சிமிட்டினான்.

''அதென்ன?''

''களைப்பா இருக்கேன்னு நினைக்கறேன் அமு... அதான் சிடுசிடுங்கறே.. சாப்பிடலாமா? ப்ளீஸ்?''

நயந்து பேசி அவளை சீன வலைகள் நின்ற இடத்திற்கு அழைத்துப் போய் விட்டான்.. ராட்சச எட்டுக்கால் பூச்சி களைப் போல கடலோரத்தில் உயர்ந்து நின்ற சீனத்து மீன் வலைகளை அவள் அருகிருந்து பார்த்ததில்லை. அந்த ஆர்வத்தைப் பயன்படுத்திக் கூட்டிப் போனான் -

தென்னை மரங்களின் கீழே வண்ண மேஜை, நாற் காலிகள் - ஆங்காங்கே அடுப்பு வைத்து, ஏப்ரன் கட்டிய ஆண்கள் அங்கே பிடிக்கப்பட்ட மீன்களை சுத்தம் பண்ணி பொரித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த இடத்தை மொய்த்த ஈக்களைப் போலவே உணவு தேடி வந்தவர்களும் மொய்த்தனர் - மேஜைகளின் கீழே பூனைகள் அழுது உரசியபடி வறுத்த மீனில் பங்கு கேட்டன.

''இந்த இடம் ரொம்பப் பிரபலம் - அந்த காலி மேஜையை நீ பிடி அமு.. நான் வறுவல், பொரியல், புலவு எல்லாம் செய்யச் சொல்லி எடுத்து வரேன்.''

சீன வலைகள் மீன்களை அள்ளுவதை சுவாரஸ்யமாய் கவனித்தாள் - நான்கு முனைகள் கட்டப்பட்டத் துப்பட்டி போன்ற வலையை நாலைந்து பேராய் சேர்ந்து கடல் நீருள் அமிழ்த்தினார்கள்... வலை நிரம்புவது தெரிந்து அவர்கள் அதைத் தூக்க, வலை நிரம்பத் துள்ளித் துடிக்கும் மீன்கள். அந்த மீன்களைப் போட்டியிட்டு வியாபாரிகள் ஏலத்திற்கு எடுத்ததும் வலை மீண்டும் அமிழ்த்தப்பட்டது. இந்த நூதன காட்சியோடு தென்னைமரக் காற்றும், அலை யோசையும், மீன் வறுபடும் மணமுமாய் சேர்ந்து சஞ்சலப் பட்டிருந்த அவளை அமைதிப்படுத்தின. இத்தனை வருஷங்களாய் இந்த இடத்திற்கு தான் வந்ததில்லையே என்று தோன்ற அனந்தன் மீது நன்றி கூட துளிர்த்தது.

''தோ... அஞ்சே நிமிஷங்களில் எல்லாம் சுடச்சுட வந்திடும்'' என்றவன் நாற்காலியை அவளுக்கு மிக அருகே இட்டு அமர்ந்தான் -

அவள் காதருகே குனிந்து மெள்ள கேட்டான் -

''ம்ம் - இப்ப சொல்லு அமு... என்னைப் பற்றி என்ன தெரியணும் உனக்கு?''

தன் கால்களை உரசிய பூனையைக் கொஞ்சும் சாக்கில் குனிந்தாள்!



''என்னைப் பற்றி ஏதும் தெரியாதுன்னு தரணி ஸாரை மிரட்டினாயாமே.. பெண்களுக்கே உரிய அந்த ஜாக்ரதை உணர்வு நல்லதுதான்... ஆனால் என் மேல் என்ன சந்தேகம் அமு?''

இப்போது மீன் மணத்தை விட அவனது ஆண் வாசனை இவளை ஆக்கிரமித்தது.. ஏன் இத்தனை நெருங்கி உட்கார்ந்திருக்கிறான்? ஓரக்கண் பார்வையில் அவனது மேல் நெஞ்சு வரை மண்டியிருந்த சுருள் முடிகள் பட்டன. இது சரியில்லை...

அமோகா எழ முயல, அவனது கை அவளை இறுகப் பற்றியது. முதல் ஸ்பரிசம் அவளை மிக சலனப்படுத்த, உருவ முடியாமல் உறைந்து மெள்ள அமர்ந்தாள் -

அவன் விரல்களின் பிடி தளர்ந்து அவளை வருடின -

அவனது குரலும் வருடலாய் பேசியது -

''கொச்சினுக்கு நான் மூன்று நாட்களுக்கு மட்டுமே வந்தேன் அமு.. முதல் நாள் மாலையே உன்னைப் பார்த் துட்டேன்.. மெல்லிய வெள்ளை உடையில் சுருள் முடி யுடன் நனைந்து நீ நின்ற கோலத்தில் மிரண்டுட்டேன் - கரையேறிய கடல் கன்னியா இல்லை மோகினியோன்னு... என் வலது பாதம் தானாய் 'பிரேக்' கை அழுத்திடுச்சு.''

''அப்படீன்னா நீங்க அப்பாவைத் தேடி வரலை?''

''அவரைப் பார்க்கத்தான் வந்திட்டிருந்தேன். ஆனா நேரே போய் மஞ்சள் நிறமடித்த சிமெண்ட் தூண் அருகே இடது பக்கமாய் திரும்பணும்னு ஏற்கெனவே ஒருத்தர் வழி காட்டிட்டாரே.''

'உண்மையைத்தான் சொல்கிறாயா' என்பது போல அவனை ஏறிட்டாள். "உன்னைப் பார்த்து அப்படி அன்று நின்றவன் மூன்று நாளில் இன்னும் ஊர் திரும்பாமல் இங்கேயே சுத்திட்டிருக்கேன்."

"வேறு வேலை இல்லைன்னு அர்த்தம்."

"காதல் சோம்பேறிகளின் வேலை; வேலையாய் இருப்பவர்களின் சோம்பேறித்தனம்!"

"அடடே..." கேலியாய் சிலாகித்தாள்.

"நானில்லை - ஒரு அறிஞர் சொன்னது."

"ஆக இது காதல்ரீங்க?"

"நாம கல்யாணம் செய்துக்கலாம் அமு" - பற்றிய கைகளில் முத்தமிட்டான். அலை அலையாய் உணர்வு எழும்பி அவளைப் புரட்டியது. அதுவரை எழுந்து நின்ற பயம், தயக்கம், சந்தேகங்களை ஆசை வெள்ளம் பெருகிக் கவிழ்த்தது!

இவனை அப்பா நம்புகிறார் - தன் பிரிய மகளையே நம்பித் தருமளவிற்கு.. ஆகத் தானும் நம்பினால்தான் என்ன?!

## 4



நாவிதன் தன் காரியத்தில் மும்முரமாயிருந்தான் - கடையின் மூன்று பக்க சுவர்களிலும் வர்ணமாய், வழு வழுப்பாய் மங்கையரின் கவர்ச்சிப் படங்கள். நாலாவது



சுவரில் துல்லியமான பாந்த கண்ணாடி மட்டுமே. ஒரு ஓரமாய் அமர்ந்திருந்த அமோகா, தன் அப்பாவின் தோற் றத்தில் அதாவது மாற்றத்தில் ஒரு கண்ணும், கையி லிருந்த சினிமா பத்திரிகையில் மறு கண்ணும் வைத் திருந்தாள் -

குளிரூட்டப்பட்ட ஆண்களுக்கான அழகு நிலையத் திற்குள் தரணி சற்று சங்கடமாக முணங்கினார்.

"நீதானம்மா கல்யாணப் பொண்ணு... எனக்கெதற்கு.."

"நீங்க கல்யாணப் பெண்ணின் அப்பா! மாமனாராகப் போறீங்க - ரெண்டு முனையிலும் லேசாய் முறுக்கி விடப்பட்ட உங்க புசுபுசு வெள்ளை மீசை கம்பீரந்தாம்ப்பா... ஆனா தாடி, அதிகப்படி - அதை எடுத்திட வேண் டியதுதான்."

"வேறென்ன?"

"தலைமுடியுங்கூட காடாட்டம் தெரியுது - சீரபடுத்தி பின்புறம் ஒரு முடிச்சாய் கட்டிட்டால் உங்க கலைஞர் - தோற்றமும் கெடாது - 'பளிச்'சினு கல்யாணக் களையும் வந்திடும்."

"உன் இஷ்டம்."

"என் இஷ்டத்தை எல்லாம் ஏற்கெனவே அவர்ட்ட சொல்லியாச்சுப்பா." என்றவள் இரு கண்களையும் புத்தகத்தில் பதிக்க, நாவிதன் ஒரு புன்னகையுடன் தன் வேலையில் அமிழ்ந்தான்.

வேலை முடிந்து தோளில் போர்த்தியிருந்த துணியை எடுத்து விடவும், தன் தகப்பனை கண் எடுக்காமல் பார்த்தவள் பணத்தை முடி திருத்தியவரிடம் நீட்டினாள் தந்தையின் கையைப் பற்றியவள், ஏதும் பேசாமல்

அவசரமாய் வெளியேறி... வீட்டை அடையும் வரை வாயும் திறக்கவில்லை.

''அதான் வேண்டாம்னேன்... இந்த விஷப்பரீட்சை எல்லாம் எதுக்கு அமு? இப்போ கோமாளி போலிருக்கேனோ - ஏன் எதும் பேசலை நீ?''

''ஏதோ திருஷ்டி கழிக்க சுற்றிப் போடணும்னுவாங்களே... அது என்ன எப்படின்னு உங்களுக்காவது தெரியுமாப்பா...''

''எனக்கென்ன தெரியும்டா?''

''கடவுளே, எங்கப்பா மேல எந்தக் கெட்ட, கொள்ளிக் கண்ணும் படாமல் காத்துக் கொள்ளணும்ப்பா'' என்று கைகூப்பியவள் அப்படியே அப்பாவைக் கண் நிரம்பப் பார்த்தாள் -

''ஹீரோல்லாம் தோத்துடுவாங்கப்பா... புது ஆளாட்டம் இருக்கீங்க.''

அவர் தோளைப் பற்றியபடி குழந்தை போலக் குதித்தாள் -

அந்த அன்பின் அழுத்தத்தைக் கூட தாள முடியாமல் அவர் முகம் வலியால் சுளித்ததை நல்லவேளை அவள் கவனிக்கவில்லை.

அவரும் சமாளித்துக் கொண்டு சீண்டினார் - ''புது ஆளா? அப்ப எங்கே போனார் உங்கப்பா?''

''இதோ இங்கயேதான்..'' அவரது புது குடுமியைப் பிடித்து ஆட்டி சிரித்தாள்.

மகள் தந்தையைப் பார்த்துப் பூரித்தது போலவே அவரும் மகளைக் கண்டு பெருமையில் அடுத்த நாளே



விம்ம நேர்ந்தது! அவர்களைக் கடைக்குக் கூட்டிப் போவதாய் அனந்தன் ஏற்கெனவே சொல்லியிருந்தான் -

''இன்னும் ஒரு மாசத்தில் கல்யாணத்தை வச்சிடலாம் மாமா - என்ன?''

''சுபஸ்ய சீக்கிரம்தானேப்பா? நடக்கட்டும்.''

இவள் சம்மதித்த நொடியிலேயே அனந்தன் வெகு இயல்பாய் 'சார்'ரிலிருந்து 'மாமா'விற்கு தாவி விட்டிருந்தான்!

''கல்யாண சமயம் அமுவிற்கு நிறைய உடுத்த மாற்றன்னு ஆடைகள் தேவைப்படும்... என்ன.''

''என்னிடம் அத்தனை துணிமணி இல்லை.''

''அப்படிச் சொல்லலை - எளிமையாய் என்றாலும் தேர்ந்து நயமாய் உடுத்தற ஆள் நீ அமு... ஆனால் மணப் பெண்ணின் அலங்காரம் தனியில்லையா? நாளைக் காலை தயாராயிடுங்க - முழு நாளும் நாம வெளியேதான்'' என்றிருந்தான் -

கொச்சின் நகரின் முன்னணி கடைக்குள் அவர்கள் நுழைந்ததுமே - அவர்கள் திருமணத் தேவைக்காய் வந்தவர்கள் என்பது புரிந்து போன கடை சிப்பந்திகள் அதற்குத் தோதான உடைகளை இவர்களின் முன் குவித்தார்கள்.

''இதெல்லாம் ரொம்பப் பகட்டாய் இருக்கே?''

அமோகா தயங்கினாள் -

''டிஸைனர் சேலைம்மா - இப்ப இதுதான் பிரபலம்.''

வசதியான வீட்டுப் பெண்கள் கல்லூரி வைபவர் களுக்கு இப்படி பொன் வண்டுகள் போல வர அவ ரசித்ததுண்டுதான் - ஆனாலும் தான் அப்படி உடுத்

வேண்டுமென்றெல்லாம் ஆசைப் படாத அவளுக்கு எதை தேர்ந்தெடுக்க. இது தனக்குத் தேவையா என்ற மலைப்பு!

அவளது குழப்பம் புரிந்த அனந்தனே இரண்டு புடவைகளைத் தேர்ந்தெடுத்தான் -

ஒன்று பாலாடை நிறத்தில் பொடி தங்கத் தகடுகளும் கற்களுமாய் தகதகத்தது; மற்றது கருஞ்சிவப்பில் தாமிர நிற வேலைப்பாட்டுடன் கண்ணைப் பறித்தது.

''உனக்கு எது பிடிச்சிருக்குது அமு?''

அப்பாவைப் போலவே அனந்தனும் தன் பெயரைச் சுருக்கி குழைவாய் அழைப்பதை ரசித்தாள் -

''தெரியலியே.''

அவர்களின் குழப்பத்தை கவனித்த விற்பனைப் பெண் -

''ஒரே நிமிஷம்'' என்றபடி சேலையை அமோகா மீது படர விட்டுச் சுற்றினாள் - ரவிக்கைக்காய் தரப்பட்ட துணியை வலது தோள்பட்டையில் கச்சிதமாய் வைத்து, புடவையை ஒயிலாய் இடது தோளில் வழிய விட, கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்த அமோகாவின் விழிகள் விரிந்தன. உடன் வந்த இரு ஆண்களின் முழிகளோ ...துங்கி விடுவது போல முட்டின... அருகேயிருந்த வேறு ...டிக்கையாளர்களும் இவளது தோற்றத்தை நின்று ...க்க, இவளுக்குக் கூச்சமாய் போனது.

ஆனால் விற்பனைப் பெண்ணோ மற்ற புடவையையும் ...ள் மேல் படர்த்தி விட்டாள்...

''இப்ப முடிவு பண்றது சுலபமாயிருக்கும்'' என்றபடி.



''இந்த சிகப்புப் புடவை அப்படியே உன் அழகிற்குக் கொடி பிடிக்குது அமு... உனக்கும் பிடிச்சிருக்கா?''

''ம்ம்...''

இப்படி அப்ஸரஸாய் ஜொலிப்பது தன் மகள்தானா என்ற பிரமிப்பிலிருந்து மீண்ட தரணி வாய் திறந்தார் -

''சிவப்பின் கவர்ச்சி தனிதான்.. ஆனால் அந்த வெண்ணை நிறப் புடவை உன் அழகின் தூய்மையை, நளினத்தை மிக மேன்மையாய் காட்டியது அமு...''

''அப்ப ரெண்டையுமே பில்லில் சேர்த்திடுங்க.''

அனந்தன் சொல்ல தரணி தடுக்கவில்லை - திருப்தியாய் தலையசைத்தார். அன்றாடம் உடுத்த, எளிய பட்டுகள் என்று வேறு பலவும் தேர்ந்தெடுத்த பின், பணம் செலுத்துவதற்காய் கல்லாவிற்கு நகர்ந்தனர் -

''நீங்க உக்காருங்க பெரியவரே... எல்லாம் நீங்க தேர்ந்தெடுத்தவை தானேம்மா - ஒரு தரம் சரி பார்த்திடுங்க.''

அமர்ந்து, தனக்குப் பிடித்த வெண்ணிறப் புடவையை வாஞ்சையாய் வருடிய தரணியின் விரல்களில் விலைப் பட்டியல் தட்டுப்பட, அதைப் பார்த்தவர் அதிர்ந்து விட்டார்.

இந்தப் புடவையின் விலை ஏழாயிரமா?

வெறும் ஒரு புடவை... வருஷத்திற்கு ஓரிரு முறை மட்டுமே கட்டி அவிழ்க்கப் போகும் இதற்கு இத்தனைப் பணமா?

அவசரமாய் மற்றவற்றின் விலைப் பட்டியலையும் பார்த்தவரின் முகம் வெளிறியது. ஒரு சிறு அட்டையின் மூலம் தன் வருங்கால மருமகன் அத்தனைக்கும் பணம் செலுத்தியதைப் பார்த்தவரின் கண்கள் பனித்தன -

''அடுத்து நகைகளுக்கு எங்கே போகலாம் மாமா - கீர்த்திலால் அல்லது ஜோஸ்?''

''நான்... எனக்கென்ன தெரியும் அனந்தா.''

''அப்பா? உடம்புக்கு முடியலியா... சோர்ந்து தெரியறீங்களே?''

காரில் ஏறியவருக்கு தண்ணீர் தந்து விசாரித்தாள் மகள், கரிசனையாய்.

''சும்மா யோசனை... கொஞ்சம் வருத்தமான ஒரு யோசனை.''

''சொல்லுங்க...''

''உங்கம்மாவை நான் ஒரு தரம் கூட இப்படி கடைகளுக்குக் கூட்டி வந்ததில்லை அமு... ஏன்... நீ அழகான பெண் குழந்தை... உன்னையும் கூட அழைத்து வந்து வாங்கித் தந்து சிங்காரிச்சதில்லையே...?''

''நான் திருப்தியாய் உடுத்திக்கிட்டேனேப்பா - காக தந்திடுவீங்க.''

''என்னைப் போலவே முரட்டு கதரை வாங்கி உடுத்திக்கிட்டே.... வேறென்ன கண்டாய் நீ?''

''அதுதாம்ப்பா நம்ப நாட்டு சீதோஷ்ணத்திற்கு வசதி.''

'போதும்மா' என்பதாய் கை காட்டினார்.

''இன்னைக்கு வாங்கின புடவைகளின் விலையெல்லாம் கவனிச்சேன்... ஒரு சேலை ஏழாயிரம்... ஒரு மாதத்திற்கு நான் அத்தனை சம்பாதிச்சிருப்பேனான்னு தெரியலியேம்மா?''

''அது உங்க தப்புதான்ப்பா. உங்க கலையின் மதிப்பறிந்து நீங்க விற்கலை. விலைவாசி எவ்வளவு உயர்ந்திருக்குன்னும் நீங்க உணரலை.''



''மாமா ரொம்ப எளிமையாய் வாழ்ந்ததால்..''

''அதில் தப்பில்லை. ஆனா மக்களிடையே பணப் புழக்கம் அதிகரித்திருப்பதையும் - ஆயிரங்களை சர்வ சகஜமாய் அவர்கள் செலவழிக்கத் தயாராய் இருப்பதும் அப்பா கருத்தில் பதியலை.''

''முட்டாளாய்தாம்மா இருந்திருக்கேன்... உங்கம்மா எந்த நகையும் போட்டுட்டு வரலை. ஏழெட்டு சாதாரண மாற்றுடைகள் எடுத்து வந்திருப்பா - அதையேதான் மாற்றி மாற்றி உடுத்துவா - பண்டிகை, பிறந்த நாள், கல்யாண தேதியன்று ஏதேனும் எடுத்துப்பா... ரொம்ப எளிமையாய்... அதுதானே என்னால் இயன்றது?''

''ஆனா அம்மா சந்தோஷமாய் வாழ்ந்தாங்களேப்பா? பணத்தால் தன்னைக் குளிப்பாட்டற புருஷனை விட குணவானாய் அவன் இருப்பது முக்கியமில்லையா? பகட்டாய் உடுத்துவிக்கறவனை விட பாசமாய் தன்னை முழுமையாய் நேசிக்கிற, நம்பற நாமும் நம்பக் கூடிய துணை முக்கியம்.''

அனந்தனின் முகம் சற்று மாறியதை மற்ற இருவருமே கவனிக்கவில்லை.

தேவையான நகைகளோடு தாலியும் வாங்க, மாலை நேரமாகி விட்டது. அவர்களை சற்று ஓய்வெடுக்க விட்டவன் -

''நமக்குன்னு ஒரு இயந்திரப் படகை ஏற்பாடு பண்ணியிருக்கேன் மாமா - அந்தி நேரம், கடலில் ஆறு கலக்கும் நீர்பரப்பில் ஒரு சுற்று வருவது அலாதி அனுபவம் - போகலாமா?''

என்று இனிப்பான நேந்திரம் பழ பஜ்ஜி, தேநீருடன் அவர்களை கூட்டிப் போனான் -

இத்தனை விச்ராந்தியாய் அவள் கொச்சின், எர்ணாகுளத்தை வலம் வந்ததில்லை. 'இரண்டுமே ஒரே ஊர்தாம்மா - ஒரு பாலம்தான் இந்த ரெண்டு இடங்களையும் இணைத்தோ பிரித்தோ வைக்குதுன்னு வையேன்' என்று முன்பு அப்பா சொன்னதை இன்றும் ஒரு பிரமிப்புடன் பார்த்திருந்தாள்.

படகுத்துறையில் சுற்றுலாப் பயணிகளின் கூட்ட மொய்ப்பு. 'எத்தனை பேர் வந்தாலும் நான் வஞ்சனை செய்வதாயில்லை' என்று உற்சாகமாய் வீசியது ஈரக்காற்று. சூரியனின் தகிப்பு அடங்கும் நேரம் என்பதால் ஒரு மிதமான வெளிச்சம், சீதோஷ்ணம்.

முப்பது பேர் பயணிக்கக் கூடிய அப்பெரிய விசைப் படகில் இவர்கள் மூன்றே பேர் - மேல் தளத்தில் போடப்பட்டிருந்த இருக்கைகளில் இளையவர்களை சேர்ந்து அமரச் செய்து விட்டு அப்பா மறு பக்கமாய் போய் உட்கார்ந்து குழந்தை போல பயணத்தை அனுபவிக்க ஆரம்பித்து விட்டார்.

படகு உறுமலுடன் கரையை விட்டு விலகி, ஒரு புது உலகத்திற்குள் நுழைந்தது. ஒரு பக்கம் விளிம்பு தெரியாத நீர் பரப்பு என்றால் மறுபக்க கரையில் பெரிய பழம் வீடுகள், படித்துறையுடன்... ஒவ்வொன்றையும் தென்னை மரங்கள் அடர்ந்து சூழ்ந்திருந்தன. அந்த வீடுகளின் சேர இளம் மங்கையர் இங்கு நீராடி விட்டு குடங்களில் நீரெடுத்துக் கொண்டு போவார்களோ? படகின் சன்ன உறுமலைத் தவிர மௌனம் மட்டுமே. அந்த அமைதியோடு, அகண்ட நீர்ப்பரப்பும் செக்கர் வானமும் ஒரு மோகன சூழலை உருவாக்கி விட்டிருந்தன.



உடலோடு உள்ளமும் லேசானது போலிருக்க மிக அருகே அமர்ந்திருந்தவனை புது ஈர்ப்போடு உணர்ந்தாள்.

அன்று காலை கூட அப்பா சொல்லியிருந்தார்.

'உன்னை இப்படி ஒரு இளம் துணையோடு பார்க்கணும்னுதான் அமு ஆசைப்பட்டேன்... என்னால உனக்கு ஈடு தரக் கூடுமா?' என்று. அது உண்மைதான் போலும்...

இவன் அருகே அமர்ந்திருப்பதே ரம்யமாய் இருக்கிறது... இவன் காட்டும் உலகம் வேறு.

அனந்தனின் பக்கமாய் இவள் திரும்ப, அவளையே பார்த்திருந்தவன் முறுவலித்தான் - ஆனால் அவன் கண்களில் ஏதோ ஒரு யோசனை அல்லது தயக்கம் இருந்ததோ?

இவளும் ஒரு முறுவலுடன் படகின் கீழ் தளும்பிய நீரை நோக்கினாள் - இது நதியும் கடலும் சங்கமிக்கும் இடம்... இதில் எது உப்பு நீர் எது நல்ல நீர் என்று பிரித்தறிய முடியுமா என்ன?

ஏனோ இவனும் அவளை அவ்வப்போது குழப்பினான்...

அனந்தன் மீது தனக்குப் பொங்கிய ஈர்ப்பு, நேசத்தை பற்றி சந்தேகமில்லை... ஆனால் நம்பி தன் வாழ்வை அவனுடன் கோர்த்துக் கொள்ளும் அளவு அவனைப் பற்றி ஏதும் தெரியுமா?

இந்நிலையில் கல்யாணம் என்பது ஒரு அவசர முடிவுதானோ?

அவசரம் அவதியில் போய் முடியும் என்பார்களே?

நாளை அனந்தன் அவன் வீட்டிற்குப் போவான் - ஏற்கெனவே குடும்பத்தினருக்கு தன் திருமண முடிவைப் பற்றி அவன் சொல்லியிருந்தாலும், அவன் குடும்பம் அதை எப்படி எதிர் கொள்ள, ஏற்கப் போகிறது என்பது இனிதான் தெரியும்...

அப்பா சொன்னதுண்டு -

'நான் ஏழை என்ற காரணத்தைவிட என் மாமனார் என்னை வெறுத்த, மறுத்த காரணம் வேறுண்டு அமு - அது நான் அப்பன் பேர் தெரியாதவன் என்பது - குலம், மதம் தெரியாதவனை தன் ஒரே மகளின் வாழ்வில் இணைப்பது அவருக்கு சகிக்கவேயில்லை...' என்று.

அனந்தனுடையது பாரம்பரியமான, பணக்கார குடும்பம். அவர்கள் தன்னை இருகரம் நீட்டி வரவேற்க வேண்டிய அவசியமென்ன? தான் அழகிதான் என்றாலும் அழகோடு அந்தஸ்தும் செல்வமும் சேர்ந்த எத்தனை பெண்கள் அவர்கள் இனத்திலேயே இருப்பார்கள்?

அனந்தன் அங்கே போனதும் அவர்கள் மறுத்து, அவனது மனதை மாற்றி விட்டால்...?

''கடும் யோசனையாய் இருக்குதே, அமு?'' என்றபடி அவளது தோள்களைப் பற்றினான்...

''நீங்களுந்தான் யோசனையில் இருக்கீங்க.''

''ஆமா... ராத்திரி உணவிற்கு உங்களை டாஜ் மல பாருக்குக் கூட்டிட்டுப் போறேன் - அங்கே கறி மீன் பொறிச்சது - ரொம்பப் பிரமாதமாய் இருக்கும்... அத னோடு புலவா, ரோட்டியான்ற யோசனை!''



''கேலியா?''

''உண்மையிலேயே அது கொச்சினின் பிரபலமான தயாரிப்பு தானே அமு? உப்பு நீரோடு நல்நீர் கலக்கும் இடத்தில் மட்டுமே அந்த கறி மீன் கிடைக்கும்.''

''ஓஹோ?''

''நீ என்ன யோசனையில் அமிழ்ந்திருந்தே?''

''நாளைக்கு நீங்க ஊருக்குப் போறீங்க.''

''ஆமா.''

''அங்க என்ன சொல்வாங்க?''

''வாழ்த்துதான்.''

''என்னை... அதாவது மணப் பெண்ணை பார்க்காம லேயா?''

''உன்னைப் பார்த்ததும் பரவசமாயிடுவாங்க அமு... இத்தனை அழகான பெண்ணான்னு.. பழகினால் உன் குணத்தில் சொக்கிடுவாங்க. அதுவும் இப்ப வாங்கின புது சேலை, நகை எல்லாம் சேர, நீ அப்ஸரஸ் போலவே இருப்பே.''

தோளைச் சுற்றிய அவனது கை விரல்கள் இவளது பிடரியை மிருதுவாய் நீவ, சிலிர்த்தாள் -

''நீங்க... நீங்க போயிட்டு எப்ப வருவீங்க?''

''கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் செய்யணுமே அழைப்பிதழ், அது இதுன்னு... நாளாகும்... ஏய் அமு... எ கண் கலங்குது? நீ என்னை இப்பவே தேடி ஏங் ஆரம்பிச்சிட்டியா என்ன?''

உண்மைதான்... அவனைச் சற்றே பிரியும் எண்ண கூட தாள முடியாததாய் அறுத்தது... அந்த வலியில் நேசம் புரிய, மிரண்டாள்...

அடக்க முயன்றும் முடியாமல், கண்ணீர் அவளது கண்ணங்களில் பொங்கி வடிந்தது...

5



''மோனா லிஸா ஓவியத்தை வரைய டாவின்ஸிக்கு மூன்றரை ஆண்டுகளானதாம்.''

தன் ஓவியத்தை சற்று எட்ட நின்று சரி பார்த்த தரணி, திருப்தியுடன் தூரிகையைக் கழுவித் துடைத்தார்.

''அது சின்ன ஓவியந்தானேப்பா? 1503ம் ஆண்டு வரையப் பட்டதுன்னு ஞாபகம்.''

''ம்ம்... அதை முதலில் வாங்கியது யார் தெரியுமா? நெப்போலியன்!''

''ஆக அந்த வீரனுக்குக் கலை மீதும் ஈடுபாடு இருந்திருக்குது?''

''ஓரளவு - ஏன்னா ஓவியத்தை வாங்கினவர் அதை எங்கே மாட்டினார் தெரியுமா - தன் குளியல்றையில்!''

''ஆக அதற்கு அன்று சாதாரண மதிப்புதான் - இப்போ ஒரு பொக்கிஷமாய் அல்லவா அதைப் போற்றுகிறார்கள்?''

தரணியின் பொன் பழுப்பு விழிகள் தன் மகளை ஆராய்ந்தன -

''நீயும் அது போலத்தான் அமு குட்டி - உருவான இந்த வீட்டில் நீ சாதாரணமாய் இருந்தாலும்... இப்ப பெரிய இடத்திற்குப் போறே.''



''நான் ஒரு பொறுப்பு - அதை கை மாற்றணும்னு நினைக்கறீங்களாப்பா?''

''இல்லைடா டாவின்ஸியின் ஓவியம்... அவர் மூன்றரை ஆண்டுகளாய் ரசித்து உருவாக்கிய அந்த கலைப் படைப்பு சக்ரவர்த்தியின் மாளிகைக்குப் போனதில்லையா...? அது போல.''

''ஆனா மாளிகையின் குளியலறையில்தானே அது தொங்கினது?'' பழுப்பு நிற கண்களின் ஒளி சற்று மங்கியது.

''இன்னும் பயப்படறியா அமு? அனந்தன் மேலே உனக்கு முழு நம்பிக்கை வரலைல்லியா?''

''அவர் குடும்பப் பின்னணி பற்றி எதும் தெரியலை.. அவங்க என்னை ஏற்றுக்கலைன்னா... என் வாழ் எப்படின்னு... தெரியலைப்பா.''

''உன் அம்மாவை விட நீ புத்திசாலி... சூட்சுமமா புத்தி. ஆனால் நல்ல சோற்றுக்கு ஒரு பருக்கை தானேம் பதம்? சில நாட்கள் பழகினதிலேயே எனக்கு அனந்த மேல உயர்ந்த அபிப்ராயம். இல்லைன்னால் உன்னை நம்பி அவனிடம் ஒப்படைப்பேனா?... ஆனால் கல்யா சமயம், வேலைன்னு வரப்போ எதை எப்படி, எப் செய்றதுன்னு கொஞ்சம் அச்சம் வருது. நம்ப சார் வீட்டில் ஓரிரண்டு உறவுக்காரங்க இருந்தால் பில்லையா? தவிர அனந்தன் தினம் தொலைபேசி மூ பேசிட்டேதான் இருக்கான்... உன் சித்தி வந்தால் எ இத்தனைப் பதட்டமாயிராது...''

அப்படித்தான் பங்கஜா சித்தியும் அவர் மகள் வியும் வந்து இறங்கியது.

மிட்டாய் நிற புடவை நிரம்ப காக்கா ஜரிகை புட்டாக்கள் மின்னிய சேலையுடன் ஆர்ப்பாட்டமாய் வந்திறங்கினாள் சித்தி.

'பேசி'யிலேயே - 'என்ன கல்யாணப் பொண்ணே - கதர், பாண்ட்டை எல்லாம் விட்டுட்டுக் கல்யாணப் பெண்ணா லட்சணமா இருக்கியா?' என்று சித்தி கேட்டிருந்ததால், அவர்கள் வந்த அன்று அமோகா சேலை உடுத்தியிருந்தாள் - ரோஜா நிறத்தில் ஹக்கோபா வேலைப்பாட்டுடன் இழைவான சேலை - காதில் முத்து ஜிமிக்கி, சுருண்ட கூந்தலை இரட்டையாய் பின்னி அடக்கியிருந்தாள்.

இவளைப் பார்த்ததும் பிரமித்த சித்தி, தான் வாங்கி வந்திருந்த முல்லைச் சரத்தை கையோடு சூட்டி, நெட்டி முறித்தாள் -

''எனக்குத் தெரியும்டீ அமு... உனக்கொரு ராஜ குமாரன்தான் வருவான்னு அப்படிப்பட்டதுல உன் அழகு?'' என்றபடி.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இவர்கள் சித்தி மகள் பல்லவியின் கல்யாணத்திற்காய் செங்கல்பட்டு போயிருந்தார்கள் - மிக எளிமையாய் கோயிலில் தாலி கட்டி, வீட்டிற்கு வெளியே இடப்பட்டிருந்த பந்தலி லேயே விருந்து பரிமாறி முடித்து விட்டார்கள் - கட்டிட கான்ட்ராக்டர் மாப்பிள்ளை - அவர் அடிக்கடி வேலை நிமித்தம் வெளியூர் போய்விட, பல்லவி பெரும்பாலும் தாய் வீட்டில்தான் -

''பல்லவி, நல்லாயிருக்கேல்ல?'' கைபற்றி விசாரித் தாள் அமோகா.



''பின்னே? பத்து கிலோ கூடியிருக்கால்ல?''

''அது சாப்பாடு நல்லாயிருக்கதற்கான சான்று'' - தரணி சிரித்தார்.

''சரி குளிச்சிட்டு வாங்க - சாப்பாடு தயார்.''

சாப்பிட உட்கார்ந்த பங்கஜம் வயிற்றுக்கு உணவிடு வதை விட செவிக்குணவு சேகரிப்பதில் ஆர்வமாய் இருந்தாள் -

''நீங்க சொல்றதிலேருந்து பையன் வசதியானவன்னு தெரியுது. அவுங்க குடும்பம், பையன் படிச்ச இடத்துல, இப்ப ஆபீஸுல எல்லாம் விசாரிச்சா?''

காரக் குழம்பை சாப்பிட்ட தரணிக்கு விக்கியது -

''அமு, சித்திக்கு முட்டை வச்சியா?'' கேட்டார்.

''விசாரிக்காம கொடுக்க மாட்டீங்க... பெரியவங்க வந்து அமுவைப் பார்த்தாச்சா? அவங்களுக்கு முழு சம் மதந்தானே?''

''வந்து... மாப்பிள்ளைக்குப் பெத்தவங்க... இப்ப உயி ரோடு இல்லை. ஒண்ணு விட்ட அண்ணன், உடம் பிறந் அக்கா, அத்தைப் பாட்டின்னுதான் கூட இருக்காங்க. விவரமாய் இனிதான் தெரியும்.''

மலைப்பாதையில் அடர்ந்த பனிமூட்டத்தினு புகுந்து விட்டது போலிருந்தது இவளுக்கு... ஆபத்தின் நடக்கக் கூடுமா?

தவிர வேறு உறவு அற்ற தகப்பனைப் பிரியும் வருத் வேறு வாதித்தது.

ஏற்கெனவே கூட்டுக் குடும்பமாய் பலர் புழங் அனந்தனின் வீட்டில் அப்பாவிற்கு இடமிருக்கும முக்கியமாய் வரவேற்பிருக்குமா?

அங்கு வந்த தகப்பனின் மனசு புண்பட்டால் இவ ளுக்குத் தாங்காது - கணவனோடான உறவே விரிசல் விடக் கூடும்.

அப்பா நாளுக்கு நாள் பலஹீனப்படுவது தெரிகிறது... குன்றி நடக்கிறார். அதிகாலை கடற்கரையில் நடப்பதும், கடலில் நீந்துவதும் அவர் ரசித்த உடற்பயிற்சிகள் -

'தனியாய் குளிக்கணுமாப்பா?'

'ஜலக்கிரீடை பண்ணும் பருவமில்லையேம்மா எனக்கு! சுற்றிலும் நிறைய மீனவ வாண்டுகள் விளையாடும் - பயமில்லை. தவிர உப்பு நீரில் குளித்தால் நோய் அண்டாது - முக்கியமாய் சருமத்திற்கு நல்லது.'

அதில் உண்மை இருக்கலாம் - ஏனெனில் அப்பாவின் மேனி தேய்த்த வெண்கலமாய் மின்னும் - ஆனால் கடல் குளியலுக்குப் பின் நல்ல நீரால் உடல் கழுவிவிட்டே உடை மாற்றுவார்.

சமீபமாய் அப்பா நீந்தப் போகவேயில்லை -

''ஏன்ப்பா?''

''தண்ணீர் சுத்தமில்லைடா.. நீந்திவிட்டு வீட்டிற்கு வருவதற்குள் அரிக்குது.''

எல்லாவற்றிற்கும் பொருத்தமான பதில்களை வைத்திருந்தார் - ஆனாலும் அவர் தன்னிடமிருந்து எதையோ மறைப்பது நிச்சயம். அவர் மேஜையின் இழுப்பறையில் பார்த்த வலி நிவாரணப் பட்டைகளை இவர் பார்த்து விசாரித்ததற்கும் வழக்கலான பதிலே வந்தது -

''வயசான பிறகு, அதுவும் வாழ்க்கைத் துணையை இழந்தவனுக்கு வாழ்வே வலிதானம்மா? அப்பப்ப போட்டுக்குவேன்.'' என்றார் எங்கோ பார்த்தபடி.



ஆக கல்யாணப் பெண்ணை இன்பக் கனவுகளை விட குழப்பங்களே ஆக்ரமித்திருந்தன.

ஆனால் சித்தி மிகத் தெளிவாய் கல்யாண வேலைகளில் இறங்கினாள்.

வீடு வெள்ளையடிக்கப்பட்டது.

கட்டிலுக்கு புது மெத்தை, தலையணைகள் சேர்ந்தன.

''போறது கூட்டுக் குடும்பங்கறதால மிக்ஸி, குக்கர் வாங்கத் தேவையில்லை. ஆனா பெரிய குடும்பங்கறதால தம்பதிகளுக்கு வெள்ளி தட்டு, தம்ளர் வாங்கணுமில்லை.''

தனக்குப் பெரிய இடத்து விவரங்கள் எல்லாம் தெரியும் என்ற தோரணையுடன் கேட்டாள்.

''அதெல்லாம் என்ன விலையிருக்கும்?'' தரணி தணிவாய் விசாரித்தார்.

''பத்து, இருவது ஆயிரமாவும்.''

அப்பா முகத்தின் கவலைக் கோடுகள் ஆழமாயின.

''அதெல்லாம் அவசியமே இல்லைப்பா - ஒரு கண்ணாடி ஸெட்டில் வர்ணம் தீட்டுனீங்களே - அது எனக்குத்தான். தினம் அதிலதான் சாப்பிடுவோம்... அனந்தனும் உங்களை ஒரு நாளைக்கு மூணு தரமேனும் நினைச்சுப்பார்... எனக்கு யாரும், எதுவும் உங்களை ஞாபகப்படுத்தத் தேவையில்லையேப்பா.''

தொண்டையைச் செருமியபடி திரும்பிக் கொண்டார் - கண்களில் தளும்பிய நீரை மறைக்கவோ?

மகளை நல்லபடி பிரிவதும் கூட கொடுமையானது தான்.

''அதுவும் இதைப் போலவே ஒரு கடற்கரை கிராமந்தானேப்பா - நீங்க எங்களோடு வந்துட்டா என்ன? பெரிய மாளிகை, நிறைய அறைகள்... தவிர தொழிலில் சில மாற்றங்கள் செய்த பிறகு நாம சென்னைக்கே போயிடக் கூடும்ன்னார்.''

''அதெல்லாம் பிறகு பார்த்துக்கலாம் - எடுத்ததும் மருமகன் வீட்ல போய் இருக்கறதாவது?'' இடை புகுந்த சித்தியை கடுப்பாய் பார்த்தாள் - சித்தி ஏன் குட்டையைக் குழப்புகிறார்கள்?

நிறைய வெண்ணையிட்டு பிசைந்த மாவில் முறுக்குகள் சுட்டு டின் டின்னாய் அடுக்கினாள் பங்கஜம்.

வாயில் மொறுமொறுப்பாய் கரைந்த அப்பலகாரத்தை தாயும் மகளுமே அவ்வப்போது மென்று தீர்த்தார்கள்!

ஆனால் பளிச்சென்ற சுவர்களும், பலகார மணமும் வீட்டிற்கு ஒரு விசேஷ களையைச் சேர்த்தனதான்.

அமோகா அவ்வப்போது உடுத்திய புடவைகளை பிசுக்கி நசுக்கிப் பார்த்து விட்டு, 'இதே போல இன்னும் எத்தனை வாங்கித் தந்தார் மாப்பிள்ளை? நகை எத்தனை சவரன்' என்ற ரீதியில் நூறு கேள்விகளால் தொணப்பினார்கள் -

இவளும் அப்பாவும் முன்பு போல விச்ராந்தியாய் உட்கார்ந்து பேச வாய்ப்பில்லை -

அப்பாவிற்கும் அதே ஏக்கம் போல -

''அமு, கடற்கரையில் கொஞ்சம் உலாவிட்டு வரலாமே வா'' என்றவாறு நடக்க, இவளும் பின் தொடர்ந்தாள்.

''இன்னும் கல்யாணத்துக்கு ஒரு வாரங்கூட இல்லையல்ல மு?''



''ம்ம்... பயம்மா இருக்குப்பா.''

''கடவுளை நம்பி, புது வாழ்வை ஏத்துக்கோடா... பிறகென்ன பயம். பலாப் பழத்தை உறிக்கையிலே விரல்ல கொஞ்ச எண்ணெய் தடவிக்கிறது போலத்தான் கடவுள் நம்பிக்கை... அது சேர, சுலபமாய் சுளையைப் பிரிச்சிடலாம்...''

''இந்தக் கல்யாணம் கடவுளின் சித்தம், திட்டம்னு தாம்ப்பா நானும் நினைக்கிறேன். இல்லைன்னா அந்த மழை ராத்திரி நான் ஏன் ஜிம்மு கடைக்குப் போகணும்? அதே நேரம் அவர் ஏன் உங்களைத் தேடிக் கிளம்பணும்?''

''ஆண்டவரின் வழிகள் விநோதமானவைதான்.''

கடல் மண்ணில் கால் புதைய நடந்தனர் - மூச்சு வாங்க கடற் காற்றை ஆழ சுவாசித்தனர். சென்னையின் மெரீனாவை ஒத்த கூட்டமில்லை இங்கு - வியாபாரங்களால் குலையாத அமைதி, சுத்தம்.

தங்களை மீறி நேர்ந்த சந்திப்பு என்று உணர்ந்தவளுக்குள் புது தைரியம் ஊறியது. யாருக்கும் தீங்கு நினைக்காத, எளியவர்களான தங்களுக்கு யாவும் நல்லபடியாகவே நடக்கும் என்ற நிம்மதி.

அப்பா சற்று நின்று மூச்சு வாங்கிக் கொண்டார்.

முன்பு குதிரை போன்று அலட்சியமாய் இதே மண்ணில் நடந்தவரல்லவா? காலம்தான் உடல்களை எப்படிச் சிதைத்து விடுகிறது...

வீடு வந்தபோது சித்தி இவர்கள் தேடி எடுத்து வந் நிம்மதியை மீண்டும் குலைத்தாள் -

''கல்யாண நாள் நெருங்கிடுச்சு... இன்னும் நாம ஒ தரங் கூட மாப்பிள்ளை வீட்டைப் போய்ப் பார்க்கலியே.

''அதெல்லாம் வேணாம்மா - வேவு பார்க்கறது போலாகும்.''

''அதானே உலக வழக்கம். அவர் நம்ப பெண்ணைப் பார்த்து தானே ஆசைப்பட்டார்?''

''நாமும் பையனைப் பார்த்து அவர் குணம் பிடிச்சுதானே சம்மதிச்சோம்?''

''பணத்தையும் தாராளமாய் வாரி இறைக்கறார்தான்... ஆனா தீர விசாரிச்சிடணும் கொழுந்தன் - எதையோ மறைக்க வீசற வலையாய் காசு இருந்துடக் கூடாது.''

''அழு.. பசிக்குது - தட்டுப் போடு'' என்ற அப்பாவின் மனம் மறுபடி குழம்பியது. இவளுக்கும் புரிந்தது - மிக அவசரமாய் ஆழம் அறியாத ஆற்றுக்குள் இறங்கிக் கொண்டிருக்கிறோமோ என்ற அச்சக் குழப்பமது...

நாட்கள் குழப்பமின்றி ஓடி மறைந்தன -

நாளை தனக்குத் திருமணம் என்ற எண்ணம் அவளை உலுக்கியது. இன்று அனந்தனின் அக்கா தன்னைப் பார்க்க வருவதாய்ச் சொல்லி விட்டிருக்க வீடு புதிதாய் பொலிவுற்றிருந்தது -

வீட்டின் நடுவே வர்ண ஜமுக்காளமும், ஓரங்களில் தேக்கு நாற்காலிகளுமாய், மலர்ச் சரங்களோடு மாவிலை களின் வாசம்.

சித்தி உளுந்த வடையோடு அல்வாவும் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். பல்லவி தட்டுக்களைத் துடைத்து தீநீருக்கு வெந்நீர் வைத்திருந்தாள் -

''ஏன் அழு, எத்தனை பேர் வருவாங்களாம்?''

''அவரு அக்கா பேர் என்ன? எத்தனை குழந்தைகளாம் வளுக்கு?''



''ஏதோ அத்தை பாட்டின்னாங்களே அவங்க வரலியா?''

இது போன்ற மேலும் இருபது கேள்விகளுக்கு அமோகா சொன்னது ''தெரியலியே'' என்பதுதான்... இனியும் கேள்வி கள் பாய்ந்தால்தான் அலறி விடுவோமோ என்றவள் மிரண்ட நேரத்தில் கார் வந்துவிட்டது.

அதிலிருந்து முப்பத்தைந்து வயது மதிக்கக்கூடிய ஒரு பெண்ணும், துறுதுறுப்பான இரு பெண் குழந்தைகளும் இறங்கினர்.

வெளுத்த ஒடிசலான அப்பெண் தந்த நிறத்தில் அரக்குக் கரையோடிய பட்டு கட்டியிருந்தாள் - கழுத்தில் மெல்லிய நீண்ட சங்கிலி, ஒற்றை வளையல்கள் அமோ காவை ஆவலாய் பார்த்து புன்னகைத்தவள் மிருதுவாய் கட்டி, வகிட்டில் முத்தமிட்டாள்.

''நான் அனந்தனின் அக்கா அகல்யா. இது எம் பொண் ணுங்க மூத்தவ ஆர்த்தி, சின்னவ அஸ்வினி.''

''வாங்க... உங்களைப் பாக்கறதில் ரொம்ப மகிழ்ச் சிம்மா.''

உதடுகள் புன்னகைத்தாலும் அகல்யாவின் கண்கள் சோகமாய் தோன்றின. அவளில் அனந்தனின் ஜாடை இல்லை என்றாலும் சிறுமிகளின் வசீகரத்தில் அவன் தெரிந்தான்.

வந்த பலகாரங்களை ஓரளவு சாப்பிட்டு, பேசிய பின் எழுந்த அகல்யா பெரிய வெல்வெட் பெட்டியை மணப் பெண்ணிடம் தந்தாள்.

''திறந்து பாரும்மா - இது எங்க குடும்ப நகை'' - என்ற படி திறக்க கருநீல வெல்வெட் பின்னணியில் கண்ணைப் பறித்தது அந்த வைர மாலை.

எட்டிப் பார்த்த சித்திக்கும் பல்லவிக்கும் மூச்சே நின்று போனது.

''அத்தனையும் வைரமா?''

''ஆமம்மா... நாலாம் தலைமுறையாய் உனக்கு வந்திருக்குது- நாளை இதைப் போட்டுக்கணும்.. நீ.''

''யப்பா என்னா ஜொலிப்பு? இருநூறு கல்லுக்குக் குறையாது. பரவால்ல அமு. உனக்கு மூணு மகள்கள் பிறந்தாலும் இதைப் பிரிச்சே ஆளுக்கு ஒரு செட் வைரம் செய்திடலாம்.''

''இல்லைம்மா - இது குடும்பத்து மருமகளுக்கு... மகளுக்கு அனந்தன் கொஞ்சம் உழைச்ச புது நகையாய் செய்துக்க வேண்டியதுதான்.''

''அடடே.. அப்ப நீ கூட இதைப் போட்டுக்க முடியாதா?''

சித்தி இங்கிதம் மறந்து கேட்க, அகல்யாவின் கண்கள் மேலும் இருண்டன. சோகத்தையே மையாய் அப்பிக் கொண்டது போலிருந்த அந்த கண்களை வருத்தமாய் கவனித்தாள் அமோகா.

அனந்தனும் எங்கூட வருவேன்னு ஒரே பிடிவாதம். நாளை வரை பொறுக்கக் கூடாதா - முன் தினமெல்லாம் பொண்ணும் பிள்ளையும் பார்த்துக்கக் கூடாது - நல்லதில்லைன்னு அத்தை பாட்டி அவனுக்குக் காவலுக்கு இருக்காங்க - அமோகா, இப்ப ஒரு அழகு நிலையப் பெண் வந்து உனக்கான ஒப்பனை, அலங்காரமெல்லாம் ஒத்திகை பார்த்துக்குவா - சரிதானே?''

''ம்ம்...''



''உனக்கு அதெல்லாம் தேவையில்லைதான் - ஆனாலும் நாளை மாலை வரை ஒப்பனை கலையாம இருந்தால்தான் மலர்ச்சியாய் தெரிவே..''

''ம்ம்..''

''சீக்கிரமே உன்னைப் போல அழகான குழந்தைகளைப் பெற்றுக் கொடும்மா அமோகா... பெண்களும் வேண்டும்னாலும் முதலில் ஒரு பையன்... சரியா? நான் அதற்காய் தினம் ஆண்டவனை வேண்டிப்பேன்..''

அந்த சோக கருவிழிகள் அழுந்த மூட, ஒரு கண்ணீர் துளி கசிந்து நின்றது.

அழகான குழந்தைகளுடனான ஒரு எதிர்காலம்...

ஆனால் அந்த நினைப்பு இனிப்பதற்கு பதிலாய் உறுத்தியது.

உள்ளம் ஏனோ படபடத்தது...

## 6



கண்ணாடியில் தெரிவது தன் பிம்பமா?

கிள்ளவும் தோன்றாமல் பிரமித்து நின்றிருந்தாள் அமோகா.

அலங்கரிக்க வந்திருந்த பெண்ணும் மனமார பாராட்டினாள் - ''இந்தத் தொழிலில் நான் பத்து வருஷ களாய் இருக்கேன் - ஆனால் இத்தனை அழகான மண பெண்கள் அபூர்வம்.''

''ம்ம்.. நன்றி... எனக்கே இது நான்தானான்னு நம்ப முடியலை.'' பாலாடை நிற ஜரிகைப் புடவையின் மேல் சிவப்பு ரோஜா மாலையைச் சூடி, அதே நிற சென்டை கையில் எடுத்தபடி கிளம்பினாள் -

பார்த்த சித்தியும் விக்கித்தாலும், கேட்டது.

''இப்படி அலங்காரம் பண்ண என்ன ரேட்டம்மா?'' என்று தான்!

''நான் அதை மாப்பிள்ளை சாரிடம் வாங்கிக்கறேம்மா'' புன்னகைத்தாள் அந்தப் பெண்.

''அது சரி - நான் தாயில்லை - தெரிஞ்சுக்கத்தானே கேக்கறேன்?''

''நேற்றைக்கும் இன்றைக்குமாய் சேர்த்து பத்தாயிரம்.''

''ஐயோடா!'' சித்தியின் தலை வெகு வேகமாய் சுழண்டது போலும் - இரு கைகளாலும் அழுந்தப் பிடித்துக் கொண்டார்கள்!

''வெறும் அலங்காரத்துக்கா இத்தனை செலவு?''

''இது விசேஷமான ஒரு நாளிற்கான அலங்கார மில்லையா? ஆலயத்தில் மாப்பிள்ளை பெண்ணிற்காய் காத்து நின்று, தகப்பனின் கை பற்றி வரும் மணப் பெண்ணை ஆவலாய் திரும்பிப் பார்ப்பார் - இந்த மணப் பெண் கோலம் அந்த ஒரே பார்வைக்குள் அவருள் றைந்து நிற்கும் - காலமெல்லாம் இந்தக் காட்சி அவர் ளகள் மழையாய் பொழிந்து குழைய வைக்குமே.''

''உன் கை மட்டுமில்லை, வாயும் ஜாலமாத்தான் பேசு ம்மா - அப்படியே எம் பல்லவிக்கும் ஏதேனும் அலங் ம் பண்ணேன்.''



ஷெவர்லே கார் இவளை அலுங்காமல் ஆலயத்திற்கு சுமந்து சென்றது.. அப்பா இவளுக்காய் காத்திருந்தார்... அவர் முகத்தில் தான் எத்தனை பரவசம், பெருமிதம். இவரின் நிம்மதிக்காகவே தான் தாலி ஏற்க துணிந் தோமோ?

'தயங்கி நிற்பவனை வாழ்க்கை ஒரு போதும் திரும்பிப் பார்ப்பதில்லை.

துணிச்சல் இன்றி வாழ்க்கையே இல்லை.'

என்பது அவளுக்கு உதவிய வரிகள்.

''அமு செல்லம், தேவதை போல இருக்கேடா..'' அப்பா அவள் கை பற்றினார்.

அந்த நேச முகத்தை ஆழ பார்த்தாள்.

''போகலாமா?''

ஆர்கனின் கம்பீர இசை எழும்ப, ஆழ மூச்செடுத்து கண்களை மூடித் திறந்தாள் - அவள் முகத்தில் இயல்பான ஒரு புன்னகை பூத்திருந்தது. ஆலயத்தின் மறுமுனையில் தனக்காய் காத்திருந்தவனை நோக்கி மெள்ள, மிக மெள்ள, இசைக்கு ஏற்றாற் போல நடக்கலானாள் அவள்.

அது கொச்சியின், இந்தியாவின் முதல் தேவாலயம் என்பார்கள் - அவர்கள் வழக்கமாய் ஆராதிக்கப் போவது கிராமத்துச் சிற்றாலயம் ஒன்றில். ஏழைக்கு ஏற்ற எள்ளாய் ஓலை வேய்ந்த, ஐம்பது பேர் மட்டுமே கூடக் கூடிய சிறு கட்டிடம். திருமணத்திற்கு நானூறு பேராவது வருவார்கள் என்பதால் அப்பா கொச்சினுக்கு வந்து இதைத் தேர்ந் தெடுத்திருந்தார் -

'ரொம்ப அழகான ஆலயம்மா - ஐநூறு வருஷங் களுக்கு முன்பே எழும்பினது. வாஸ்கோட காமாவின்

உடல் முதலில் இங்கு, புதைக்கப்பட்டு, பிறகே அவர் நாட்டிற்கு கொண்டு போகப்பட்டதாம்' விவரித்தார். பல நூற்றாண்டுகளாய் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களும் துதிகளும் அங்கு நிரம்பியிருந்தன போலும்.. ஒவ்வொரு அடியாய் இவள் எடுத்து வைக்க, வைக்க விவரிக்க இயலா அமைதி அவளை ஆட்கொண்டது.

இன்னும் சற்றைக்கெல்லாம் அவர்கள் தம்பதிகளாகும் தருணம்... ஒருவர் மற்றவர் கை பற்றி.

'இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் சுகவீனத்திலும் மரணம் நம்மைப் பிரிக்கும் வரை உன்னைப் பிரியேன்' என்று பரமன் முன் வாக்குத் தரப் போகும் பொன் நிமிஷம்...

சிலிர்ப்புடன் அனந்தனின் அருகே போய் நின்றவள் ஓரப் பார்வையால் அவனை, இவளை விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்தவனைக், கண்ட போது... ஏன் இத்தனை பயம் அநாவசியமாய் - என்று கூட தோன்றியது!

திருமண வரவேற்பில் வந்திருந்தவர்களை சற்று கவனிக்கவும் தான், எத்தனை வேறுபட்ட இருவர் வாழ்வில் இணைந்துள்ளனர் என்பதும் உறைத்தது - அரிசியும் உளுந்தும் போல வித்தியாசமான இரு வகைக் கூட்டம்!

ஆனால் இரண்டும் கலந்துதானே சுவையான பதார்த் த்திற்கான மாவு தயாராகிறது? என்றும் தனக்கே சமா தானம் கூறிக் கொண்டாள்.

அரங்கும் அதன் வெளிப்புற தோட்டமும் பொன் ளக்குச் சரங்களால் ஜொலித்தன - ரோஜா நிற குண்டு லூன்கள் தங்க நிற ரிப்பனால் கட்டப்பட்டு மிதந்தன... மான இசையோடு உயர் ரக விருந்து...



யானைகளோடு தன் நடனம் ஆரம்பிக்கப் போகிறதா... அதற்குத்தான் இத்தனை அலங்காரமுமா?

அந்த சொலவடைக்குப் பின்னிருந்த கதையும் அவளது ஞாபகத்திற்கு எழுந்தது -

யானை ஒரு எலியை விருந்திற்கு அழைத்ததாம்.

எலியும் சந்தோஷமாய் யானையின் இருப்பிடத்திற்குப் போக, அங்கேத் தோரணம், விருந்து, மது என்று ஏக அமர்க்களம். மது உறிஞ்சிய யானை தறிகெட்டு ஆட ஆரம்பித்தது. வெகு நேரம் கழித்து அது ஓய்ந்து தன் விருந்தாளியிடம் கேட்டது - 'என்ன எலியாரே - எப்படி குஷி?' என்று!

பதிலில்லை!

தேடினால் பாறை இடுக்கில் பதுங்கியிருந்த எலி முணங்கியதாம் -

'பாவி, நீ இப்படி புழுதி பறக்க ஆடினால் என் கதி என்னாகுமென்று யோசித்தாயா? உயிருக்கு அஞ்சி இங்கே பதுங்கியிருப்பதில் என்ன குஷி?' என்று!

பெரும் பணம், அந்தஸ்த்தில் இருப்பவர்களோடு எளியவன் இணைய நினைப்பது சங்கடமே தவிர சுகமல்ல என்பதற்கான கதை அது.

ஆனால் அனந்தனின் கண்களில் காதல் மின்னலடிக்கிறது தான்...

இவளது நெஞ்சமும் அவனை நினைத்தாலே பாகாய் கரைகிறதும் கூட.

இவளது விருந்தினர் எளிய ஆடையும் தயக்க சிரிப்புமாய் வளைய வந்தாலும் மேடையேறி இவளைப் போற்ற, வாழ்த்தத் தயங்கவில்லை.

''பெரிய இடத்துக்கு ராஜகுமாரியாப் போற எங்க அமு - கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கட்டும் மகளே..''

''இனி எங்களை எல்லாம் மறந்து போகுமோ? அடிக்கடி இங்க வரட்டும் கேட்டே?''

''அமோகா அற்புதமான பெண் மாப்பிள்ளை சார் - அவளை நீங்க கருத்தாய் பேணிக்கணும்.''

அதே நேரம் வாசல் பக்கமிருந்த கூட்டம் சலசலத்தது.

அனைவரும் வழிவிட, கறுப்பு கண்ணாடி, ஸுட் சகிதம் ஒரு வயோதிபர், முடிந்தளவு மிடுக்காய் நடந்து வந்தார் - இந்நேரம் அதுவும் அரங்கினுக்குள்ளே எதற்காய் இந்தக் கண்ணாடி என்று வியந்த அமோகாவின் கண்கள் மட்டுமல்ல அத்தனை பேரின் பார்வையும் அந்தப் பெரியவரில்தான்.

அத்தனை நேரம் மணமக்களை மொய்த்த விழி வண்டுகள் இப்போது தன்னை மொய்ப்பதை அறியாதவர் போல ஒரு வித கர்வத்துடன் மேடை ஏறினார் - மிக அருகே வந்தவரின் கண்களை இவள் கரும் கண்ணாடியை மீறி சற்று காண முடிந்தது... எத்தனை கூர்மையான விழிகள்!

இவளது கைகள் தன்னிச்சையாய் குவிய, பெரியவரின்
க அவளது வகிட்டில் பதிந்து... அவர் கை நடுங்
னவோ... அல்லது இவள் உடம்புதான் சிலிர்த்ததா...?
ா ஒரு விநோத உணர்வு.

பாய் திறந்து எதும் பேசாதவர் நீட்டியதைப் பெற்றுக்
ண்டாள் -

ு காகிதம் அது...



பரபரப்பாய் புகைப்படம் எடுக்க, சிலர் தயாராக, கைகளால் சிறு கண்டிப்புடன் அவர்களைத் தடுத்தவர் மறு நொடி இறங்கி விலகினார். ஒரு அவசரத்துடன் நடந்தவரையேப் பார்த்தவளின் கண், விரல்களில் படபடத்த காகித நீள் சதுரத்தில் பதிந்து விரிந்தன!

அது ஒரு செக்... தொகை என்ற இடம் நிரப்பப்படாத காசோலை. ஆனால் சிலந்தி பூச்சியின் கால்கள் போலொரு கையெழுத்துடன்!

''அவர் யாரு?'' அவளின் கேள்வி அவளுக்கே கேட்கவில்லை. பொதுவாய் யார் பக்கமிருந்து அழைப்பு வருகிறதோ அவருக்கே பெண் அல்லது மாப்பிள்ளைக் கையிலேயே விருந்தினர் தங்கள் அன்பளிப்பைத் தருவது வழக்கம். இந்தப் பெரியவருக்கு அப்பாவோ தானே அழைப்பு தரவில்லை. பிறகேன் தன் கையில் அவர் பரிசைத் தர வேணும்? ஒரு வேளை அப்பாவிற்கு பரிச்சயமானவரோ?

அப்பா இவள் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. பந்தி விசாரிக்கும் வேலையில் மும்முரமாயிருக்கிறார் போலும்.. மலைப்பில் சற்று ஒதுங்கி நின்ற மற்றவர்கள் மறுபடி மேடை ஏற, இவள் கையிலிருந்த காசோலையை அனந்தன் வாங்கி தன் கோட் பாக்கெட்டினுள் செருகினான் மறுபடி கிடைத்த துளி தனிமையில் அவசரமாய் கேட்டாள்.

''வந்தது யாரு?''

''அந்தப் பெரியவர் தானே? அவர் மிஸ்டர். வின்ஸன் - நம்ப வீட்டிற்குப் பக்கத்தில் வசிக்கிறார்.''

''ஓ.. அடுத்த வீடா?''

''அந்த அடுத்த வீட்டிற்கு நடக்க இருபது நிமிஷமாகும் அமு.''

''ஓ... அப்ப உங்க. நம்ப வீடு ரொம்பத் தனிமையாய் இருக்குமா?''

''சுற்றிலும் பெரிய தோட்டம்.''

''எப்படியும் பக்கத்து வீட்டிற்குப் போக இருபது நிமிஷம் நடக்கணும்?''

''ம்ம்'' - முறுவலித்தான் -

மறுபடி சிலர் பரிசுகளோடு மேடையேற, காமராவிற் காய் பகட்டாய் சிரித்தார்கள் -

உணவருந்தும் போது கிடைத்த சிறிது நேரத்தில் மறு படி தகவல்களைத் தந்தான் -

''நம்ப வீடு நூற்றிப்பத்தி வருஷப் பழைமையானது அமு. ஐந்து தலைமுறைகளாய் நம்ப குடும்பத்தார் அதில் வாழ்ந்திருக்காங்க. முதலில் அதைக் கட்டியவர் தன் மருமகளுக்குப் போட்டதுதான் இந்த வைர மாலை.''

தன் கழுத்தில் பதிந்த அந்நகையை அவளது விரல்கள் வருடின -

''ஆனா உன் விரல்களோடு ஒப்பிட்டால் நகை அத் தனை நளினமாய் இல்லை அமு. இதுவரை இந்த ாலையைப் போட்ட யாரும் உன்னளவு அழகாய் ிருந்திருக்க முடியாது.''

''உங்கம்மா கூடவா?''

வாய்விட்டுச் சிரித்தான். புரைக்கேறி கொள்ள னுக்குக் குடிக்க நீர் தந்தாள்.

தாங்க்ஸ்... நல்லாவே வம்பு திரிக்கறே அமு.. ஆனால் சொன்னது முழு உண்மை - இனியும் உன்னளவு



அழகாய் ஒருத்தியின் கழுத்தில் இது ஜொலிக்கப் போறதில்லை.''

''உங்கம்மாவை உங்களுக்கு நினைப்பிருக்கா?''

''மங்கலாய்.. எங்களை வளர்த்ததெல்லாம் அப்பாவின் அத்தைதான் - அவங்களை அத்தைப் பாட்டின்னுவோம்.''

''தெரியும் - முதலில் நமக்கு மோதிரம் போட்ட பெரி யம்மா தானே?''

''ரைட். அவங்க பேத்தி நளினியும் நம்ப வீட்டில்தான் இருக்கறா... ஆங் நாம மிஸ்டர் வின்ஸனைப் பற்றி யில்லையா பேச ஆரம்பிச்சோம்? நம்ப வீட்டிற்குப் போட்டி போல விஸ்தாரமாய் ஒரு மாளிகையை எழுப்பினார் - தோட்டம் உள்பட.. பழைய கால வீடு போலவும் அமைச்சர் என்றாலும் அந்த வீடு மிஞ்சினால் வெள்ளி விழா கொண் டாடியிருக்கும் - அவ்வளவு - தான்.''

''ஏனப்படி... அதாவது பழசு போல புதியதைக் கட் டணும்?''

''கௌரவம். நானும் பரம்பரைப் பணக்காரன்னு காட்டும் முயற்சி. ஆனால் எல்லாருக்குமே வின்ஸன் புதுப் பணக்காரன்றது தெரியும்.''

''பாவம்... இந்த மாலை நேரத்தில் கறுப்புக் கண்ணாடி எல்லாம் போட்டு கொஞ்சம் விநோதமாய்தான் தெரிஞ் சார்... அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பது போலவோ அது?''

''உன்னிடமிருந்து எதையோ... தன் உணர்வுகளை மறைக்கக் கூட அவர் கண்ணாடியைப் பயன்படுத்தி யிருக்கலாம்.''

''புரியலை - அந்த வீட்டுக்காரரான உங்களிடம் பரிசைத் தராமல் என்னிடம் ஏன் 'செக்'கைத் தந்தார் என்பதும் புதிர்தான்.''

புதிரின் எல்லா முடிச்சுகளும், ஒரே நாளில் அதுவும் முதல் நாளே அவிழ்ந்து விட்டால் வாழ்வு சுவாரஸ்யமாயிராது அமு.''

இடை புகுந்து சிலர் கேலி பேசினர் - ''செவிக்குணவு போதும்ப்பா - வாயிலும் கொஞ்சம் சாப்பாட்டைப் போடுங்க.''

ஆனால் வாயிலிட்ட உணவு இருவருக்குமே ருசியற்றதாய் பட்டது. பிரமாதமான அலங்காரத்தையும், திமிறிய கூட்டத்தையும் பிரமிப்புடன் பார்த்திருந்தாள் இத்தனையும் தங்களின் கல்யாணம் என்பதற்காகவா?

'மல்லிகை முல்லைப் பூப்பந்தல்

மரகத மாணிக்கப் பொன்னூஞ்சல்

மஞ்சள் வாழை மாமரங்கள்

பச்சை மாவிலைத் தோரணங்கள்

எல்லாம் எதற்காக - நமக்குக் கல்யாணம் அதற்காக!'

கல்யாணம் நிச்சயமான இவளது 30 வயது பள்ளி ஆசிரியை ஒருத்தர் இந்தப் பாடலைப் பரவசமாய் முணுமுணுத்தபடி இருந்தது ஞாபகத்திற்கு வந்தது. இப்படிப் பாடி நினைவூட்டிக் கொள்ள வேண்டும் போல... இன்னுமே இவை எல்லாம் ஒரு இனிய கனவு போலவேயிருந்தன.

''என்ன அப்படி ஒரு யோசனை.''



''நமக்குக் கல்யாணங்கறதை... நம்ப முடியலை.''

''கிள்ளவா? வேண்டாம் அமு.. சீக்கிரமே வேறு விதத்தில் உனை நம்ப வைக்கிறேன்..''

முகம் சிவந்தாள் -

விருந்தினர் கலைய, அப்பா இவர்களை ஒரு காரில் ஏற்றினார் -

''முதல் ராத்திரிக்கு கடற்கரையை ஒட்டிய நல்ல விருந்தினர் விடுதியை ஏற்பாடு செய்திருக்கேன் - கிளம்புங்க.''

''நன்றி மாமா..'' - அவன் கண்ணடிக்க, இவள் அவசரமாய் காரினுள் புகுந்தாள்.

சித்தி சூட்கேஸ் ஒன்றை காரில் வைக்க, கிளம்பினார்கள் -

அப்பாக்கு கையாட்டியபோது, பள்ளிக்கூட புதுச் சூழலில் தனியே விடப்பட்ட குழந்தையின் மிரட்சி உணர்ந்தாள் -

ஏ.ஸி. கார் வழுக்கி விரைந்தது.

கருநீல வானில் முழு நிலாவின் தகதகப்பு.

அந்நிலவின் ஒளிக் கதிர்களோடு கை கோர்க்கும் முயற்சியில் கடல் அலைகள் எம்பித் தாவின.

அந்த ஆவேச ஆர்ப்பரிப்பு அவளுக்கு ஏனோ அச்சமாயிருந்தது. அதை உணர்ந்தது போல அனந்தனின் கைகள் அவளைச் சுற்றி அணைத்தன.

அந்தக் கதகதப்பு அவளுக்குப் பிடித்திருந்தது.

மாலைகளின் மணம் கலந்த அந்த அணைப்பு மனோகரமாய் மயக்கியது. அவளது உடலோடு உள்ளமும் நெகிழ ஆரம்பிக்க, அவனை மேலும் நெருங்கிக் கொண்டாள்...

# 7



அமோகா கண் விழித்தபோது காலை மணி எட்டாகி யிருந்தது.. முன் தின நினைவுகள் சரசரவென்று மனதுள் ஓட முழுசாய் முழிப்பு வந்தது. உடலைத் திருப்பாமல் அருகே படுத்திருந்த அனந்தனை... இல்லை.. தன் கணவனை முதலில் ஓரக் கண்ணால் தொட்டாள். அவன் இன்னும் விழிக்கவில்லை என்பது புரிய முழுதாய் அவனை வருடின இவளது விழிகள்.

லேசாய் சொரசொரப்பு ஏறிய கன்னங்கள், தலையணை யில் படிந்திருந்த நீண்ட விரல்கள், கலைந்த தலைமுடி, அகண்ட மார்பு...

தன் கண்ணே பட்டு விடுமோ என்று அஞ்சி மறு பக்கம் திரும்பியவள் துளித் துளியாய் கட்டிலை விட்டு இறங்கினாள் -

அவன் உறக்கம் கலைந்து விடக் கூடாதாம்.

நுனிக்காலால் நடந்து திரைச்சீலையைச் சிறிதே விலக்கி வெளியே பார்த்தாள் -

நேற்று இரவின் ஆவேசச் சுவடே இன்றி மென்மை யாய் அலையடித்துக் கிடந்தது கடல் -

இதோ இப்போது அவள் கணவன் ஆழ்ந்து அமைதி யாய் மூச்சு விட்டபடி உறங்குவது போல...

நேற்றிரவு இதே கடல் எத்தனை மூர்க்கமாய் எம்பிக் குதித்தது? அனந்தனின் உணர்வுகளும் சில மணி நேரங் களுக்கு முன்பு மிக வேகமாய்த்தானே இருந்தன...



அது மோகம் விளைவித்த மூர்க்கம்.

ஆனால் மனைவியை ஒரு மலரைப் போலவும் கையாண் டான். மலர்ச் செண்டைக் கண் மூடி அள்ளி அள்ளி முகர்ந் தாலும் கைகள் பூவாய் அதைத் தாங்குவது போல...

அவன் அணைப்பிலிருந்த ஒவ்வொரு கணமும் கணவனின் காதலை உணர முடிந்தது அவளால்.

இனி ஒவ்வொரு நாளாய் அந்த நேசம் வளர்ந்து பெரு குமோ?

அப்படித்தானாக வேண்டும் என்று கண் மூடி கடவுளிடம் வேண்டினாள். அவள் காலைக் கடன்களை முடித்து அறைக்குள் வந்த போது எழாமல் இன்னும் படுக்கையில் சாய்வாய் அமர்ந்திருந்தவனைக் காண கூசியதால் கன காரியமாய் தேநீரை ஊற்றிப் பருகலானாள்.

''அதுக்குள்ளே அலுத்திடுச்சா அமு.''

தேநீர் தொண்டையிலேயே சிக்கி விக்கியது.

''எது... என்ன?''

''என்னைத்தான் - ஏறெடுத்தும் பார்க்க மாட்டே கறியே?'' அவள் முகம் மிகச் சிவந்து போனது.

''உங்களுக்கு டீ ஊற்றவா?''

''என் நினைப்பெல்லாம் வேற.. என்ன இப்படிக் கு யறே... நான் கவிதையைச் சொன்னேன் - பழநி பாரதி கவிதை ஒன்று - முத்தத்தைப் பற்றி.. சொல்லவா..''

''முகம் கழுவி... டீ குடிச்சிட்டு.''

''முதல்ல கவிதை - அப்புறம் நீ எனக்குத் தரல ம்ம்?''

இதற்கு பதிலில்லை.

"சரி - அந்தக் கவிதை முத்தம் ஒரு விளக்கு போலன்னு ஆரம்பிக்கும் -

'ஆனால் விளக்கைப் போல
சட்டென்று
ஊதியணைக்க முடியாது
கொடுக்கும் முத்தத்தைவிட
லேசானது
வாங்கும் முத்தம்
லேசாக
வாங்கிவிட முடியாது..'

உண்மைன்னு நேற்று ராத்திரிதான் புரிஞ்சது அமு... நீ இனி மேலேனும் கொஞ்சம் தாராளமாய் இருக்கலாம்.."

ஓடிப்போய் ஜன்னல் பக்கமாய் நின்று கொண்டாள்.

வெளியே பார்க்கும் சாக்கில் முகம் காட்டாமல் தப்ப லாமே... அது தீக்கங்கு போல கொதிக்கிறது!

அவன் புது மனைவியின் பின்னே வந்து நிற்க, அவளது தளிர் விரல்கள் ஜன்னலின் இரும்பு வளைவு களை இறுகப் பற்றின.

மென்மையான அவளது கூந்தலைக் கோதினான் -

"நானும் தயார் ஆனதும் வீட்டுக்குப் போலாம் அமு.."

"ம்ம்."

"என்ன முணங்கறே? போக இஷ்டமில்லைன்னா இங்கேயே இருந்து நம்ப மற்ற வேலைகளைக் கவனிக் கலாம்.."



"ல்ல... போகலாம்னேன்..." அவசரமாய் திரும்பினவள் அவனது குறும்பான சிரிப்பில் தானும் சேர்ந்து கொண் டாள்.

வீட்டிற்கு வந்த மணமக்களின் பூரித்த முகங்களை, கூச்ச சிரிப்பைப் பார்த்த பெரியவர்களுக்கு படு திருப்தி - சங்கட கேள்விகளுக்கு அவசியமேயில்லை. சித்தி வகை தொகையாய் சமைத்துப் போட, அனந்தன் ருசித்துச் சாப்பிட்டான்.

"வீட்ல பெரியவங்க இருந்தால், அந்தக் கவனிப்பே தனி தான் இல்லையா?"

சித்தி பூரித்துப் போனார்கள் -

"மதிய சமையலுக்கு இறா, புறா எல்லாம் வரும் - அதுவரை கொஞ்சம் படுத்து எழுங்க" என்று உபசரித்தார்.

ஆனால் அப்பாவிடம் பேசியபடி, வந்த பரிசுப் பொருட் களை பிரித்துப் பார்த்தவர்கள், மதிய உணவு முடிந்த பின்னரே ஓய்விற்கு அறைக்கு வந்தனர் - அவனுக்கு அசதிதான் - உடனே படுத்து விட்டான்.

அச்சிறு அறையின் நான்கு அடி அகலக் கட்டிலில் அவன் படுத்திருந்ததை வேடிக்கைப் பார்த்தவளுக்கும் தூக்கம் அசத்தியது. ஆனால் அவனை ஒட்டிப் படுக்க கூச, ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டியபடி பெரிய சாய்வு நாற்காலிக்குள் புதைந்தாள். மூன்றாம் நிமிடமே புத்தகம் அவள் விரல்களை விட்டு நழுவியது.

யாரோ தன்னைத் தூக்குவது புரிந்து விழித்தாள்.

"ஷ்... நான் தான்... ஏன் அமு செல்லம் - படுக்கைக்கு வராமல் ஏனிப்படி தூங்கணும் - இன்னும் கூச்சமா?"

''நீங்க வசதியாய் படுக்கட்டுமேன்னுதான்.''

''நீ என் பக்கத்தில் படுப்பதுதான் வசதியின் உச்சம். வீட்டில் நீ எம்பக்கத்தில் இருப்பதாய் நினைச்சு தலையணையை நசுக்கிடுவேன்... வந்ததும் பாரேன்... அது நசுங்கி பரிதாபமாய் கிடக்கும்...''

''பாவம்...''

''ம்ஹூம்.. இது பரவசம்..''

மாலை ஆறு மணிக்கு மேல்தான் அவர்களின் கதவு தேநீருக்காய் திறந்தது - தேநீருடன் மறுபடி அறைக்குள் அடைந்து கொண்டவன் கேட்டான் -

''சரி - அந்த நசுங்கிய தலையணைப் போக நம்ப வீட்டில் வேறு யாரெல்லாம் இருக்காங்க? சரியாய் சொல்லுங்க.''

''அடடே... தெளிவாய் நீ கேட்ட முதல் கேள்வி இதுதான்.''

''தெளிவாய் பதிலும் தாங்க.''

''நேற்று வில்ஸன் ஐயா பற்றி பேச ஆரம்பித்தோமில்லை.. பாவம் அத்தனை பெரிய மாளிகையில் வசிப்பது அவர் மட்டும் தான்.''

''ஏன் - அவருக்குக் குடும்பம்... பிள்ளைங்க?''

''கல்யாணமானவர்னு தெரியும்... ஆனா மற்ற தகவல்கள் தெரியாது.''

இதைச் சொல்லும்போது அவன் கண்கள் அலை மோதின விதம் அவளுக்குப் பிடிக்கவில்லை.

''எழுபத்தைஞ்சு வயசிருக்குமே அவருக்கு... வேலைக்காரங்க நிச்சயம் இருப்பாங்கல்ல?''



மறுபடி அவன் முகத்தில்... அதென்ன கணக்கமா... சலனமா? சற்று யோசித்து சொன்னான் -

''ம்ம்... கவனிக்க ஆட்கள் உண்டு... பணமிருந்தால் அதற்கென்ன பஞ்சம்? - ஆனால் வீட்டில் உறவுன்னு இருந்தால் அந்த அழகு, அம்சமெல்லாம் தனியில்லையா?''

''நிச்சயமாய். ஆனால் வீடும் நம்மைக் கட்டிப் போடும் நங்கூரமாய் இருக்கக் கூடாது. அது காற்றில் சுதந்திரமாய் பறக்கும் பாய்மரமாய் இருக்க வேணும்.''

''அடடே... தத்துவமெல்லாம் அசத்தலாய் பொழியற?''

''அது என்னுதில்லை - கலீல் கிப்ரான் சொன்னது.''

''அவர் காதலைப் பற்றி உருகலாய் பாடினவர் இல்லையா?''

''அது மட்டும்தான் பலர் மனசுல பதிஞ்சிருக்குது - அவர் 'அல்ஜீப்ரா' பற்றியும் கூட ஒரு புத்தகம் எழுதியிருக்கார்... ஆனா யார் வாசிக்கறா?''

போலியாய் அலுத்துக் கொண்டாள்.

''சரி - நம்ப வீட்ல இருப்பவங்களைப் பற்றி சொல்லவா?''

''நான் அதைத்தான் கேட்டேன்.''

கட்டிலில் உரசியபடி வாகாய் சாய்ந்து கொண்டார்கள்.

''முதல்ல உங்கக்கா - பிறகு செல்லமாய் அந்தக் குட்டிப் பொண்ணுங்க ஆர்த்தி, அஸ்வினி.''

''சரி.''

''அவங்க கணவர்?''

''இருந்தால் அவரில்லாமலா நம்ப கல்யாணத்தில்' அவர் உயிரோடு இல்லை. நம்மதில் பொட்டு வைக்கு

பழக்கமில்லாததால் பொட்டிழந்த அவங்க விதவைன்னு சட்டுனு புரிஞ்சிருக்காது - இல்லையா?''.

''இப்ப யாரும் பொட்டை அழிச்சுக்கறதில்லை. ஆனா அந்தக் கண்கள் காட்டிக் கொடுத்திடும்... தன்னில் ஒரு பாதியை இழந்த சோகம் அதில் நிரந்தரமாய் தங்கிடுதே... பாவம்.. எப்போ, எப்படி இறந்தாங்க?''

அதற்கு நேரடியாய் பதில் வரவில்லை.

''அகல்யாக்கா வீட்டின் வலதுபுற பகுதியில் இருக்காங்க.''

''அடுத்தது உங்களை எல்லாம் வளர்த்த அத்தைப் பாட்டி - அவங்களின் பேத்தியும் உடன் இருக்காங்க இல்லையா...''

''ம்ம்.. நளினி.''

''கல்யாணத்தப்ப லேசாய் பார்த்தது - பேசிப் பழக சமயமில்லை.'' அவன் இவளது விரல்களை ஆராய்ந்திருந்தான் -

''இப்படி ஒவ்வொன்றாய் இவற்றை முத்தமிடணும்னு எனக்கு ரொம்ப ஆசை அமு.''

''அழகாய் இருந்தாங்க... அந்த நளினி. ஆனா வயசும் இருக்குமே.''

''பின்னே - அவளுக்கு மட்டும் வயசாகாமல் இருக்குமா அமு?''

''ல்ல... கல்யாணம் ஆகலையான்னு கேட்கறேன்.''

''எனக்கு இளையவள்தான்.. எனக்கே இப்பதானே ஆயிருக்கு.''

போலியாய் பெருமூச்சு விட்டான்.



''உங்களுக்கு முப்பதாகப் போகுது.. பெண்ணிற்கு சீக்கிரமே முடிக்க நினைப்பாங்களே?''

''நினைச்சா?''

''மாப்பிள்ளை தேட ஆரம்பிக்கணும்.''

''மாமா உனக்கு மாப்பிள்ளை தேடணும்னு நினைச்சதுமே 'டக்'னு நான் வந்து சேரலை? அதுபோல அவளுக்கும் ஒருத்தன் வருவான்.''

அதற்கான முயற்சி எடுக்காமல் இதென்ன பொறுப்பற்ற பேச்சு என்று தோன்றினாலும் அதை அவள் வார்த்தையாக்கவில்லை. எடுத்ததும் அவன் குடும்பத்தைப் பற்றி கருத்துக்களை அவிழ்த்து இறைப்பது சரியில்லை.

அதுவும் இனி தன் குடும்பத்தைப் பற்றி எண்ணம் இரு பக்கமும் முழுக்க வந்த பின் பேசலாம்.

ஆனால் அந்த நளினி தன்னை ஏதோ ஒரு யோசனையுடன் பார்த்ததாய் பட்டது - அல்லது அது தனக்குத் திருமணமாகவில்லையே என்ற ஏக்கமா?

ஒருவேளை இந்த அமோகாவின் வரவால் தங்கள் வாழ்வின் தடம் மாறுமோ என்ற சந்தேகமா?

வீட்டில் மற்றொரு இளம் பெண் இருப்பது பொறுக்காமல் தான் தானும் அவளுக்கு மாப்பிள்ளை தேடச் சொல்கிறோமோ?

''நம்மது மாடி போர்ஷன் - கடற்காற்று அள்ளிட்டுப் போகும் - அங்கிருந்து பார்க்க கடலின் நீலம் தூரத்தில் ஒரு ஊதா ரிப்பன் போல கண்ணிற்குத் தட்டுப்படும்.. நம்ப அறைகளுக்கு நீ வேண்டிய திரைச்சீலைகளை

மாற்றிக்கலாம் - சுவர்களுக்குப் பிரியமான நிறம் பூசலாம். புது மரச் சாமான்கள் வேணும்னால்..''

''ல்லல்ல.. பெரிய வீடுன்றீங்க - அதைச் சுத்தப் படுத்தி, சமைத்து பராமரிப்பதே கடும் வேலை.''

''ல்லல்ல'' அவனது தொனியிலேயே மறுத்தவன் ''அதுக்கெல்லாம் வேண்டிய வேலையாட்கள் உண்டுடா அமு. தோட்டக்காரர், டிரைவர் கூட ரெண்டு பேர். ஒரு டிரைவர் காரோட அக்காவிற்கும் நளினாவிற்குமாய் - அவங்க கடை, கோயில்னு போய்வர, தவிர ஆர்த்தி, அஸ்வியை பள்ளிக்குக் கூட்டிப் போய், கூட்டி வரணுமே.''

''ஓ... பள்ளி ரொம்ப தூரமா?''

''இருபது நிமிஷ கார் சவாரி. ஏ.ஸி. கார் என்பதால் அலுப்பு தெரியாது. அடுத்த டிரைவர் ராகுல் அண்ணா விற்கு - நான் இல்லைன்னா முழுப் பொறுப்பும் அவர் தலையில்தான் - அலுத்துக்காமல் சுமப்பார் - ஆனா கார் ஓட்ட சலிப்பார் - எனக்கு நானே ட்ரைவர்.''

''ஓ... அப்படி... ராகுல் அண்ணா போல பொறுப்பாய் அங்கே இருப்பதால்தான் நீங்க இங்க நிம்மதியாய் இருக்க முடிஞ்சது... இப்போ முடியுது.. ம்ம்?''

''ஆமா.. கூடப் பிறந்தவரில்லை - அத்தையின் மகன்.. ஆனாலும் அத்தான்னு கூப்பிட்டுப் பழகலை. அவருக்கு குடும்ப சொத்தில் பங்கில்லை என்றது உயில் - ஆனால் அவர் மிக ஆர்வமாய் குடும்ப வியாபாரத்தைப் பழகினார், பார்த்துக் கொள்வார் - ஆக அவருக்குக் குறையேதும் தோணாதபடிக்கு தாராளமாய் சம்பளம் தந்திடுவேன்.. குடும்பத்தில் ஒருவர் என்பதால்தான் இத்தனை ஈடு



பாடோடு உழைக்கிறார்.. அதை நாமும் மதிக்கணு மில்லையா?''

''அவர் படிச்சிருக்காரா?''

சிரித்தான் - ''என்ஜினியர்ம்மா - வெளியே குறைஞ்சது நாற்பதாயிரம் சம்பாதிக்கக் கூடியவர் - ஆக அந்தப் பணத்தோடு, மற்ற வசதிகள் செய்து தந்திருக்கேன் - கார், ட்ரைவர், அவருக்கு வேண்டியபடி சமையல்னு.''

''அவருக்கும் கல்யாணமாகலையா?''

''அது வேற மாதிரி கதை...'' சற்று நேரம் கண் மூடி யிருந்தவன் பிறகு தொடர்ந்தான். ''அண்ணி பெரிய இடத்துப் பெண். அவங்களுக்கு இந்த கிராமத்தின் பெரிய வீடும், கூட்டுக் குடும்பமும் ஆகலை. பிள்ளைகளின் படிப்பு கெடுதுன்னு கோயம்புத்தூரில் இருக்கும் அவங்க பெற்றோர் வீட்டிலேயே தங்கிட்டாங்க. எப்போதேனும் வர்றதுண்டு.''

வைரங்களின் மினுமினுப்புடன் திருமண சமயம் சதா கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்த ஒரு பெண்ணை அவன் 'அண்ணி' என்று அறிமுகப் படுத்திய ஞாபகம் வந்தது.

''கல்யாணத்துக்கு வந்திருந்தாங்க.''

''வந்து தலைகாட்டினது பெரிசு...''

''முகம் சரியாய் ஞாபகமில்லை.''

''மறுபடி ஆல்பத்தில், வீடியோவில் பார்த்துக்கோ. தனக்கு குடும்பத்து வைர மாலை வரலைங்கறது கூட அவங்க குற்ற பட்டியலில் ஒன்று.''

''ஓ... அவங்க பேர்?''

''சரளா அண்ணி. அவங்க பிள்ளைகளும் அம்மாக்குச் சளைக்காத அல்டாப்ஸ்!''

அவனோடு சேர்ந்து புன்னகைத்தாள்.

அவனோடு ஒரு கூட்டுக் குடும்பம்தான் - ஆனாலும் விநோதமான ஒரு கூட்டுக் குடும்பம்தான் - ஆனாலும் எல்லாரும் அவரவருக்குப் பிடித்தது போல இருந்து கொள்ளும் சுதந்திரம் வாய்த்த ஒரு வீடு அது. பாய் மரத்தின் சுதந்திரம்.

''எப்போ... அங்கே.. நம்ப வீட்டிற்குப் போவோம்?''

''ராகுல் அண்ணா இருப்பதால் எந்த அவசரமுமில் லாமல் போகலாம். ஒரு வாரமேனும் தேனிலவை அனு பவிக்கணும்ர ஆசை அமு... ஆனா இப்ப யோசிச்சால்...''

''என்ன?''

''தேனிலவை நாம இங்கேயே அனுபவிக்க என்ன தடை?''

''அப்படீன்னா?''

''சித்தி நாளைக்கு ஊருக்குக் கிளம்பறாங்கன்னே.''

''ஆமா.. பல்லவியின் வீட்டுக்காரர் வீடு வந்தாச்சு போல - கான்பூர் போயிருந்தார் - அதான்.''

''நீ, நான், மாமா மூனு பேரும் ஒரு வாரம் இங்கேயே... நல்லாயிருக்காது? அதுவும் இது தேனிலவிற்கு ஏற்ற கட்டில்... வேற.''

அவளது முக பிரகாசமே அவனுக்குப் பதிலானது!

அது போக அழுத்தமான ஒரு முத்தம் வேறு கிடைத்தது.

''அடடே என்னதிது திடீர் பாசம்?''

''நன்றின்னு அர்த்தம்.''

''இதோ பார் அமு... மாமா நம் கூடவே வரட்டும்... ங்கட்டும். நம்மது பெரிய வீடு.. ஆக யாரும் அவரை



உபத்திரவமாய் நினைக்கப் போறதில்லை. இங்கே அவரைத் தனியே விட்டுப் போறதில் எனக்கும் திருப்தி யில்லை.''

சந்தோஷத்தில் தொண்டை அடைக்க அவனையே பார்த்திருந்தாள்.

''தவிர நம்ப வீட்டுல நிறைய வெற்றுச் சுவர்கள்... அத் தனையிலும் தன் ஓவியத்தால் நிரப்பி, ஒரு கலைக் கூடமாக்கிடலாம் மாமா... என்ன?''

அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''ஓஹோ அப்பா வர வேண்டாமா? சரி வேணாம் - அதற்கேன் அழற அமு..''

அவன் கிண்டலடிக்க அவளது அணைப்பு மேலும் இறுகியது!

## 8



சித்தி ஊருக்குப் போய்விட, அமோகா சமையலறை யில் மும்முரமானாள் - அவள் எந்த வேலை செய்தாலும் ஒட்டுப் புல்லாய் அப்பா அல்லது அனந்தன் கூடவே திரிந்தனர்.

சமையலில் உதவுவதோடு அப்பா அறிவுரைகளும் சொல்லுவார் -

''உங்கம்மா இருந்திருந்தால் அவளைப் பார்த்தே நீ பலதும் கற்றுக் கொண்டிருப்பேடா அமு... நா எனக்குத்

தெரிஞ்சதைச் சொல்றேன் - நீ வெற்றிகரமாய் வாழணும்டா - ஏந் தெரியுமா நிறைய கல்யாணங்கள் தோற்றுப் போகுது? கல்யாணமான உடனே சந்தோஷம் வரும்னு நினைப்பதாலதான். கட்டடங்கள் எல்லாம் வீடாகி விடாது - ஏன்?''

வெங்காயம் அரிந்து கலங்கிய அவள் கண்கள் என் என்று பெற்றவரையே கேட்டன -

''குடித்தனம் வைத்தால்தான் அது வீடு.''

''ஓஹோ...''

''அலமாரியிலுள்ள புத்தகங்கள் எல்லாம் அறிவாகிடாது.. வாசிச்சு, மனதில் பதிய விடணும்.''

மூக்கை உறிஞ்சியபடி தலையாட்டினாள்.

''மருந்தைப் பார்த்தாலே சுகம் கிடைச்சிடுமா?''

''ம்ஹூம்.. நல்லாக் குலுக்கிக் குடிக்கணும்.''

உல்லாசமாய் சிரித்த மகளைப் பரிவுடன் பார்த்திருந்தார் - மகளை இத்தனை துள்ளலுடன் முன்பு அவர் அறிந்ததில்லை - அமோகாவின் கன்னங்களின் மெருகும் சதா சிந்தத் தயாராய் இதழ்களிடையே காத்திருந்த இச்சிரிப்பும் புதிது.

முன்பு எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் அவளை உள்ளூர அரித்திருந்ததோ? அப்பாவின் உடல்நலம் பேணுவது முதற் கொண்டு எதிலும் உனக்கு நான் துணை நிற்பேன் என்று தோள் தர ஒரு வாழ்க்கைத் துணை அமைந்ததும் தெளிந்து விட்டாள்.

''என்னப்பா அப்படிப் பார்க்கறீங்க?''



''தகுந்த துணை அமைந்தால் அதைவிட சிறப்பு என்னடா? இரண்டு பேருமாய் மனம் இணைந்து ஏற்றும் தீபம் வாழ்வு முழுமைக்கும் வெளிச்சம் தரும்.''

கடந்த சில நாட்களில் ருசித்திருந்த அனந்தனின் அன்பில் இவளும் மயங்கித்தான் போயிருந்தாள் -

''எனக்கு சந்தோஷப் பிச்சை இடுன்னு கட்டியவளிடம் கையேந்தக் கூடாது - உன்னாலான அன்பை எல்லாம் அவனிடம் காட்ட... மெள்ள சந்தோஷம் விளையும் - 'ஈத்துவக்கும் இன்பம்' - அதுதான்.''

அப்பா இப்படியெல்லாம் பிரசங்கம் பண்ணுகிறாரே என்று இவளுக்குள் சிறு நக்கல் சிரிப்பு முட்டினாலும், தலையாட்டிக் கேட்டுக் கொண்டாள்.

இப்போதைக்கு அவள் நோக்கமெல்லாம் அப்பாவை எப்படி தன் புகுந்த வீட்டிற்குக் கடத்திப் போவது என்பது தான்.

இதுவரை அனந்தன் அவரையும் வரச் சொன்னது பற்றி மூச்சு விடவில்லை அவள் - எகிறி விடுவார்.

அங்கே போனதும் 'உங்களை ரொம்பத் தேடுதுப்பா' என்று அழுதுக் கரைவது ஒரு வழி.

'ஒரு ரெண்டு... ரெண்டே வாரம் எங்கூட வந்து இருக்கக் கூடாதாப்பா' என்று வரவழைத்து அப்படியே அவரை அங்கு அமுக்கிக் கொள்வதும் சாத்தியம்தான் -

ஒரு குழந்தை வந்து விட்டால் -

'என்னால் இவனை சமாளிக்கவே முடியலைப்பா. நீங்கதான் இவனுக்குச் சரி' என்று பொறுப்பைத் தந்து விடலாம்.

இத்தகு கற்பனைகளில் அவள் உலகம் மிகப் பிர காசமாய் போனது.

கணவனோடு கைகோர்த்து கடற்கரைக்குப் போனாலும் உலகமே புதிதானது போலிருந்தது... வானத்தின் நீலம் பளீரென்றும், கடல் பறவைகளின் கூச்சல் இசை போலவும்...

தான் இவ்வுலகத்தின் ராணி போலவும் ஒரு களிப்பான கர்வம்.

அப்பா மருமகனுக்கும் ராஜாஜி எழுதிய 'காதலும் கல்யாணமும்' என்ற கட்டுரையை வாசிக்கத் தந்திருந்தார்.

அதை வாசித்தவன் இவளையும் வாசிக்கச் செய்தான் -

'வாலிபனே, ஒரு இளம்பெண் உனக்கு மனைவியாக வீட்டிற்கு வந்திருக்கிறாள் அல்லவா? அது பற்றி எப் போதாவது நீ ஆழ்ந்து சிந்தித்ததுண்டா? சிறு வயதில் ஒரு பெண், தன் தாய், தகப்பனை விட்டு விட்டு புதிய ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு தைரியமாக வருகிறாள் - அவள் எதை, யாரை நம்பி இவ்வளவு தைரியமும் சந்தோஷமும் முகமலர்ச்சியும் கொண்டிருக்கிறாள்?

மணம் புரிந்த ஒவ்வொரு வாலிபனும் இதைத் தனக் குள் யோசித்து வியப்புற வேண்டும். இதைப் போன்ற தைரியமும் திட புத்தியும் ஆண்களில் யாராவது காட்டி யிருக்கிறார்களா? காட்ட முடியுமா?

மனைவியின் இந்த ஆத்ம சக்தியையும் தைரியத்தை யும் கண்டு விட்டால், அவள் பால் தான் செய்ய வேண் டிய கடமையை ஒவ்வொரு வாலிபனும் உணரவே செய்வான்.



தன் உடலின்பத்திற்காக அடைந்த ஒரு கருவியாய் அவளை நினைக்க மாட்டான். தனக்குக் கிடைத்த அரிய பெரிய நட்பு செல்வம் என்று அறிந்து... தன் சிநேகித னிடம் நடந்து கொள்வது போல கவனிப்பும் மதிப்பும் காட்டி மனைவியிடம் நடந்து கொள்வான்.'

''அடடே.. அப்பா உங்களுக்கும் மறைமுகமாய் பிரசங்கம் செய்றாரா? நல்லது.. இதன்படி ஒரு தோழனாய், உண்மையாய் எங்கிட்ட நடந்துக்குவீங்கதானே?''

அனந்தனின் முகம் வெளிறினதோ..?

அதைக் கவனித்த ஒரு நொடி இவளுக்குள்ளும் கலங்கியது.

''ம்ம்... உன்னிடமிருந்து எதை மறைத்தேன்? வெற்றுச் சுவர்களை மாமாவின் ஓவியங்களைக் கொண்டு நிரப்ப லாம் சொன்னேனோ? அது பொய்.. ஏன்னா அங்கே ஏற்கனவே பெரிசு பெரிசாய் படங்களும் ஓவியங்களும் உண்டு.''

''அடடா... எவ்வளவு பெரிய பொய்?''

தெளிந்து சிரித்தாள்.

ஓடிப்போய் அப்பாவிடமும் அதைச் செய்தியாய் சொன்னாள்.

''தெரியும்டா - அனந்த் எங்கிட்ட சொன்னாரே.''

''சொல்லியாச்சா?''

''நீயும் எங்கூடதான் அப்ப இருந்ததாய் ஞாபகம்... உம் மனசு மட்டும் வேறெங்கோ மிதந்திட்டிருந்தது போல.''

''பொய்.. சரி. அப்ப எங்களோடவே நம்ப வீட்டிற்கு வருவீங்கல்லப்பா?''

''வரணும்மா. பல தலைமுறைகள் ஓவியங்களாய், சமீப நாட்களில் புகைப்படமாய் சுவர்களில் அனந்தனின் மூதாதையர் உறைந்திருப்பதை நானும் பார்க்கணும்தான். அதிலிலுள்ளவர்கள் எல்லாம் நல்ல வடிவானவர்களாய் இருக்கணும் வேறு...''

''அதெப்படிப்பா உங்களுக்குத் தெரியும்?''

''மாப்பிள்ளையைப் பார்த்தாலே புரியலை? - லட்சணமான வம்சாவளி.''

''ஹையோ - இனி இவரைப் பிடிக்க முடியாதே'' - பெருமித சிரிப்பும் கிண்டலுமாய் கணவனைப் பார்த்தவளின் மறுபடி குழப்பம்.

காலரைத் தூக்கி விட்டுக் கொள்வான் என்று நினைத்தால் ஏனிப்படி முகம் கறுத்து நிற்கிறான்?

''மாமா, நாம கடற்கரைக்குப் போகலாமா... காலார ஒரு நடை?''

''நீந்திவிட்டே வரலாமேப்பா.''

''அப்பா நீங்க கடலுக்குள் இறங்கி ரொம்ப நாளாச்சு.'' மகள் எச்சரித்தாள்.

''அப்ப தோணலைடா... இப்ப ஆசையாயிருக்கே... சாளை மீன் வாங்கி வச்சிருக்கேன் - வறுத்து, பருப்புக் குழம்பு வச்சிடறியா அமு?''

''ம்ம்... சீக்கிரமாய் வந்திடணும்.''

''சரிடா..''

மறைமுகமாய் தன்னைக் கழட்டி விட்டு விட்டார்ளோ?



போன் மணியடிக்க, ஆவலாய் கையிலெடுத்தாள் - தினம் இவளோடு அகல்யா பேசத் தவறுவதில்லை. கணவனின் குடும்பத்தினர் தன்னைப் பிரியமாய் தாங்குவதில் இவளுக்கும் பெருமைதான்.

''ஹலோ'' - உல்லாசமாய் குரல் தந்தாள்.

பதிலுக்கு வந்த குரல் புதியது - மழலை மொழி -

''ஹலோ..''

''ம்ம்.. யாரது ஆர்த்தியா அஸ்வினி குட்டியா?''

கிளுகிளுவென்ற சிரிப்பு கலந்து பதில் வந்தது - ''ஆர்த்தி.''

''அடடே, இன்னைக்குச் சனிக்கிழமைல்ல? ஆக பள்ளிக்கூட விடுமுறை - ஆக இந்த அத்தை ஞாபகம் வந்திடுச்சா?''

''அம்மாதான் டயல் பண்ணினாங்க - ஆனா பாட்டிம்மா கூப்பிட்டதும் போனை வச்சிட்டுப் போயாச்சு.''

''ஆக சின்னம்மா நீ - டயல் பொத்தானை அழுத்தி என்னைக் கூப்பிட்டாச்சு - அதான?''

குழந்தை சிரித்தாள்.

''சாப்பிட்டிருப்பீங்க... விளையாடறீங்களா?''

''ம்ஹூம்.''

''பின்னே?''

''வீட்டுப் பாடம் எழுதறோம்.''

''அடடா... பாவம் பிள்ளைங்க உனக்கு சரி - நா வயசு அனு குட்டிக்குமா வீட்டுப் பாடம்?''

''ஆமாத்தை - ஆனா பாட்டி எங்களை எழுத விடாம ஒரே பேச்சு.''

''இந்தப் பெரியவங்களே இப்படித்தான் - விவரம் போதாமல் நம்மைத் தொந்தரவு செய்வாங்க!''

''மெள்ளத்தாம் பேசினாங்க - ஆனா எனக்குக் கேட்டுச்சு.''

பெரியவர்களின் கேட்கும் திறன் குறைந்ததும் சற்று உரக்கப் பேசுவது அவர்களுக்குப் பழக்கமாகி விடுகிறது. அதுபோல ரகசியமாய் அத்தைப் பாட்டி பேசியது சிறுமியின் இளங்காதுகளை எட்டி விட்டது போலும்.

''பெரியவங்க பேச்செல்லாம் உனக்கெதற்கு ஆர்த்திம்மா?''

''அ... அவங்க உங்களைப் பற்றிதான் பேசினாங்க...''

குழந்தை சுருதி குறைத்து அதைச் சொன்ன விதம் சற்று கலவரப்படுத்தியது.

பெரியவர்கள் இருவரும் பேசிய விஷயம் சுகமானது அல்ல என்பது போல -

ஆக தன்னையும் மீறி கேட்டு விட்டாள்.

''என்ன பேசினாங்க?''

''நீங்க இங்க வந்தா ஆபத்தாம்.''

''என்ன... என்ன ஆபத்து?''

''உயிருக்கே. ஆபத்தாம்.''

இப்போது அமோகாவிற்கு சிரிப்பு வந்தது - தவறாய் எதையோ புரிந்து கொண்ட குழந்தை உளறுகிறாள் என்ற நிச்சயத்தில் வாய் விட்டுச் சிரித்தாள் -



''அதெல்லாம் ஒண்ணுமில்லைடா. அங்கே நீயும் அஸ்வினியும் இருக்க எனக்கென்ன பயம்? எந்த ஆபத்தும் வராது.''

''ஓ..? உங்க படமும் சீக்கிரமே சுவத்தில அழகாய் தொங்கப் போடுதுன்னாங்க பாட்டிம்மா.''

இவளது புருவங்கள் சுருங்கி பின் இயல்பாகின -

''எங்க கல்யாண படத்தைச் சொல்லியிருப்பாங்க ஆர்த்திமா.''

''அச்சச்சோ.. அம்மா வர்ராங்க.''

போன் 'டக்'கென வைக்கப்பட்ட ஒலியில் - 'இக்கால சுட்டிகளுக்கு வால் நீளந்தான்' என்றபடி இவளும் தொடர்பைத் துண்டித்தாள்.

சாம்பாருக்குத் தாளித்து, எண்ணெய்ச் சட்டியை மீளிற்காய் அடுப்பில் ஏற்றியவளுக்கு உடம்பு கசகசத்தது -

அவசரமாய் ஒரு குளியல் போட்டால் என்ன?

அனந்தன் வீட்டிலிருந்தால் முதுகு தேய்க்கிறேன், தண்ணீர் விடுகிறேன் என்று வம்பு செய்வான்... வருவதற்குள் குளித்து விட்டால்? இன்று வெயில் அதிகந்தான்.. அதுதான் அப்பாவும் குளிக்கக் கிளம்பி விட்டாரோ?

'மதியம் குளிச்சால் கடல்நீர் சுடாதாப்பா?' என்றிவள் கேட்டதுண்டு.

'இல்லைடா கடல்ல இறங்கிட்டா குளுகுளுன்னு இருக்கும். அதுவே ராத்திரி இறங்கு - சமுத்திரம் வெதுவெதுப்பாய் கிடக்கும்.'

'அதெப்படிப்பா?'

'சூரிய வெப்பத்தை அப்ப அது தேக்கி வச்சிருக்கும்மா.'

உடம்பைக் கழுவி, குளிர்வித்து துடைக்க ஆரம்பித்த வேளையில் வாசற் கதவு தட்டப்பட்டது.

அதற்குள்ளாகவா உலாவலும் குளியலும் முடிந்து விட்டன?

இரவு அங்கியை மாட்டியபடி கதவு திறக்க ஓடினாள். வெளியே நின்றது அனந்தன் மட்டும்தான்.

"அப்பா எங்கே?"

பதில் தராமல் வீட்டிற்குள் நுழைந்தான்.

"அப்பாவைத் தனியே குளிக்க விடலாமா, அனந்த்?"

இவள் கவலையும் கலவரமுமாய் கேட்டாள்.

"புது மாப்பிள்ளையை இனியும் எங்கூட வச்சிருக்கக் கூடாது - தப்புன்னு அனுப்பிட்டார்."

"ஆனா நீங்க இருந்திருக்கனும்ப்பா..."

"வெயில் அதிகம் அமு... தலை வலிச்சது."

அப்பா பற்றிய கரிசனையில் கணவனைக் கவனிக்க வில்லையா என்ற குற்ற உணர்வுடன் அவன் முகம் பார்த்தாள் -

அவன் முகம் வேறுபட்டுதான் இருந்தது -

"அடடா... படுங்க அனு... இல்லைன்னா சாப்பிட்டுட்டு படுத்துடறீங்களா? ரெண்டே நிமிஷத்துல மீன் வறுவல் தயார்."

"வேண்டாம்."



"மோர் தரவா?"

அதற்குள் அவன் படுத்து விட, பரிதவித்தாள்.

வெட்டிவேரின் வாசனையுடனிருந்த பானை நீரைத் தந்து, அவனருகே அமர்ந்தபடி அவன் புருவங்களை நீவி, நெற்றிப் பொட்டை அழுத்தினாள்.

மென்மையாய் சிசுருஷை செய்த அந்தத் தளிர் விரல்களைப் பற்றியவன் அவற்றைத் தன் உதட்டில் ஒற்றினான்... அவன் விரல்கள் நடுங்கினவோ?

"ஐயோ காய்ச்சல் வரும் போலிருக்குதே அனந்த்...?" தவித்தாள்.

"ல்ல அமு.. இதோ இந்த மருந்து போதும் - எல்லாஞ் சரியாயிடும்" என்றவன் இவளது மடியில் தலை வைத்தான்.

சற்று நேரம் அமைதியாய் கழிய, இவள் மெள்ள எழ முயல, அவன் கைகள் அவளை இறுக்கித் தடுத்தன.

"ல்ல... அடுப்பைப் பற்ற வைத்தால் எண்ணைக் காயும்... அப்பா பசியாய் வரும்போது 'சட்'டுனு பரிமாற வசதி... அதான்."

அவன் பிடி தளர்ந்து அனுமதி தந்தன.

எழுந்த இரண்டு எட்டு வைத்தவளை மறுபடி கதவின் தட்டல் அழைத்தது -

"வரேம்ப்பா" என்று குரல் தந்தவளின் நெற்றி சுருங்கியது. இது அப்பாவின் தட்டல் அல்ல... அது மிருதுவான ஒரு நாசுக்கோடு இருக்கும். இது முரட்டு அழைப்பு - கடும் அவசரத்தில் இருப்பது போல... ஓடிப்போய் திறந்தாள்.

வெளி நின்றது சில மீனவர்கள் -

''யம்மா... உங்கப்பா... அப்பா.''

''என்னாச்சு?''

''அவரு கடல்ல திணறி... செத்துட்டாரும்மா.''

ஸ்தம்பித்து நின்றாள்.

## 9



''கடவுளை அடைய
ஒரே ஒரு வழிதான் உண்டு
அது - அவர் செய்வதையே
நாமும் செய்வது - படைப்பது.''

என்ற கவிதை வரிகளை அடிக்கடி சொல்லி பெருமைப் படுவார் அப்பா - ''போதும் திரு லீலா தரணி அவர்களே - அதிகமாய் பீற்றுகிறீர்கள்.''

''நான் ஒரு படைப்பாளி என்பதைத் தவிர எனக்கு வேறெந்த பெருமையும் இல்லையேடா அமு....''

''மறந்தாச்சா? ரொம்ப சமர்த்தாய், சிங்காரமாய் ஒரு பெண் உங்களுக்கு இருக்காளே?''

''நீ இன்னுங்கூட பீற்றலாம் - என் அமு செல்வம்.''

இப்போது அப்பா கடவுளை அடைய வேறு ஒரு வழி ண்டு கொண்டார் போல... உடலை விட்டுவிட்ட



அவரது உயிர் கடவுளின் பாதத்தண்டையில் அடைக்கல மாகி விட்டது.

தந்தையின் சாவில் ஸ்தம்பித்தவளைத் தொடர்ந்து வந்த அதிர்ச்சி, பயம், இழப்பின் வலி எல்லாமாய் சேர்ந்து பந்தாடின.

சோர்ந்தாள் - கண்ணீர் சுரப்பி வற்றும்வரை அழு தாயிற்று. அனந்தன், அவன் குடும்பத்தாரின் ஆதரவின்றி கடந்த சில நாட்களை அவள் கடந்திருக்க முடியாதென்று தோன்றியது. கணவனின் மார்பு இவளது தலையணையாய் இராதிருந்தால், துளித் துளியாய் அவ்வப்போது கிடைத்த தூக்கம் கூட அவளுக்கு வாய்த்திருக்காது.

துக்கம் விசாரிக்க வந்திருந்த முகங்கள் எல்லாம் பனிபடர்ந்த கண்ணாடி வழியே தெரிவது போன்ற பிரமை -

அவர்களின் ஆறுதல் சொற்கள் இவளை எட்டவே யில்லை.

அனந்தனின் கைகளை இறுகப் பற்றியபடி நின்றாள்.

பங்கஜம் சித்தி, இவளைக் கட்டி அலறினார்.

''கல்யாணமாகி ஒருவாரங்கூட ஆகலியே... மாலைங்க வாடறதுக்குள்ளே இப்படி அவசரமாப் போகணுமா? பேரப்பிள்ளைங்ககிட்ட உதைபட எங்கொழுந்தனுக்குக் கொடுத்து வைக்கலியேம்மா...'' என்ற பிலாக்கினமெல் லாம் அமோகாவின் செவியில் பட்டு வழிந்தன.

அன்றிரவே கணவனிடம் கெஞ்சினாள்.

''நாம இங்கிருந்து போயிடலாம் அனந்த்... என்னா இனிமேல் இங்கே... அப்பாயில்லாத வீட்டில் இருக் முடியாது...''

''நாம தங்கினது அவருக்காய்... இனிமே எதற்கு... கிளம்பிடலாம்டா அமு.'' உச்சியில் முத்தமிட்டு சொன்னான்.

முதலில் அவன் பெட்டியில் பத்திரப்படுத்தியது - அப்பாவின் ஓவியங்களைத் தான்! ஒவ்வொன்றாய் துணிகளில் சுற்றி அடுக்க செய்தான். அதற்கென்றே வந்திருந்த ஆட்கள் ஒரே நாளில் கலைக்கோயிலாயிருந்த அவ்வீட்டை வெறும் கூடாக்கினார்கள்.

''பெட்டிகள் பத்திரம்'' என்றபடி வண்டியேற்றினான்.

''என் ஓவியங்களை ரசிப்பவன், பொக்கிஷமாய், மதிப்பவன் உன்னையும் அதுபோலவே பார்த்துக் கொள்வான்டா அமு'' என்று அப்பா சொன்னது சரிதான் போலும்.

அகல்யாவின் குழந்தைகளுக்கு அந்த அலைச்சலில் சளியும் காய்ச்சலும் பிடித்துக் கொள்ள அத்தைப் பாட்டி முதலில் அவர்களுடன் கிளம்பினார்.

''எப்படியேனும் அமுவின் அப்பாவை சம்மதிக்கப் பண்ணி அவரையும் கையோட கூட்டிட்டு வந்திருப்பான்னேன் அனந்தனிடம்... வரக்கூடாத இடமாத் தேடி போயிட்டாரே'' - இவளின் தலையைக் கோதியபடி புலம்பினாள் அகல்யா.

உலகில் ஒவ்வொருவரும் நிலைகுலையாமல் நின்று வாழ உதவும் வேர் உறவுதான் என்பது புரிந்தது.

இப்புதிய வேர்களின் பிடிமானம் இல்லாவிட்டால் இவள் சாய்ந்துவிட்டிருப்பாள் இழப்பின் கனம் தாளாமல்.

''ரசந்தான் சாதம் சேர்த்து கரைச்சு கொண்டு வந்திருக்கேன் - குடிச்சிரு'' என்று குழந்தையாய் பார்த்துக் கொள்ளப் பட்டாள்.



ஆனால் ''சின்னவ உன்னை ரொம்ப தேடறா அகல்யா'' என்று பாட்டியிடமிருந்து தகவல் வர,

''அமுவைப் பார்த்து கூட்டிட்டு வாப்பா'' என்றுவிட்டு சிறுமிகளிடம் பரிதவித்து ஓடிய அத்தானை கண்டவளின் நெஞ்சு இளகியது. அகல்யாவினது இழப்பு தன்னுடையதை விட கொடியது.... பெரியது. தன் முழு வாழ்விற்கால துணையை இழந்து விட்டாளே... தன் எதிர்காலமே வெந்து போன வெறுமை அக்கண்களில் நிரம்பிக் கிடந்ததே...

மிஞ்சியது அவளது இரு குழந்தைகளும் இந்தத் தம்பியும்தானே....

''ரெண்டே நாட்களில் நாங்களும் வந்திருவோம் அண்ணி'' - விடை தந்து அனுப்பினாள்.

அப்பாவின் பிரத்தியேக சில பொருட்களை மட்டும் பத்திரப்படுத்திக் கொண்டவள் மற்றது எல்லாவற்றையும் ஜிட்டு, மற்ற அண்டை அயலாரிடம் தந்து விட்டாள்.

காலி வீடு மிரட்டியது - உனக்கு இனி போக்கிடமே கிடையாது என்பது போல... அவசரமாய் காரில் ஏறிக் கொண்டாள் -

எத்தனை இன்பமும் எதிர்பார்ப்புமாய் அமைந்திருக்க வேண்டிய பயணம் இது....

தத்தளிப்பாய் தொடங்கியிருக்கிறது.

இனி தன் வாழ்க்கைப் பயணம் எப்படிப் போகும்?

அதில் தைரியஞ் சொல்லி, ஆதரவு காட்ட இனி அ பாவும் இல்லை.

நடுங்கியவளைத் தன் தோளோடு சாய்த்துக் கொ டான் - ''வேணாம் அமு - அநாவசியமாய் குழம்பாதே

அப்பாவின் ஆசீர்வாதம் நமக்கு எப்பவும் எங்கேயும் உண்டு.''

இவர்கள் வருவது தெரிந்தும் அனந்தனின் வீட்டில் ஆர்ப்பாட்டம் ஏதுமில்லை - மஞ்சள் பூசிய இரு பெண்கள் ஆரத்தி எடுத்ததோடு சரி. இவளுக்கும் அதுவே மனதிற்கு இதமாயிருந்தது.

வீடு பெரியது என்பது புரிந்திருந்தாலும் இத்தனை பிரமாண்டமாய் எதிர்பார்க்கவில்லை. அமோகா வாழ்ந்து வளர்ந்த வீடு சிறியது. மொத்த வீடுமே இந்த வரவேற்பறைக்குள் அடங்கி விடக் கூடும்.

விழிகள் உள்வாங்கிய இந்த மாற்றத்தை புத்தி ரசிக்க ஆரம்பித்தது. ஒரு வாரமாய் அதிர்ச்சியில் மரத்திருந்தவளுக்கு அவசியமான ஒரு மாற்றம் அது. மினுமினுப்பான செஞ்சாந்து தளம் - வரவேற்பது போல எதிர் சுவரில் கனத்த ஜோடி யானைத் தந்தங்கள் தங்க பூணிட்டு - இடது பக்கத்தில் மெருகேற்றி மின்னிய கேடகம், அதன் குறுக்காய் ஓடிய ஜோடி வாள்களோடு. வலப்புறம் மன்னர் வர்மாக்களின் காலத்திய கொச்சின் துறைமுகத்தை நமக்குக் காட்டிய ஓவியம்.

உயர்ந்த கூரையிலிருந்து பெரிய நகை போல தொங்கிய லஸ்தர் விளக்கு - வீட்டினுள் அமோகா காலெடுத்து வைத்ததும் இவளின் இருபுறமும் கோந்திட்டு அழுத்தியதுபோல ஒட்டி நடந்த ஆர்த்தியும் அஸ்வினியும் தங்களின் புதிய அத்தையின் பிரமிப்பை ரசித்தார்கள்.

சின்னவள் கூச்சம் காரணமாய் ஏதும் பேசாவிட்டாலும் புதியவளின் விரல்களைப் பற்றியபடி நடந்தாள்.

''என்னத்தை அண்ணாந்து பாக்கறீங்க? நேத்துதான் அந்த லஸ்தர் விளக்கைக் கழுவினாங்க...''



''ஓ... எப்படி?''

''குதிர வச்சு.''

''குதிரையா?''

சிறுமிகள் வாய் பொத்தி சிரித்தார்கள்.

''குதிரன்னா சின்ன ஏணி அத்தை - அது மேல ஆளுங்க ஏறி கழுவுவாங்க... ராத்திரி லைட் எரியும்போது ஜோரா மின்னும்...''

''ம்ம்....''

வீடு வெள்ளையடிக்கப்பட்டும் இருந்தது. ஆக இந்தக் கல்யாணத்திற்காய் புது வரவிற்காய் இந்த வீடும் உற்சாகமாய் தயாராகி இருக்கிறது.

வீட்டின் வாரிசின் திருமணமல்லவா?

அனந்தனின் அத்தை மகனான ராகுல் படியிறங்கி வந்தார் - ''வாம்மா. சிரிப்பு சத்தம் கேட்டு நீ வந்ததைத் தெரிஞ்சுகிட்டேன்... இனி எப்பவும் இந்த வீட்டில் சந்தோஷம் நிரம்பி இருக்கட்டும்.''

''என்னண்ணா... தொழில் எப்படி போகுது?''

''எப்பவும் போலத்தான். ஆனா உன்னிடம் கேட்காமல் முடிவெடுக்க வேண்டாம்னு சிலதை அப்படியப்படியே வச்சிருக்கன். பார்த்துடறியா?''

''பதினைஞ்சு நிமிஷத்தில் வந்திடறேன் அமு... நீ நம்ப அறைக்குப் போ...''

ஆனால் அவன் போனதும் அமோகா குழந்தைகளிடம்,

''அம்மா எங்கே?'' எனக் கேட்டாள்.

''வந்து... தோ... அங்கே இருக்காங்க.''

இவர்கள் சத்தம் கேட்டு அகல்யா அவசரமாய் வந்தாள். அவள் அழுதிருப்பதை உப்பிய கண்கள் தெரிவித்தன.

அமோகா கை குவிக்க, புதிதாய் கண்ணீர் பெருக்கெடுத்தது.

''எனக்குத் தாளலை அமோகா.... முழு மகிழ்வுக்கு இந்த வீடு கொடுத்து வைக்கலை போல... உங்கப்பாவும் வருவாங்கன்னு நினைக்க, இப்படியாகிப் போச்சு... விருந்தும் மேளமுமாய் இருக்க வேண்டிய வரவேற்பு, இப்படி சத்தமில்லாமல் அமைஞ்சிடுச்சு...''

''பரவால்ல அண்ணி. நீங்க அழாதீங்க.''

''சரிம்மா.. நீ உன்னைக் கருத்தாய் பார்த்துக்கணும்... நேரத்திற்கு சாப்பிட்டு, நிம்மதியாய் இருக்கணும் என்ன?''

தலையாட்டினாள்.

''உனக்கு சாப்பாட்டில் என்னென்ன பிடிக்கும்னு சொல்லிடு - அதில் தினம் ஒன்றேனும் இருக்கும்படி பார்த்துக்கறேன் - இளைச்சுட்ட நீ...''

அமோகா உண்பதற்காய் உயிர் வாழும் ரகமல்ல. அவ்வப்போது சுவையான உணவை ரசிப்பவள் என்றாலும் அனுதினமும், அதன் மூன்று வேளைகளும் சாப்பாட்டைத் திட்டமிடும் ஆளல்ல.

''சுத்தமும் சத்துமாய் எதுனாலும் சரி அண்ணி - எளிமையாய் இருந்தால் எனக்குத் தேவலை...''

''அடடே, அனந்தனுக்கு நேர்மாறு - அவனுக்கு மூணு நேரம் நாக்குக்கு ருசியாய் வேணும் - அசைவம் இல்லைன்னா சிரமப்படுவான்.

''குறைச்சுக்கறது நல்லது - அளவாய் இருந்தால்தான் அமிர்தமே நல்லதாம்.''



அகல்யா முறுவலித்தாள் - ''கெட்டிக்காரிம்மா - வீட்டை உன் பொறுப்பில விட்டுட்டா எனக்குமே நிம்மதிதான்.''

பழுப்பு நிறப் பட்டுப் புடவையில் வந்து நின்றார் அத்தைப்பாட்டி. முன்பே காட்டராக்ட் சிகிச்சை செய்யப்பட்ட அவர் கண்கள் நீரில் மிதக்கும் புறா முட்டைகள் போல கனத்த கண்ணாடியின் பின்னே ததும்பின - அந்தக் கண்களால் இவளை ஏற இறங்க பார்த்து,

''வாம்மா - அனந்தன் எங்கே?'' என்றார்.

''மாமா, பெரிய மாமாட்ட பேசிட்டிருக்காங்க.'' சிறுமிகள் அறிவித்தனர்.

''சரி. அப்ப அத்தைய அவங்க அறைக்கு கூட்டிட்டு போங்க வாண்டுகளா...''

இரண்டு குதிரைகள் பூட்டிய சாரட் வண்டி போல குழந்தைகளால் இழுபட்டு நடந்தாள் - விசாலமான மரப் படிகளில் ஏறினார்கள். அதன் வழுவழுப்பான கைப்பிடியின் கீழே வரிசையாய் கடல் குதிரைகள் நிற்பது போலொரு அமைப்பு - அந்த நுட்பமான வேலைப்பாட்டை இவளது விரல்கள் ரசித்துத் தடவின. மாடி தளத்தில் சுவர்களில் பல நான்கு அடி உயர ஓவியங்கள்.

இவர்கள்தான் அனந்தனின் முன்னோர்களா என்ற ஆவலுடன் அவற்றை நெருங்கிப் பார்த்தாள் -

அப்பாவின் கணிப்பு தவறல்ல -

'அனந்தனின் தோற்றத்தை வைத்து யூகித்தால் அவரது வம்சாவளி பொலிவானதம்மா' என்றது சரிதான்.

பெண்களின் வரிசைக்கு வந்தவள் -

''இதில் உங்க பாட்டிம்மா, அதாவது அனந்தனின் அம்மாப் படம் எது?'' என்று கேட்டறிந்து அதன் முன் நின்ற போது இவளையும் மீறி கைகள் குவிந்தன.

பாவம் - விவரம் தெரிவதற்கு முன்பே தாயை இழந்தவன் - பக்குவம் வரும் முன் தந்தையும் இல்லை - தான் இத்தனை காலம் தந்தையின் அன்பை, அண்மையை அனுபவித்ததே கடவுளின் பேறு என்று இப்போது பட்டது.

ஓவியத்திலிருந்த இவளது மாமி கனிவு ததும்ப தன்னையே பார்ப்பது போலிருந்தது. முக லட்சணமும் அலையடிக்கும் கூந்தலுமாய் அம்சமான ஓவியம் அது.

இள வயதிலேயே சாவு எந்த முறையில் இவர்களைப் பறித்திருக்கும்?

ஆர்த்தியும் ஒரு வித யோசனையுடன் தன்னையே நிமிர்ந்து பார்ப்பதை உணர்ந்தவள் புன்னகைத்தாள்.

சின்னவள் அஸ்வினி சிறு பொம்மை போல கண்களைக் கொள்ளையடித்தாலும் அமோகாவிற்கு மூத்தவளின் மீது தனி பாசம் -

ஆர்த்தி அனந்தனின் சாயலைக் கொண்டிருப்பதாலோ? அவனைப் போன்ற துருதுருப்பும், அவ்வப்போது அவனைப் போலவே சிறு கவலையான சிந்தனையுடன் அச்சிறுமி தன்னை பார்ப்பதாலா?

ஏன் ஆர்த்தியுமே அப்பாவை இழந்தவள்தான்... அந்தப் பரிதாபத்துடன் தன்னை பார்க்கிறாளோ என்ற கேள்வி முழு திருப்தி தரவில்லை.

அந்தப் பார்வையில் ஏதோ ஒரு புதிர் புதைபட்டிருந்தாய் தோன்றியது.

சன்னமாய் ஒரு மணியொலி சிந்தனைகளை லைத்தது.



''அது இன்டர்காம் - அம்மா சாப்பிட நம்மைக் கூப்பிடறாங்க...''

இளையவளுக்கு பசி ஞாபகம் வர சிணுங்கினாள் - ''போலாங்கா...''

''நீங்க போங்கம்மா.. நான் முகம் கழுவிட்டு அஞ்சே நிமிஷத்துல வந்துடறேன் - சரியா?''

''அப்படியே அதோ - அந்த ஆபீஸ் ரூமில் இருக்கற ரெண்டு மாமாக்களையும் வரச் சொல்லிடுவீங்களா அத்தை?''

''நானா?''

''அஸ்வி இப்ப சைரன் ஊதிடுவாளே?'' என்றபடி தங்கையைத் தூக்கமாட்டாமல் சுமந்தபடி ஆர்த்தி படியிறங்க, இவள் தன்னுடையதாய் காட்டப்பட்ட அறையில் அவசரமாய் முகம் கழுவி தயாராகினாள் - மாடியின் ஒரு புறம் முழுக்க அறையின் கதவுகள் - மறுபக்க மரத்தடுப்பு வழியே கீழ்புற விசால முன்னறை தெரிந்தது.

ஆர்த்தி சொன்ன அறைபக்கமாய் போனபோது, கதவைத் தட்ட அவசியமில்லாமல் அது சற்று ஒருக்களித்து திறந்தேயிருந்தது.

இரு ஆண்களின் பேச்சு தெளிவாய் காதில் விழுந்தது.

''எல்லா உண்மைகளையும் ஒருசேர நீ அந்தப் பெண்ணிடம் சொல்ல வேண்டாம் அனந்தா - வந்ததும் அதிர்ச்சி தராதே... நேரம் பார்த்து தெரியப்படுத்தலாம்.''

''அதற்குள் அவளுக்கே தெரியவந்துட்டா என்ன செய்ய அண்ணா?''

''கடவுள் விட்ட வழி - பொறு - பார்ப்போம்.''

கணவனை அழைக்க நா புரளவில்லை.....

அமோகாவின் கால்கள் பின்னடைந்தன.....

## 10



தனது பெரிய கொண்டையைத் தளர்த்தியபடி வீடு
ழைந்தாள் சரளா.

''ஹப்பா... வலி தலையப் பிளக்கறது. ஒரு காபி
பாடும்மா.''

''நீ மேலே உன் அறைக்குப் போ... காபியை அனுப்பி
பக்கிறேன்.'' தாயின் தொனியிலிருந்த வித்தியாசத்தை
ணர்ந்த மகள் கண்களால் வினவினாள்.

'உங்க பாட்டி வந்தாச்சு - ஊரிலேருந்து வந்ததிலிருந்து
ன நிமிஷம் வரை ஐம்பதோரு தரம் கேட்டாச்சு...
பேத்தி எங்க போயிருக்கா? இந்நேரம் வரை ஏன்
பலை - புருஷன் வீட்டுக்கு எப்ப போறா'ன்னு....''

போச்சு... எந்தலைவலி கூடிடுமே... அப்பத்தா
ல் வாயை மூடிட்டு ஊர் திரும்பின சரித்திரமே
பாதே...''

கைப்பையுடன் சரளா அவசரமாய் எழ, அவளது
வைப் பெற்றவள் அங்கு வந்து நின்றார்!

ா வந்தாச்சா நீ... ராத்திரி பதினொரு மணி வரை
போன?''



''அழகுப் போட்டி அப்பத்தா... அதான்.''

ஏற இறங்க பார்த்த முதிய ஆனால் கூர் விழிகளில் -

'இரண்டு பெற்ற உனக்கு அங்கென்ன ஜோலி?' என்ற நக்கல் கேள்வி இருந்தது.

''என்னை நீதிபதியாய் அழைச்சிருந்தாங்க...'' சற்று கடுப்பாகவே விளக்கினாள்.

''ஓஹோ? அதான் நீயும் சளைக்காம அலங்கரிச்சிட்டு கிளம்பிட்டியா?''

''கோவையில அழகு பெண்களுக்குப் பஞ்சமா? கடைசியாய் தேர்வான ஐந்து பெண்களும் பிரமாதம்... ஒருத்தருக்கு மற்றவர் சளைக்காத திறமையும் வேற... முடிவு பண்றதுக்குள்ளே மூளை சூடாயிடுச்சு... தலை வலி...''

''தேவையில்லாததில் மூக்கை நீட்டினால் தலை வலிக்கத்தான் செய்யும்...''

''படுக்கறேன் அப்பத்தா...''

''சாப்பிடாமலா?''

''அங்கேயே விருந்தெல்லாம் ஆச்சு'' - நழுவினாள்.

ஆனால் மறுநாள் காலை சரளாவிற்கு நழுவ வகையில்லை. பெரியவர் பேத்தியின் அறைக்கே வந்து சட்டமாய் உட்கார்ந்தாயிற்று!

''இன்னுமா சரளா நீ குளிக்கலை...?''

''நேத்து நேரங்கழிச்சு படுத்தேனில்லையா...''

''உம் பிள்ளைங்களைப் பள்ளிக்கூடம் அனுப்பியாச்சா?''

"அதெல்லாம் அம்மா பார்த்துக்குவாங்க."

"உன்னை வளர்த்து, ஆளாக்கிக் கட்டித் தர்றது அவ பொறுப்பு - பிறகேனும் உங்கம்மாக்கு அதாவது எம் மருமகளுக்கு ஓய்வு வேண்டாமா? ஏன் உம் பொறுப்பை அவ தலையில கட்டறே?"

"பிள்ளைங்களுக்கு பாட்டின்னா பிரியம்... ஆக அம்மா வளர்ப்பிலேயே..." நீங்க இப்படியெல்லாம் எங்களைப் பராமரிக்கவில்லையே என்ற தொனியில் இழுத்தாள்.

"தாய் வளர்க்காத பிள்ளை பேய் பிள்ளைன்னுவாங்க! தகுந்த கண்டிப்பும் கண்காணிப்புமாய் கிழவி, குட்டிங்களை வளர்க்க முடியுமாச் சொல்லு?"

"நீங்க சாப்பிட்டாச்சா அப்பத்தா?"

"ஆச்சு... நீ காபி குடிச்சாச்சல்ல?"

"ஆமா.."

"அப்ப உட்காரு." உத்தரவிட்ட முதியவள் தானும் சட்டமாய் உட்கார்ந்தாள். அமர்ந்த களத்த தேக்கு நாற்காலியைப் பாதி கூட நிரப்பாத ஒற்றை நாடி சரீரம் என்றாலும் அப்பத்தாவின் கம்பீரம் தனி. மிகக் கட்டுப்பாடு நேர்மையுமான வாழ்வு வாழ்ந்ததின் பலன் போலும்... அவர் சொல்லை மறுத்துப் பேச யாருக்கும் நாக்கு புரளாது. தாத்தா இறந்தபின் தோட்டம், தோப்புகளைத் தனியாளாய் கவனித்துக் கொண்டவர் அவ்வப்போது கோவையிலிருக்கும் தன் மகனின் வீட்டிற்கு வருவதுண்டு.

அநாவசியமாய் எதிலும் மூக்கை அவர் நுழைப்பதில்லை எனினும், தன் பேத்தி சரளா கணவனோடு இருக்காமல், தன் பெற்றோர் வீட்டில் தங்கி தன் பிள்ளை



களையும் கோவையிலேயே படிக்க வைப்பதில் எல்லாம் அவருக்கு உடன்பாடு இல்லை.

"தங்கத்துல தேர் செய்து, அதில் பச்சையும் மாணிக்கமும் பதிச்சு, வைரத்தைக் கயிறாய் திரிச்சு, சீராட்டினாலும் அந்தத் தேர் மண்ணில்தான் உருளணும்" என்று அடிக்கடி சொல்வார். பிறந்த வீட்டு சொகுசுகளை விட்டால்தான் உனக்கென்று ஒரு பாதை அமைத்து முன்னேற முடியும் என்ற பொருளில்.

பேத்தியிடம் நயமாய் புத்தி சொல்லாமலில்லை... அவள் தலையைக் கோதியபடி அறிவுறுத்தியிருக்கிறார்.

'உன் மாப்பிள்ளை ராகுலுக்கு என்ன குறை சொல்லு? நல்ல படிப்பு - நிறைஞ்ச குடும்பத்து பிள்ளை... இதை விட விஸ்தாரமான வீடு... அது கொள்ளாமல் வேலையாட்கள்... போக வர கார்.'

பேத்தி முணங்குவாள் -

'கூடவே ஒரு குடும்பமும் இருக்குதே. அதுவும் கூட உடன் பிறந்தவங்க இல்லை. அத்தை மகள், மகன், அத்தைப்பாட்டின்னு ஒரு கும்பல்.'

'அந்தக் குடும்பத்திற்கு மூத்தவராய்தான் அவங்க உம்புருஷனை மதிச்சு நடத்தறாங்க... அப்படி பார்த்தால் நீதானே அங்கே மூத்த மருமகள்?'

'அடடா... பொறுப்புக்களை நாம சுமக்க, நாமளா அப்படி ஒரு பட்டத்தை நமக்கு சூட்டி பசப்பிக்க வேண்டியதுதான் அப்பத்தா - குடும்பத்தின் கௌரவத்தில் எனக்குப் பங்கு தர மாட்டாங்க...'

'அதாவது அந்த குடும்பத்து வைரமாலை உங்கழுத்துக்கு வரலைன்னு பொறுமறே - அதானே?'

"வயித்தெரிச்சலை ஞாபகப்படுத்தாதீங்க..." சிணுங்கலும் சலிப்புமாய் அன்று முணங்கிய சரளாவின் கோபம் இன்றும் ஆறியபாடில்லை.

கணவனின் உறவுகளோடு ஒதுக்குப்புறமான பகுதியில் வசிக்க சரளா ஒப்பவில்லை.

தன் பிள்ளைகளுக்கு அங்கு தரமான கல்வி கிடைக்காது என்ற சாக்கு சொல்லி தன் தாய் வீட்டில் தஞ்சமாகி விட்டாள்.

அவ்வப்போது அங்கு வரும் அப்பத்தாவின் முயற்சிகள் விக்கிரமாதித்தனின் கதை போல வெற்றி தராமல் போயின - பேத்தி வேதாளம் மறுபடி மறுபடியுமாய் மரத்தில் ஏறி தொங்கியது!

சரளாவின் தாயிடமும் எடுத்துச் சொன்னார் அப்பத்தா - "மருமகளே... மனுஷங்களை விட மிருகங்கள் குட்டிகை யானையாய் படுது. ஒட்டகச்சிவிங்கி குட்டி போட்டதும் என்ன செய்யுமாம் தெரியுமா?"

"சொல்லுங்க அத்தை..."

"பத்தடி உயரத்திலிருந்து முதன்முதலாய் பூமியில் விழும் அந்தக் குட்டி சுருண்டு கிடக்குமாம் - குட்டியை நக்காமல், குலாவாமல் தாய் அதற்கு முதலில் விடறது ஓங்கி ஒரு உதை!"

"அடப் பாவமே..."

"அப்படி பாவம் பார்த்தால் குட்டி அந்தக் காட்டில உயிர் பிழைச்சு வளர முடியாதுடி... குட்டி எழுந்துக்கணும் இல்லன்னால் இன்னொரு உதை... குட்டி பதைச்சு எழுந்துக்கும்... நடக்க ஓட ஆரம்பிக்கும்... இல்லைன்னா



மற்ற மிருகங்களுக்கு இரையாகிடுமே? இங்கே நீ உம்மகளுக்கு சொகுசு காட்டி ஊழியஞ் செய்திட்டிருந்தால் அது புக்ககம் போறதெப்ப? தன் வீடு, தன் பொறுப்புன்னு உணருறதெப்ப?"

சரளா பழியைத் தன் பிள்ளைகளின் படிப்பின் மேல் போடுவாள் - இப்போது மறுபடி எடுத்து சொன்னார் பெரியவர் -

"தோ பாரம்மா - அகல்யாவின் குழந்தைகள்லாம் அங்கே பக்கத்து பள்ளிக்கூடம் போய் படிக்கலை?"

"அதெல்லாம் நமக்கு சரி வராது அப்பத்தா... தவிர அங்க கடை, கண்ணி, தியேட்டர், பார்லர் ஏதுமில்லை... பிறகெப்படி...?"

"அப்படிப் போடு -

'சர்க்கரை முத்துக்குட்டி சாதம் குழைஞ்சு போச்சு;

எடுடா பல்லக்கைப் பிறந்தகம் போறேன்' என்ற கதையால்ல இருக்குது? சினிமாவுக்குப் போறதும், கடைத் தெருவில உலாத்தறதுமா சந்தோஷம்? புருஷனும் பெண்ஜாதியுமாய் இணைஞ்சு ஒருத்தொருக்கொருவர் தோள் குடுத்து இசைவாய் வாழ்வுல முன்னேறணும் - அதுதான இன்பம் - இப்படி நீ அழகு போட்டிக்கு நீதி வழங்கப் போனால் இஞ்சாறு வருஷங்களில் உம்மகள் அழகி பட்டத்துக்காய் போட்டியிடப்போவா..."

"இந்தக் காலத்தில் இதிலெல்லாம் தப்பில்லை..."

"தகப்பனின் பாதுகாப்பும் மேற்பார்வையும் இல்லாமல் அப்படி பெரிய வட்டம் போடற பெண் குழந்தை தடுமாறிட வாய்ப்பிருக்குதே. ஒரு குடும்பத்திற்கு தலை புருஷன்தான் - தலையோட ஒட்டி இருந்தாத்தான்

உடம்புக்கு அர்த்தம் - வெட்டிட்டுப் போனால் அதற்கு பெயர் வேற...''

சரளாவின் முகம் சிறுத்தது - ''இப்ப பிள்ளைகளின் பரீட்சை முடிஞ்சு நாலு நாள் விடுமுறை இருக்குதே - அதற்கேனும் ஊருக்குப் போயிட்டு வா... புதுசா அனந்தனைக் கட்டி வந்திருக்கற பெண் பேரென்ன... அமோகா... அவ வந்திருப்பா... மூத்த மருமகளாய் லட்சணமாய் அவளைப் பார்.. அவங்கப்பா சாவிற்குக் கூட, நீ பிள்ளைகளுக்குப் பரீட்சைன்ர சாக்கில் போகலை...''

''போறேன்.''

''வர்ர வருஷத்திலிருந்து நீ ராகுலோடு சேர்ந்திரு சரளா - அதுதான் முறை - இந்தக் குடும்பத்துக்கும் உனக்கும் பெருமை - புரியுதா?''

ஆனால் சரளாவின் பிள்ளைகள் அவர்கள் பங்கிற்கு முரண்டினார்கள். ''ஹைய்யோ... நாளை நா ஃபிரண்ட்ஸோடு கோவை குற்றாலத்திற்கு பிக்நிக் போறேனேம்மா...''

''நான் புதுசாய் ரிலீஸ்ஸான படங்களைப் பார்க்கணும்...'' என்றெல்லாம் திமிறியவர்களை அதட்டி ஒருவழியாய் அவர்கள் அப்பாவின் வீட்டிற்குக் கிளப்பி விட்ட திருப்தியோடு ஊருக்குக் கிளம்பினார் அப்பத்தா -

ஆனால் சரளா அங்கு போவது, புதுப்பெண் அமோகாவிற்கு குழப்பங்களையே தரப் போகிறது என்பதை அவர் அறியவில்லை.

''இது உன் புகுந்த வீட்டில் நீ சாப்பிடும் முதல் முறையில்லையா அமோகா? அதனால் தினுசு தினுசாய் சமைச்சிருக்கோம் - நெய் சாதம், கறி குருமா, கோழி



வறுவல், பச்சடி, ரெண்டு வகை இனிப்புன்னு... நீ சாப்பிடறதப் பார்த்துதான் எங்க வயிறு நிரம்பணும்...''

அகல்யா பிரியமாய் உபசரித்தும் அமோகாவிற்கு உணவு இறங்க மறுத்தது.

அத்தை பாட்டியுமே கரிசனையாய் கேட்டார்.

''என்ன அமோகா? காரம் அதிகமா... உங்க வீட்டு சமையல் போலில்லையா?''

''எல்லாம் நல்லா இருக்கு பாட்டிம்மா'' என்றபடி சாதத்தைக் கிளறினாள். அள்ளி வாயிலிட்டால்தான் பிரச்சினை... தொண்டை அடைத்தது!

வெள்ளிக் கிண்ணத்தில் பிசைந்த பருப்பு சாதத்தை சின்ன அஸ்வினி குருவிக் குஞ்சு போல செப்பு வாயைத் திறந்து திறந்து வாங்கிய அழகைப் பார்த்தபடியே தானும் சாப்பிட்டு விடலாம்தான்... ஆனால் புத்தி எதிலும் பதியாமல் திமிறியது... தான் ராகுலின் அறை வாசலில் நின்ற போது காதில் விழுந்த சில வார்த்தைகளையே புரட்டி புரட்டிப் பார்த்துக் குழம்பியது.

பெரியண்ணா என்று அகல்யாவுமே கூப்பிடும் ராகுல் சொன்னது சரியாய் என்ன...?

'இந்தப் பெண்ணிடம் உண்மையைச் சொல்ல வேண்டாம்' என்று தானே?

புதிதாய் இந்த வீட்டிற்கு வந்திருக்கும் பெண் தான் தான்.

தன்னிடம் சொல்லாமல் மறைக்க வேண்டிய உண்மை என்ன?

இம்மாளிகைக்குள் நிறைய புதிர்கள் புதைந்திருக்கும் போலவே? புற்றின் கண்களிலிருந்து ஒவ்வொன்றாய்

தலை நீட்டும் நாகங்கள் போல. அந்த ரகசியங்கள் அவ்வப்போது வெளிப்படுமே.

மனக்கண்ணில் விரிந்த அக்காட்சியில் உடம்பு சிலிர்த்தது. அதுதான் அனந்தனின் கண்களில் அவ்வப் போது விழுந்த திகைப்பிற்கான காரணம் போலும்...

சிறுமி ஆர்த்தி கூட அல்லவா தன்னை பரிதாபமாய் பார்க்கிறாள்? ஆக எல்லாருமாய் சேர்ந்து தன்னிடமிருந்து எதையோ மறைக்கிறார்கள்...

அது தெரிய வந்தால் தன் நிலை என்னவாகும்?

அதிர்ச்சியில் நிலை தடுமாறி விழுவோமா?

அத்தைப்பாட்டி அறை வாசலைப் பார்த்து தலையசைத் தார்.

''வாடிம்மா நளினா... உன்னைதான் காணலையேன்னு நினைச்சி. உட்கார்ந்து சாப்பிடு... வா...''

தன் பேத்தியை உற்சாகமாய் வரவேற்க, அமோகாவும் புன்னகையுடன் புதிதாய் நுழைந்தவளை ஏறிட்டாள் -

ஆனால் நளினாவின் முகத்தில் பதிலுக்குத் துளி புன்னகைக் கூட இல்லை...

## 11



**கா**ற்று அப்பெரிய வீட்டையே பெயர்த்து எடுத்து விடுவது போல சுழன்றது... திறந்த ஜன்னல்களின் கனத்த



நீலநிற வெல்வெட் திரைச்சீலைகள் இறக்கைகள் போல எம்பிப் பறந்தன... படபடத்தன!

முதல் முறை ஆர்த்தி -

''இதுதான் அத்தை உங்க ரூம்'' என்று அறிமுகப் படுத்தியதும், அந்த அறையின் அழகில் மயங்கித்தான் போனாள் அமோகா -

இதையா, ''உனக்கு அறையின் அமைப்பு, நிறச் சேர்க்கை பிடிக்கவில்லையெனில் மாற்றிக்கோ'' என்றான் அனந்தன்?

ரசனையுடன் அலங்கரிக்கப்பட்டிருக்கிறதே என்று மனதுள் பாராட்டினாள்.

சுவரில் வண்ணங்கள் அவளுக்குப் பிடிக்காது. அது புரிந்தது போல பால்நிற சுவர்கள் - வழுவழுவென்று.

தூரத்தே ஒரு நீல விளிம்பாய் தெரிந்த கடலின் அதே நிறத்தில் வெல்வெட் திரைச்சீலைகள், ஜன்னல் கண் களுக்கு மறைவாய் தொங்கும் அதே நீலத்தில் காரைக்குடி செங்கல்கள் பதித்த தளம் - நீலத்தோடு பச்சையும், வெள்ளையும் கலந்த படுக்கை விரிப்புகள், தலை யணைகள், சுவர் ஓவியங்கள். சுவரிலும் விதானத்திலும் பகட்டில்லாத ஆனால் பளீரிட்டும் விளக்குகள்.

ஜன்னலைத் திறந்ததும் காற்று 'இதோ வந்தேன்' எனும் சிநேக பூதம் போல உள்ளே தாவி வந்து அறையெங்கும் சடுகுடு ஆடியது - இவள் மிக ரசிக்கும் உப்புக் காற்று.

ஆனால் அத்தனையையும் அவள் ரசித்தது முதல் சில நிமிடங்கள் மட்டுமே - பிறகுதான் ராகுல் அண்ணாவின் வார்த்தைகள் இவளிடமிருந்து அச்சின்ன நிம்மதியையும் பிடுங்கி எறிந்து விட்டதே...

பிறகெங்கே லயிப்பது - ரசிப்பது?

இவள் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தது பிறருக்கு 'பாவம் அப்பாவை நினைச்சு மருகுறா' என்றே பட்டது... அனந்தன் உட்பட.

அப்பாவின் மறைவு அதிர்ச்சி என்றாலும், வலியோ வருத்தமோ அவரைக் குதறும் முன் முழுதாய் போய் விட்டார் என்ற நிம்மதியிருந்தது.

புது வாழ்வின் மாற்றத்தில் ஒன்றிவிடும் முடிவோடு தான் புறப்பட்டிருந்தாள். ஆனால் இங்கே கிடைத்த புது அதிர்ச்சி அவளை உலுக்கியிருந்தது -

குழந்தைகள் வந்து அழைத்துப் பார்த்தார்கள் -

''அத்தை, நளினம்மா தோட்டத்த வந்து பாருங்களேன் - அவங்க அறைக் கதவைத் திறந்தாலே கமகமன்னு வாசமடிக்கும் - நிறைய லில்லி, ரோஸ், மரிக்கொழுந் துன்னு வச்சிருக்காங்க...''

பயனில்லை -

''இன்னொரு நாள் பார்க்கறேன் குட்டிகளா... தோட்டம் எங்கே போயிரும்?''

ஆனால் இப்படி அறைக்குள் தான் முடங்கிக் கிடந்தால் புதிர் விடுபடாது என்பதும் அவளுக்குப் புரிந்தே இருந்தது -

புதுப்பெண் வயிறாரச் சாப்பிடவில்லை என்று அகல்யா சதா பழரசம் பலகாரம் என்று மாடிக்கு அனுப்பிக் கொண் டிருந்தாள் -

அமோகாவிற்கு அவற்றைப் பார்த்தாலும் கசந்தது!

வந்த மறுநாள் கதாரித்து அனந்தனிடம் கேட்டாள் -



''உங்க ராகுல் அண்ணா நான் வந்ததும் உங்களிடம் என்ன சொன்னாங்க?''

''பல வாரங்கள் நா இங்கே இல்லையே - ஆக சில முக் கியமான வியாபார முடிவுகள், சந்தேகங்கள்...'' துவாலை யோடு குளியலறைக்குப் போகும் சாக்கில் மனைவிக்கு முதுகு காட்டியபடி மழுப்பி விட்டான்.

நான்காம் நாள் சீக்கிரமே குளித்து தயாரானாள் - இனி யும் நத்தை போல தான் சுருண்டு கிடந்து என்ன பயன்?

மகாத்மா காந்தியின் ஆலோசனைபடி கண்ணை, வாயை, காதைப் பொத்திய குரங்குகளை அப்பா ஒரு முறை வித்தியாசமாய் வரைந்திருந்தார் - வாய் மூடிய குரங்கின் கண் நிரம்ப விஷமம், கூடவே விடைத்த காதுகள்! மற்ற இரண்டும் அது போல வஞ்சக இளிப்பும் குசும்புமாய் -

''என்னப்பா இது - வித்தியாசமாய்?''

''ஒரு வித்தியாச சிந்தனையின் விளைவம்மா அமு. கெட்டதைக் கேட்கக் கூடாதென காதை மூடிய குரங்கு, உலகின் அத்தனை மோசங்களையும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறது?

வாய் மூடியதோ வன்முறை, துர்பேச்சை, திறந்த கண், காது மூலம் உள்வாங்கிக் கொள்கிறதே?' விளக்கினார்.

அது போல அமோகா அறையைச் சீர் செய்து விட்டு கீழே போக நினைத்த நேரம் வெகு உரிமையாய் உள்ளே நுழைந்தாள் அந்தப் பெண்!

''யாரது...?''

''என்ன அமோ, கல்யாண பரபரப்பில என்னைப் பார்த்தது. நா ராகுலின் மனைவி சரளா...''

''வாங்க... வாங்கக்கா...''

''உங்கப்பா இறந்ததும் வர முடியலே... இப்ப சாவகசமாய் பேசி, விசாரிச்சிட்டுப் போகலாம் வந்தேன்...''

''பிள்ளைங்க?''

''வந்திருக்குங்க. அதுங்களுக்கு விடுமுறைன்னாதானே நாம நகர முடியும்? ஆர்த்தியோட உனக்கு சாப்பிட ஏதேனும் எடுத்துட்டு வர்ராளாம்.''

''நா... கீழ வர்ரதாதான் இருந்தேன்.''

''இரு... இங்கயே நிம்மதியா சாப்பிட்டபடி பேசலாம்...'' தடுத்தாள் சரளா.

இளம் ரோஜா வர்ண புடவை ரவிக்கையில் இன்னும் கலையாத சோகத்தோடு இந்தப் புதுப்பெண் என்ன அழகு - என்று பொறுமியது அவள் மனது.

நுழைந்த பிள்ளைகள் புதியவளை சற்று பார்த்த பின் பேசினார்கள்.

''எப்படியிருக்கீங்க சித்தி?''

''ம்ம் - நீங்க சாப்பிட்டாச்சா?''

''ஆமா - இருந்ததில் மிச்சம்தான் உங்களுக்கு'' - சீண்டினான் சிறுவன்.

''போதும்.'' முறுவலித்தாள் -

சரளாவின் மகள் - ''இப்ப ரொம்ப வித்தியாசமாய் தெரியறீங்க சித்தி - கல்யாணத்தன்று...''

அவசரமாய் சரளா குறுக்கிட்டாள் -

''அன்னைக்கு அப்பேர்ப்பட்ட அலங்காரம்? வைர மாலையின் மினுமினுப்பு - பாம்பாட்டம் அது கழுத்தைச்



சுற்றினாலே ஆள் வேறாய்த்தான் தெரிவோம்'' - அமோகாவிற்கு நெருடியது - சரளா அந்த ஆபரணத்தை ஏன் அரவத்துடன் ஒப்பிட வேணும்?

சற்று பேசியதும் ''நீங்க போய் விளையாடுங்க - நா சித்தியோடு பேசணும்'' என்று சின்னதுகளை விரட்டினாள் சரளா.

''இங்க ஒவ்வொரு நாளையும் நகர்த்தறது பெருங்கஷ்டமில்லை? போய் வர ஒரு இடங் கிடையாது. மூச்சு முட்டி செத்திடுவோன்ர பயத்துலதான் நான் அம்மா வீட்டுல தஞ்சமாயிட்டேன்... தவிர... இங்க வர்ர மருமகளுங்க எல்லாம் சீக்கிரமே போய் சேர்றது வேறு கொஞ்சம் பயமாயிடுச்சு.''

விரலை மேலே சுட்டி காட்டிய சரளா கண்களை உருட்டினாள் - ''அதற்கு அந்த வைர மாலையுங் காரணம்...''

''ஏதோ பாம்பு போலன்னீங்க?''

''பின்னே வழுவழுன்னு கழுத்தைச் சுற்றி மின்னுதே... வைரத்துக்கு தோஷமெல்லாம் உண்டு... நாலு தலைமுறைக்கு முன்னே புதுப்பணம் கொட்டின ஜோருல ஏதோ ஒரு எள்ளுத் தாத்தா இத்தனை பெரிய வைர மாலையைச் செய்ய சொல்லிட்டாரு. அவனும் கழிச்சு வச்சிருந்த கல்லை எல்லாம் சேர்த்து மாலையாக்கிட்டான். இங்கேயும் விவரம் தெரியாம வாங்கியாச்சு.''

''ஓஹோ?'' தனக்குமே அது பற்றியெல்லாம் ஏதும் தெரியாத நினைப்புடன் கேட்டிருந்தாள் - தோசையை மென்றதால் அதிகம் பேசாமலிருக்கவும் முடிந்தது.

குரலைத் தணித்தாள் சரளா -

''ஆக அந்த மாலைதான் தன்னை போட்டுகிட்டவங்களை எல்லாம் அடிச்சு முழுங்கிடுச்சு...''

''அது... என்ன?''

''தோஷம் மருமகள்களை இளவயசிலேயே கொன்னுடுதுங்கறேன்...''

அமோகாவிற்கு இந்தக் கதையை நம்ப முடியவில்லை - அதில் சுவாரஸ்யம் தட்டவுமில்லை...

''ஆனால் அத்தைப்பாட்டி எங்கிட்ட இந்த ரகசியத்தைச் சொல்லிட்டாங்க.''

''ஓ...?''

''குடும்ப ரகசியம்னாலும் நாம இப்ப இந்த குடும்பத்தச் சேர்ந்தவங்க இல்லியா? குடும்ப மருமகப் பெண்கள் இளமை மாறுவதற்குள் மறைஞ்சிடுவாங்க என்பதற்கு அந்த வைரமாலையின் தோஷம்தான் காரணம் - ஆனால் விடாமல் ஜம்பமாய் மணமகளுக்கு அதைப் போட்டு விட்டுடறது. அது கழுத்தைச் சுற்றின பாம்பு... விஷத்தை அதாவது தன் தோஷத்தை ஏத்திடுது... அதனாலதான்...''

இந்தப் பேச்சைத் தொடராதே என்று உள்மனம் சொன்னாலும் நாக்கு அடங்காமல் கேட்டது.

''அதனால?''

''இந்த விவரம் தெரிஞ்ச பெரிய வீடுகளிலிருந்து அனந்தனுக்கு சம்பந்தம் ஏதும் வரலை... ஆனா கொழுந்ன் கெட்டிக்காரர் - நமக்குத்தான் வேண்டிய பணமும் வுசும் இருக்குதேன்னு அழகான உன்னைத் தேடி காண்டு வந்துட்டார்.''



இதென்ன பாட்டி கதை என்றுதான் முதலில் அமோகாவிற்கு அலுத்தது. ''அந்த காலத்துல வானம் தாழ்வா இருந்துச்சாம் - அதாவது நிமுந்தா தலையை இடிக்கிறாப் பல... கோவப்பட்ட ஒரு பாட்டி துடைப்பத்தைத் தூக்கிக் காட்டி மிரட்ட, வானம் அந்த கிழவிய தூக்கிட்டு மேலேயே போயிடுச்சாம் - அந்தக் கிழவிதான் அதோ நிலாவுல தெரியறாப்பாரு?'' - என்ற வகை அம்புலிக் கதை என்று அலுத்தாலும் மறுபுற புத்திக் கூர்மையாய் சிலிர்த்து நின்றது.

ஆக இதைத்தான் ராகுல் அண்ணா பெண்ணிற்குத் தெரியாத உண்மை என்றாரோ? அனந்தனின் முகமும் அடிக்கடி யோசனையில் ஆழ்ந்து விடுமே? - இதை எப்படி புதுப்பெண்டாட்டியிடம் சொல்வது அல்லது சொல்லாதிருப்பது என்ற குழப்பமா?

சிறுமி ஆர்த்திக்கும் கூட இந்த சாபம் பற்றி தெரியும் போல அதனால் தான் தன்னை அத்தனை பரிதாபமாய் பார்த்தாளோ?

சரளா தொடர்ந்து தூபம் போட்டுக் கொண்டிருந்தாள் -

''எங்க அம்மா, எனக்கு அந்த வைரமாலைய போட விடலையே... தவிர நாங்க என்ன வைரம் பார்க்காதவங்களா? இத்தனை பெரிசாய் இல்லைன்னாலும் நயமும் சுத்தமுமாய் சின்ன மாலையை எங்கப்பாவே செய்து போட்டிருந்தார்... தவிர இந்த வீட்டில் நான் தங்குவதும் கூட எங்கம்மாவிற்கு பயந்தான். ''எந்தப் பெண்ணும் இந்த வீட்டில நரைச்சு, பழுத்து, அனுபவிச்சது போலில்லையேன்ன, நானும் கொஞ்சம் ஒதுங்கிட்டேன்.''

வேலைக்காரர்கள் கூட தன்னைச் சற்று பரிதாபமாய் பார்த்தனர். தந்தையை இழந்த பெண் இவள் என்பதால் அல்லவா எடுத்துக் கொண்டிருந்தாள்?

அவர்களும் விவரம் தெரிந்து மஞ்சள் நீரில் குளிப்பாட்டி, மாலையிட்டு கூட்டி வரப்படும் பலி ஆடாய் தன்னைப் பார்க்கிறார்களோ?

பெரிய குடும்பத்து பெண்களின் உயிர் மட்டுந்தானா வெல்லக்கட்டி? ஆனால் சாக தான் அஞ்சவில்லை என்றும் விரக்தியாய் தோன்றியது - இதெல்லாம் கட்டுக்கதை என்றும் பட்டது.

ஆனால் நிச்சயமாய் சரளா இவளது மனக்குளத்தில் கல்லெறிந்துதான் விட்டாள்... நிறைய சலனங்கள் -

ஏற்கெனவே கனத்த தலை இப்போது சுழலவும் ஆரம்பித்தது. தொடர்ந்து சரளாவுடன் பேசுவது நல்லதல்ல என்று பட, எழுந்தாள்.

"கீழே போகலாமாக்கா?" என்றபடி.

"இரு. கீழே அகல்யா இருப்பா. நாம இப்படி நினைச்சதைப் பேச முடியாது... அவளும் நான் இங்கே தங்காததற்கு ஒரு காரணம்." குழப்பமாய் பார்த்திருந்தாள் அமோகா.

"முதல்ல கர்ப்பம், பிரசவம்னு நான் இங்கே இருக்கலை. எங்க அப்பத்தாவின் இம்சை தாங்காமல் பள்ளி போக ஆரம்பிச்ச பிள்ளைகளோடு இங்கே வரலாம்னா இங்கேயும் நிம்மதி இராது - அகல்யாவும் அவ குடிகார புருஷனுமாய்... இவரும் அத்தை மகக் கண்ணீரையே துடைச்சிட்டு இருந்தால் எப்படி? பிறகு, பாவம் அகல்யா... விதவையாயிட்டாள் - நீ ரொம்ப அலங்காரம் பண்ணினால் விகல்பமாய் தெரியும்ங்கற கட்டுப்பாடுகள் வேறு..."

"பாவம் சிலர் வாழ்வு இப்படி அமைஞ்சிடுது..."



"அதான் நளினி ஆசைப்பட்டும் அத்தைப்பாட்டி அவளை அனந்தனுக்குத் தரலை... பேத்தியைக் காவு தர மனசு வராதில்லையா? தவிர நான் கோவை போறது பற்றி பேசறவங்க, அகல்யா இங்கயே குடித்தனம் செய்ததைக் கண்டுக்கலை..."

"தம்பதிகள் சேர்ந்திருந்தால் சரின்னு நினைச்சிருப்பாங்க...."

"உனக்கு உலகமே தெரியலை அமோகா... உப்பு பொம்மைக் கதையேனும் தெரியுமா?"

ஒரு குழப்ப முறுவலுடன் தலையசைத்தாள் -

"ஒரு உப்பு பொம்மை ஊரெல்லாம் திரிஞ்சு சமுத்திரக் கரைக்கு வந்து நின்றதாம் - பரந்த நீர்பரப்பைப் பார்த்த பரவசத்துடன், கடலைப் பார்த்து "நீ யார்னு" கேட்டதாம்.

கடல் அலை அலையாய் சிரிச்சு - "உள்ள வந்து என்னைப் பாரு"ன்னு அழைக்க பொம்மை கடலில் இறங்கி... ஆழத்துக்குப் போய் கரைஞ்சே போச்சு! கடைசி ஒரு துளியாய் மிஞ்சியிருந்த நேரத்துல ஆச்சரியமா சொல்லுச்சாம் பொம்மை - "நான் யார் என்பதை இப்ப தெரிந்து கொண்டேன்னு!"

இப்படி ஒரு வித்தியாசமான கதையை அமோகா சரளா விடமிருந்து எதிர்பார்க்கவில்லை!

"இது எங்க அப்பத்தா சொன்னது - உலகத்தைப் பார்த்து புரிஞ்சுக்கணும்னு. சரி. ஆனா முதல்ல நமக்கு நம் நிலைமையும் தெரியணுங்கறாப்பல... இதை எல்லாம் உங்காதுல போட்டுடணும்னுதான் நான் வந்ததே. உன்னைச் சுற்றிலுமிருப்பவங்களை கவனி. அப்படிய படியே நம்பிடாத... அப்புறம் அந்த உப்பு பொம்மை யாட்டம் கரைஞ்சிடுவே..."

இதுவரை சரளாவின் உபதேசங்களை சற்று அலட்சி
யமாகவே கேட்டிருந்த அமோகாவின் மனம் இப்போது
கரையத்தான் துவங்கியிருந்தது....!

## 12



சரளா தன் புகுந்த வீட்டில் தங்கியிருந்த மூன்று நாட்
களும் அவள் வீட்டில் தரித்திருந்தது உண்ணவும் உறங்
வுமே... மேலும் அங்கிருந்தால் தன் தலை வெடித்து
டும் என்ற ரீதியில் ஊர் சுற்றினாள். நான்கு குழந்தை
ளும் சரளாவோடு சேர்ந்து போனதால் அமோகாவும்
கோஜமின்றி சேர்ந்து கொண்டாள்.

அந்த மாற்றம் புத்துணர்வு தந்தது என்பதை மறுப்
தில்லை.

ஆனால் கூடவே வேண்டாத ஒரு மாற்றத்தையும்
தில் சேர்த்திருந்ததோ என்ற சந்தேகம் அவளுக்கு
தையும் சந்தேகத்துடனேயே பார்ப்பதுதான் அது!
கல்யாவின் கண்களில் கருணையோடு கபடும்
ருந்ததோ என்ற சந்தேகம்...

ற்றின் சோகம் வெறும் வேஷமோ என்ற ஐயம்!

லண்ணா படித்தவர் - வேறு இடத்தில் அவருக்கு
கிடைக்காதா என்ன? மனைவியைப் பிரிந்திருந்
பாதகமில்லை என்றவர் ஏன் இங்கேயே இருக்க
?



அந்த நளினியும் ஏன் தன்னிடம் நின்று நாலு வார்த்தைகள் பேசவில்லை?

சம வயது பெண் சிநேகிதிக்காய், உல்லாசப் பேச்சு, சிரிப்பிற்காய் அவள் ஏங்கினதே இல்லையா? பிறகேன் இப்படி ஒதுங்கிப் போகிறாள்? பிள்ளைகள் அழைத்தும் கூட இவர்களுடன் வர மறுத்து விட்டாளே?

அனந்தனின் மனைவியாகி இந்த மாளிகையின் ராணியாக வேண்டுமென நளினா ஆசைக் கோட்டை கட்டியிருக்கக் கூடும்...

அது இடிந்ததைத் தாங்கக் கூடாத ஏமாற்றமும் கோபமும்தான் அவளை இப்படி இறுக்கி விட்டனவோ?

சரளா கோவைக்குக் கிளம்பி போக, மறுபடி வீடு அமைதியானது. எதையாவது இழுத்துப் போட்டு செய்தால் ஒழிய தன் மனம் சாத்தானின் கருவியாகி, வேண்டாத குழப்பங்களைப் பின்னும் என்று புரிய ஒரு உயர முக்காலியை இழுத்துப் போட்ட அமோகா, அப்பாவின் சில ஓவியங்களை தன் அறையின் சுவர்களில் மாட்ட தயாரானாள்.

எதெது எந்த இடத்திற்குப் பொருத்தம் என்று நிர்ணயித்துக் கொண்டால் யாரது உதவியோடேனும் பிறகு ஆணி அடித்துக் கொள்ளலாமென்ற எண்ணம்.

மனதை மேலும் உற்சாகப்படுத்துவதற்காய் 'சில்லென்று ஒரு காதல்' பாட்டுக்கள் சுழன்று கொண்டிருக்க, ஏ.ஆர்.ரஹ்மான் தமிழை இசையாய் மென்று கொண்டிருந்தார்.

கொக்கு கூட்டத்தின் ஓவியம் இரு ஜன்னல்களுக்கு நடுவே பாந்தமாய் பொருந்துமென எண்ணி ஏறியவளின்

பார்வை தன் முடிவில் திருப்தியுற்றபின் தற்செயலாய் ஜன்னல் வழியே பாய்ந்தது.

கடற்கரைக்குப் போக வேண்டுமானால் வீட்டின் பெரிய மதில் சுவரிலிருக்கும் திட்டி வாசலைத் திறந்து நடக்கலாம். அது திறந்திருக்க, இருவர் அதன் வழியே நுழைந்து, வாசலை மூடிக் கொண்டிருந்தனர்.

யாராய் இருக்கும் என்ற ஆவலில் கண்கள் இடுங்கி ஆராய்ந்தவளின் மனம் துணுக்குற்றது....

ஒரு பெண்ணோடு நடந்து வந்த ஆண் - அனந்தன்! வேலைக்கு வெகு நேரத்திற்கு முன்பே போய் விட்டதாய் அவள் நினைத்திருந்த தன் கணவன்.

மற்றது - நளினா... அவள் மும்முரமாய் ஏதோ பேசிய படி நடக்க, அவனும் குனிந்து அதை உன்னிப்பாய் கேட்டபடி உடன் நடந்து வந்தான். சற்று முன்புதான் என் நளினி யாரிடமும் பேசாமல் இறுகி விட்டாள் என்று தான் ஆராய்ந்தது நினைவு வந்தது.

அவர்கள் இருவரும் பேசியபடி நடந்து வந்ததில் தெரிந்த அன்னியோன்யம் அமோகாவின் கண்களைத் துளைத்து எரிச்சலூட்டியது.

ஆக அனந்தனின் திருமணம் அவர்களது உறவிற்கு தடை போடவில்லை. அனந்தனோடான தன் ஐக் கியத்தைக் கெடுக்க வந்த பாதகி என்றுதான் நளினா தன்னோடு பேசுவதில்லை.

அனந்தனும்தான் இத்தனை உரிமையாய் ஒட்டி வருபவளை விட்டுவிட்டு ஏன் தன்னைத் தேடி வந்து கட்டிக் கொண்டான்?



நளினாவின் ஆயுள் குறையக் கூடாது. தன் தாலி கழுத்தில் ஏறினால் அவள் இறந்து போவாளோ என்ற அச்சமா?

சுறுசுறுவென சினம் சிரமேறியது!

அறையை விட்டு வெளியேறி விடுவிடுவென படி யிறங்கினாள்.

பின்கட்டின் வழியே போனால் நேருக்கு நேர் அந்த அரட்டை ஜோடியின் முன் நின்று, அவர்களின் முக பாவனையைக் காணலாம்.

இத்தகு வியூகங்கள் அவளுக்கு வெட்கமாகவும் இருந்தது.

இப்படி தராதரம் தாழ்ந்து யோசிப்பது நான்தானா என்ற வேதனைக் குன்றல்.

ஆனால் பாசமான தந்தையின் திடீர் மரணம், இந்த இட மாற்றம், கேட்க நேர்ந்த ராகுலின் பேச்சு, அர்ச்சனாவின் தூப வார்த்தைகள், சரளா சொன்ன மிரட்டலான 'உண்மை கள்' எல்லாமுமாய் சேர்ந்து இவளைக் கடைந்தெடுத்ததில் குழப்பம் திரண்டு மிதந்தது.

பின்புற சமையலறையிலிருந்த தாளித்த மணம் மிதந்து வந்தது. கூடவே வேலைக்காரர்களின் பேச்சும் -

''அகல்யாம்மா இன்னைக்கு தேங்கா சாதத்தோடு கறி வறுக்கச் சொன்னாங்க....''

''அதை நீ எப்படி சமைச்சாலும் புதுப்பொண்ணு உண்ணப் போறதில்லை....''

''புது இடங்கற கூச்சம்.''

அவர்கள் பேசுவது தன்னைப் பற்றிதான் எனப் புரிய வாசலில் தயங்கி நின்றாள். நிற்காதே தொடர்ந்து கேட்காதே என்று எச்சரித்தது புத்தி.

போன முறை சற்றே கேட்க நேர்ந்த ராகுலின் பேச்சு தன்னை குப்புற விழத் தட்டியதே... மேலும் ஒட்டுக் கேட்டு தடுமாற வேணுமா?

''பாவம்ப்பா - தகப்பனை பறிகொடுத்த பொண்ணு வயிறார உண்ண முடியுமா? அதுவும் இப்படிப்பட்ட சாவுங்கறப்ப?''

''அப்ப அது நிசந்தானா?''

''பின்ன - கடல்ல நீந்தறேன்னு பெலத்தோட போன மனுஷன் எப்படி மூழ்குவாரு கடல்ல? வாழ்ந்தது போதும்னு அவர் முடிவு பண்ணியிருக்கணும்.''

இனி நினைத்தாலும் நகர முடியாதது போல இவளது பாதங்கள் தரையுள் வேர் விட்டன.

என்ன சொல்கிறார்கள் இவர்கள்....?

தன் கணவனை மடக்குவது மறந்து வேலைக்காரர்களின் பேச்சை அழுந்த கிரகிக்க முயன்றாள்.

''இனி உயிரோட இருந்தா, மகளோட போய் வாழணு மோங்கற தயக்கம் வருமில்ல? அது அத்தனைக் கெளரவமா என்ன? சரி மகளுக்கு கல்யாணத்தக் கட்டி நம்ப பொறுப்ப முடிச்சமா, போயி சேந்திடுவோம்னு நம்ப ஐயாவோட மாமனாரு முடிவு பண்ணிட்டாரு....''

''அதான் இந்த பொண்ணுக்கு ஆற மாட்டேங்குது... வந்து மூணு நாளா அறையில அடஞ்சே கிடந்துச்சே...''

''அந்த சரளாம்மா வந்த பிறகுதான் ஏதோ பேசி வெளியே போனாங்க நம்ம சின்னம்மா....''



''அட... அந்தப் பொம்பளை பேரை எடுக்காதன்றேன் - பெரிய மருமவளா பொறுப்பாய் இங்கன இல்லாம தாய் வூட்டுல போயிருந்துகிட்டு அப்பப்ப இங்க விருந்தாடி வர்ரது நல்லாவா இருக்கு?''

''ஷ்... ஐயா வர்ரார்.... வேலைய மட்டும் பாரு...''

மரத்த கால்களை வலுக்கட்டாயமாய் பிரித்து நகர்த்தினாள்.

இப்படி ஒரு பேச்சு உலவுகிறதா?

அதாவது தன் தந்தை தற்கொலை செய்து கொண்டார் என?

அதில் துளி உண்மை இருக்குமோ?

ச்சேச்சே... அப்பா கோழை அல்ல.

வாழ்வை எந்நிலையிலும் எந்தப் பருவத்திலும் அனுபவிக்கும் தைரியம் அவருக்கு உண்டு. மனிதர் மேல், முக்கியமாய் கடவுளின் மீது நம்பிக்கை உள்ளவர் - ஆக எதற்காய் அஞ்சி கடலில் மூழ்க வேணும்?

அப்பாவின் கடைசி நாளை ஞாபகத்திற்கு இழுத்தாள் - பல நாட்களாய் நீந்தாதவர் அன்று ஏன் கடலுக்குள் போனார்? ஏன் உடன் போன அனந்தனை திரும்ப அனுப்பி விட்டார்?

திரும்பி வந்தவனின் முகமும் வாடியிருந்ததே... தலைவலி என்றார் - அப்பாவிற்கு மருமகனோடு ஏதும் வேண்டாத விவாதம் நேர்ந்திருக்குமா?

இல்லை. தன் கடமை முடிந்தது போல காலமும் முடிந்து போகட்டும் என்று அப்பா எடுத்த தவறான முடிவா?

இத்தனை பெரிய வீட்டில் அப்பாக்கு இடமிராதா?

வகை வகையாய் இப்படி தயாராகும் உணவில் ரெண்டு கவளம் கிடைக்காதா?

அவர் பாட்டுக்கு ஆசைப்படி ஓவியங்களை உருவாக்கிய படி இருக்கலாமே...

அப்பா பற்றிய நினைவுகள் அவளைக் கசக்கி கண்களில் நீராய் துளிர்த்தன -

கடும் ஏக்கம் அவளது நடுநெஞ்சைக் கொத்தியது...

இந்த மனநிலையோடு தன் கணவனைக் கையும் காதலுமாய் பிடிக்க அவளுக்குத் தெம்பில்லை.

தான் அடியில்லாத ஒரு புதைக்குழிக்குள் அமிழும் அச்சம். ஆக திரும்பி மறுபடி தன் அறைக்குள் அடைக்கலமாக, விரைந்தவளை அத்தைப் பாட்டி அழைத்தார் -

''ஏம்மா அமோ - பசிக்குதா... மோர் குடிக்கறியா? சமையலறை வரை போனவ ஏந்திரும்பறே?''

''ல்ல... சும்மாதான்...''

''சரளா போனதும் உனக்குப் பொழுது நகரமாட்டேங்குது - இங்கே அனந்தனுக்கும் வேலை சேர்ந்து போச்சு - ஆக உன்னை வெளியே கூட்டிப் போக சமயமில்லை....''

''ல்ல... அவர் சத்தம் இங்கே கேட்டுச்சு.... அதான்...''

பெரியவரின் முகம் சற்று எச்சரிப்பானது.

''என் அறைக்கு வாடா அமோ...''

மறுக்க வழியின்றி அத்தைப்பாட்டியைப் பின் தொடர்ந்தாள். தற்போது யாரிடமும் பேசும் மனநிலை இல்லை -

அவமானமாய் இருந்தது - அத்தைப் ப்பாட்டி. அகல்யா எல்லாரும் தன் தந்தை தற்கொலை செய்து கொண்டதாய் சந்தேகிக்கிறார்களோ?



''இந்த லேஸ் பின்னல்கள் யாரோ எனக்குப் பரிசளிச்சது - நீ கைக்குட்டை, பாவாடைகளுக்குப் பயன்படுத்திக்குவேன்னு எடுத்து வச்சேன்...

''நன்றி... நளினா எங்கே?''

கண்ணாடி வழியே பாட்டியின் கண்கள் உருண்டன....

இப்படி அவர்கள் தடுமாறும் சமயமாய் தான் நழுவி விடலாம் என்றுதான் இவள் அப்படிக் கேட்டது.

ஆனால் - ''பின்னே போனான்னு நினைக்கிறேன்'' - இயல்பாய் பதில் வந்தது.

''ஓ?''

''நீ அவளிடம் அதிகம் பேசிப் பழகலைல்லியா?''

''நளினா. யாரிடமும் அதிகம் பேசறதில்லையே...'' - ஒரு ரகசிய பொருமலுடன் பதிலளித்தாள்!

''அவ வளர்ந்த சூழல் அப்படிம்மா...''

அமோகா மௌனமாய் கையிலிருந்து நூல் பின்னலை ரசிப்பது போல நின்றாள். யோசித்து பதிலளிக்க முடியாது மரத்திருந்தது புத்தி. தனிமையாய் இருந்தால் தேவலை... ஆனால் 'சட்'டென எழுந்து போக முடியாத நிலைமை.

''பெத்தவங்க பராமரிப்பில், பரிவில் குழந்தை வளர்ரது தான் அதற்கு ஆரோக்கியம்...''

''ம்ம்.''

''நளினாவுக்கு அது வாய்க்கலை அமோகா.''

''ஏன்... உங்க மகன் அல்லது மகள்.....''

''எனக்குத்தான் கல்யாணமே ஆகலையேம்மா...''

இவளது மரத்த புத்தி சற்று நெளிந்து முதியவரி[ன்] பேச்சை கிரகிக்க முயன்றது.

''புரியலையே... உங்க பேத்திதானே நளினா?''

''நான் அனந்தனின் தாயாருக்கு ஒன்னுவிட்ட சித்தி. எங்க குடும்பத்தில் அத்தனை வசதியில்லை. கடைக்குட்டியான எனக்கு கல்யாணம் செய்து வைக்க யாருக்கும் தோணலை... முடியவுமில்லை... ஆனா அவங்கவங்க குடும்பத்துல ஏதேனும் தேவை ஏற்பட்டா என் ஞாபகம் வரும். நானும் சலிச்சுக்காமல் ஓடுவேன். தனிச்சு கிடக்கிறதுக்கு யாருக்கேனும் நாம தேவைங்கறது ஒரு சின்ன கௌரவம்... திருப்தி இல்லையா?''

அத்தைப் பாட்டியின் வெளிரிய விழிகள் தன் கடந்த காலத்தைத் துழாவுவது போல உருண்டன.

''எங்க குடும்பத்திலே ஒரு விபத்துல தம்பதிகளாய் போய் சேர. அதில் தப்பிப் பிழைச்சவ நளினா... அப்ப மூணு, நாலு வயசுப் பிஞ்சு அவ.

என்னை அவ்வப்போது வரும் தேவைகளுக்காய் இல்லாம் நிரந்தரமாய் ஏற்றுகிட்ட பிரமீளா... அதான் அனந்தனின் தாயார், நளினாவையும் தன் குடும்பத்துக்குள் சேர்த்துகிட்டா... உம் மாமனார் கண்டிப்பானவர்னாலும் அன்பிலே தயாளந்தான் - எல்லாரையும் தங்குழந்தைகளாகவே வளர்த்தார் - அவர் என்னை அத்தைன்னு அழைக்க, பிள்ளைகளுக்கு நான் அத்தைப் பாட்டியானேன் - தன் உறவான ராகுலுக்குத் தொழிலையும் பழக்கி விட்டார்... நளினாவ இங்கேயே வச்சிக்கணும்னு ஒரு ஆசை அவருக்கு... ஆனால் அந்த முடிச்சுக்கள் எல்லாம் நம்மை மீறினவை ஆச்சே...'' பெருமூச்சு விட்டபடி பேச்சைத் தொடர்ந்தார் -

''நளினாவுக்கு அந்த நன்றி உணர்வு உண்டு அமோகா.... ரொம்ப ஒட்டுதலாய் பழகிக்க மாட்டா..... ஏனோ அவ



சுபாவம் அப்படியாச்சு ஆனா இந்தக் குடும்பத்து மேல ரொம்ப பாசம், அக்கறை எல்லாம் உண்டு.''

அறையின் வாசல் பக்கமாய் பார்த்தவரின் முகம் சற்று புன்னகைத்தது.

''வாடிம்மா நளினா... உன்னைப் பத்திதான் பேசிட்டிருந்தேன்...

ஆனால் வந்த நளினா மறுபேச்சில்லாமல் மறுபடி வெளியேற பாட்டியின் முகமும் அமோகாவின் மனமும் சுருங்கின.

## 13



உலகில் 24 பெரிய நாடுகள் கடற்கரை இல்லாதவை! கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் வசிக்க கொடுத்து வைத்தவர்களின் சமையலில் அநேகமாய் தினம் மீன் இருக்கும்.

'இன்னைக்கும் நான் மீன் குழம்பு வைக்கிறேன்' என்று குழம்பு திட்டமாய் கூட்டி, அது கொதி விட, மீன் துண்டங்களை அதில் பதமாய் இட்டு, இளந்தீயில் வேக விட்ட நேரம், அனந்தனின் குரல் கேட்டது.

''அம்மா சமையலறையில் இருக்காங்க...''

தன்னைப் பற்றி கேட்கிறான் போலும்.

''அதானா - வாசல் வரைக்கும் மீன் குழம்பு மண குதே!'' கணவனின் பாராட்டு குளிர்வித்ததுதான்

ஆனால் அமோகாவின் தந்தையின் மறைவிற்குப் பின் தம்பதிகளுக்கு இடையே ஒரு கண்ணாடி திரை விழுந் திருந்ததுதான்.

மனைவி துக்கத்திலிருக்க, தான் சரச சல்லாபமாய் பேசுவது ரசக் குறைவாய் இருக்கும் என்று எண்ணியோ என்னவோ சற்று ஒதுங்கியே இருந்தான்.

தேங்கி விட்ட வேலைப் பளுவைக் காரணம் காட்டி குறைவான நேரமே வீட்டில் தங்கினான்....

அப்பாவின் வீட்டில் அந்த நான்கடி அகலக் கட்டிலில் அவன் நிம்மதியாய் ஒரு மோகனப் புன்னகையுடன் படுத்திருந்தது போல, இந்த பிரம்மாண்டமான தோதகத்தி கட்டிலில் புரண்டு பார்த்ததில்லை அவள்.

ஆக பெருமளவில் அமோகாவிற்குக் கிடைத்த தனிமை சில சமயங்களில் தேவை போலவும் பல பொழுது வாட்டுவதாயும் இருந்தது.

சமையலறையின் வாசலுக்கு வந்து கேட்டாள் -

''ஏது சீக்கிரம் வந்துட்டீங்க?''

''ம்ம்... கொஞ்ச நேரம் கிடைத்தது'' சிலேடையாய் பேசி முத்தாய் கணவன் கண்சிமிட்ட, வெட்கினாள் -

அதை மறைத்து இயல்பாய் கேட்டாள் -

''சாப்படறீங்களா?''

''பசிக்கலை... ஆனால் வாசனை ஆசையூட்டுது...''

மனைவியின் மிக அருகே நின்று சொன்னான்.

''எல்லாரையும் சாப்பிட வர சொல்லவா?''

''நாம மட்டும் உட்காருவோம் - அப்படியே பேசவும் வசதியில்லையா? அனந்தனின் குறிப்பறிந்து வேலை



யாட்கள், தட்டு வைத்து, பதார்த்தங்களை மேஜையின் மீது வைக்க, இருவரும் ஒருவருக்கொருவர் பரிமாறியபடி அமர்ந்தார்கள்.

''குழம்பு நிஜமாவே பிரமாதம் அமு....''

''ம்ம்...''

அப்பா இறந்த அன்று தான் மீனை வறுத்து வைத் திருந்தது இவளைப் போலவே அனந்தனுக்கும் ஞாபகம் வந்தது போலும்.... பேச்சை மாற்றினான்.

''நாளை நமக்கு ஒரு விருந்துக்கான அழைப்பு வந் திருக்கு.''

''ம்ம்...''

''அழைச்சது யார்னு நீ சொல்லியாம்..''

''ம்ம்... திரு. வின்ஸன்?''

அவனது ஆச்சரியம் அப்பட்டமாய் தெரிந்தது.

''எப்படி அமு? மந்திரமெல்லாம் தெரியுமா உனக்கு?''

''ஓ... யார் மனசுல யாரு - அவருக்கு என்ன பேருன் ரதைக் கண்டு பிடிக்கும் மந்திரத்தைக் கற்று வச்சிருக் கேன்..'' புன்னகைத்தாள்.

''கிராண்ட் மாஸ்டர் பிரதீப் கூட 21 கேள்விகள் கேட்டு தான் விடையைப் பிடிப்பார். நீ ஒரு கேள்வி கூட கேட்க லியே?''

சிரித்தாள் - அவளது சிரிப்பை சிறிதும் சிந்த விடாமல் ரசித்தவன் ''நீ அதிகம் சிரிக்கணும்மா அமு... சிரித்தால் மனசு ஒட்டடை அடிக்கப்படுதாம்.''

''எனக்குள்ளே தூசு தும்பெல்லாம் இல்லை.''

அவன் முகம் சற்று எச்சரிக்கை ஆனதோ?

''நல்லது - எப்படி சரியாய் யூகிச்சே - சொல்லு.''

''ஸிம்ப்ஸின் - நமது ஒரே அடுத்த வீட்டுக்காரர்னு நீங்க தானே அவரை அறிமுகப்படுத்தினீங்க? எங்க கிராமத்தில் தங்களை எளிய குடிசைக்கு உங்களை அழைக்கக் கூச்சப் பட்டு அண்டை அயல எல்லாம் வேளைக்கு ஒரு பதார்த்த மாய் செய்து அனுப்பினாங்க. அது போல இங்கே இராது...''

''ஆனால் வின்ஸன் ஐயாவை உனக்கு 'டக்'குனு ஞாபகமிருந்த ஆச்சரியந்தான் - சாளா அன்னி நம்ப அறைக்குள் நுழைந்ததும் அவங்க யாருன்னு தெரியாமல் சற்று மிரண்டதாய் சொன்னியே? அவங்களும் தான் நம்ப கல்யாணத்திற்கு வந்திருந்தாங்க.''

''ஆனா வின்ஸன் ஐயா கொஞ்சம் விநோதமாயில்லை? அவரின் கறுப்புக் கண்ணாடியும், வயசை மீறின மிடுக் கும்... அப்புறம்..''

''சொல்லு.''

''அவர் தந்த பரிசும் அசாதாரணந்தான் இல்லையா? தொகை குறிப்பிடப் படாத காசோலை? அது அதை எங்கே வச்சிருக்கீங்க?''

அதை பத்திரமாய்தான் வச்சிருக்கேன்.''

அது தவறாய் 'யார் கைக்கும் போயிடக் கூடாதே?'

''ல்லல்ல - பரிசாய் வந்த பணம், வாழ்த்து தந்திக ளோடு அதையும் ஒரு தோல் பையில் போட்டிருக்கேன்... தேடி எடுத்திரலாம்.''

''சரி - நாளைக்கு விருந்து எப்போ?''

''இப்பவே கூட நான் தயார்.''



அவனது சீண்டல் புரியாதது போல குனிந்து சாப் பிட்டான்.

''எப்போ நாம வின்ஸன் ஐயா வீட்டிற்குப் போகணும்னு கேட்டேன்.''

''சாயங்காலம் ஆறரைக்கு தயாராய் இரு அமு... அவர் ஏழு, ஏழரைக்கு சாப்பிடற மனுஷர். யாரையும் லேசில் ஐயா தன் வீட்டுக்கு அழைப்பதில்லை. ஆக நாம கொஞ்சம் கவனமாய்தான் நடந்துக்கணும்.''

''மற்றவர்களை அழைப்பதில்லைன்னா... உங்களைப் பிடிக்கும் போல?''

''உன்னை அதை விட பிடிச்சிருக்குதுன்னு நினைக் கறேன் அமு.. பரிசைக் கூட அவர் உன் கையிலேதானே கொடுத்தார்?''

''நா என்ன, எப்படி உடுத்திக்கிறது?''

''நாம போற முதல் விருந்து இது - உம் மனம் போல உடுத்திக்கோ - உனக்கு யாரும் அந்த நாசுக்கு நாகரீகம் எல்லாம் கற்றுத் தரத் தேவையில்லையே.''

மிக ஆடம்பரமாய் உடுத்தும் மனநிலையில் இல்லை அந்தப் புதுப் பெண். விதவையான அகல்யா, கல்யாண மின்றியே பல குடும்பங்களின் சுமைகளை சுமந்த அத்தைப் பாட்டி, புதிரான மௌனத்துடனிருக்கும் நளினா இருக்கும் வீட்டில் தான் அலட்டாய் உடுத்தி கணவ னோடு ஜோடி போட்டுக் கிளம்புவது நாசூக்கற்றதாய் பட்டது. ஆழ்ந்த சிவப்பு வர்ணச் சிதறல்கள் கொண்ட ஒரு வெண்பட்டைச் சுற்றியவள் அதற்குப் பொருத்தமான ஓரிரு நகைகளைச் சேர்த்துக் கொண்டதோடு சரி.

ஆனால் அழைப்பிற்கு மரியாதைத் தருமளவிற்கு நல்ல தோற்றம் இருக்க வேண்டுமென்பதால் விழிகளுக்கு தூளி மையோடு உதடுகளுக்கு இளம் வண்ணமும் இட்டாள்.

கையில் சிறு எவர்சில்வர் கிண்ணத்தோடு அவள் கிளம்ப, அனந்தன் அது பற்றிக் கேட்டான்.

''முதன் முதலாய் அவர் வீட்டுக்குப் போறோம்... பெரியவர் இனிப்பு சாப்பிடலாமான்னு தெரியலை... அதான் மீன்புட்டு செய்து எடுத்துகிட்டேன்.''

''மனுஷர் அசந்திடுவாரு...''

''பாவம்... அவர் தனியாளாய் இருக்கறதாய் வேற சொன்னீங்க. இங்கே கடைகள் ஏதுமில்லை. ஆக பழம் கூட வாங்கிக்க முடியாது.''

''நல்லது அமு.. ம்ம்... ஐயா இப்ப தனியாள்தான் - ஆனா அவருக்கும் குடும்பமெல்லாம் இருந்ததாம் -

'பால் பொங்காத வீடும்

சாதம் குழையாத வீடும் ஏது?'ன்னுவாங்கல்ல? அது போல அவர் வீட்டிலும் ஏதோ அசந்தர்ப்பமாய் நடக்க, அவருக்குத் தாள முடியாமல் வெட்டி விலக்கிட்டார்னு கேள்வி...''

பேசிய அனந்தனின் கண்கள் யோசனையில் ஆழ்ந்திருந்தன.

வரவேற்பறையை ஒட்டியிருந்த நளினாவின் அறை ஜன்னலில் அசைவு தெரிந்தது. தம்பதிகள் கிளம்புவதை நோட்டமிடுகிறாளோ... தான் சில நாட்களுக்கு முன்பு நளினா அனந்தனோடு பேசியதைக் கண்டு பொறுமியது போல. ஆனால் ஏனோ விஷயத்தை உடைத்துக் கேட்க



வாய் வரவில்லை - கூச்சமா, அசட்டு கௌரவமா அல்லது புருஷன்,

''ஆமாம் அமு - அப்படித்தான். நளினாவுடனான என் உறவு தொடரும் என்று' போட்டு உடைத்து விடுவானோ என்ற அச்சமா?

''அகல்யாக்காவிடம் சொல்லிட்டேன்... அத்தைப் பாட்டிட்ட...'' என்று அமோகா அவர்களிடம் சொல்லிக் கொள்ள நினைத்த நேரம் கையில் சின்ன பூச்செண்டுடன் வெளிப்பட்டாள் நளினா.

நடுவே ஆழ் சிகப்பு ரோஜா -

சுற்றிலும் அரணாய் லில்லிப் பூக்கள் வைத்து நூலால் பின்னப்பட்ட அச் செண்டு பின்னலில் சூடிக் கொள்ளும் கச்சிதமான அளவிலிருந்தது.

''வச்சுக்கோ - இங்கே பூச்சரமெல்லாம் கிடைக்காது. அதான் இருப்பதைக் கொண்டு கட்டினேன்.''

நளினா நீட்டியதை சின்ன மலைப்புடன் வாங்கிக் கொண்டாள்.

தன் உடைக்கு அச்செண்டு கன பொருத்தமாய் இருப்பதைக் கவனித்தவள் அதைத்தான் சற்று முன்பு நளினா ஜன்னலின் வழியே நோட்டமிட்டிருக்க வேண்டுமென்றும் புரிந்தது.

அதை அவசரப்பட்டு தான் தவறாய் கணித்த வருத்தமும் சேர,

''ரொம்ப நன்றி நளினாக்கா... திரு. வின்ஸன் எங்களை விருந்துக்கு அழைச்சிருந்தார் - கிளம்பிட்டிருக்கோம்.''

''ம்ம்.''

''இப்பதான் பாட்டிம்மாவிடம் சொல்லிக் கொள்ள ணும்னு நினைச்சேன்.

''பூவைச் சூட்டிட்டு வா.''

நறுக்கமான உத்தரவுடன் விலகினாள் நளினா. கண்ணாடி பார்த்து வாகாய் பூ சூட்டி அதைச் சிறிது ரசித்தும் விட்டு கீழிறங்கிய அமோகா பாட்டியின் அறைக்குப் போனபோது அங்கு நளினாவும் இருந்தாள் -

பெரியவரிடம் சொல்லிக் கொண்டவள் மறுபடி சிறு முறுவலுடன் நளினாவிற்கு நன்றி சொன்னாள்.

நளினாவின் கண்கள் ஊசியின் கூரிய மினுமினுப் புடன் இவளை உறுத்தின.

''பரவால்ல அமோகா - நானுங்கூட உனக்கு நன்றி சொல்லணும்.''

''எதற்காய்?''

''சின்னவ அஸ்வினிக்கு எண்ணிக்கை வராமல் தகராறு செய்தது - டீச்சர் அது பற்றி குறைபட, எனக்கு கொஞ்சம் பயம் - டிஸ்லெக்சியா அதாவது கற்பதில் குறைபாடு உள்ளக் குழந்தையோன்னு.. சில எண்கள் அவ மனதில் தங்கவே இல்லை. கோர்வையாய் சொல்லவும் வரலை. ஆனா இப்ப சரளமாய் சொல்றா.''

''ஓ.. அதுவா? குழந்தைகளை சாயங்காலமாய் தோட் டத்திற்கு உலவ விளையாடன்னு கூட்டிப் போனப்ப, அங்குள்ள பூக்கள், பெரிய இலைகளை எண்ண விட்டுப் பழக்கினேன் - இயற்கை சூழலில் விளையாட்டாய் செய்தது சுலபமாய் குழந்தையின் புத்தியில் பதிஞ்சிடுச்சு போல.. வரட்டா?''



நளினாவின் உதடுகளை விரித்தது துளி புன்னகை தான் - ஆனால் அதுவே அமோகாவிற்கு புது உற்சாகம் தர, மலர்ந்த முகத்துடன் விருந்திற்காய் கிளம்பினாள் - காரில் கணவனின் அருகே உட்கார்ந்து போன சில நிமிஷங்கள் கூட உற்சாகமாய் பறந்தன.

அவர்கள் போய் இறங்கிய வீடு, அனந்தன் முன்பே விவரித்தது போல பிரமாண்டம்தான்... ஆனால் பகட்டு அதிகம்.

பழங்கால மாளிகை போலவும் அதைக் காட்ட முயற்சித்திருந்தது புரிந்தது - இதில் பதினைந்து தனி அறைகளேனும் இருக்கும். அதாவது சமையல், வரவேற்பு, உண்ணும், குளிக்கும் அறைகளைத் தவிர்த்து! இதில் ஒரு முதியவர் மட்டும் தனித்து வாழ்வது பரிதாப மானதாய் கூட பட்டது.

வின்ஸன் மீது சற்று இரக்கத்துடனேயே அவ்வீட்டி னுள் நுழைந்தாள் அமோகா -

நெடுக ஓடிய தாழ்வாரம் முழுக்க வித விதமான செடிகள் பள்ளிப் பிள்ளைகளைப் போல வரிசையாய் அணிவகுத்திருந்தன.

அதைத் தாண்டிய வரவேற்பு அறையில் பளீரென கண்ணைப் பறித்தன சிவப்பு நிற திரைச் சீலைகள்... அதே நிறத்தில் சிம்மாசனத்தின் அமைப்பிலிருந்த முரட்டு இருக்கைகள் -

அவற்றிற்கு சம்பந்தமே இல்லாத ஊதா, நீல வர்ணங் களில் பகட்டான தரைக் கம்பளங்கள்.

நினைத்த இடத்தில் எல்லாம் படங்களும் விளக்கு களும் வியாபித்திருந்தன.

ஒரு பெண் அங்கில்லாத குறையை உரக்க அறிவித்தது அந்த அறை!

மறுபக்க வாசலிலிருந்து அதே அறைக்குள் நுழைந்த வின்ஸனின் முகம் கடுமையாயிருந்தது - அவர் வார்த்தைகளும் தான் -

''புத்தியைப் பயன்படுத்தாமல் வீணாக்கற முட்டாள்.. அதான் உனக்குப் பொருத்தமாய் வீணான்னு பேர் வச்சிருக்காங்க.''

அவர் கடிந்து கொள்வது யாரை என்ற திகைப்புடன் தேடிய அமோகாவின் விழிகளில் வாசல் திரைக்குப் பின் பாதி மறைந்திருந்த ஒரு அழகிய முகம் தெரிந்தது!

அந்த அழகிய முகத்தின் கரு விழிகள் மிகப் பரிச்சயமாய் விஷமமாய், அனந்தன் இருந்த பக்கமாய் திரும்பிச் சிமிட்டின!

யாரவள்... யாரிந்த வீணா?

அமோகாவிற்குக் கண்களைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது... நளினா விஷயத்தில் மனதை சமாதானப் படுத்தினால் புது சாத்தான் முளைக்கிறதே... இங்கு நடப்பவை ஏதும் புது அவளுக்குப் புரியவில்லை... பிடிக்கவுமில்லை...

## 14



விருந்தினர் நம் வீடு தேடி வரும் வேளைகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு சில விதிமுறைகள் உண்டு.



'மோப்பக் குழையும் அனிச்சம்' என்ற அச்சத்துடன், வந்தவர்களின் முகம் வாடி விடாமல், முகம் மலர உபசரிக்கும் கலாச்சாரம் பழகிய நாட்டில் வின்ஸனின் நடத்தை அமோகாவினுள் சற்று வெறுப்பை இட்டது. சற்று முன், 'பாவம் இந்தத் தள்ளாத வயதில் இங்கு தனியே வசிக்கிறாரே' என்று கசிந்த அதே மனதுள்தான்!

''எதிர் பக்க விளக்கை மட்டும்தானே எரிய விடச் சொன்னேன். ஏன் அத்தனையையும் ஏற்றினாய்?''

அவர் உத்தரவை செயல்படுத்த, திரை மறைவிலிருந்து வெளிப்பட்டு வந்தப் பெண்ணை பெரும் வியப்போடு பார்த்திருந்தாள் அமோகா.

'இதென்ன இங்குள்ள எல்லாப் பெண்களின் அழகும் கண்ணைப் பறிக்கிறது? ராகுலண்ணாவின் மனைவி சரளாவின் தோற்றத்தில் செயற்கைப் பூச்சு அதிகம்... அகல்யாவின் அழகு பவித்திரமானது.. நளினாவும் துடைத்து திருத்திய தங்க சிலை... ஆனால் இந்தப் புதுப் பெண்ணின் வாளிப்பும் அலங்கார நேர்த்தியும் அமோகாவை வாய் பிளக்க வைத்தது.

வின்ஸனின் இருக்கையை ஒட்டியிருந்த விளக்குகள் கண் மூட, வந்தவர்களை அமரச் சொல்லியபடியே அவரும் அமர்ந்தார்.

''வாங்க... மன்னிக்கணும் - வயதானால் சில கெடுபிடிகள் செய்ய ஆரம்பிச்சிடுறோம்... அது எங்களுக்குத் தேவைப்படுது... நீயும் என் அழைப்பை ஏற்று வந்ததில் சந்தோஷம் அமோகா.''

இவள் சற்று வாயடைத்துப் போயிருக்க, அனந்தனே பொருத்தமாய் பேசி, பதிலளித்து, பேச்சை நகர்த்தினான்.

ஆக வின்ஸன் இவளை ஊடுருவிப் பார்ப்பது புரிந்தாலும் பிறர் அவரது கண்களை தெளிவாய் பார்த்து அவரது மனப்போக்கைக் கணிக்க முடியவில்லை. காரணம் இப்போதும் அவரது கண்களை பெரும்பாலும் மறைத்திருந்த கறுப்பு கண்ணாடி - அது போக அவர் பக்கத்து விளக்குகளும் எரியவில்லையே.

''என்ன புதுப்பெண் எப்படியிருக்கே?''

''ம்ம்... நல்லாயிருக்கேன் - நீங்க?''

''எமன் எப்போ வருவான்னு காத்திருக்கேன்.''

''என்ன இப்படிப் பேசறீங்க?''

''சர்க்கரைன்னா வாய் இனிச்சுடாதே. வாழ்வின் கடைசி அங்கந்தானே மரணம்? ஏன் அதைப் பற்றி பேசாமல் தவிர்க்கணும்?''

''ஆனால் அடிக்கடி அது பற்றி பேசி அதை நயங்காட்டி வரவேற்கணுங்கற அவசியமுமில்லையே.''

''ஓ... சமீபமாய் உன் அப்பா கூட... மன்னிக்கணும் அமோகா. தவிர ஒரு புது மணத் தம்பதிகளிடம் நான் இப்படி பேசுவதும் அபத்தம் - வயசானால் புத்தி மழுங்கிடுது. ஆனாலும் இருக்கும் மூளையை கூர்த் தீட்டுவதற்காய் விடாமல் வாசிக்கறேன் - கம்ப்யூட்டரோடு யோசிப்பைத் தூண்டும் சில ஆட்டங்களும் ஆடறதுண்டு.''

''ம்ம்.''

''ஆனா அது வெறும் இயந்திரந்தானே - நாம ஜெயிச்ால் பொறாமைப் படாது - தான் தோற்றால் அதற்கு வட்கமும் வராது.''



தங்கள் பக்கம் நிறைய வெளிச்சம் படுவது புரிந்ததால் புன்னகைத்தபடி தலையாட்டிக் கொண்டிருந்தாள் அமோகா.

''ஒரு புதுப் பெண்ணிடம் இப்படி ஒரு கோரிக்கை வைப்பது முறையில்லைதான் - ஆனால் ஒரே அண்டை வீட்டுக்காரனான எனக்கு ஒரு உதவி செய்யக் கூடுமா அமோகா?''

''சொல்... சொல்லுங்க.''

''சாயங்காலமாய் வந்து என்னோடு செஸ் அல்லது செக்கர்ஸ் விளையாடக் கூடுமா? சாயங்காலம் ஐந்திலிருந்து நான் மிக முக்கியமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பேன் - அதாவது நேரத்தை எப்படிக் கொல்வது அல்லது விரட்டுவதுன்ர ஆராய்ச்சி! நீ வந்தால் நேரம் சுலபமாய் நழுவிடும்.''

''ஓ...'' என்றவள் ஓரக்கண்ணால் கணவனின் முகபாவனையைப் பார்த்தாள் - அங்கு சலனமில்லை. ''சரி... வரேன் ஆனால்..''

''சொல்லும்மா...'' - ஆவலும் கனிவுமாய் இளையவளைப் பார்த்திருந்தார்.

இவரையா ஆளண்டா பிறவி, முரட்டுப் பிடிவாதம் உள்ளவர் என்று பிறர் கணித்திருக்கிறார்கள் - மிகப் பிரியமாய் பேசி அழைக்கிறாரே?

''வந்து ஆர்த்தி, அஸ்வி பள்ளியிலிருந்து வீடு திரும்பற நேரம் அது... அவங்களோடு விளையாடி, பாடங்களில் உதவி செய்வேன்.''

''நல்லது'' - வின்ஸனின் முகம் மேலும் கனிந்தது. ''அப்படீன்னா மூணரையிலிருந்து ஐந்து வரை உனக்கு

வசதிப்படுமா? அந்நேரம் நான் வியாபார கணக்கு வழக்கை சரி பார்ப்பேன்... அதைச் சற்றுத் தள்ளிப் போட்டால் போச்சு..."

மீண்டும் தன் கணவனின் பக்கமாய் இவள் பார்க்க, அனந்தன் -

"எனக்கு ஆட்சேபணையே இல்லை அமு..." என்று விட்டான் அவன்.

"அப்ப நீ மூன்று மணிக்கு இங்கு வரத் தோதாய் நானே கார் அனுப்பிடவா அமோகா?"

"வீடு திரும்பும்போது வேண்டுமானால் கார் தேவைப் படும்... வரும்போது நடந்தே வந்துடறேன்... உடம்புக் கும் நல்லது."

"வேண்டாம்மா - வெயிலாய் இருக்கும். வியர்த்துக் களைச்சிடுவே."

தன்னிடம் வின்ஸன் காட்டிய கரிசனை அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. எடுத்ததுமே தன் மேல் இவருக்கு ஏன் இத்தனைப் பிரியம் விழுந்தது?

தாங்கள் வின்ஸனின் வீட்டிற்கு விருந்திற்குப் போவ தாய் சொன்னபோது அத்தைப் பாட்டியும் கூட மோவாயில் விரல் வைத்து வியந்தார்.

"அடடே... அந்த மனுஷர் யாரையும் லேசில் வீட்டுக்கு அழைச்சு கௌரவப் படுத்த மாட்டாரே!" என்று.

"நம்ப கல்யாணத்துக்கு வந்திருந்தார் பாட்டிம்மா."

"சொன்னாங்க - ஆனா நா பார்க்கலை. பிடிவாதக்காரர் - குடலைப் பிடுங்கிக் காட்டினாலும் வாழை நார்னு சொல்ற ரகம்."



பாட்டியின் அந்த நூதனமான முதுமொழியை நினைத்த வளின் உதடுகள் சற்றே வளைந்தன போலும்.

"நீ அழகுதான் பெண்ணே - புன்னகைக்கும்போது அசல் தேவதை தான்.." - வின்ஸன் பாராட்டினார்.

"இவளை ஒரு மழைநாளின் இருளில் மின்னலின் ஊடாய் பார்த்த நானும் மிரண்டுட்டேன் ஐயா - கடல் கன்னி கரையேறி நிற்கிறாளோன்னு..."

சொன்ன அனந்தனை கூர்ந்து பார்த்தார் - மௌனமாய்.

சற்று நேரம் கழித்து - "மின்னல் மழை மோகினி" என்ற வர் தொடர்ந்து விளக்கினார். அந்தக் காலத்தில் ஜாவர் சீதாராமன் எழுதிய பிரபல நாவல் அது."

அவர் பேச்சை சுவாரஸ்யமாய் கவனித்த அமோகா விற்கு சற்று முன்பு அவர் வீணா என்ற பெண்ணைக் கடிந் ததும் கூட மறந்து போனது - இவரை ஏன் ஆளண்டாப் பிறவி, பிடிவாதக்காரர் என்கிறார்கள் எனுமளவிற்கு.

"சரி - சாப்பிடலாமா?" என்றபடி எழுந்த வின்ஸன் "வீணா" என்று அழைத்தபோது குரல் மீண்டும் மாறிப் போனது - கறாரும் காரமும்.

"எல்லாம் தயார் ஐயா."

வின்ஸன் முன்னே நடக்க, தம்பதிகள் தொடர்ந்தனர்.

மறு அறையிலிருந்த வட்ட மேஜையின் நடுவே யிருந்த கண்ணாடி பாத்திரம் நிரம்பப் பழ வகைகள். அதைச் சுற்றிலும் வெள்ளிப் பாத்திரங்களில் ஆவி பறக்கும் உணவு வகைகள் - அத்தனையையும் பரிமாறத் தயாராய் நின்றாள் வீணா.

அருகிருந்து பார்க்கையில் அந்தப் பெண்ணின் முகம் அத்தனை ரம்மியமாய் இல்லை. சற்றே முற்றிய தோற்றப்

ஆனால் நல்ல உயரமும், வாளிப்பான உடலும் நிறமும், அவள் உடுத்தியிருந்த விதமும் எனக்கு நிகர் வேறு யாருண்டு என்று சவால் விட்டன!

வின்ஸன் அவளுக்கு உத்தரவிட்ட தொனி அவளை சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டவள் என்று சொன்னாலும் அந்த வீணாவின் தோரணை ஆட்சியிலிருக்கும் ஒரு அமைச்சரின் அளவிலிருந்தது!

இங்குமே பெரியவர் அமர்ந்த இடத்தில் ஒளி மங்க லாகவும் எதிர்புறம் பிரகாசமாகவும் இருந்தது.

தனக்குப் பரிமாறிய வீணாவை நோக்கி இவள் சிநேகிதமாய் புன்னகைக்க முயல, மற்றவளின் பார்வை அதற்குப் பிடி தராமல் நழுவியது. ஆனால் அவை அனந்தனை அடிக்கடி ஆர்வமாய் கவ்வுவதைப் பார்த்த அமோகாவிற்குள் லேசான கசப்பு.

யாரிவள்? முதலாளியின் திட்டையும் பொருட்படுத் தாமல் வந்த விருந்தாளியை நமட்டுச் சிரிப்புடன் பார்த் திருப்பவள் அவளது கண்கள் கூசாமல் அனந்தனிடம் ஏதும் செய்தியைப் பேசுகின்றனவோ விஷயம் அதோடு நிற்கவில்லை...

தனக்கு இயந்திரமாய் பரிமாறிய வீணா, அனந்தனின் முகத்தருகே மிகக் குனிந்து, முணுமுணுப்பாய் ஏதோ கேட்டு, உரசியல்லவா பரிமாறுகிறாள்?

விருந்திற்குப் போகுமிடத்தில் கொறித்தால் மரியாதை யாய் இராது என்று அமோகா மாலை டிபனுக்கு வீட்டில் பரிமாறப்பட்ட வடைகளைத் தொடவில்லை. அப்படி இந்த விருந்திற்காய் தயாராகி வந்திருந்தவளின் வயிறு சட்டென அடைபட்டது போலானது. மேல் வயிற்றில்



ஏதோ ஒரு எரிச்சல் இளஞ்சூடாய் பரவி அரித்தது. இதென்ன புது உணர்வு... இதுதான் பொறாமையோ?

விருந்து முடிந்து காரில் திரும்பிய இளம் தம்பதிகள் ஏதும் பேசிக் கொள்ளவில்லை... தனித் தனியே யோசனை யில் அமர்ந்திருந்தார்கள். வழக்கமாய் ஒரு குடும்பத்துள் நிலவும் சௌகர்ய மௌனமாயில்லை அது.

ஒரே அறையினுள் இருவர் மிக சகஜமாய், மற்ற வருடன் பேசிக் கொள்ளாமலேயே சந்தோஷமாய் இருக்கக் கூடுமானால் - அது ஆரோக்கியமான தாம்பத்யம் என்று வாசித்ததுண்டு.

ஆனால் இதுவோ இருவருக்குள்ளும் வேண்டாத எண்ணப் போராட்டம் நடப்பதால் வெளியே நிலவும் அமைதி.

'யாரவள்?' என்ற ஒரே கடுப்பான கேள்வியில் தன் எரிச் சலைக் கொட்டிவிட்டு, அனந்தனின் பதிலில் விவ ரத்தைப் பெற்றிருக்கலாம். ஆனால் ஏனோ மனம் அதற் கும் இடந்தரவில்லை!

ஏன் - கேட்காவிட்டால் இவர் அவளைப் பற்றி வாய் திறக்கக் கூடாதோ - என்ற ஆங்காரம்!

வின்ஸனிடமிருந்து இவர்கள் விடைபெற்ற போது கூட அவரது பின்னால் நின்ற வீணாவின் விழிகள் அன தனைத் தழுவிப் பிரியா விடை தந்தது போலிருந்தது நிச்சயமாய் இருவருக்கும் இடையே ஏதோ நெருங்கி பரிச்சயமிருக்கிறது.

அமோகாவிற்கு மூச்சு வேகமாய் வெளியேற நெஞ் படபடத்தது. அனந்தன் இப்படிப் பல பெண்களுட நெருங்கிப் பழகியவன் என்பதால்தான் தன் அப்பா

இதயத்தை அத்தனை கலபமாய் கொய்து விட்டான் போலும்...

யாரிடம் என்ன, எப்படி எவ்வளவு பேச வேண்டு மென்ற கலை அறிந்தவன் - வார்த்தைகளில் தேன் தடவிப் பேசும் நாக்கு வேறு!

அதுவரை அவர்களின் உறவில் கனன்ற அன்பின் ஒளியில் இப்போது சாம்பல் பூத்திருந்தது!

வீடு வந்ததுமே உரிமையாய் அத்தைப் பாட்டியின் அறை நோக்கி நடந்தாள் அமோகா - நளினாவும் அங் கேயே பெரும்பாலும் இருப்பதால் முன்பு சற்று தயக்கம் இருந்தது - ஆனால் இப்போதுதான் நளினா நல்லெண் ணத்தைச் சம்பாதித்து அவளை வாய் திறக்கவும் செய் தாயிற்றே. ஆக சாத்தியிருந்த கதவைத் தயக்கமின்றித் தட்டினாள்.

''யாரது? கதவு வெறுமே சாத்திதானிருக்குது.''

திறந்து தன் அறைக்குள் நுழைந்த அமோகாவைக் கண்ட முதியவரின் முகம் மலர்ந்தது.

பாட்டியின் சுருக்கம் விழுந்த முகமும் தடித்த கண் ணாடியின் பின்னே உருண்ட விழிகளும் இப்போது இளையவளை மிரட்டவில்லை.

தன்னிடம் வந்து சொல்லிக் கொண்டு போன வீட்டு மருமகள், வந்ததும் முதல் வேலையாய் தன்னைத் தேடி வந்து 'ஆஜர்' சொல்கிறாளே என்ற பெருமிதம் அத்தைப் பாட்டியின் முகம் முழுக்க.

''வாம்மா அமோ... எப்படியிருந்தது விருந்து?''

''நல்லாயிருந்தது.''



''அந்த மனுஷர் எப்படியிருக்கார்?''

''தன்மையாய் பேசிப் பழகினார் - நீண்ட நாளாய் தனிச்சிருக்கறதும் சிரமம்தானில்லையா?'' அபூர்வமாய் தனிமை கிடைக்கறப்பதான் அது ஏகாந்தம். இனிமை போலும் - அதான் என்னை அங்கே வந்து அவரோட கேரம், செஸ்ஸுன்னு ஏதேனும் விளையாடணும்னு கேட்டுகிட்டார்.''

''அடடே - வயசாயிடுச்சன்னா பிடிவாத முறுக்கும் கொஞ்சம் தளர்ந்திடும் போல.''

''அப்படி ஒரேயடியாய் சொல்லிட முடியாது - அங் கேருந்த பெண் கிட்ட சிடுசிடுன்னு எரிஞ்சு விழுந்தார்... பாவம்...''

''யாரது வீணாவா?''

''ஆமாமா.. அந்தப் பேர் சொல்லிதான் கூப்பிட்டார், அதட்டினார்னாலும் முறையாய் அறிமுகப் படுத்தலை.''

சம்பளத்துக்கு இருக்கற பொண்ணுதான். பகட்டாய் மினுக்கிட்டு இருக்கறதைப் பார்த்தால் அப்படித் தெரியாது - பாவம் பெரியவரோட சுடு சொல்லுக்கு அங்குள்ள தனிமைக்கு ஈடு கொடுக்க, அப்படி உடுத்தி சமாளிக் கிறாளோன்னு கூடத் தோணும் - இல்லைன்னா அந்த மாளிகையில தங்க முடியாது.''

''ம்ம்... எத்தனை நாளாய்.. அதாவது காலமாய் அந்த வீணா அங்கே வேலைக்கு இருக்கறா?''

ம்... ரெண்டு வருஷமேனும் இருக்கும்னு நினைக் கறேன் - இங்கே தனக்கு விமோசனம் வரும்னு ஒரு திட்டத்தில வந்து சேர்ந்தா - ஆனா எதிர்பார்த்தபடியே எல்லாமா நடந்திடுது?''

ஒரு மர்மப் புன்னகையுடன் பாட்டி ஆரம்பிக்க, அறை யின் மறு கோடியிலிருந்த நளினா ஜாடை காட்டி அந்த பேச்சிற்கு தடை போட்டதை அமோகாவின் கண்கள் தவறவிடவில்லை - பாட்டியும் அதற்கு மேல் தொடராமல் -

''படும்மா... களைச்சிருப்பே'' - முடித்துக் கொண்டார். இருவருக்கு இடையேயான சங்கேத பேச்சின் அர்த்தம் என்ன என்பது அமோகாவிற்குத் தெளிவாய் புரியா விட்டாலும் அந்த ரகசியம் அனந்தன் சம்பந்தப்பட்டது என்று நிச்சயமாய் பட்டது!

## 15



''சந்தேகங்கற வியாதி மட்டும் ஒரு தாம்பத்யத்தை பிடிக்க விட்டுடக் கூடாதுடா அமு'' - இவளுக்குத் திரு மணம் நிச்சயமானதும் அப்பா அவ்வப்போது தந்த ஆலோ சனைகளில் இதுவும் ஒன்று. மகள் சற்று அலட்சியமாய் இருப்பதாய் பட தாணி வலியுறுத்தினார்.

''இந்த சந்தேகங்கறது சிறு கூழாங்கல்லை ஒரு நாள் முழுக்க உள்ளங்கையில சுமந்து நிற்கறதைப் போலடா.''

''அப்பா நீங்க பேச்சாளராகக் கூட வெற்றி பெற்றிருப்பீங்க. ஒருவரது கவனத்தை இழுத்துப் பிடிப்பது எப்படிங்கறது தெரியுதே - சரி சொல்லுங்க அதென்ன கூழாங்கல் உவமை?''

''ஒரு குரு கவலைகளை சமாளிப்பது எப்படிங்கறதை தன் சீடர்களுக்குக் கற்றுத் தர நினைச்சார். சில சின்ன கூழாங்கற்களைக் காட்டி,



''இவற்றை உங்களின் உள்ளங்கையில் வைத்தபடி இருக்க முடியுமான்னு கேட்டார். இளம் சீடர்கள் அலட் சியமாய் சம்மதிக்க, அவர்களின் கைகளை நீட்ட வைத்து உள்ளங்கைகளில் ஒவ்வொரு கல்லை வைத்தாராம்.''

''சரி.''

''குரு பாட்டிற்குத் தன் வேலையைக் கவனிக்க, நாள் நகர்ந்தது. மாணவர்களுக்கு ஒரு வித அவஸ்தை... பின் கை வலிப்பது போலிருக்க, பலர் அப்படியே நிற்க முடி யாமல் முணங்கினார்கள்.''

''ஓஹோ?''

''குரு விளக்கினார் - வாழ்வில் கவலை, சிறு சந்தேகங் கள் என்பது இப்படித்தான் - முதலில் ஒரு பொருட்டாய் தோன்றாதவையும் கூட, மனதிலேயே வைத்து சுமக்க சுமக்க தாளாத பாரமாகும்.''

''புரியுதுப்பா'' என்று அன்று தலையாட்டிய அந்த பாடம் இன்று நிஜமாகவே புரிந்தது!

சிறு கல்லாய் தன்னுள் விழுந்த சந்தேகங்கள் மனதைச் சலனப்படுத்தி இப்போது பெரும் பாறாங்கற்களாய் பெருத்து நோவெடுப்பது புரிந்தது. வின்ஸன் வீட்டு விருந்து முடிந்து காரில் ஏறியதுமே,

''யாரந்தப் பெண் அனந்த்? பார்வைக்கு ரொம்ப கவர்ச்சி யாய் இருந்தாள் இல்லையா?'' என்று இயல்பாய் கேட் டிருந்தாலே மனதின் சந்தேகக் கல்லை வீசி எறிந்தது போல பதிலும் வந்திருந்தால் கையை உதறிவிட்டு நடந்திருக்கலாம்.

ஆனால் தானோ இறுக்கமாய் உட்கார்ந்திருந்து விட்டு அத்தைப் பாட்டியிடம் தன் கேள்விகளுடன் ஓடி வந்தாயிற்று.

அனந்தனும் ஏன் அப்படி மௌனமாய் வந்தான்?

திருமணமாகி ஒரு மாதமே ஆன தம்பதிகள் இப்படியா 'உம்'மென்று வெளியிடம் போய் திரும்புவார்கள்?

இவர்களுக்கிடையே ஏதோ விரிசல் விழுந்திருப்பதாய்தானே அதற்கு அர்த்தம்?

எல்லாவற்றிற்கும் மேலாய் அன்றிரவு அனந்தன் இவளை அணைத்தபடி படுக்கவுமில்லை.

அமோகா சற்று எட்டியே படுக்க, வழக்கம் போல் அவன் இவளை ஒட்டி வரவில்லை. ஒதுங்கிப் படுத்தவளை ஒரு பூமாலை போல தன் பக்கமாய் புரட்டி இழுக்காமல் அமைதியாய் மோட்டுவளையை ஆராய்ந்தபடி மல்லாந்திருந்தான்.

ஏன் - இந்த வீட்டிற்கு இவள் வந்த முதல் நாளே ராகுல் அண்ணாவின் பேச்சில் குழம்பி இவள் ஒருக்களித்து அவனுக்கு முதுகு காட்டி படுத்திருக்க, ஒரு கவிதை சொல்லி இவளைக் கரைத்தானே.

'அடைமழைக் கால
அணைக் கட்டு போல
ஆபத்திலிருக்கிறது
நீ படுத்திருக்கும் கட்டில்
உன் அழகின் கொள்ளளவு
தாங்க முடியாமல்'

அந்தப் பாராட்டு ஜாலத்தில் அசந்துதான் போனாள் - திரும்பிப் படுத்து ஒரு பிரமிப்புடன் கேட்டாள் -

"அனந்த்... உங்களுக்குக் கவிதை கூட வருமா?"

"படிச்சா எல்லாருக்குந்தான் வரும்."



"அதெல்லாமில்லை. மொழியில் டாக்டர் பட்டம் வாங்கினவங்க கூட மேடை ஏறினா நடுங்கி, கவிதைன்னால் பதுங்குவாங்களே..."

"இது நான் படித்த.. அதாவது வாசித்த பழநிபாரதியின் கவிதைகள்னேன் அமு."

வாய்விட்டுச் சிரித்தபடி அவனைக் கட்டிக் கொண்டது மறக்கவில்லையே.

இன்றிரவு அவன் ஒதுங்கியிருப்பது எதற்காய்? வீணாவைப் பற்றிய கற்பனைகளா? கனவிலும் அவளே வரட்டும் என்று கண் மூடிக் கிடக்கிறானோ?

குன்றினாள் - ஏனித்தனை அல்பமான கற்பனைகள் தனக்கு?

கண்டித்தும் மனம் அடங்குவதாயில்லை.

இருவருமே தூக்கமின்றி புரண்டு இரவைக் கழித்தனர். ஆனால் ஏனோ மற்றவரின் இதமான அணைப்படிற்குள் ஒடுங்கவில்லை. ஆக காலையில் இவள் சற்று தாமதமாய் எழுந்த போது அறையில் அனந்தன் இல்லை -

இவளுக்குக் காபி தந்த வேலைக்காரி.

"ஐயா வெறுமே காபி குடிச்சிட்டு வேலையிருக்குன்னு போயிட்டாங்கம்மா - உங்ககிட்ட சொல்லச் சொன்னாக" தகவலும் தந்தாள். இவள் சுமந்த கல்லின் பாரம் தாள முடியாததாகிக் கொண்டிருந்தது.

தன் அறையைச் சீராக்கிவிட்டு குளித்து மாற்றிக் கீழிறங்கினாள் - சமையலறையிலிருந்து பேச்சும் சிரிப்புமாய் பீறிட்டது. ஐயாமார் வீட்டில் இல்லை என்ற சலுகை போலும்...

இவர்களுக்கு வீணா பற்றிய தகவல்கள் தெரிந்திருக்கும். ஆக வேலைக்காரர்களிடம் கேட்டு விடலாமா?

நேரம் நகராததால் வேண்டாத பேச்சும் கூட பேசுபவர்கள் அவர்கள் - அவர்களிடம் மற்றொரு பெண் பற்றி தான் விசாரிப்பது சரி வருமா?

பொழுதைப் போக்க வெறும் வாயை மெல்பவர்களுக்குச் சந்தேகச் சுவை கொண்ட அவலைத் தருவது சரியா?

'ஏன் அமோகாம்மா இந்தக் கேள்விய ஐயாட்டியே கேக்க வேண்டியதுதானே?'

'கல்யாணமான ஒரே மாசத்துல சண்டையா?'

'ஒரு அழகான பொண்ணைப் பாத்துட்டா அடுத்த பொண்ணுக்குத் தாளாதே!' என்று இஷ்டத்திற்குத் தன்னை அலசிக் காயப் போடுவார்கள் - தேவையில்லை...

ஆனால் சந்தேகத்தின் நமைச்சலையும் தாங்க முடியவில்லை. நளினா இல்லாத நேரமாய் போய் அத்தைப் பாட்டியின் வாயைக் கிளறினால்..? அமோகாவிற்குத் தன் மீதே வெறுப்பு மிகுந்தது.

எங்கேனும் வெளியே போய் வந்தால் தேவலை. வீட்டு வாசலில் ஓட்டுனரோடு கார் இருக்கிறதே - அதில் ஏறி டவுன் வரைப் போய் வந்தால் என்ன? கடை, கண்ணி, துமுகங்கள் என்ற மாறுதல் இந்த நமைச்சலுக்கு ருந்தாகலாம்.

தன் அறைக்குப் போனவள் கைப்பையை எடுத்துக் காண்டு கீழிறங்கினாள் - அத்தை பாட்டியிடம் விவரம் சொல்ல, பெரியவர் பலக்க தலையாட்டினார்.



''நானே சொல்லணும்னு இருந்தேன் அமோ - எளிப் படி அடைஞ்சு கிடக்கணும்னு - நளினா காலம்பரவே வெளியே போயிட்டா. அகல்யாவை உந்துணைக்கு வரச் சொல்லவா?''

''ல்ல பாட்டிம்மா.. நம்ப வீட்டு ட்ரைவர்தானே - சீக்கிரமாய் திரும்பிடறேன்.''

''ஆமம்மா. நேரத்தோட திரும்பிடு - இல்லைன்னா அனந்தனை சமாளிக்க முடியாது.''

வாசல் வரை வந்து பத்து 'பத்திரம்டா'வுடன் வழியனுப்பினார் அத்தைப் பாட்டி.

காரினுள் ஏறி உட்கார்ந்ததும் சற்று ஆசுவாசமாயிருந்தாலும் மறுபக்கம் ஆத்திரம் கொப்பளித்தது.

பெண் விடுதலை சுதந்திரம் முன்னேற்றம் என்பதெல்லாம் வெறுமே வாய்ச் சொல் வீரம்தான் - கிராமங்களில் ஒரு முளைக்குச்சி அடித்து பசுவைக் கட்டியிருப்பது போல.. பசு ஓரளவு சுற்றிவரலாம் என்றாலும், கயிறின் நீளம் எவ்வளவோ அவ்வளவு தூரம் மட்டுமே அதனால் மேய முடியும்...

இங்கு தாலிக் கயிறு அதே போல பெண்ணைக் கட்டுப் படுத்தி வைக்கிறது.

ஆண் நிர்ணயித்து விடுகிறான் - கயிறின் நீளத்தை - பெண் சுற்றி வர வேண்டிய எல்லைகளை - அதுதான் அவளுக்குப் பாதுகாப்பு என்ற பொய்ப் போர்வையில்!

ஆனாலும் கிடைத்த சிறு சுதந்திரத்தை அனுபவிக்க முயன்றாள். கடைத் தெருவில் இரு பக்கமும் மலையாள ஜிலேபி எழுத்துக்களுடனான பெயர் பலகைகள்.

எந்தக் கடையில் புகுந்து என்ன வாங்குவது?

பையில் போதுமான பணம் இருந்தது... ஆர்த்தி, அஸ்விக்கு ஏதேனும் வாங்கலாமே? அச்சிறு பெண்களுக்குத் தான் இதுவரை இனிப்பு கூட வாங்கித் தந்ததில்லை என்பது உறைக்க தின்பண்ட கடை ஒன்றுள் புகுந்தாள் - தங்கக் காசுக்களாய் கண்ணாடி தாள்களுடன் கடையில் வைக்கப்பட்டிருந்த நேந்திரம்பழ சிப்ஸ் கண்ணைப் பறித்தது - வீட்டின் வேலைக்காரர்களுக்காய் அவற்றை வாங்கிக் கொண்டாள்.

அப்பா இறந்த துக்கத்தோடு வந்திருந்ததால் புகுந்த வீட்டிற்கு வந்தது வெறுங் கையோடுதான். அவர்களுக்கும் தேங்காய்ப் பால் அல்வாவும் சேர்த்து வாங்கியவள் அலங்காரப் பொருட்களுள்ள கடைகள் பக்கம் நகர்ந்தாள். காரின் டிரைவர் இவள் வாங்குபவற்றை உடனுக்குடன் காருக்குள் ஏற்றியதும் வசதியாய் போனது.

குழந்தைகளுக்காய் கைகளில், தோள்களில் ஒட்டும் ஜிகினா வடிவங்கள், விதவிதமாய் வர்ணம் பேசும் பேனா, மெழுகுக் குச்சிகள், சாக்லெட்டுகள், கூந்தலைக் கட்டும் கிளிப்புகள் என்று தேர்ந்தெடுத்து கடையை விட்டிறங்கு டிரைவர் இவள் கையிலிருந்தவற்றை வாங்கியபடி -

''ஒரு மணிக்கு நளினாம்மா கார் கேட்டிருந்தாங்கம்மா.'' என்றார்.

''ஓ...'' யோசித்தவளுக்கு உடனே. வீடு திரும்ப விருப்பமில்லை.

அங்கு போய் அடைபட்டு வேண்டாத சிந்தனைகளில் -ழலுவானேன்? தனியே தன் விருப்பப்படி, இலக்கின்றி ற்றும் இந்த மாற்றம், நொந்த அவள் மனதிற்கு ஒத்தடம்



தந்திருந்தது. சென்னை அளவிற்கு இல்லா விடினும் வகை வகையாய் மின்னின பொருட்களும் - இவற்றை ஆர்த்தி, அஸ்வினி ரசிப்பார்களே என்ற எண்ணமும் உற்சாக மூட்டின.

அவளது தயக்கம் புரிந்த ஓட்டுனர்,

''நளினாம்மாவை வீட்டில் விட்டுட்டு இங்கே வரட்டேம்மா?'' கேட்டார்.

இங்கிருந்து அரைமணி நேரத்திற்குள்ளாய் வீடு உண்டு - பஸ்கள் பற்றி தெரியவில்லை - ஆனால் ஒரு ஆட்டோவில் ஏறி திரும்பி விடலாமே.

கேரளாவின் கொச்சின் பகுதி அமோகாவிற்குப் பரிச்சயப்பட்டது தான். இங்கு ஆட்டோ பயணத்திற்குப் பழகியவர்கள் சென்னையில் நொந்து போவார்கள் -

''எவிடயானு?'' என்று கேட்டு மறு பேச்சின்றி வாடிக்கையாளரை ஏற்றிப் போகும் ஆட்டோக்காரர்கள் ஓரிரு கிலோ மீட்டர் தூரத்தில் பயணிகளை இறக்கி விடும்போது வாங்கும் கட்டணம் எட்டு ரூபாயேதான்! பயணத்தின் போது பயணி நடு நெஞ்சை கைகளால் அழுத்தியபடி -

'மெள்ளப்பா.'

'பார்த்துப் போப்பா.'

'ஏன் இந்த சந்தில் திரும்பறே?'

என்றெல்லாம் பதறும், குடையும் அவசியமும் நேராது.

''நான் ஆட்டோவில் வீடு திரும்பறேன் டிரைவர்.'' அவர் தயங்கினார் -

''நான் இந்தப் பக்கம் பிறந்து வளர்ந்தவதானே? பத்திரமாய் வீடு வந்து சேர்ந்திடுவேன்.''

''சரிங்கம்மா.''

''வீட்டில சொல்லிடவா?'' என்றபடி விடை பெற்றார்.

அந்தத் தங்க நிற கொரோலா வாகனம் விலகியதும் இவளுள் மேலும் ஒரு சுதந்திரக் குமிழ்!

ஓலை வேய்ந்த ஒரு சிறு உணவகத்துள் நுழைந்து, பரோட்டா, காய்கறி குருமாவுடன் கடுந்தேநீர் என்று மதிய பசிக்குத் தந்தாள். மறுபடி அவளது இலக்கில்லாத சுற்றல் தொடர்ந்தது - காலும் கண்களுமே அலுத்த சமயம், இனி யும் தான் வீடு திரும்பா விட்டால் வீடு பதறக்கூடும் என் பதும் தோன்ற, ஆட்டோவைத் தேடினாள், தவிர ஆர்த்தி, அஸ்வினி வீடு திரும்பும் சமயம் இது சுலபமாகவே ஆட்டோ கிடைத்தது.

அந்த நிதானமான பயணத்தையும் அனுபவித்தாள் -

வழியும் குப்பைத் தொட்டிகளோ, பறக்கும் பிளாஸ்டிக் தாள்களோ அற்ற சாலைகளின் இருபுறமும் சீருடையில் இருப்பது போல சின்னஞ் சிறு தோட்டங்கள். பல ஆறுகள் பாயும், சதா சாரலும் மழையும் நனைக்கும் கேரள பூமி யெங்கும் பசுமைதான். விழிகளைக் குளிர்விக்கும் அந்த அழகை ரசித்தவளின் புருவங்கள் சுருங்கின.

சாலையின் வலதுபுறம் திரும்பி ஓடிய சந்தில் பளபள வென்று நிற்பது இவர்கள் வீட்டு கார்தானா? அந்நேரம் சாலையை கடக்கும் ஒரு முதியவருக்காய் ஆட்டோவின் வேகம் குறைய, காரின் எண்களை கவனித்தாள் - இது அவர்களின் தங்கக் கொராலாவேதான்! அது ஏனிங்கு நிற்கிறது?

இறங்கி அதில் ஏறி வீடு திரும்பலாமா?



மூளை முடிவெடுப்பதற்குள் வாய் சொல்லி விட்டது -

''ட்ரைவர் ஆட்டோவை அப்படி ஓரமாய் நிறுத் தணும்.''

ஆட்டோவை அனுப்பிய பின் தான் உறைத்தது - காரின் ஓட்டுனர் அங்கில்லை. அங்கிருந்தவை எல்லாம் சின்ன தனி வீடுகள் - ஆக காரில் வந்தவர்கள் அவற்றுள் ஏதோ ஒரு வீட்டிற்குத்தான் போயிருக்க வேணும். எந்த வீடென்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?

அதுவும் காரில் வந்தது நளினாவா வேறு யாரேனுமா என்பது தெரியாமல்... ஏன் இன்று இஷ்டத்திற்கு முடி வெடுக்கிறோம்?

கார் நின்ற வீட்டின் சுவர் மேலே கண்களால் துழாவினாள் - மேலும் நெருங்க... அந்தக் குரல் கேட்டது.

அது நளினாவின் குரல்தான்.

''வரட்டுமா அபிஷேக்?'' யாரிடமோ விடைபெற்றுக் கொண்டிருக்க, இவள் ஒதுங்கி நின்று கவனித்தாள்.

''ஆமடா... இந்த முறை மக்ரோன்ஸ் இனிப்பு வாங் கிட்டு வர மறந்துட்டேன்... அடுத்த தரம் மறக்கலை சரியா?''

''மூணு நாள் லீவும்மா எனக்கு நீங்க தினமும் வரணும்...'' என்றபடி நளினாவின் பின்னோடு வந்த சிறுவனை கண்ட அமோகாவிற்கு விக்கியது. அவனுக் 12 வயதிருக்கலாம் - அச்சு அசலாய் அனந்தனி ஜாடையில் நின்றவனை பார்த்தவளின் உடம்பு மட் மல்ல புத்தியும் கூட முழுக்க ஸ்தம்பித்துப் போனது!

# 16



கண்களுக்குக் கிடைத்த காட்சியில் மருண்டு முதலில் ஸ்தம்பித்த அவளின் மூளை, மறுநிமிடம் அதனை ஜீரணித்து வேகமாய் அசை போட முயன்றது.

விடைபெற்ற நளினா தானே காரை ஓட்டியபடி சென்றதைப் பதுங்கியிருந்து பார்த்தாள். ஆக நளினாவிற்குக் காரோட்டத் தெரியும் - டிரைவரும் அறியக்கூடாது என்று அவள் நினைக்கும் இடங்களுக்கு தானே போவதற்கு வசதியாய்.

நடந்தால் வீடு போய்ச் சேர எவ்வளவு நேரமாகும், என்றெல்லாம் கணக்குப் பாராமல் நடக்க ஆரம்பித்தாள் அமோகா. யோசிக்க அவளுக்கு அவகாசம் வேண்டியிருந்தது - நாள் முழுக்கக் கடை தெருவில் அலைந்த கால்கள் வலித்தாலும் வாங்கிய பொருட்களால் வழிந்த பையால் கை கடுத்தாலும் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் அவள் புத்தி வேறு ஒரு ஆராய்ச்சியில் மூழ்கி இருந்தது.

சீன மீன் பிடி வலைகளை அனந்தனோடு சேர்ந்து ...ர்த்தது ஏனோ ஞாபகத்திற்கு வந்தது - அது நூதனமாய் ...ன் பிடிக்கும் முறைதான். அப்படித்தான் தானும் ...னந்தன் பரத்திய வலையில் சிக்கிக் கொண்டோமோ? ...பாவோடு இருந்தவரை இவர்களின் புது தாம்பத்தியம் ...ழும் சந்தோஷமாய் தான் இருந்தது - அப்பாவின்



மரணம் தன் இன்பங்களையும் இழுத்துக் கொண்டு போய் விட்டது போலும்...

புகுந்த வீட்டில் நுழைந்ததுமே காதில் விழுந்த ராகுலண்ணாவின் வார்த்தைகள் - அகல்யாவின் கணவர் பற்றியெல்லாம் சிறிதும் கசியாத தகவல்கள், நளினாவின் மௌனம், அவள் தனித்து அனந்தனுடன் பேசிய விதம், வின்ஸன் ஐயாவின் வீட்டில் பார்த்த அழகிய வீணா - அவளது விழிகள் அனந்தனைத் தொட்டு, சிரித்து, சீண்டிய விதம் - வீணாவைப் பற்றிப் பேச அத்தைப் பாட்டி இடம் தாராதது... எல்லாம் போதாதது போல... நளினா ரகசியமாய் வந்த பார்க்கும் இச்சிறுவன்! அனந்தனை நகலெடுத்தது போல நிற்கும் அவன் நளினாவை 'அம்மா' என்றானே?

ஆக நளினா அடிக்கடி அங்கு போவதுதான் போலும் -

அதுவும் இனிப்போடு...

யோசிக்க யோசிக்க, மிக உறுத்தலாயிருந்தது அபிஷேக் என்ற அச்சிறுவனின் ஜாடைதான்!

நீள் வட்ட முகம். சற்றே மேல் நோக்கி சரிந்த புருவங்கள் - அதன் கீழ் ஒளி படர்ந்த கண்கள்.

செதுக்கியது போன்ற உதடுகளும் மோவாயும் -

அவன் தலையை இடது புறமாய் சரித்து பேசிய விதம் கூட அப்படியே அச்சாய் அனந்தனேதான்!

எப்படி இது?

நிச்சயம் அபிஷேக் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவ... தான் - இந்த வீட்டின் அங்கமான அவனை ஏன் தன்னிட... யாரும் அறிமுகப்படுத்தவில்லை? தங்கள் கல்யாண... சமயங்கூட சிறுவன் வரவில்லையே?

"உனக்கு முதலில் ஆண் வாரிசாய் பிறக்கட்டும்மா" என்று உருகிய அகல்யா அண்ணி இப்படி ஒரு பயல் இருப்பது பற்றி மூச்சு விடவில்லையே?

வெளியே சொல்லிக் கொள்ளக் கூசும் உறவுதானோ?

ஒரு வழியாய் அமோகா வீடு சேர்ந்தபோது அவளுக்குள் கேள்விகளும் குழப்பங்களும் வளர்ந்திருந்தனவே தவிர சற்றும் தெளிவில்லை.

அகல்யா, பாட்டி, நளினா என்று மூன்று பெண்களும் இவளுக்காகவே போல வாசலில் நின்றிருந்தார்கள் -

நளினாவைப் பார்த்ததும் இவளது உடம்பு உதறியது.

என்ன ஒரு பசப்புடன் அப்பாவியாய் வாசலில் விழி வைத்து நிற்கிறாள்? அந்த அபிஷேக் இந்த நளினா அனந்தன் மூலம் பெற்றுக் கொண்ட மகனா? நினைப்பில் ஊசிகள் நெஞ்சைத் துளைத்தன.

உள்ளம் நடுங்கியது!

"என்னாச்சம்மா... ஏன் நடந்து வர்றே?"

"இத்தனை நேரமாகவும் ரொம்ப பயந்திட்டோம்."

"போன் பண்ணியிருந்தால் காரை அனந்தனே எடுத்திட்டு வந்திருப்பானே?"

மூவரும் இதையே மாறி மாறிப் பேசினார்கள்.

"ஒண்ணுமில்லை... காலார நடக்கணும் போலிருந்தது... ...தான்."

"15 கிலோ மீட்டர் நடந்தியா?"

"இல்லைல்ல... தெம்மேடு வரை ஆட்டோவில்தான் ...தேன் - பிறகு ஊரின் அழகும் சீதோஷணமுமாய் ...த்து என்னை இறங்கி நடக்க வச்சிட்டது."



சொல்ல, நளினாவின் முகத்தில் சிறு திகைப்போடு எச்சரிக்கை பாவனை வந்து போனது.

"நீ செல் போனையாவது கொண்டு போயிருக்கணும்மா - பாவம் அனந்தன் பதறிட்டான்."

"ஸிக்னல் லேசில் கிடைக்கறதில்லையே - அதான்..."

"ஏதேனும் ஒரு பூத்திலிருந்து - வந்திட்டிருக்கேன்னு எங்களுக்கு தகவலேனும் சொல்லியிருக்கலாமோ அமோ?"

ஆயாசமாய் இருக்க,

"உங்களிடம் சொல்லிட்டுதானே பாட்டி போனேன்" - என்றாள்.

"என்ன சாப்பிட்ட? தோசை போடச் சொல்லவா, ல்ல ஏதேனும் குடிக்கறியா?"

"ஒரு காபி போதும்."

"நம்ப டிரைவரோடத்தான் போறன்னு தைரியமாய் அனுப்பிட்டேன் - இங்க அனந்தன் என்னைய உலுக்கிட்டாம் போ... அமுவுக்கு இல்லாம ஏன் கார் இங்க நிற்கணும்னு."

அகல்யா இவள் கையிலிருந்த பொருட்களை வாங்கிக் கொண்டாள். இருட்டியிருந்தது தான் - ஆர்த்தியும் அஸ்வினியும் உள்ளேயிருந்து அத்தையை பரிதவிப்புடன் எட்டிப் பார்த்தபடி -

"முதல்ல உட்காரு."

அமர்ந்தவளிடம் சூடான காபி நீட்டப்பட்டது.

பானத்தின் சூடு மட்டுமல்ல, உறவின் கரிசனையு கூட இதமாயிருந்தது.

''பரிச்சயமான இடந்தானே - அதான் சுற்றிட்டு ஒரு ஆட்டோ எடுத்துட்டுத் திரும்பினேன்.''

''அனந்தனை வழியிலே பார்க்கலியாம்மா - புயலாட்டம் உன்னைத் தேடிக் கிளம்பினானே?''

''நானென்ன 12 வயசுக் குழந்தையா?'' நளினாவை நோட்டமிட்டபடி கேட்டாள்.

''உன்னுடையதும் பாதுகாக்கப்பட வேண்டிய பருவந்தாம்மா - உலகப் போக்கு அப்படியில்ல இருக்குது?''

''ராகுலண்ணாவும் அனந்தனோடு போயிருக்கார்...''

''அவர் வியாபார விஷயமாய் நாளை சிங்கப்பூர் போறதாய் இருந்ததே?''

''அதெல்லாம் பயணத்தை ரத்து பண்ணியாச்சு.''

இப்போது அமோகாவினுள் குற்ற உணர்வு முள்ளாய் குத்தியது. எல்லாரையும் இப்படி பதறி பரிதவிக்க விட்டு விட்டு தான் உலா போயிருக்கக் கூடாதுதான்.

ஆனால் தன் பதட்டம் தணியவும் ஒரு மாற்றம் தேவைப் பட்டதே?

''அனந்தனுக்கு போன் போடவா?'' தயக்கமாய் கேட்டாள்.

''நீ வந்ததுமே டிரைவரைக் காரோடு, நீ பத்திரமாய் திரும்பியாச்சுங்கற தகவலோடு அனுப்பிட்டேன்.''

''நன்றி நளினாக்கா.''

''போய் உடம்புக்கு ஊற்றிட்டுப் படு - களைச்சுத் தெரியறே.''

அறைக்கு வந்தவள் தலையைப் பிரித்து விட்டு ஷவருக்கடியே நின்றாள். குளிர்நீர் தன் சிந்தனைகளின்



சூட்டைத் தணிக்கும் என்று ஒரு நம்பிக்கை. ஆனால் வள்ளுவரே தெளிவாய் சொல்லி விட்டாரே - 'புறந் தூய்மை மட்டுமே நீரான் அமையும்' என்று அகந்தூய்மை வாய்மையில் அல்லவா காணப்படும்?

எல்லோரும் மூடு மந்திரமாய் இருக்க எப்படி மனத் தெளிவு வரும்? கண்கள் சிவக்கும் வரை நீருக்கு அடியே நின்றவள், துடைத்து உடுத்திய நேரம் கதவு தட்டப் பட்டது.

தட்டிய தோரணையிலேயே புரிந்து போனது - அனந் தன்தான்.

கதவைத் திறந்தவள் நிமிரத் துணியவில்லை.

ஆனால் மோவாயில் விரல் வைத்து நிமிர்த்தினான் - விரல்களில் இன்று முரட்டுத் தனம் இருந்தது.

அனந்தனின் முகத்தில் அக்கறையும் பரிதவிப்பும் இருந்தளவு ஆத்திரம் இல்லை என்பதை சிறு நிம்மதி யுடன் கவனித்துக் கொண்டாள். ஆனால் ஓரிரு மணி நேரம் முன்பே பார்த்திருந்த சிறுவன் அபிஷேக்கின் முகமும் நினைவிலாடித் தொலைத்தது!

''என்னாச்சு அமு...?''

மென்று விழுங்கினாள் -

''என்னடா... ஏதும் பிரச்சனையா?''

'உன் கடந்த காலம் பற்றி எதுவுமே தெரியாதது என் முதல் பிரச்சனை - குடும்பமாய் பல ரகசியங்களை நீங்கள் இன்னும் ஒளித்து வைப்பது அடுத்தது...' என்று சொல்ல முடியவில்லை!

''சும்மா ஒரு மாற்றத்துக்காய் டவுன் வரை போனேன்

''சொல்லியிருந்தால் உனக்கென்று வேறு கார் அனுப்பியிருப்பேனே அமு.''

''அத்தனைக்கு முக்கியமாய் ஏதுமில்லை. குழந்தைகளுக்கு சின்ன சின்னப் பரிசுப் பொருட்கள், தின்பண்டங்கள்னு வாங்கினதில் நேரம் போனதே தெரியலை... ஆட்டோ கிடைச்சதால்.''

''ஆனால் பாதி வழியில் இறங்கி நீ நடந்து வந்ததாய் அத்தைப் பாட்டி சொன்னாங்களே? ஏன் அந்த ஆட்டோ ட்ரைவர் ஏதும் பிரச்சனை பண்ணினானா?''

''இங்கே அதுபோல ஏதும் வராதுன்னு தெரிஞ்சேதான் ஏறினேன்.''

''பின்னே என்னாச்சு?''

''நடந்தால் இயற்கையை அதிகம் ரசிக்கலாம்னு தோணினது.''

முகம் கசங்க அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் - அழுகிறானா என்ன?

இவள் நெஞ்சம் எகிறித் துடித்தது.

''மறந்துடறேன் அமு... நீ உன்னத ஓவியரின், ரசிகரின் ஒரே மகள்ங்கறதை மறந்திட்டோம் பார். உன்னிடம் அப்பாவின் குணாம்சங்கள் இல்லாமல் போகுமா?''

''மன்னிக்கணும் - நீங்க எல்லாரும் பயந்து, தவிர ராகுலண்ணா அவரது வெளி நாட்டுப் பயணத்தையும் ரத்து செய்திட்டார் போல.''

''குழம்பிட்டோம் அமு... உனக்கு இங்கே ஏதேனும் பிடிக்கலையோ... யாரும் ஏதும் சொல்லிட்டாங்களோன்னு.''



''சொல்லக் கூடிய அதாவது என்னிடம் சொல்லாதிருக்க வேண்டிய ரகசியங்கள் இங்கே உண்டு என்கறீங்களா?''

அவன் முகம் மேலும் இருண்டது.

''தோசை போட்டிருப்பாங்க. முதல்ல சாப்பிடு.''

அவளை அழைத்துப் போனான் -

ம்ஹூம் - அவனிடமிருந்து எந்த உண்மையும் வராது... இவளாய் தோண்டித் துருவி எடுத்துக் கொள்ள வேண்டும்.

முடிவெடுத்தபடி அத்தைப் பாட்டியிடம் பேச்சு கொடுத்தாள்.

''பையன்... அதாவது ஆண் வாரிசு வேணும்னு ஏன் சில குடும்பங்களில் தீவிரமாயிருக்காங்க பாட்டிம்மா? இப்ப ஆணோ பெண்ணோ ஒன்றே போதுங்கற மனநிலை வந்தாச்சுன்னாலும்..''

''அந்தக் காலத்துல ஆண் பிள்ளைங்கறது உயர்வு தான்... வேணும்தான். நான் தஞ்சாவூர் பக்கம்... அந்தப் பக்கத்துல பையனில்லாத வீட்டுக்கான புலம்பலே உண்டு -

'வட்டிலிலே இட்ட சாதம்
வாரித்தின்ன மைந்தனில்லே
கிண்ணியிலே போட்ட சாதம்
கிளறித் திங்க மைந்தனில்லே'ன்னு

அன்றைய நிலை அப்படி - புருஷனும் பெண்டாட்டியுமாய் வாழறப்ப எண்ணெய் மிஞ்சுதோ திரி மிஞ்சுமோன்னாகும்... அதாவது...''

''புரியுது - தம்பதிகளில் ஒருவரை மரணம் முந்திப் பிரிச்சிடும்.'' என்றவளின் நினைப்பு மறுபடி தன் தகப்பனிடம் ஓடியது.

எண்ணையற்ற திரியாய் பொசுங்கியதே அவர் நாட்கள்.

பெண்கள் விளக்கில் எண்ணையாய் கிடந்தாலும் திரியும் அதன் முனையில் ஒளிரும் சுடரும் இல்லாவிட்டால் என்ன பயன் அல்லது அழகு?

''இப்போ முதியோர் இல்லம்னு ஏதோ ஒரு போக்கிடம் உருவாகியிருக்குது - ஆனால் அப்போ பெண் குழந்தைங்க புகுந்த வீட்டுக்குக் கிளம்பிட கடைசி வரை பெத்தவங்களின் வட்டிலில் சோறிட்டது ஆண் பிள்ளை தான் -''

அகல்யாவின் வாடிய முகத்தை நினைத்தபடி நளினா விடம் மெள்ள பேச்செடுத்தாள் -

''அகல்யா அண்ணி மறு கல்யாணம் பற்றி யோசிக்கவே யில்லையா?

குழந்தைகளும் வளர்ந்து போயாச்சுன்னா... அவங்களின் நிலை மேலும் தனிமையும் கொடுமையாயும் இருக்குமே.''

''பாட்டி புலம்பலில் உனக்கு இப்படி ஒரு எண்ணம் வந்திருச்சா? ஆண் குழந்தை இருந்திருந்தால் தனக்குத் துணையாய் நின்றிருப்பான்னு அண்ணி நினைச்சாலும் மறு கல்யாணம் பற்றி யோசித்ததே இல்லை. அனந்தனும் இதுவரை அவங்களைப் பொறுப்பாய் பார்த்து வந்திருக்கார்.''

அகல்யாவிடம் தங்களின் பேச்சைப் பற்றி நளினா சொல்லியிருப்பாள் போலும்...



அகல்யா அது பற்றி பட்டும் படாமலுமாய் பேசினாள் - அவள் முகத்தின் பாவனை விசித்திரமாய் இருந்தது -

மேலும் சில விஷயங்களை இப்போதே அமோகா விடம் சொல்லி விடலாமா என்ற துடிப்பும், தயக்கமும் கலந்த ஒரு விநோத பாவனை....

## 17



''இன்று வின்ஸன் ஐயா வீட்டிற்கு வர்றதாய் சொல்லி யிருந்தே இல்லையா அமு? ரெண்டரைக்கெல்லாம் உனக்காய் கார் இங்கு தயாராய் இருக்கும்..'' என்றான் அனந்தன்.

''நடந்தே போயிருக்கலாம்.''

''வியர்த்து அசந்திடுவே.''

''அதுவும் சரிதான்.'' ஒப்புக்கொண்டவள் அன்று மதிய கவனமாகவே உடுத்திக் கொண்டாள்.

மாம்பழ வர்ண மைசூர் பட்டு - அதை மேலும் எடு பாக்கிக் காட்டும் வகையில் கருகமணியில் தங்கம் கலர் நகைகள் என்று-காரணம் அங்கு வீணா இருப்பாளே!

நேற்று, மறுநாள் தான் அங்கு வரலாமா என்று கே பதற்காய் அவள் வின்ஸனின் வீட்டிற்கு 'பேசி'யில் தொட கொள்ள, மறுமுனையில் வீணாவின் குரல்!

இவள்தான் வருவது பற்றி கூற,

'அனந்தனும் வர்ரார?' குழைவும் உரிமையுமாய் கேட்டாள் வீணா. வீணாவின் குரலும் வார்த்தைகளை அவள் சுழட்டும் விதமும் கூட கவர்ச்சியாகவே இருந்தன. வாயில் குலாப் ஜாமூனை அதக்கியபடி பேசுவது போலொரு மிழற்றல். மிட்டாய்தனம்!

அதெல்லாம் இவளுக்கு ரசிக்கவேயில்லை!

வின்ஸன் ஐயாவின் வீட்டிற்குப் போகும் வழியில் கார் ட்ரைவரிடமே வீணாவைப் பற்றி விவரங்களைக் கேட்டறிந்தால் என்ன?

நேரடியாய் விசாரிக்க வேண்டாம்.

பிறகெப்படி...?

''ட்ரைவர் போற வழியில் சின்ன பெட்டிக் கடை ஏதும் இருக்குமா - பெரியவருக்கு தர தேன்குழல் எடுத்திட்டு வந்தேன்-பாவம் வீணாக்கு ஏதேனும் தரணும்னு தோணுது...'' முடிந்தவரை இயல்பாய் பேச்சை ஆரம்பித்தாள்.

இப்படி மூக்கைத் தொட, தலையைச் சுற்றி வளைக்கும் வித்தை எல்லாம் அமோகா முன்பு அறியாதது.

'களவும் கற்று மற' என்பது போல இந்தப் பசப்புத்தனமும் பயில வேண்டியதாய் போனது.

''இந்த மணல் ரோட்டுல திரும்பினா ஒரு பெட்டிக் கடை உண்டாம்மா... ஆனா சாதாரண பிஸ்கட்தான் கிட்டும்...''

''ஓஹோ... வீணா இவருக்குத் தெரிஞ்சவங்களாச் சன்னு...'' இழுத்து இவள் வீசிய தூண்டிலில் ஓட்டுனர் சிக்கிக் கொண்டார்.



''ஆமம்மா... நம்ப சாரோட சேர்ந்து படிச்சவங்க.''

'ஆஹா அப்படியா விஷயம்?' கிரகித்துக் கொண்டாள்.

''ம்ம் - சின்ன வயசுத் தோழமைன்னா-அது தனிதான்'' - தகவல்களுக்காய் மேலும் துழாவினாள்.

''ஆமம்மா... கல்லூரியில படிச்சாங்க போல...''

ஆக அந்த காலத்தில் துளிர்த்த காதலைத் தொடரவே வீணா இங்கு வந்து சேர்ந்திருக்கிறாள்-அனந்தனை எப்போதேனும் பார்த்தாலும் போதும் என்ற நினைப்புதான் அவளை வின்ஸன் ஐயாவின் கடுமையைத் தாக்கு பிடிக்க வைக்கிறது.

அனந்தன்தான் தன் கல்லூரித் தோழியை இங்கு அழைத்து வந்திருப்பானோ? அல்லது இது தற்செயலாய் நேர்ந்ததுதானா?

''நல்லாப் படிச்சவங்களுக்கு - இந்த வேலை பாவம் சிரமம்தான்..'' அனுதாபம் காட்டி பேசினாள்.

''நர்ஸிங் டிப்ளோமா படிச்சவங்க அந்தம்மா-தவிர வயசானவங்களைக் கவனிக்கவேன்னு ஒரு தனிப் படிப்பு இருக்காமேம்மா?''

''ம்ம்-ஜிரியாட்ரிக்ஸ்?''

''அப்படித்தாம்மா நினைக்கிறேன்.''

ஒரு சினிமா நடிகையின் தோற்றப் பொலிவும் அலங்காரத் திறமையும் கொண்ட வீணா, முதியோர் மனநிலை - அவர்களின் உடல்நிலைப் பேணுதல் பற்றி படிக்க வேண்டிய அவசியமென்ன?

ஆக வீணா இங்கு வந்து சேர்ந்தது தற்செயலல்ல - கவனமான திட்டமிடல் - அத்தைப் பாட்டி கூட சொல்ல

வில்லை - வீணா நினைத்து வந்தது சரிவராமல் நழுவிப் போனதாய்...?

இவளது உடலெங்கும் புழுக்கள் ஊர்வது போலிருந்தது. இது மத்தளத்தில் ஒரு பக்க அடி எனில் மறுபக்கம் நளினா ரகசியமாய் போய் பார்க்கும் சிறுவன் அபிஷேக்கின் நினைப்பு குத்தியது.

ஆக அடுத்த கேள்வியை வீசினாள்.

''என்னை அன்று டவுனில் விட்டுட்டு நளினாம் மாவைக் கூப்பிடப் போனீங்களே ட்ரைவர்-அது... எங்கேப் போனீங்க?

அந்நாளின் ஞாபகம் வராமலோ அல்லது விசுவாசத்தி னாலோ ஓட்டுனர் சற்று தடுமாறினார்.

மேலும் சற்று அழுத்தினாள்.

''அன்னைக்கு வீடு வரும் வழியில் தெம்மேடு பகுதி யில் நம்ம காரைப் பார்த்தேன்-அதான்....''

''நளினாம்மாவை தோமஸ் பள்ளியில் இறக்கி விட் டேம்மா... அங்கே ஏதோ விழா - பிறகு நான் மட்டும் திரும்பிட்டேன்...''

கொக்கிக்கு அடுத்த வளையம் வாகாய் சிக்கியது! ஆக அபிஷேக் படிப்பது அந்தப் பள்ளியில். அந்த விழாவில் கலந்து கொண்டு, பையனை வீட்டில் சேர்த்து விட்டு நளினா விடைபெறும் நேரம்தான் தான் அங்கே போய் சேர்ந்திருக்கிறோம்.

''ஆமாமா... காரின் பக்கத்தில் உங்களைக் காணோம். றங்கிக் கூடத் தேடினேன்...''

டிரைவர் சற்று எச்சரிக்கையாகி விட்டார். அந்தக் குடும்ப சியம் அவருக்கு ஓரளவு தெரிந்திருக்கக் கூடும். ஆக



நளினா தானே காரை ஓட்டிக் கொண்டு போன இடத்தைப் பற்றி வாய் திறக்கக் கூடாது என்று முடிவெடுத்தது போல மௌனமாகி விட்டார்.

ஒரு பக்கம் வெளிச்சம் மறுபக்கம் நிழலான இருள் என்றெல்லாம் ஜாலம் புரிய முடியாத மத்தியான வேளை அது. ஆனால் சாமர்த்தியமாய் அறையின் கனத்த திரைச்சீலைகளை இழுத்து விட்டு மேஜையின் நடுவே இருந்த செக்கர்ஸ்-பலகையின் மீது வெளிச்சம் விழும்படி விளக்கு ஒன்று எரிந்தது. விளையாட்டிற்குத் தயாராய் அதில் கண்ணாடி கோலிகள் அடுக்கப்பட்டிருந்தன. வீணாவின் ஏற்பாடு போலும்.

வின்ஸன் ஐயாவின் வீட்டு வாசற்கதவைத் திறந்தது போன முறை போல அதே வயசான ஊழியன்தான்.

''வாங்கம்மா-ஐயா உங்களை மூணு தரமேனும் வந்தாச்சான்னு கேட்டுட்டார்... மூணு மணியத் தாண்டி நீங்க வந்திருந்தா ஐயாவ நாங்க சமாளிச்சிருக்க முடியாது...''

சொற்ப பற்களுடன் உற்சாகமாய் சிரித்து வரவேற்றார்.

''அம்மாக்கு காபி எடுத்தாரட்டா?''

''ஐயா எப்ப குடிப்பாங்க?''

''டாண்ணு மூணரைக்கு..''

''அப்ப அவரோட குடிச்சுக்கறேன்.''-என்றபடி அமர்ந் தாள்.

ஆனால் இவளது பேச்சுக்குரல் கேட்ட வின்ஸன் முன் அறைக்கு வந்து விட்டார். இன்றும் கறுப்பு கண்ணாடி தான். ஆனால் பெரிய சிரிப்பை, அதில் விரிந்த மகிழ்வைக்

கவனித்த அமோகா தன்னையும் மீறி மிக நேசமாகவே முறுவலித்தாள்.

''நேரத்திற்கு வந்துட்டேம்மா அமோகா... இத்தனை மணி 'போல' வர்றேன்னுட்டு முக்கால் மணி நேரத்தை சர்வ சகஜமாய் முழுங்குபவங்களை எனக்குக் கட்டோடு பிடிக்காது...''

''நானும் அப்படி தாமதிப்பேன்னு பயந்துட்டீங்களா ஐயா?'' சற்று ஆச்சரியத்துடன் ஆமோதித்தார்.

''ஆமா... நமக்குப் பிடிச்சவங்க தப்பு செய்றது பெரிய ஏமாற்றமில்லையா? சரியான நேரத்திற்கு வந்ததில் ஒரு நிறைவு...'' - அவளது கைகளைப் பரிவுடன் பற்றிக் கொண்டார்.

தன்னைப் பிடித்திருப்பதாய் அவர் வாய்விட்டு சொன்னதில் இளையவளுக்கும் இளக்கம்தான்.

மனிதர் அப்படி லேசில் மனம் திறந்து பேசும் ரகமல்லவே!

''என்னம்மா குடிக்கறே? பழரசம்?''

''உங்களோடு மூணரைக்கு டீ குடிக்கறதாய் இருக்கேன்.''

''உனக்குத் தேவைன்னால் இப்பவே நானும் குடிக்கிறேனே?''

முதியவரின் துடிப்பை ரசித்து முறுவலித்தாள்.

ஆனாலும் உள்ளே ஒரு எச்சரிக்கை மணி அடித்தது.

வர் நிச்சயம் எல்லோரையும் இப்படி நயந்து உபசரிப்பதில்லை. ஆக தனக்கு மட்டும் என் இந்த பாரபட்சமான



''ஆளுக்கு இரண்டு முக்கோணங்களை வைச்சு விளையாடலாமா?'' என்றபடி மேலும் பத்து கோலிகளை மறுவர்ண முக்கோணத்துள் அடுக்கினாள்.

''ரைட்.. நானும் இருபதேனும் வைத்துதான் ஆடுவேன் - இல்லாமல் என்ன சவால்?''

உற்சாகமாய் கைகளைப் பரபரவென தேய்த்து கொண்டார் வின்ஸன்.

சற்று நேரத்தில் தேநீர் பரிமாறிய வீணாவை நிமிர்ந்து பார்த்து அமோகா புன்னகைக்க, அந்தப் பெண்ணின் முகம் கல்லாயிருந்தது. உணர்வற்ற ஒரு கற்சிலையின் முகம் போல-

'முன்பே சந்தித்திருக்கிறோம் - நீ என் கல்லூரித் தோழனின் மனைவி அல்லவா' என்ற பரிச்சயம் அதில் இல்லை!

''நீ வச்சிட்டு போ-அமோகா தேநீர் கலந்து தருவா...'' என்று வின்ஸன் விரட்ட, பொம்மை போல நகர்ந்து விட்டாள் வீணா.

தேநீர் கோப்பையை எடுத்தபடி ஒரு சிறு நகைப் பெட்டியை அமோகாவின் பக்கமாய் நகர்த்தினார்.

''திறந்து பாரம்மா''- என்றபடி.

அக்கருநீலப் பெட்டியைத் திறந்தவள் மலைத்தாள்.

சின்ன சூரியன் போல தகதகவென்று மின்னிக் கிடந்தது. கனத்த வைர வளையல் ஒன்று!

''இது என் மனைவிக்கு நான் தந்த கடைசிப் பரிசும்மா... இதைப் போட்டுட்டு பளபளன்னு அவ எனக்குப் பரிமாறணும்னு ஆசைப்பட்டேன்...''

''அருமையாய் சமைக்கும் கைகளுக்கு தங்க வளை போடணும்னு பேசக் கேள்விப்பட்டிருக்கேன்...''

''வசதியிருக்கவன் வைரம் போடணுமில்லையா? ஆனா நினைக்கறதெல்லாம் நடக்கறதில்லையே... அவ போயிட்டா...''

''உங்க பிள்ளைங்க... எங்கே?''

கறுப்பு கண்ணாடியை மீறி அவரது பார்வை எதிரே இருந்தவளை கூறு போட்டது!

நடுங்கியது இவளுக்கு! ''மன்னிக்கணும் ஐயா... உங்க அந்தரங்கம் அது... பேச்சுவாக்கில் கேட்டுட்டேன்...''

''அதான் நான் யாரிடமும் பேசறதில்லை - நாலு நிமிஷப் பேச்சில் நம்மைப் பற்றி நாற்பது விவரங்களைத் தெரிஞ்சுக்க முயலுவாங்க...''

குன்றி விட்டாள்-ஏனிப்படி முந்திரிக்கொட்டை போல எதிர் கேள்வி கேட்டு சிக்கிக் கொண்டோம் என்று.

''ஆனா உன்னிடம் சொல்றதில் எனக்குத் தயக்கமில்லை அமோகா - உன் கேள்விக்குப் பின்னே விஷமமில்லையே...''

''இப்ப உங்க ஆட்டம்..'' பேச்சைத் திசை திருப்ப முயன்றாள். பேருக்கு ஏதோ ஒரு கோலியை நகர்த்தி விட்டு வின்ஸன் பேச்சைத் தொடர்ந்தார்.

''எனக்கு ஒரே மகளம்மா-திருமணமாகி பல வருஷங் கழிச்சு பிறந்த அவளுக்கு ஆசையாய் நான் வச்ச பேர் - பவளம். அருமையான பொண்ணுதான்... அதாவது காதல் அவளுக்குள் புகும் வரை! அது வர, மூளை மழுங்கிடுதே! எவ்வளவு எடுத்துச் சொன்னேன்? உடம்பின் சுரப்புகளால்



ஏற்படும் இந்தக் கிளர்ச்சி காலப்போக்கில் போயிடும்னு? உனக்குத் தெரியுமில்லையா - மூளையில் சுரக்கும் டோபோமைன்தான் காதல் உணர்வை ஆரம்பிக்கிறது. ஆனா கொஞ்ச காலத்திற்குப் பிறகு அது அடங்கிடும். ஆனா கல்யாண வாழ்வென்பது கடைசி வரைத் தொடரணுமே... எம்முட்டாள் மகளுக்கு அதெல்லாம் தலையில் ஏறலை...''

''மன்னிக்கணும்யா... காதலை நீங்க விஞ்ஞானத்தோடு சம்பந்தப்படுத்தறீங்க... அது முழுமையாய் சரின்னு நான் ஒத்துக்க முடியாது.''

அச்சமின்றி அழுந்த மறுத்தாள்.

''என் பெற்றோரும் காதல் கல்யாணத்தில் இணைஞ்சவங்க தான் - அங்கேயும் பல வருஷங் கழிச்சுதான் நான் பிறந்தேனாம். ஆக குறைஞ்சது 12 வருஷங்கள் அவங்க காதல் குறையாமல் அமோகமாய் வாழ்ந்திருக்காங்க.

''எங்க நேசத்தில் பொறாமை கொண்டு சாவு எங்களைப் பிரிச்சிடுச்சு'ன்னு புலம்புவார் அப்பா. அதெல்லாம் ஏன் - உங்க மனைவியின் மேல் உங்களது பிரியம் குறையலையே... எத்தனை வாஞ்சையாய் அவங்களை நினைவு கூறுறீங்க...''

எங்களது காதல் கல்யாணமெல்லாம் இல்லை...'' கறாராய் மறுத்தார் பெரியவர்!

''அதனால் என்னய்யா? உங்களின் டோப்போமைன் கல்யாணத்திற்குப் பிறகு சுரக்க ஆரம்பித்திருக்கும்! எங்கப்பா அம்மாவின் இடையே காதல் ரசாயனம் சற்றே முந்திக் கொண்டது - அவ்வளவுதான்....!''

வாய்விட்டு சிரித்தார் வின்ஸன்.

"கெட்டிக்காரப் பொண்ணும்மா நீ! அறிவோடு அழகும் சேர்ந்தவங்க சொற்பம்-அப்படியான அபூர்வப் பெண் கிடைத்த அனந்தன் அதிர்ஷ்டசாலிதான்."

அப்பா அதிர்ஷ்டம் குறித்து சொல்லும் ஒரு அரேபிய பழமொழி அமோகாவிற்கு நினைவு வந்தது.

'துரதிர்ஷ்டம் ஒருவனை நைல் நதியில் தள்ளினால் தப்பிக் கரையேறுபவன் அதிர்ஷ்டசாலி - அப்படி கரை யேறுகையில் ஒரு மீனைக் கவ்விக் கொண்டு வெளி யேறுபவன் உழைப்பாளி!'

தம்பதிகளாய் இணைந்த தாங்கள் இருவருமே கொடுத்து வைத்தவர்களே - ஆனால் இந்த தாம்பத்யம் நிலைத்து தொடர வேண்டுமானால் அதற்காய் மெனக் கெடவும் வேண்டும்.

யோசனையில் இருந்தவளை கூர்ந்து பார்த்தபடி கேட்டார் - "உங்கப்பா மீது உனக்குப் பிரியம். ம்ம்?"

"ரொம்ப. அவருக்கு ஒரே மகளாய் அவரது அத்தனை அன்பையும் அனுபவிச்சதில் நான் அதிர்ஷ்டசாலிதான்..."

அமோகாவின் கண்கள் நினைவுகளால் பனித்தன!

" சரி - இப்ப இந்த வளையலைப் போட்டபடி ஆட் டத்தைத் தொடரலாமே அமோகா.."

"நான்... எனக்கெதற்கு...?"

தயங்கியவளிடம் அந்த புகைப்படத்தைக் காட்டினார் வின்ஸன்.

அதைப் பார்த்தவளுக்கு அடுத்த அதிர்ச்சி... ஆனால் நெஞ்சை அடைக்காமல், சற்று நெகிழ வைத்தது.



அது ஒரு கறுப்பு வெள்ளைப் புகைப்படம்.

1950களின் ஆடை அலங்காரத்தில் ஜோடியாய் நின்றனர் ஒரு திருமண தம்பதியர் - ஒல்லியாய் ஆனால் சளைக்காத கம்பீரத்துடனிருந்த இளைஞனை வின்ஸன் ஐயா என்று யூகிக்க முடிய, அருகே நின்ற பெண்ணை ஆர்வமாய் பார்த்தார்.

ஒடிசலாய், மருண்ட விழிகளுடன், உள்ளேக் குமி ழிடும் மகிழ்வை உதடுகளுக்குள் அடக்க முயன்ற உதடுகளுமாய் இருந்த பெண் மிக அழகுதான் - அப்பெண்ணின் சாயல் வெகுவாய் தன்னை ஒத்திருந் ததே அமோகாவின் வியப்பிற்குக் காரணம் -

சின்ன முறுவலுடன் வின்ஸன் கேட்டார் -

"என்ன அமோகா?"

"இது... உங்கக் கல்யாணப் படம் இல்லையா?"

"ஆமா... எம் மனைவியைப் பார்த்தியா...?"

விரிவாய் இவள் புன்னகைத்ததே போதுமான சேத் சொன்னது - வின்ஸனுக்குத் தன் மீது முகிழ்த்த பிரியத்தி காரணம் ஒரே நொடியில் புரிந்தது போலிருந்தது.

அவர் மறுபடி அந்த வைர வளையலை இவளி பக்கமாய் நகர்த்த, மீண்டும் தயங்கினாள்-

"இது ரொம்ப விலையுயர்ந்த நகை போலத் தெ யுதே...?"

"என்னோடு இருக்கும் நேரம் மட்டுமாவது இ போட்டுக்கோயேன் அமோ?"

வெல்வெட் பெட்டிக்குள் நெருப்பாய் ஜ்வலித்த அ ஆபரணத்தை எடுத்து தன் வலது கையுள் நுழைத்தா

ஒவ்வொரு அசைவிற்கும் வெவ்வேறு ஒளிக்கற்றை களைக் கொட்டியது அந்த வைர வளையல்.

அதை ரசித்தபடி விளையாடியவள் சீக்கிரமே எதிரே ஆடியவரைத் தோற்கடிக்க,

"இது உனக்கு அதிர்ஷ்டம் சேர்க்கிறது அமோகா" என்றார் வின்ஸன். ஆனால் வீணா அறையுள் நுழைய, அவர் தொனி கடுமையாய் மாறியது.

"என்ன?"

"காலி கோப்பைகளை எடுத்திட்டு போக வந்தேன்..."

"ம்ம்.." கையை அலட்சியமாய் ஆட்டினார்.

குனிந்த வீணாவின் விழிகள் பக்கவாட்டில் அலைந்து அமோகாவின் கையிலிருந்த வளையலில் ஒட்டின....

மூங்கில் கையில் நெருப்பு வளையமாய் சுழன்ற வைரங் களை வெகு ஆர்வமாய் ஆராய்ந்தன...!

## 18



'தாம்பத்தியம் என்பது கப்பல் பயணம் போல -
ஆயிரம் புயல் அடித்தாலும் பாதி வழியில்
இறங்குவது மூடத்தனம்!'

இப்படி அறிவுறுத்தின புத்தகத்தை அறைந்து மூடி னாள் அமோகா! ஆளாளுக்கு தங்களாலான பிரசங்கத்தைப் பொழிந்து விட்டுப் போய் விடுகிறார்கள் - ஆனால் கடும்



பிரச்சனைகளைத் தரும் குடும்ப சுழலில் சிக்கியவர்களுக்கு மூச்சுத் திணறுமே... தப்பினால் போதும் என்று போராடு பவர்களை, மூழ்கும் கப்பலிலேயே இரு என்று அடக் குவது என்ன நியாயம்?

புரண்டு படுத்தவளின் புத்தி எள்ளலாய் நகைத்தது -

'வின்ஸன் ஐயாவின் வீட்டிலிருந்து திரும்பிய உனக்கு உன் கணவன் சென்னைக்கு அவசரமாய் போயிருப்ப தாய், இரண்டாம் நாள் திரும்பி விடுவதாய் வந்து சேதியையேத் தாள முடியவில்லை... இதில் நீ அவரை விட்டுப் பிரிவதாவது?'

அனந்தனை மற்ற பெண்கள் பார்த்தாலே தனக்கு எரிகிறது... அவனோடு பேசினால் தகிக்கிறது - ஏன் அவர்களுக்கிடையே இத்தனை நெருக்கம் என்று மனம் பதறுகிறது.

இப்படிப்பட்ட தானா தாம்பத்திய கப்பலிலிருந்து இறங்கி விடுபவள்?!

புருஷனின் மீது பொங்கும் இத்தனை முரட்டுக் காதல் நல்லதல்லவோ? அதில் பொறாமை அனல் வேறு கிளம்பி பொசுக்குகிறதே! தன் பொறாமை அடிப்படை அற்றதாயும் தோன்றவில்லை.

அனந்தனை விழிகளால் விழுங்கி அணைக்கும் வீணா வும், தனித்து பேசும் நளினாவும் தன்னை சற்று உதாசீனப் படுத்துவதே போதுமான ஆதாரம் ஆயிற்றே!

இப்போது அனந்தன் இப்படி திடீரெனப் புறப்படு மளவு என்ன அவசரம்?

இக்கேள்வியை அத்தைப் பாட்டியிடம் கேட்க, அசங் காமல் பதில் வந்தது.

''இது அடிக்கடி நடப்பதுதாம்மா... வியாபாரத்துல திடீர் தேவை, மாற்றம்னு வருமே - ஆக எட்டு மணி விமானத்தைப் பிடிக்க ஓடுவான் ஆறரைக்கேனும் விமான நிலையத்தில் இருக்கணுமே...''

''எனக்கு ஒரு போன் போட்டிருக்கலாமே...''

''முயற்சி செய்தான் - ஆனால் அங்கே அதாவது பெரியவர் வீட்டில் போன் தொடர்பு கொள்ள முடியாதபடி செய்திருந்தாங்க போலும்...''

இருக்கலாம் - தங்களின் விளையாட்டு நேரத்தில் குறுக்கீடுகள் வேண்டாமென தற்காலிகமாய் ரிசீவரை எடுத்து வைத்திருக்கக் கூடும்...

''நேரில் கூட வந்து சொல்லியிருக்கலாம்... ஆனால் வேலை அவனை விடலை... ரெண்டு செட் உடைகளை எடுத்து வச்சிகிட்டு பறந்துட்டான்....''

பாட்டி சொல்லியும் சமாதானமாகாத நெஞ்சுடன் அமோகா மாடிக்கு தன் அறைக்குள் நுழைய, நிலைக் கண்ணாடி முன் படபடத்தது அந்த ரோஜா நிற காகிதம்-

அனந்தனின் கையெழுத்து அவளிடம் பேசியது -

*என் அமு,*

*அவசர வேலை - அதன் நிமித்தம் சென்னை போகிறேன் ஒரே நாளில் உன்னிடம் ஓடி வந்து விடுவேன்.*

*அனந்த அன்புடன்*

*- உன்னவன்.*

சய்தியை உள்வாங்கியவள், அவன் விரல்கள் வாக்கிய எழுத்துக்களை முறைத்துப் பார்த்திருந்து டு. நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள் - ஏன் எனப் மலேயே சூடாய் கன்னங்களில் நீர் வழிந்தது -



தம்பதிகளுக்கு இடையேயான உறவு உன்னதமானது தான் போலும்... இல்லை என்றால் மற்றவர்களை அத்தனைக் கடுமையாய் கடித்துத் துப்பும் வின்ஸன் தன் மறைந்த மனைவியின் சாயலில் தான் இருப்பதால் மட்டுமே தன்னிடம் வெயிலில் வைத்த பாகாய் உருகுவாரா?

இப்படி ஏதேதோ எண்ணங்களுடன் சரிந்து கிடந்தவளுக்கு, மசமசப்பாய் பேச்சு கேட்டது... பதட்டமான குரல்கள் -

''வின்ஸன் செத்துட்டாராம்...''

''ஐயோ... பாவமே...''

''கொலை... கொலைன்றாங்க.''

''யாரந்த கிழவனைக் கொன்னதாம்?''

''வேற யாரு - அந்த வீணாப் பொண்ணுதான்?''

''நினைச்சேன் - இப்படி ஒரு சிறு வயசு சிங்காரி ஏனிங்கே வந்து கிடந்து தொண்டூழியம் செய்யணும்னு... இதுக்காகத்தானா?''

''அவரைக் கொன்னுட்டு... அந்த வளையலை அபகரிச்சுட்டாளாம் - அதைப் போட்டுட்டு எப்படி போஸ் தர்ரா தெரியுமா?''

இவள் தடுமாறிப் போய் பார்க்க, அந்த அறையில் வெறிப் பார்வையும் கோணல் சிரிப்புமாய் வலது கையை ஆட்டியபடி நின்றாள் வீணா... அதில் வட்ட வெளிச்சமாய் வைரங்கள் -

அவளருகே வழக்கமான தன் சோபாவில் வின்ஸன் மல்லாந்திருக்கிறார் மார்பு முழுக்க ரத்தம்...

அலறி விழித்த அமோகாவிற்கு வியர்த்திருந்தது...

கனவு... வெறும் கனவுதான் -

ஆனால் எத்தனை தத்ரூபமான மனக்காட்சி!

நடுங்கும் விரல்களால் போர்வையை இழுத்துப் போர்த்தியபடி சுருண்டாள். அவ்வப்போது அப்பாவின் இழப்பைப் பற்றி இப்படி விதிர்க்க வைக்கும் கனவுகள் வரும்-அனந்தன் அதை எப்படி உணர்வானோ, மேலும் நெருக்கமாய் இவளை அணைத்துக் கொள்வான்.

இவளது நெஞ்சப் படபடப்பு அடங்கி, சுவாசம் சீராகும் வரை கூந்தலைக் கோதுவான்... அல்லது சிறகாய் நீவுவது போன்ற முத்தங்கள்...

இன்று அருகே அவனில்லை... ஆக இதயம் எகிறித் தவித்தது - நெடு நேரமாய்.

வின்ஸனின் சமையலறை அன்று சுறுசுறுப்பாய் இயங்கியது.

"இன்னைக்கும் அந்தப் புதுப் பொண்ணு வருதா என்ன?"

"பின்ன நீ திங்கறதுக்கா திரட்டுப்பாலும் வடையும்?" மையலாட்கள் ஒருவரை மற்றவர் சீண்டியபடி அடுப் டியில் நின்றனர். சில வசதியான பங்களாக்களில் இருப்பது ால அங்கு வேலையாட்கள் கண்டு களிக்க தனி டி.வி. டையாது - ஆக பேசி, சீண்டி அல்லது சண்டை -டுதான் பொழுதை நகர்த்த வேண்டும்.

ஆனால் தகவல்களுக்காய், தொடர்பு கொள்ள வசதி கணினி உண்டென்பதால் அதில் வீணா அவ்வப் சில பழைய, புதிய தமிழ் படங்களின் ஸி.டி.களைப் டு காட்டி வேலையாட்களைக் குஷிப்படுத்துவாள்.



வின்ஸனிற்கானது மிக எளிய உணவுதான் - விருந்தினர் அபூர்வம் - ஆக சமையல்காரர்களின் நேரம் கொள்ளையாய் மிஞ்சும். அதை அவர்கள் நாவினால்தான் அடித்து ஓட்ட வேண்டிய நிர்பந்தம் -

"ஆச்சரியந்தாம்ப்பா - இந்தப் புதுப் பொண்ணுக்கு பெரியவரு இத்தனை இடந்தர்ரது..."

"முதல்ல புதுத் தம்பதிகளா வந்துதுங்க - சரி..."

"பிறகு அந்தப் பொண்ணு மட்டும் வந்தன்னைக்கு வீட்டுக்குள்ளார எட்டிப் பாத்தேம்ப்பா - பெரியவரு மூஞ்சியில என்னா பிரகாசங்கற?"

"என்னப்பா காரணம் - லவ்ஸா?"

"அப்படீன்னு டகால்னு முடிவு சொல்லிற முடியாது - கோயிலு சிலை கணக்கா இங்க வீட்டுல நடமாடுற வீணாம்மவக் கண்டுகிடாதவருக்கு வேத்து பொண்ணு மேல என்ன ஆசை?"

"திருட்டு மாங்காக் கதைதான்...."

"ந்தா வேலு... நீ இப்ப இங்க வேலை,க்கு சேந்தவன்... நா அறேழு வருஷமா இருக்கவன் - ஒண்ணு புரிஞ்சுக்க - பெரியவரு சிடுமூஞ்சிதான் ஆனால் சுத்தமானவரு... ஆக இப்படி உன் நாக்கல அவரப் போட்டு புரட்டி அசிங்கப் படுத்தாத. ஒழுக்கமானவரு... முதலாளி."

"எழுவது வயசத் தாண்டிட்டா அப்படித்தான இருந்து தொலைக்கணும்."

"அப்படி சொல்ல முடியாதுப்பா - செய்தித்தாளைப் புரட்டினா தலை சுத்துதே - களியாட்டத்துல கிழடுங் களும் சளைக்கலியே - காவி போட்டதுங்க ஜல்சா தனி -

அப்படி பாத்தா நம்ப முதலாளி தங்கந்தான்-யாரும் தன்னை வீணாப் பொண்ணோட சம்பந்தப்படுத்திரக் கூடாதுன்னு - கூட அவர் அதுங்கிட்ட எரிஞ்சு விழறா ரோன்னு தோணும்..."

"அடடே.... அப்ப உன்னையும் என்னையும் கொஞ்ச லாமே... போப்பா..."

வீணாவின் குரல் குறுக்கிட்டது.

"என்ன டிபன் ஆச்சா? அவ வந்தாச்சு... மூணரைக்கு டிபன் முன்னறைக்கு போகலைன்னு ஐயா என்னை வறுத்திடுவார்..."

"தோ எல்லாந் தயாரு - வடை தட்டிப் போட்டா, மொறு மொறுன்னு எடுத்துட்டு போக சரியாயிருக்கும்... அந்தப் பொண்ணு பேரு என்னம்மா?"

"அமோகா."

"அடடா... பேரு மாதிரி ஆளும் அம்சந்தானில்ல?"

"பட்டும் வைரமுமாய் வாரி போட்டுகிட்டா கழுதை கூட ராஜா ஏறுற குதிரையாட்டந்தான் தோணும்." வீணா 'சுள்'ளென பதிலடித்தாள்.

"அது முதல்தரம் இங்க வந்தப்ப நாம் பார்த்தேனே - அப்படி ஏதும் அலங்காரமா வரலை - வெள்ளைப் பட்டும் களையான முகமுமாய் கலைவாணியாட்டம் இருந்தது..."

"இன்னைக்கு நானும் வாசல் பக்கமாய் போயி ஒரு லுக்கு விட்டுட்டு வாறேம்ண்ணே..."

"போ போ... மொத்தத்துல இப்படி ஒரு விருந்தாளி வர்ரது நமக்கு நல்லது செய்றதுக்கு வேலை வருதே! இல்லைன்னா டிபனுக்கு அவலோ சுண்டலோதான்னே?"

"நாம பரிமாறுற பெரிய இடத்து விருந்தாளிங்க டிபனை ரெண்டு விள்ளல் வாயில இடறதோடு சரி - மிச்ச மீதியை



நாமதான வயித்துக்குள்ளே தள்றோம்... வீணாம்மா... தோ வடை போட்டு எடுத்தாச்சு - சூடா ரெண்டு சாப்பிடுங் களேன்..."

சமையல்காரர் நீட்டிய தட்டை வாங்கிக் கொண்டவள், வடையை நுனி விரலால் பிய்த்து சட்னி தொட்டு வாயி லிட்டாள். அந்த அமோகா வந்ததும் பெரியவர் செய்யப் போகும் ஆர்ப்பாட்டங்களை எல்லாம் தாக்குப் பிடிக்க வயிற்றில் ஏதும் இருந்தால் தேவலை!

அமோகா வந்து சதுரங்கப் பலகையில் காய்களை அடுக்கிய சற்றைக்கெல்லாம், போன் அலறியது.

"ஐந்து நிமிஷம்மா - வியாபார விஷயமாய் ஒரு முக்கிய அழைப்பு" என்றபடி வின்ஸன் அகல, தந்தத்திலும் க்ரைனைட்டிலும் இழைக்கப்பட்டிருந்த சதுரங்க பலகை, காய்களைத் தடவி ரசித்திருந்தாள்.

கண்கள் சற்று இடப்புறம் நகர, அங்கேயிருந்து அந்த வளையல் பெட்டி - நேற்று இவள் விட்டுப் போயிருந்த படியே..

அதற்குள் இருந்தது வைரமல்லவா? வெறும் ஐந்து பவுனால தங்க வளையல் என்றாலே இன்றுள்ள விலை யின்படி அது ஐம்பதாயிரம் ஆகும்... மூன்று அடுக்காய் ஓடும் வைரங்களோடுள்ள ஆபரணம்.. அவளுக்கு வைரங்களோடு பரிச்சயம் இல்லாவிடினும் விலை பல லட்சங்களில் இருக்க வேண்டுமென்பது புரிந்தது.

அதனை இத்தனை அஜாக்ரதையாய் போட்டு வைக்க லாமா? யாரும் இங்கே துணிய மாட்டார்கள் என்றாலும்... இன்றும் இதை அணிந்தபடியே விளையாட வேண்டு மென்ற எதிர்பார்ப்போடு ஐயா இதை இங்கேயே விட்டு வைத்திருக்கிறாரா?

சிறு பெட்டியை எடுத்துத் திறந்தவள்... விக்கித்தாள் - உள்ளே வளையல் இல்லை!

இருக்கும் பிரச்சனைகள் போதாது போல இதென்ன புது சிக்கல்? தான் நேற்று மாலை கழற்றி வைத்துப் போன நகை இன்று அங்கில்லை என்றால் சந்தேகம் தன் மீதல்லவா விழும்?

பதட்டத்துடன் எழுந்தவள் குறுக்கும் மறுக்குமாய் நடந்தாள்.

ஒரு வேளை மறந்தாற்போல தன் கைப்பையுள் இட்டு விட்டோமா? திறந்து குடைந்தாள்.

நேற்றைய பயங்கர கனவின் ஞாபகம்.. வேறு..

'ஆடம்பரப் பொருட்கள் ஆபத்தானவை அமோ. எளிய வாழ்வின் நிம்மதி அலாதி' என்று அப்பா சொன்னது மிகையில்லை - பல லட்சங்கள் பெறுமானமுள்ள ஒரு பொருளைக் காணவில்லை என்றால் தன் உயிரையே யாரோ உருவி எடுப்பது போலல்லவா உதறுகிறது!

அந்நேரம் வீணா எதிரே வந்து நின்றாள் -

"உங்க டிரைவர் உங்களிடம் ஏதோ கேட்கணும் போல.." அவள் சொல்ல, அமோகா இயந்திரமாய் வாசலுக்குப் போனாள் -

ஓட்டுனரைக் காணவில்லை... அதற்குள் ஹாலில் வின்ஸன் ஐயாவின் குரல் கேட்க தன் இருக்கைக்குத் திரும்பினாள்...

இவரிடம் விஷயத்தை எப்படிச் சொல்ல...? மனைவிக்கான தன் கடைசி பரிசு அது என்பதால்... பதறி... ன்னைக் குதறி விட்டால்..?



"ஆரம்பிக்கலாமா? இன்று நாந்தான் ஜெயிக்கணும்.. என்ன?"

"வந்து... வந்து.."

"சும்மாச் சொன்னேம்மா - வெற்றி மட்டுமே வேணுங் கற வெறியில்லாமல் ஆடினால்தான் அது ஆட்டம். சந்தோஷம்... தியானம் செய்தது போலான அமைதி கூட வரும்."


"வந்துய்யா... அந்த வளையல்.."

"அதானே - எடுத்துப் போட்டுக்கோ... அந்த மினு மினுப்பில் எம்மூளை மேலும் உற்சாகமாய் வேலை செய்யும்" என்றவர் அந்த சிறு ஆபரணப் பெட்டியைக் கையில் எடுத்தார்.

மூச்சை இழுத்துப் பிடித்தபடி காத்திருந்தவளின் விழிகள், மீண்டும் வியப்பில் தெறித்தன!

காரணம் - ஒரு குட்டி சூரியனைப் போல அந்நகை பெட்டிக்குள் இருந்ததுதான்..!

## 19



'**து**ணிவுடன் இரு என்றால் மற்றவரை அடக்கி ஆளுங்கள் என்பதல்ல - உன்னை அடக்கி ஆ வேண்டும் என்பதே உண்மையான பொருள்.'

ஜேம்ஸ் ஆலன் சொன்னதில் அவளுக்கு உட பாடுண்டு - ஆனாலும் தன் மனம் இப்போது அடங்

வில்லையோ என்ற சந்தேகம் - தனது புத்தி கூட கட்டுப் பாடே இல்லாமல் கலங்கி விட்டதோ என்ற கலக்கம் அமோகாவிற்கு!

எளிமையாய் சொல்லவேண்டுமானால் - தனக்குப் பைத்தியமா?! தான் திறக்கும்போது இல்லாத வைர வளை, இரண்டாம் நிமிஷம் பெரியவர் வின்ஸன் திறந்தபோது எப்படி அங்கிருந்து ஜாலமாய் கண்சிமிட்டியது?

புத்தி பேதலித்தவர்களுக்கு மாயத் தோற்றங்கள் தெரிவது போலவா? அப்படியானால் வீணா, அனந்தனைப் பார்த்து அழுந்த சிரித்ததும், உரசியதும் கூட தன் கற் பனைதானோ?

அபிஷேக்கின் ஜாடை, அவன் நளினாவை 'அம்மா' என்றழைத்ததும் மாயையா?

குழப்பத்தின் உச்சத்தில் நின்றாள்!

சற்று தடுமாறினாலும் 'பைத்தியம்' எனும் பள்ளத்துள் தலை குப்புற விழுந்து விடுவோம் என்ற அச்சத்தில் அவளது ரத்தம் உறைந்தது.

''என்ன அமோகா, இன்று இந்த வைரங்கள் எனக்குத் தான் அதிர்ஷ்டத்தை அள்ளித் தருது? ரெண்டாம் முறை யும் தோற்றுட்டியே?'' வின்ஸன் கேலி பேச, சமாளித்தாள் -

''அவர்... ஊரில் இல்லை... அதான் ஏதோ நினைப்பு...''

''ஆங்... புதுப்பொண்ணு இல்லியா? இப்படி ஒரு ழவன் உன் நாளின் ரெண்டு மணி நேரங்களைப் பிடுங் க்கறதே பாவம் - இதற்கு நடுவே வேண்டாத கேள்விகள் வறு கேட்கிறேன்... ம்ம்?''



வைரவளை மறைந்து, தோன்றியதை வின்ஸனிடம் சொல்லவா வேண்டாமா?

தன்னை அலைக்கழிக்கும் குழப்ப சகதிக்குள் இவரை யும் இறக்குவானேன்? திடும்மென ஒரு எண்ணம்...

நகை அவரது பாக்கெட்டுள் பத்திரமாய் இருந்திருக் கலாம். தான் வாசலுக்குப் போய் திரும்பும் நேரத்திற்குள் பெட்டிக்குள் வைத்திருக்கலாமே?

மறைமுகமாய் கேட்டாள் -

''இந்த நகை நேற்றிலிருந்து இங்கேயேவா இருந்தது?''

''ம்ம்... தப்புதாம்மா - சில, பல வருஷங்களாய் இங்கு பணியிலிருக்கும் வேலையாட்கள்னாலும்... இப்படி ஒரு சோதனையை அவர்கள் முன் நாம வைப்பதும் சரி யில்லைதான்...''

ஆக நகையை பெரியவர் பத்திரப்படுத்தவில்லை...

''என்னம்மா அமோகா... முகம் சரியில்லையே...''

''லேசாய் தலைவலி....''

''அடடா...'' பதறி மணியடித்தவர் வீணாவை குடா காபி கொண்டு வர பணித்தார் -

மறுக்க வழியின்றி அமர்ந்திருந்தவளிடம் மூன்ற நிமிஷம் காபி நீட்டப்பட்டது - வீணாவின் கண்கள் நீண் இவளது கைகளில், அதில் ஒளியாய் சுற்றிக்கிடந்த வ யலை விழுங்க, அமோகாவின் உடல் கூசியது. ராகுல் மனைவி சரளா சொன்னது போல இந்நகையும் ஒரு பாய் தன் கையை கவ்வி சுற்றியிருந்தது போன்ற வெறுப்பு!

அவசரமாய் கிளம்பும்போது அதை உருவி வின்ஸனிடம் நீட்டினாள் -

''பத்திரமாய் வைங்க...'' என்றபடி.

ஒரு நிமிஷம் யோசித்தாலும் வளையலை வாங்கிக் கொண்டவர்,

''உன்னிடம் ஒரு விவரம் சொல்லணுமே அமோகா...''

''சொல்லுங்கய்யா...''

''வரும் ஒன்பதாம் தேதி சொல்லிக்கலாம்ன்னு நினைச்சேன்... அன்னைக்கு என் பிறந்த நாள் - 75ம் பிறந்த நாள்....''

''அடடே.... சந்தோஷம்... இன்னும் நாலே நாள்தானே?''

''திடீர்னு இப்ப அனந்தன் கிளம்பினது போல நீயும் வெளியூர் கிளம்பிடக் கூடாதேன்னுதான் இப்ப தகவல் சொன்னேன் - உன் வீட்டார் வரணும். நீதான் முக்கிய விருந்தாளி...''

இதை அவள் பசப்பு, பகட்டான வார்த்தைகளாய் கருதவில்லை - அவர் கடந்த சில நாட்களாய் தன்னிடம் பழகிய முறை அது உண்மையே என்பதற்கான நிரூபணம்.

''நல்லது - அனந்தனும் ரெண்டு நாளில் திரும்பிடுவார்... ஆனால்...''

''என்ன?''

''உங்களுக்கு என்ன பரிசு கொடுக்கன்னு தெரியலை அப்பா இருந்திருந்தால், நீங்க உங்க மனைவியோட ன்ற அந்த பழைய படத்தை ஓவியமாய் வரைந்து, ழகாய் சட்டமிட்டுத் தந்திருப்பேன்....''



''போதும்மா.. உன் ஆசையே போதும். பரிசுகள் ஒரு வயசிற்கு மேல் சுமையாகி விடுகின்றன - இது வரை சேர்த்தவற்றை கூட அதை ரசிப்பவர்களுக்கு கொடுத்திடத் தோணுது... ஆக பரிசெல்லாம் வேணாம் - ஆனா நீ எனக்காய் ஏதும் செய்யணும்னால்...''

''சொல்லுங்கய்யா....''

''அழகாய் அலங்கரிச்சுட்டு என் பிறந்த நாளன்று வா - எனக்கு பவள நிறம் ரொம்பப் பிடிக்கும் - 'பளீர்'ன்ற கம்பீரமான நிறமது - அதில் உன்னை இதுவரைப் பார்த்ததில்லை....''

''ஓ... நிச்சயமாய் வரேன்...''

விழாவிற்குக் கட்டுமளவில் அவளிடம் பவள வர்ணத்தில் புடவையில்லை - உடனே கொச்சின் போய் ஏதேனும் தேர்ந்தெடுத்தால் அதற்குத் தோதாய் ரவிக்கை, வளையலும் வாங்கலாம் -

முக்கியமாய் புடவை வாங்கும் சாக்கில் அந்தப் பையன் அபிஷேக்கை போய் பார்த்து, பேசலாம்.

ஆனால் வாங்குவதற்கான பணம்?

'திடும்'மென வின்ஸன் ஐயா கொடுத்த தொகை குறிப் பிடப்படாத காசோலை நினைவிற்கு வந்தது - அத னுடன் வாழ்த்துக்களோடு வந்த மற்ற பணமும் இருக்கக் கூடுமே... சில ஆயிரங்கள் அவளிடம் இருந்தாலும் ஆர்வத்துடன் அனந்தனின் அலமாரிகளைத் திறந்த தேடினாள் - ஒரு தோல் பை நிரம்ப இருந்த வாழ்த்து தந்திகளைப் பிரித்துப் பார்த்தவளின் கருத்தில் அந் இளம் மஞ்சள் உறை பட்டது - பிரிக்க, நினைத்தது போ

அது பெரியவரின் காசோலைதான்... ஆனால் இவள் பெயரில் இன்னும் வங்கிக் கணக்கு ஆரம்பிக்க வில்லையே....

மறுநாள் தான் டவுன் போக இருப்பதாகவும், வின்ஸ னின் பிறந்தநாள் பற்றியும் அகல்யாவிடம் தெரிவித்தாள் -

''நல்லதும்மா - கார், டிரைவருக்கு சொல்லிடறேன்... பவள நிறத்தில் புடவைன்னா, அதற்குப் பொருத்தமாய் பவள செட் ஒன்று கூட நம்மிடம் உண்டு. லாக்கரைத் திறந்து எடுத்து வைக்கிறேன் - பொடி முத்துக்களோடு கலந்து கட்டிய அழகான நகை அது... வந்து துணைக்கு நளினாவைக் கூட்டிப் போறியாம்மா?''

''இல்லைண்ணி.... வந்து... தனியாகவே கடைகளுக் குப் போய் பழகிட்டேனா... யாரோடேனும் போனால் தேர்ந்தெடுப்பதில் குழம்பிடுவேன்...''

''சரிம்மா... ஆனா நேரமாகும்னா எங்களுக்கு ஒரு போன் பண்ணிடு - டிரைவர் கூடவே இருக்கட்டும்...''

''உங்களுக்கு ஏதேனும் வாங்கி வரவாண்ணி?''

''இந்தப் பாவிக்கு ஏதும் வேணாம்மா...'' வருத்தமாய் வந்தது பதில்.

கார் வேண்டாம் என்பது சந்தேகத்தைக் கிளப்பும் என்பதால் சமர்த்தாய் காரில் ஏற கிளம்பினாள் அமோகா. எப்படியேனும் டிரைவரை ஏமாற்றிவிட்டு ஆட்டோவில் தெம்மேடு வரை போய் திரும்ப வேண்டுமென்ற திட்டம் னதுள் இருந்தது.

வாகனத்தை கடைத்தெருவின் ஒரு முனையில் நிறுத் யவள் -



''நான் திரும்ப கொஞ்ச நேரமாகும் டிரைவர் - ஷாப் பிங்கோடு, ப்யூட்டி பார்லருக்கும் போகணும்'' என்று விட்டு நடந்தாள்.

முதலில் சேலைக் கடைக்குள் புகுந்தவளுக்கு சற்றைக் கெல்லாம் கடைச் சிப்பந்தி பல பவள வர்ண புடவை களைக் காட்டிவிட்டார் - குந்தன் கற்களும் நூல்வேலையு மான ஒரு பட்டை இவள் நீவ, அதை வாகாய் இவளது தோளில் அவர் வழிய விட, இரண்டு மாதங்களுக்கு முன்பு தந்தையோடு அவளிங்கு சுற்றிய ஞாபகம் உள்ளே கொப்பளித்து வழிந்தது - நினைவுகளை ஒரு பெருமூச்சில் வெளியேற்றியவள், வேண்டியதை வாங்கிக் கொண்டு அழகு நிலையத்துள் புகுந்தாள்.

''என்ன மேம் - பேஷியல் அல்லது மேக் - அப்பா...?'' புன்னகையுடன் வினவிய பெண்ணிடம்,

''புருவம் மட்டும் லேசாய் திருத்தி விடுங்க - அவசர மாய் ஒரு ஆட்டோ வேணுமே...''

''பிரச்சனையில்லா... போன் செய்தா மோனுகுட்டி வரும் - எங்கே போகணும்?''

''பக்கத்துலதான் - ஆட்டோ வாசலுக்கே வந்துட்டால் நல்லது...'' அமோகாவின் கழுத்திலிருந்த தாலியை, அவளது கையிலிருந்த கடை பையை நோட்டமிட்ட பெண் புன்னகைத்தாள் -

''என்ன.... ஹஸ்பெண்ட்டுக்கு ஆச்சரியம் தரப் போறீங்க போல மேடம் - அவருக்கு பிறந்த நாளோ?''

''ஹி ஹி... சரியாய் கண்டுபிடிச்சுட்டீங்களே...'' எனக் ஒரு ரவிக்கை கூட தைக்கணும்...''

"பிரச்சனையேயில்லை - எங்க அக்கா கச்சிதமாய் தச்சு தரும் - ரெண்டே நாளில் இங்க வந்து வாங்கிக்கோங்க..." என்றவள் அளவெடுத்து, புருவம் திருத்தி, அமோகா கேட்டது போலவே ஒரு ஆட்டோவில் அவளை ஏற்றியும் அனுப்பினாள்.

ஆட்டோ, தெருமுனையிலிருந்த தங்க நிற கரோலா காரை மெள்ள கடந்த போது இவளது நெஞ்சு எம்பித் தவித்தது- முக்காடிட்டு பம்மிக் கொண்டாள் -

தெம்மேட்டில் அந்த வீட்டை சுலபமாகவே அடையாளம் கண்டு கொண்டாள் - ஆனால் உள்ளே சுலபமாய் நுழையக் கூடுமா?

இதயம் இன்னும் தாறுமாறாகவே அடித்தபடி கிடந்தது.

ஒருவேளை நளினாவும் இங்கு வந்திருந்தால்?

ஆனால் இப்படி அஞ்சித் தயங்கிப் பயனில்லை... துணிந்து அழைப்பு மணியை அழுத்தினாள் - பூப்போட்ட திரைச்சீலையை விலக்கி எட்டிப் பார்த்தது ஒரு ஐம்பது வயதுப் பெண்.

இவளது சுவாசம் சற்று நிதானமானது.

கிரில் கேட் என்பதால் அப்பெண் திறக்காமலேயே விசாரித்தாள் - கை உயர்த்தி செருகியிருந்த சேலையை இறக்கி விட்டது - ஆனால் புருவங்கள் கேள்வியோடு மேலேறின.

"யாரு?"

"நா... நளினாக்கு வேண்டியவங்க..."

"ஓ..." யோசித்து சற்று சிரித்தாள்.

"அபிஷேக் இருக்கானா?"



இப்போது சிரிப்பு சுருங்கியது - "ஸ்கூலுக்குப் போயாச்சில்லே?"

"ஆமாமா.... சொன்னா... ஸ்வீட்.... அதான் மெக்ரூன்ஸ் அனுப்பினா..."

ஞாபகமாய் வாங்கி வந்திருந்த இனிப்பை நுழைவு சீட்டு போலக் காட்டினாள்.

"ஓ..." ஆணியில் தொங்கிய சாவியை எம்பி எடுத்த அப்பெண் கேட்டைத் திறக்கலானாள்.

"போன தரம் வந்திருந்த போது ஸ்வீட் வாங்க மறந்துட்டாளாமே நளினா - அதான் எம்மூலம் தந்தனுப்பினா..."

"அதிக இனிப்பு வளர்ர பிள்ளைகளுக்கு நல்லதில்லைன்னா யாரும் கேக்கறதில்லை... ஆனா நீங்க யாரு... நளினா யார் பற்றியும் சொன்னதில்லை... யாரும் இங்க வர்ரதுமில்ல..."

"தெரியும்... ஆனா எங்கிட்ட நளினா எல்லாம் சொன்னதுண்டு" அமோகா துணிந்து புளுகினாள் -" குழந்தைங்க தானே இனிப்பு சாப்பிட முடியும்? அனுபவிக்கட்டுமே - சாப்பிட்ட பிறகு ரெண்டே ரெண்டு மெக்ரூன்ஸ் கொடுங்க அபிக்கு - சரியா... நளினா சொன்னா... இப்படி நீங்க பொறுப்பாய் அபியைப் பார்த்துக்கறதாலதான் அவ நிம்மதியாய் இருக்க முடியுதுன்னு... உங்க பேரைக் கூட சொல்லிட்டேயிருப்பாளே..."

நெற்றியை தட்டினாள் -

அந்தப் பெண்ணிற்கு அத்தனை கூறு போதவில்லை

"நா தவமணி" என்று எடுத்துக் கொடுத்தாள்.

''ஆங்... தாமஸ் ஸ்கூல் போய் நேரே அபிஷேக்ட்ட இதைத் தந்திருப்பேன் - ஆனா தவமணியையும் பார்க்கணும்னு ஒரு ஆசை - அதான் இங்க வந்துட்டேன் - ஒரு கிளாஸ் தண்ணி வேணுமே தவமணி...''

சகஜமான பேச்சுடன் உள்ளே நுழைந்தாள் -

''அபிஷேக்கிற்கு உங்களைத் தெரியுமா?''


''நளினியோட சேர்ந்து பார்த்திருக்கான் - அபி அப்படியே உரிச்செடுத்தது போல அனந்தனின் ஜாடை இல்லையா?''

மேலும் துணிவாய் தூண்டிலை வீசித் துழாவினாள் - இது போல வேறு ஒரு சந்தர்ப்பம் வாய்க்குமோ - இல்லையோ...

''ஆமாமா குடும்ப ஜாடை அப்படியே உண்டு... மாளிகையாட்டம் அத்தனை பெரிய வீடிருக்க, வாரிசான பிள்ளை இங்க இப்படி தனிச்சு வரணும்ன்ர விதி போல.. ஒளிச்சு மறைச்சு வந்துதானே யாரும் பார்க்க வர வேண்டியிருக்குது... பாவம் பிள்ளை...''

தவமணி தண்ணீர் குவளையை நீட்டியபடி சொல்ல, அமோகா அதை வாங்கவும் கூட முடியாமல் உறைந்து நின்றாள்!

## 20



'பிடித்தால் குடி

பிடிக்காவிட்டால் முழுங்கு' என்ற சொலவடை கிராமங்களில் சகஜம் - அதாவது விலக்க முடியாததை அனுபவித்தே ஆக வேண்டும்.



கணவன் ஒழுக்கமற்ற ஏமாற்றுகாரன் என்பது தெரிந்துவிட்டது -

ஆனால் துப்பிவிட முடியாத உறவு அது.

ஆக முழுங்கித்தான் ஆக வேணும்!

அப்படி சகித்து விழுங்கும் நிர்பந்தத்திலிருந்த முதல் பெண்ணும் இவளல்ல.

மனவியல் கற்றுத் தந்த ஆசிரியையின் ஆணித்தரமான வார்த்தைகள் இன்னும் பசுமையான ஞாபகத்தில் -

''நம் கலாச்சாரத்தின் முக்கிய பணி, பெண்களைக் கட்டுப்படுத்துவதும் கண்காணிப்பதுமே ஆகும்.

சரித்திரத்தில் - அரசரின் வெற்றியும் வீரமும் பதிவான அளவிற்கு அவரது அந்தப்புர நாயகிகளின் பெருமூச்சோ பெருமைகளோ பதிவானதில்லை.

மாமன்னர் பாபர் தெரியும் - அவரது தாயார் பேர் தெரியாது.

ஷாஜஹான் என்றதும் மும்தாஜின் நினைவு வருமென்றாலும் அந்தப் பெண் வருஷம்தோறும் பிரசவித்து 14வது பிள்ளைப் பேறின் போது இறந்தது தெரியாது -

நூறு கௌரவர்களைத் தெரியும் - அவர்கள் தங்கை 'துச்சலை' தெரியாது'' - என்றார்.

இன்று தனக்கும் அதே நிலைதானோ?

அனந்தனின் அந்தப்புர நாயகிகளில் பத்தோடு பதினொன்றாவதாய் இந்த அமோகாவும் ஐக்கியமாகி விட வேணும்...!

இப்படி புலம்பலாய் மறுகும் அளவிற்கு இன்று அலை மான ஒரு சூழ்நிலை.

வெளியூரிலிருந்து திரும்பிய அனந்தன் அலுவல கத்திற்குப் போய், அங்கிருந்து மனைவிக்கு 'பேசி' மூலம் தொடர்பு கொண்டான் -

"அமோ, நான் திரும்பியாச்சு - அரைமணி நேரத்தில் வீடு வந்திடுவேன் - உன் மீன் குழம்பு சாப்பிடணும்னு ஆசை - என்ன?"

கணவனுக்காய் ஆசையாய் சமைக்கும் மனநிலை அவளுக்கில்லாவிட்டாலும் மறுக்கவும் வழியில்லை. கூட்டி ருசி பார்த்த குழம்பு 'சப்'பென இருந்தது நாக்கிற்கு.

சமைப்பவருக்கும் சாப்பிடுபவருக்கும் இடையேயுள்ள நேசம்தானே ருசி சேர்க்கிறது? வெறும் உப்பு, வற்றல், புளி அல்லவே? உண்ணும் போது அவனது கண்கள் மனைவியையே மொய்த்தன - இரண்டு நாள், பிரிவு கூட தாளாதது போல.

தன்னை ஏமாற்றத்தானே இந்தத் தாபப் பார்வை...?

"அப்புறம்... வேறென்ன அமோ? அவசர வேலைங் கறதால்தான் உன்னிடம் வந்து சொல்லிட்டு போக முடியலை... அதுதான் கோபமா?"

இவளுக்குள் ஆத்திரம் மேலும் கூடியது.

வேறேதும் பாவம் அறியாதவர் போல என்ன ஒரு சப்பல்....!

வைரத்தை வைரத்தால் அறுக்க வேணும் என்பது பால தானும் பகட்டாய் பசப்ப வேண்டியதுதான் -



முடிவு செய்தவள் - "விஷயம்ன்னால், வின்ஸன் ஐயாவின் 75வது பிறந்தநாள்தான் விசேஷம் - நான்தான் முக்கிய விருந்தாளியாம் - அதிலும் நான் பவள நிறத்தில் உடுத்திட்டு வரணும்னு ஆசைப்பட்டார்..."

"ஓஹோ... இன்னைக்கே கடைக்குப் போகலாமா அமோ?"

"இன்னும் ரெண்டு நாள்தான் இருக்குதுன்னு நேற்றே போய் வாங்கிட்டேன் - ரவிக்கை கூட தைக்கக் கொடுத் தாச்சே..."

"பரவால்லியே... கையில் போதுமான காசு இருந்ததா? நீ அக்காவிடம் கேட்கலாம் - இல்லை நம்ப ஆபீஸ் மானே ஜரிடம் ஒரு போன் பண்ணினால் கூட கேட்கும் தொகையை உடனே அனுப்பி வைப்பார்..."

"தேவைப்படலை...தவிர வந்த மொய் பண கவர் களைப் பார்த்தேன் - வின்ஸன் ஐயாவின் 'செக்' கூட அதிலே இருந்ததே..." அனந்தனின் முகம் சற்று கடுத்தது...

"அது... அதையா காசாக்கினே?"

"எனக்கு இங்கே இன்னும் வங்கியில் கணக்கு ஆரம் பிக்கலையே... ஆக அதை மாற்றலை..."

"நல்ல வேளை..."

"ஏன் - ஐயா ஆசைப்பட்ட ஒரு புடவையை எடுக்க அவர் பரிசளித்த பணம் பயன்படறதில் என்ன தப்பு?"

"ஆபீஸில் வேலை காத்திருக்குது... நேரமாச்சு..." என்ற படி எழுந்து கொண்டான்.

புடவைக்கு ஒரிரு ஆயிரங்கள் ஆகக் கூடும் - லட் சங்களில் ஒரு தொகையை குறிப்பிட்டு காசடிக்க திட்டம் போல... உள்ளூரப் பொறுமினாள் - மனதுள் தத்தளித்த நூறு கேள்விகளை ஆசுவாசப்படுத்த கடற்கரையின் உப்புக் காற்றில் உலாவுவது உதவும் எனப்பட, வீட்டின் கொல்லைப்புறமாய் வெளியேறினாள்.

மதிய நேரமென்றாலும் சூரியனை மேகம் மூடியிருந்த தால் மிதமான சீதோஷ்ணம்... ஒரு சரிந்த கட்டுமரத்தின் பின் சேலையின் படபடப்பு. மெரீனாவைப் போலும் இங்கும் படகு மறைவில் காதலர்கள் ராஜ்யமா?

அவர்களது தனிமையைக் கெடுப்பானேன் என்று சற்று ஒதுங்கி அமோகா நடக்க, படகின் மறைவிலிருந்தவர்கள் எழுந்தனர் - எழுந்த ஜோடியின் முகங்களில் மட்டுமல் லாமல் அமோகாவின் முகமும் திகைத்து வெளுத்தது.

தன் கணவனை இப்படி கையும் கள்ளக் காதலுமாய் பிடிக்க நேருவது கொடுமை... எந்த மனைவியும் நினைக் கவும் அஞ்சிக் கூசும் அசந்தர்ப்பம் இது.

பறந்த சேலைத் தலைப்பை இழுத்துச் செருகிய நளினா வின் முகம் முழுக்க பயபடபடப்பு... அவள் அருகில் நின்ற அனந்தன் ஏதோ சொல்ல வருவது போலப் பட, அமோகா விருட்'டென திரும்பி நடந்தாள்.

உதிரியான கடல் மண்ணில் வேகமாய் நடப்பது ...ரமமாயிருந்தது - ஆனால் அங்கேயே நின்று அந்தக் ...ள்ளர்களின் சமாளிப்பை கேட்பது அதைவிட சிரம ...ல்லவா?

அலுவலகத்தில் வேலை குவிந்திருப்பதாய் புளுகி ...வியவன்.



பாவம்... வேறென்ன புளுகுகளை அவிழ்த்து விடுவான்..... மாளிகை போலுள்ள வீட்டில் பேச இடமோ தனிமையோ வாய்க்கவில்லையா... இங்கு படகு மறை வில்... வெளியாட்கள் பார்த்தால் எத்தனை கேவலம்?

'தற்செயலாய் இங்கு சந்தோத்தோம் - பேசினோம்' என்றெல்லாம் சால்ஜாப்பு சொல்ல முடியாது - ஏனெனில் இருவர் முகங்களும் இவளைக் கண்டதும் பேயறைந்த திருசாயல்லவா மாறிப் போயின!

நளினாவிற்கும் அனந்தனின் இச்சில நாள் பிரிவைத் தாள முடியவில்லைப் போலும்... அவன் ஊர் திரும் பியதும் இப்படித் தனிமையில் சந்தித்துப் பேசி ஏக்கத்தை ஆற்றிக் கொள்ளுகிறாளாக்கும்?

உள்ளம் மிக வலித்தது -

இது மருந்திடக் கூடாத ரணமல்லவா?

ஆரம்பத்தில் நளினா மீதிருந்த சந்தேகத்தை, வெறுப்பை விலக்கி சகஜமாய் பழக முயன்றதெல்லாம் வீண்.... அவர்களது துரோகம் தொடர்கிறது..... செத்து விடலாம் போலொரு வேதனை - ஆக இக்குடும்பத்தின் முந்திய தலைமுறைப் பெண்களும் இதே வேதனை யில்தான் இளமையிலேயே இறந்தார்களோ?

திருமணமாகி இரு மாதங்கள் கூட நிரம்பாத நிலை யில் புருஷன் ஓடிப்போய் மற்றொருத்தியோடு மறைவாய் குலாவுவது... அனந்தனின் முன்னோர்களுக்கும் இதே பலவீனமோ?

எது எப்படியோ இக்குடும்ப மனைவிமார் இளமையி லேயே உயிரை இழந்து விடுவார்கள் என்ற சாபத்தை அனந்தன் நம்பியிருக்கிறான் - அதனால்தான் நளினாவை

விட்டுவிட்டு தன்னைக் கைப்பற்றியிருக்கிறான் - இல்லையெனில் அவர்கள் இணைவதற்கு என்ன தடை?

குடும்பத்திற்கும் மிக சௌகர்யமானதாய் அக்கல்யாணம் அமைந்திருக்கும். தன்னை இங்கு மருமகளாய் கூட்டி வந்ததில் எத்தனை இடர்? குழப்பங்கள்... சோகங்கள்....

தான் செத்து போனால் எல்லாம் நேராகிவிடுமோ?

இரண்டாம் மனைவிக்கு ஆபத்து. ஆயுள் குறைச்சல் எல்லாம் இல்லாதிருக்கலாம்...

இதயம் புண்ணாகும் வரைப் பொருமினாள் -

ஆனால் கட்டியவனிடம் அது பற்றி பேச முடிய வில்லை....

அவனும் அதை மறந்தவன் போலத்தான் இருந்தான்.

யோசனையுடன் காரில் ஏறியவன் அலுவலகத்திற் குத்தான் போகிறானா என்று இவளுக்குள் ஒரு சந்தேக வண்டு - அதன் குடைச்சலைத் தாங்காமல் அங்கு 'பேசி' மூலம் விசாரித்தாள் -

''இல்லையே மேம் - ஸார் இன்னைக்கு ஆபீஸ் ரலைன்னு தகவல் தந்துட்டாரே...''

இவளுக்குள் தகித்தது - எங்கே ஓடியிருக்கிறான் வளது ஆசைக் கணவன்? அந்த வீணாவிடமா அல்லது ன் அறியாத வேறு ஒருத்தியிடமா?

அன்று இரவு நேரம் கழித்தே வீடு திரும்பினான் அனந் - அவனைப் பார்த்தவளின் உடலெல்லாம் கசந்தது -

பச முடியாதளவு வெறுப்பு... இவளது மௌனமே னைக் குற்றம் சாட்டி இகழ்ந்தது -



அத்தனை உணர முடியாதவளா... ஆனால் குற்றக் குறுகுறுப்பை அவன் முகத்தில் காணோம்... ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான் -

மறுநாள் மாலை பெரியவர் வின்ஸனின் பிறந்தநாள் விழாவிற்காய் அனந்தனின் குடும்பமே தயாராகிக் கொண் டிருந்தது - காலையே அவரை போன் மூலம் வாழ்த்தியிருந் தவள், இப்போது பவள நிறப் புடவையில் தயாராக நின்றாள் - அந்நிறம் அவளது மனரணத்தை எல்லாம் மறைத்து மிகப் பொலிவாகவே அவளை நிறுத்தி யிருந்தது!

குண்டு மல்லியோடு கனகாம்பரம் கலந்து அகல்யா இவளுக்காய் ஒரு மலர்சரம் தொடுத்திருந்தாள் - அதற்கு மிகப் பொருத்தமாய் காதிலும் கழுத்திலும் வழுவழுப்பான குண்டு பவளங்கள் - பொடி முத்துக்களோடு... சிரத்தை எடுத்து செய்யும் எந்தக் காரியமும் சித்திரமாய்தானே அமைகிறது...

ஆக அவள் அற்புதமாகவே தெரிந்தாள் - கண்ணாடி யின் எதிரே டை கட்டியபடி அவளது பின்னே நின்ற வனின் கண்கள் அவ்வழகின் அற்புதத்தை அனுபவித்தன -

''அசத்தறே அமு... மாமாவின் இழப்பிலிருந்து இப்ப விடுபட்டுட்ட குட்...''

''ஏன் நடிக்கணும்...? அதாவது அப்பாவின் மரணம் தான் என்னை இன்னும் வாட்டுவதாய்...''

''பின்னே?''

''உங்களுக்குத் தெரியும்....''

''ஓ...நானும் நளினாவும் பேசியதைப் பார்த்ததிலிருந்து உன் முகம் சரியில்லை... அதான்?''

பற்களைக் கடித்தபடி நின்றாள்.

"பேசறது தப்பில்லையே அமோ..."

"நீங்க ரெண்டு பேரும் அதிர்ந்து என்னைப் பார்த்ததில் நிறைய தப்பு தெரிஞ்சுதே...."

"நீ பெருந்தன்மையாய்... புரிஞ்சுக்குவேன்னு எதிர் பார்த்தேன்."

உங்க பொய், புரட்டு, லீலைகள் எப்படி புரிஞ்சுக் கறது... அதாவது ஏற்றுக்கறது?"

"புரியாமல் குற்றம் சாட்டறே அமோ... விளங்கின பிறகு பேசலாம்.

இவனது மன்மத நாடகங்களை விளங்கிக் கொண்டு விவரிக்க வேணுமா?

"சரி விளக்கமாய் சொல்லுங்க..."

இடைபுகுந்து கலைத்தது டெலிபோன் மணி.

அழைப்பு வின்ஸனிடமிருந்து -

'கொஞ்சம் சீக்கிரமாய் வாரியா அமோகா? நீ சொன்ன ர்கள் எல்லாம் வந்தாச்சு - ஆனால் நீ மேற்பார்வை ந்தியானால்தான் எனக்கு முழு திருப்தி' என்று.

ளம்பினாள் - இருபது முப்பது பேரேனும் வரக்கூடும் தால் வின்ஸனின் வரவேற்பறையை சற்று மாற்றி த்திருந்தாள் - கனத்த சோபாக்களை ஓரமாய்த் தள்ளி நிறமுடைய கம்பளங்கள் நடுவேக் கிடந்தன -

ரியவர் எல்லாவற்றிற்கும் தன்னை எதிர்பார்ப்பது காவின் புண்பட்ட மனதிற்கு ஆறுதலளித்தது.



வின்ஸனின் வீட்டுக் கதவைத் திறந்த வீணா வெண்பட்டிலிருந்தாள் - ஆனால் முதிர்ந்த அவளது முகம் அவளை தேவதைப் போல எல்லாம் காட்டவில்லை... அல்லது தன் பொறாமைதான் அப்படி குற்றம் சொல் கிறதோ?

வின்ஸன் அவளை இருகரம் நீட்டி வரவேற்றார்....

"அடடே.... என் பவள தேவதை வந்தாச்சு.... எம்மனசு திரம்பிடுச்சடா உள்ளே வா..." உள்ளறைக்கு அவளைக் கூட்டிப் போனவரின் குரல் தழுதழுத்தது -

"என் செல்லப் பொண்ணு வீட்டை, என் வாழ்வை விட்டு போகும் போது இதே நிறத்தில்தான் உடுத்தி யிருந்தாள் - அன்று காதலனோடு போன என் பவள லீலா... இப்ப வேறு வடிவில் வந்தாச்சு!"

"பவள... லீலாவா?"

"ஆமடா... உன் அம்மா லீலாவேதான். நானிட்ட முழுப் பேர் பவளலீலா... ரெண்டு வகைப் பாட்டிகளின் பெயரையும் இணைச்சு ஆசையாய் இட்ட பெயர் - உங்கப்பாவிற்கு வெறும் லீலாவாகி, அவரும் லீலாதரணி ஆனார்...."

"அப்படின்னா...." திக்குமுக்காடினாள்.

"நான் உன் தாத்தா, அமோகா..."

அவரது நீண்ட கரங்களைப் பார்த்தபடி உறைந்து நின்றாள்.

தனக்கான அதிர்ச்சிப் பட்டியலுக்கு ஒரு முடிவே இல்லையா என்ன?

# 21



பெரியவரின் பிறந்தநாள் விழாவிற்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் நேரத்திற்கு வந்து விட்டார்கள் - அல்லது வின்ஸனின் சினத்திற்கு ஆளாக வேணுமே என்ற அச்சம்! அவர்களின் நடுவே நின்று வின்ஸன் தன் சேதியைச் சொல்ல அனைவரும் ஆச்சரியத்துடன் சற்று மலைத்து நின்று... பின் பலக்க கை தட்டினார்கள்.

'இந்த அமோகா, வின்ஸனின் பேத்தியாமே?'

அமோகாவிற்குமே இன்னும் அச்செய்தியை ஏற்க முடியவில்லை....

பிரமையில் உறைந்திருந்தவளின் உள்ளே அக்கர
வொலி, சுவரில் ஆணியை இறக்கும் சுத்தியல் போல
உண்மையை அழுத்தி இறக்கியது!

இளையவளின் தோளைச் சுற்றி கையிட்டு அணைத்
வர் பெருமிதமாய் மீண்டும் விளக்கினார் -

"ஆக அமோகா என் பேத்தி. என் ஒரே மகள் பவளத்
ன் ஒரே மகள் என் ஒரே வாரிசு."

வின்ஸனின் குரல் தளுதளுத்தது.

விழிகளில் நீரின் தளும்பல்.... ஆக தன் உணர்வுகளை
க்கத்தான் இந்நாள் வரை கறுப்புக் கண்ணாடியின்
யா? அம்முதியவரின் இறுகிய அணைப்பில் அவள்
பிடுக்கில் பூத்த புது மலர் போலத் தெரிந்தாள் -
மையும் மிட்சியுமாய்...



செருமியபடி வின்ஸன் தொடர்ந்தார் -

"என் இளமை ரொம்ப எளிமையானதுதான் - பணம் செய்யணுங்கற லட்சியமும் வேகமுமாய் உழைச்சேன். ஆனா என் வெற்றிக்கு அது மட்டுமே காரணமில்லை.... கடவுளின் ஆசி இல்லாமல் இதெல்லாம் சாத்திய மில்லைங்கறது இப்ப அனுபவத்தில் புரியுது... ஆண்ட வர்க்கு நன்றி... ஆனா முன்னே நான் சம்பாதித்த சில கோடிகளோடு என் அகங்காரமும் சேர்ந்தே வளர்ந்தது... என்னால் முடியாததில்லை என்ற ஒரு வறட்டு ஜம்பம் - எம்மகள் பவளத்திற்கு கல்யாணப் பருவம் வந்துட்டதாய் என் மனைவி சொல்ல, மகளுக்கு ஏற்ற துணை என்பதை விட, எனக்கு ஏற்ற மாப்பிள்ளை யார்னு நான் அலட்டலாய் ஆராய்வதற்குள் பவளம் தனக்கான துணையை தேர்ந் தெடுத்தது... எனக்குப் பெரிய அடி! என் ஆணவத்தில் குத்து பட என் ஆத்திரம் கூடியது... ஏன்னா பவளம் தேர்ந் தெடுத்த பையன் பணக்காரனில்லை, அந்தஸ்தான குடும்பப் பின்னணியோ, பெரிய படிப்பு வேலையோ இல்லை... தவிர அவர் எடுத்து வளர்க்கப்பட்டவர்ன்றது தெரியவர, என்னால் பொறுக்கவே முடியலை... இந்த சம்பந்தம் நிச்சயம் சரி வராதுன்னு நான் சொல்ல, எம் பவளம் கை விட்டே போயிட்டா. அப்போதும் அவ நேசம் அத்தனை ஆழமானதாங்கற ரீதியில் நான் யோசிக்கலை. இந்த சின்னவளுக்கு இவ்வளவு திண்ணக்கம் இருந்தால் பத்து விரலையும் புத்தியையுமே மூலதனமாய் கொண்டு உசந்த எனக்கு எவ்வளவு திமிரும் இருக்கலாமேங்கற வெறி மட்டுந்தான்..."

சுற்றிலும் நின்றவர்கள் மூச்சு இழுத்து விட்டார்களா என்பதே சந்தேகந்தான் - அத்தனை அமைதியாய்

சிலையாய் நின்று பெரியவரின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தனர் -

வின்ஸனின் தலை தழைந்தது -

"இப்போப் புரியுது - எதிலேயுமே வெறி தப்புன்னு... வெறித்தனத்தின் முடிவு வெறுமைன்னு! எம் மனைவி அழகாய் புத்தி சொன்னா இப்படி -

'நம்ப மனசு யானையின் தும்பிக்கைப் போலிருக்கணுங்க. 40,000 தசையுள்ள அந்த உறுப்பு ஒரு பெரிய மரத்தை பிடுங்கிப் போடும் வலுவுடையது - அதே சமயம் மெல்லிய புல்லையும் கூட லாவகமாய் பறிக்கும்... இப்ப பணம் சம்பாதிச்ச வல்லவராய் அந்தஸ்தாய் இருக்கீங்க - சரி. ஆனா மகள் விஷயத்துல கண்டிப்பைத் தளர்த்தி கனிவாய் விட்டுக் கொடுக்கறதுதாங்க அழகு. பவனம் நமக்கு ஒரே குழந்தை - மாப்பிள்ளைக்கும் வேற யாரிருக்கா? ரெண்டு பிள்ளைகளோட நிறைவாய் வாழுவமே'ன்னு அவ பேசினது ஏதும் எனக்குள் உறைக்கலை... தன் பேச்சுக்கு மதிப்பில்லைன்னு புரிஞ்சு அவ ரந்தர மௌனமாயிட்டா..."

கேவலாய் நீள மூச்செடுத்து நிறுத்தினார்.

தான் பார்த்திராத அந்த அன்பு பாட்டிக்காய் இன்று மோகாவின் நெஞ்சமும் எம்பி ஏங்கியது.

'அறிவை உணர்ச்சி

வெல்வது இயல்பு

றிவால் உணர்ச்சியை

வல்வது உயர்வு' - இதுதான் உங்களுக்கான என் த நாள் செய்தி. இந்த 75 வருஷங்களில் வாழ்ந்து



கற்ற, வாழ்வின் சாரம் இது. ஆண்டவர் உங்களை எல்லாம் ஆசீர்வதிக்கட்டும்..."

புன்னகையை மீட்டவர் அனந்தனையும் தன் இடது பக்கமாய் இழுத்து நிறுத்தினார் -

"இந்தப் பயலும் படுசுட்டி - இப்படி இந்த இடத்திலே வசிக்கும் சின்னப் பெண்ணைப் பார்த்துட்டு வாப்பான்னா, கல்யாணம் கட்டியே கூட்டி வந்துட்டான்..."

ஆச்சரியமும், அதிசயமும், ஆனந்தமுமாய் வந்தவர்கள் எல்லாம் இளையவர்களையும் கை குலுக்கி, தோள்தட்டி வாழ்த்த, அமோகா ஒரு புன்னகையை முகத்தில் பூசி விட்டிருந்திருந்தாள் - ஆனால் உள்ளத்திற்குள் புயல் ஒன்று மையம் கொண்டிருந்தது.

ஆக அனந்தன் தன்னைத் தேடி பிடித்து தாலியும் கட்டியது காதலினால் அல்ல... பெரும் சொத்திற்கு தான் வாரிசு என்ற காரணத்திற்காய்!

அனந்தன் - 'கடல் கன்னி போல நீ அந்த மழை இரவில் காட்சி தந்ததில் மயங்கிப் போனேன்' என்றதெல்லாம் இந்த சதித்திட்டத்தின் முதல் அத்தியாயம்!

தன்னை வேவு பார்க்க வந்தவன், வசமாய் வளைத்தே விட்டான்!

இந்த சதி அறியாமல் அப்பாவும் அல்லவா ஏமாந்து போனார்...

நல்லவேளை அப்பா உயிரோடு இருந்து இந்த நிகழ்வைப் பார்த்திருந்தால்... ஒருவேளை இது புரிந்த விரக்தியில்தான் அப்பா கடலில் தன் முடிவை தேடிக் கொண்டாரோ? தன்னை வெறுத்து ஒதுக்கிய மாமனாரின்

கையாள்தான் இந்த அனந்தன் என்ற அதிர்ச்சியில் மூழ்கி மாண்டாரா?

''என் அமோகா.... முகமே சரியில்லையே... இத்தனை பெரிய விஷயத்தை நானும் இத்தனை பேரின் முன் போட்டு உடைச்சிருக்கக் கூடாதோ? மன்னிச்சிருமா... நீ பூரிச்ச போவேன்னு நினைச்ச... அவசரப்பட்டுட்டேன்... ஒரு விதத்துல தாமதப்படுத்தினேன் கூட... அனந்தனோடு உன் கல்யாணம் எனக்கு அதிர்ச்சிதான்... உன்னிடம் பழகி... பிறகு உண்மையைச் சொல்லலாம்னு ஒரு தயக்கம்... பழகி புரிஞ்சு, நெகிழ்ந்த, போது இன்று சொன்னால் விசேஷமாயிருக்கும்னு ஒரு அபிப்ராயம்...''

சிலர் பரிசு, வாழ்த்துகளோடு நெருங்க, இவர்களின் பேச்சு தொடரவில்லை.

இரத்த உறவாய் இந்த தாத்தா கிடைத்தது எதிர்பாராத, எல்லையில்லா மகிழ்வுதான் - ஆனால் அதை சுற்றி நூறு சிக்கல்கள்.

விருந்தினர் ஒருவரை உபசரித்துக் கொண்டிருந்த கணவனை இவளது பார்வை கொத்தியது -

ஒரே கல்லில் இரு மாங்கனிகளை இறக்கி விட்ட அக்கெட்டிக்காரனைக் குரோதத்துடன் பார்த்தாள்.

முப்பது வயதிற்குள் அவன் குடும்பத்து மருமகள் இறந்து போவாள் என்ற சாபத்திற்கு பலியாய் அநாதையான தான் பயன்படவேண்டும் - கூடவே தன்னைப் புதைத்ததும் அவனில் பொழியப் போகும் காசு மழை - தாத்தா மூலம் தனக்கு வரப்போகும் இந்த சொத்து!

அனந்தனுக்குக் காதல் நாடகம் நடிக்க காரணம் ...ந்தது - ஆனால் தன் நேசம் நிஜம்தானே?



அவனைக் கண்டதும் மனதுள் மழையடித்த குளிர்வு இன்னும் இருக்கிறதே...

''என்ன அமோ... இந்த செய்தியும் கூட்டமும் உன்னை திணறடிச்சிருச்சு போல... முகம் வாடிருச்சே... ஏதும் மாத்திரை வேணுமா? வீணாவிடம் கேட்கலாம்....''

''ல்ல... எனக்கு வீட்டுக்குப் போகணும்...'' கடித்த பற்களுடே சிடுசிடுத்தாள் -

''ஒரு வாய்... பேருக்கேனும் சாப்பிடு... சாப்பிடாமல் போனால் மற்றவங்க பேச்சைவிடு - தாத்தா மனசு வாடிடும்...''

''வின்ஸன் ஐயா'விலிருந்து அவன் மிக இயல்பாய் 'தாத்தா' விற்குத் தாவியிருந்ததை கசப்புடன் கவனித்தாள்.

ஆக தெறிக்கும் மனதுடன், சாப்பிட முயன்றாள் -

நாக்கு கசந்தது... உள்ளே குமட்டியது.

பெரியவர் அத்தனையையும் கவனித்தார் -

''போய் படும்மா அமோகா... மனசு தேறி, தெளிஞ்சு நாளை காலை வா... இன்று, இத்தனை பேரின் முன்பு உண்மையை, உறவை சொன்னது என் முட்டாள்தனம் - மன்னிச்சிடம்மா...''

''ல்ல... தா...தாத்தா... படுத்து எழுந்தால் சரியாயிடும்...''

''நல்லது....''

இப்போது மறுபடி அவர் கண்களை கறுப்பு கண்ணாடி மறைத்திருந்தது!

அனந்தன் காரைச் செலுத்த, இவள் கண்மூடி சாய்ந்திருந்தாள் - அதிகம் யோசிக்கக் கூட அஞ்சியது மனம்...

அவன் மெள்ள பேசலானான் -

''ஏன் அமு... தாத்தா உன்னிடம் தனிமையில் இதைச் சொல்லியிருக்கலாம்தான்... ஆனாலும் இன்று அவரது 75வது பிறந்த நாள் - உறவை எல்லோருக்கும் தெரியப் படுத்தணும்ற ஆர்வம்... அவர் சொன்னது நல்ல சேதி தானே... வந்த எல்லாருக்கும் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? இப்ப உனக்கு பிறந்த வீட்டு பந்தமும் இருக்குது - அதுவும் இத்தனை செல்வமும் செல்வாக்குமான தாத்தா...''

''அதுதான் பிரச்சனையே...''

இறுகிய உதடுகளூடே முணங்கினாள்.

''புரியலை அமோ...''

''இத்தனை பணம் இருக்கறது தெரிஞ்சதால்தான் ஒரு கழுகு என்னை வட்டமிட்டது... கொத்திட்டும் வந்திடுச்சு... இல்லைன்னா நா... நான் அப்பாவோட பாதுகாப்பாய் இருந்திருப்பேன்...''

காரின் வேகம் குறைந்தது -

''யாரை சொல்றே? என்னையா கழுகுன்றே?''

''வேறு யார் என்னைக் கொத்தி காயப்படுத்தினது?''

''நம்ப கல்யாணம் - உன்னைக் காயப்படுத்தினதா?''

அவன் தொனியும் இப்போது மாறியிருந்தது.

''மனசு ஒன்றிய திருமணமில்லையே இது... காசு ஆசையால் தாலி கட்டி... இங்கே... இவர்ட்ட கூட்டிட்டு வந்தீங்க...''



''நான் காசில்லாதவன் இல்லை அமு... அதை ஞாப
கத்தில் வை.''

''தாத்தா சொன்னாரே - இளவயதில் பணத்தின் மேல்
வெறியாய் இருந்தார்ன்னு... அதே வெறி உங்களையு
ஆட்டுது. நலுங்காமல் இப்போ உங்க சொத்து இரட்டி
பாய் ஆயிடுச்சே....''

''இது உளறல் அமு... அந்த மழை இரவை மற
துட்டியா நீ...?''

''அதே பொய்யை எவ்வளவு பெரிசாய் வளர்க்கறீங்க
அது உங்களுக்கு புளிச்சு போகலை?'' காட்டமும் கசப்
மாய் அவளது உதடுகள் மடிந்தன. ''எனக்கு ஏற்கெனவே
தலையிலும் நெஞ்சிலும் வேதனை... மேலும் பெ
பேசி அதை வெடிக்கப் பண்ணாதீங்க...''

அவளது முக வேதனை அவனை மௌனமாக்கியது

வீடு வர, நேரே போய் படுக்கையில் புதைந்தாள் -

சாவி துவாரத்துள் இடப்பட்ட தப்பான சாவி போ
எப்படிப் புரண்டும் திருகியும் பயனில்லை...

கண்களை மூடினாலும் நெற்றி தெறித்தது!

கணவனிடம் பேச ஆரம்பித்தது சரி - ஆன
முழுக்கக் கொட்டி கவிழ்த்திருக்க வேண்டும் -

இந்த வீடு புகும் பெண்கள் இளமை மாறாமலே
இறப்பது பற்றி - நளினா, வீணாவுடன் அனந்தனுக்கு
உறவைப் பற்றி... முக்கியமாய் மறைத்து வைக்கப்
டுள்ள சிறுவன் அபிஷேகைப் பற்றி...

அத்தனையையும் அவன் தாங்குவான்...

தனக்குத்தான் அவற்றைச் சொல்லக் கூட தாளாது.

வெகுநேரம் வாசிக்கும் அறையிலிருந்து விட்டு வந்தவன் படுத்து விட்டான். காலையில் அவன் கிளம்பும் வரைக் காத்திருந்து பிறகே எழுந்தாள் - கண்ணாடியில் தெரிந்த அவளது முகம் அவளுக்கே சகிக்கவில்லை.

காபிக்காக கீழே இறங்கியவளின் காதில் சிறுமிகளோடு பாட்டி பேசியது விழுந்தது -

''சிரிக்காத முகத்தோடு

தெய்வம் வந்து பேசாது

திறவாத கதவோரம்

தென்றல் வந்து வீசாது'ன்னு கண்ணதாசன் பாடினது வாஸ்தவம்தான் குட்டிகளா... இப்படி வழுவழுன்னு தலை சீவி சிரிச்ச முகமாய் இருந்தால்தான் நம்ப வீடு அம்சமா யிருக்கும்?''

தன் வாடிய முகத்தைக் காட்ட வேண்டாமென காபி யோடு மறுபடி மாடியேறினவளுக்கு சின்ன அதிர்ச்சி...

இவளது அறையில் அத்தை பாட்டி இவளுக்காய் காத்திருந்தது தான்...!

''சரியா தூங்கலியாம்மா அமோகா? மனச அலட்டிக் ாதே - பெரியவர் சொன்னது சந்தோஷமான சேதிதான.. றகென்ன? 'திடும்'னு பலர் முன்னே தெரியவந்தது திர்ச்சிதான் - ஆனாலும் தாத்தா பக்கத்துல நின்னு வந்த ருந்தாட்களை எல்லாம் வழியனுப்பி வச்சிருக்கணுமே சட்டுன்னு அப்படி கிளம்பி வரலாமா?''

''என்னால முடியலை... இங்க வந்ததிலிருந்தே எனக்கு ம்பக் குழப்பம்...''



''அது உம்முகத்திலேயே தெரியுதேம்மா... அணில் பிள்ளை தலை மேல அம்மிக் கல்லை வச்சது போல நசுங்கித் தானே தெரியுது உம்முகம்?''

''செத்துடலாமான்னு இருக்குது.... இந்த வீட்டு மரு மகள்கள் இள வயசிலேயே செத்துடுவாங்களாமே... அது போல...''

அத்தைப் பாட்டியின் விழிகள் கண்ணாடியின் பின்னே விகாரமிட்டதுமாய் உருண்டாலும் விரல்கள் இளைய வளின் தலையை வாஞ்சையுடன் வருடின.

''இப்படின்னு யார் சொன்னா?''

''சரளாக்காத்தான்...''

அத்தைப் பாட்டி சிரிக்க ஆரம்பித்தார்...!

## 22



தன் நிலை இத்தனை சிரிப்பிற்கு இடமாயிற்றா? சற்று சினமும் சங்கடமுமாய் அத்தைபாட்டியின் பெருநகையைப் பார்த்து நின்றாள் அமோகா!

'சிரிக்காத முகத்தோடு

தெய்வம் வந்து பேசாது' என்று சற்று முன்பு குழந்தை களுக்கு அறிவுரை சொன்னதற்கேற்ப பாட்டி சிரித்து, தெய்வத்தை வரவழைக்கிறாராக்கும்?

ஆனால் சூதும், கபடமும் உள்ள இவ்வீட்டில் தெய்வம் நுழையுமா என்ன?

''முதல்ல முகத்தை நல்லா கழுவிக்கோ - சீப்பு கொண்டு வா - நா படிய தலை வாரி விடறேன்...''

''ம்ப்ச்..''

''தலைவாரியபடி உனக்கெல்லா விவரமும் சொல்றேன் - அமோகா...''

முரட்டுத்தனமாய் மேலும் மறுக்க மனமின்றி சீப் போடு வந்து அமர்ந்தாள்.

''நேரடியாய் இல்லைன்னாலும் சரளாவும் இந்த குடும் பத்து மருமகள்தான் - மகள் வழி வாரிசைக் கல்யாணம் செய்தவள் - ஆனால் குடும்பத்து பெரிய வைர நகை அதன் இப்போதைய மதிப்பு அரை கோடியைத் தாண்டும் - அது ஒரே மகனின் மகனான அனந்தனின் பெண்டாட் டிக்குத்தான் - அதுல சரளாவுக்கு மனத்தாங்கல்... அதைத் தானும் பூட்டி ஜொலிக்கணும்னு அரும்பாடுட்டா...''

''அவங்க கல்யாணத்தன்றேனும் நகையைப் போட் டுக்கத் தந்திருக்கலாமே, பாட்டி?''

''அத்தனை பேராசையும், பெருநாக்குமுள்ள பெண் ணிடமிருந்து நகை பத்திரமாய் மீளாதுன்னு ஒரு எண்ணம் எனக்கு... வெளவால் வீட்டுக்குப் போனால் நீயும் தொங்கு நானுந் தொங்குன்றது போல அவளுக்கு ஏற்றாற் போல ஒரு பொய்யை உருட்டி விட்டேன்! அந்த வைர மாலையின் தோஷத்தால்தான் வந்த பெண்கள் இளவய சுலயே இறந்தாங்க - அந்த சாபம் உனக்கெதும் மான்னேன்... மக்குப் பெண் நம்பினதோட இல்லாமல் உன்னிடமும் வத்தி வச்சிருக்கா... அனந்தனின் தாயைத் தவிர மற்ற யாரும் தலை நரைக்காமல் இறக்கலையம்மா - தன்னை சமாதானப்படுத்த சரளா ஏதேதோ கற்பனையில் இட்டு கட்டியிருக்கலாம்... ஆனா அதையெல்லாம் நீ நம்பலாமா?''



''ஆர்த்தி... குழந்தையுங்க கூட என்னை பரிதாபமாய் பார்த்தாளே?''

''சரளா விட்ட சரடை பாவம் குழந்தை கேட்டிருப்பா - அப்படியெல்லாம் ஏதும் இல்லைன்னு குட்டிகளிடம் நான் தெளிவு படுத்தணும்.''

''என் உயிருக்கு ஆபத்து - படத்தை சுவரில் மாட்ட ணும்னு.. நீங்க சொன்னதாய் ஆர்த்தி போனில் என்னிடம்...''

''சரளாவின் உளறல் நம்ப உறவுக்கு ஆபத்து என்றிருப் பேன் - தவிர உங்கக் கல்யாணப் படம் நம்ப வீட்டுக்கு அழகு சேர்க்குமே..''

அமோகாவின் மனம் துளி அமைதியாயிற்று.

''அப்புறம் இன்னுமொரு நல்ல சேதி அமோ... நம்ப நளினாவிற்குத் தோதான ஒரு வரன் வந்திருக்குது - நம்மளவிற்கு வசதியில்லை - ஆனால் விசாரிச்சதில் பையன் நயமான குணக்காரன்றாங்க. படிப்பிருக்கு - இனி உழைச்சு உசந்துக்க வேண்டியதுதான் - அடுத்த வாரம் பார்க்க வர்ரதாய் பையன் வீட்டில் சொல்லிவிட்டிருக் காங்க. நளினா ஆர்வமாயில்லை - செஞ்சோற்று கட னுக்கு, தான் இந்த குடும்பத்துக்குக் காவலாய் இருக் கணும்னு அவ நினைக்கறா. ஆனா இந்த வரன் தகை யணுமேன்னு நா கர்த்தரை வேண்டிக்கிறேன்.''

அமோகாவின் நெஞ்சிலிருந்து ஒரு பெரும் பாரம் இறங்கினாற் போலிருந்தது!

''அகல்யா வெளியே வாசல்லனு போறவளில்லை - கல்யாணம் நிச்சயமானால், பத்திரிகை அடிக்கறது சாமான்களை வாங்கற பொறுப்பெல்லாம் உன் கையி தான்... அது அப்புறம்... இப்ப தயாராகி நீ உன் தாத்தாவ போய் பாரு... நேற்று அவர் வீட்டிலேயே நீ தங்கியிரு கணும்... பாவம் அமோக்கு அதிர்ச்சின்னான் அனந்தன்.

எல்லாம் இன்பமான அதிர்ச்சிதானேம்மா... பிறந்த வீடும் புகுந்ததும் அடுத்தடுத்து அமைய, கொடுத்து வச்சவ ளில்லையா நீ?''

ஆமாம் என்றுதான் பட்டது! நளினா திருமணமாகிப் போய் விட்டால், தாத்தா மூலம் வீணாவையும் அங்கே வேலையிலிருந்து விரட்டி விடலாம்!

அநியாயம் தான்..

ஆனால் ஒரு விதத்தில் அதுதானே நியாயமும் கூட?

பிறகு மிஞ்சிய ஒரே முடிச்சு - அபிஷேக்தான்....

ஒரு மகனைப் பெற்று வளர்க்கும் நளினா எப்படி மறுகல்யாணம் செய்து கொள்கிறாள்?

அது அவள் பிரச்சனை... 27 வயதாகும் நளினாவிற்கு அபிஷேக் அவளது பதினாறாவது வயதிலேயே பிறந்து விட்டானா...?

கணக்கிட்ட புத்தியை சற்று அதட்டினாள்.

''பொறு... இந்த கணக்கெல்லாம் இப்போது ஏன்? என்று. அரைநாளில்... அதாவது நேற்றிரவு வின்ஸன் தன்னை அவரது பேத்தியாக அறிவித்ததிலிருந்து தன் உலகம் மிக மாறிவிடவில்லையா?

மேலும் மாறலாம்...

நளினாவும் வீணாவும் விலக, அனந்தன் இனி கட்டி யவளே தஞ்சம் என்று திருந்தக் கூடும் -

அப்படியாக, தானும் தன்னவனை மன்னித்து விடலாம்...

மனசுக்குள் ஒரு மாய மழைப் பொழிந்து பழைய கசப்பு களை எல்லாம் அடித்துக் கழுவக் கூடும்.



''போகத்திற்காகவே படைக்கப்பட்ட பொதுவுடைமைப் பொருள் பெண்'' - ஆனானப்பட்ட சாக்ரடீஸின் சிந் தனையே இந்தளவில் என்று இருக்க, மற்ற ஆண்களை குறை சொல்லக் கூடுமா?

ஆனால் பாரதியார் அதில் சேர்த்தி இல்லை -

''பெண்களை மிருகங்களாக வைத்து, ஆண்கள் மட் டும் மகரிஷிகளாக மாற முயலுதல் மூடத்தனம் - பெண்மை உயராமல் ஆண்மை உயராது'' என்று அடித்து வாதிட்டவராயிற்றே!

உற்சாகமானவள் வேறு ஒரு எளிய ஆரஞ்ச் நிற வாயல் புடவையில் தயாராகி தாத்தா வீட்டிற்குப் போனாள் -

போகும் வழியெல்லாம் புதுப்புது புரிதல்கள் -

ஆக தன் பேத்தி என்ற வாஞ்சையில்தான் தாத்த தனது கல்யாணத்தன்று வெற்று காசோலையை கையில் தந்தார் -

வைர வளையலை போடச் செய்தார் -

ஆனால் அனந்தன் அந்த 'செக்'கை ஒளித்து - அல்ல பத்திரப்படுத்தியது ஏன்?

வெளி மழை விட்டாலும் செடி மழை ஓயாதது போ சின்ன சின்ன குழப்பங்கள் அவளுள்.

ஆனால் நல்லதை மட்டுமே நினைக்க முயன்றா எஞ்சிய தன் ஒரே உறவை இனிக் கொண்டாடலாமே. தாயைப் பற்றி நூறு நூறு கேள்விகளைத் தாத்தாவி கேட்கலாம்.

தன் அப்பாவைப் பற்றி அழகாய் விவரிக்கலாம்.

எத்தனை உன்னதமான ஒரு மாப்பிள்ளையை தெரிந்து கொள்ளாமலேயே இழந்து விட்டீர்கள் என்பதைத் தாத்தாவிற்கு புரிய வைக்க வேண்டாம்?

ஆனால் துள்ளலும் துடிப்புமாய் வின்ஸனின் வீட்டு வாசலில் இறங்கியவளின் மனம் சுணங்கியது.

முதல் காரணம் - அங்கு அவள் கணவனின் கார் நின்றது. அடுத்து நின்றது ஒரு மருத்துவரின் வாகனம் என்பதை பின் கண்ணாடியில் பளிச்சிட்ட சிவப்பு சிலுவை சின்னம் சொன்னது.

உள்ளே விரைந்தவளை எதிர்கொண்ட முதிய வேலைக்காரர் -

''ஐயா மேலுக்கு சுகமில்லீங்கம்மா...'' அறிவித்தார்.

''என்னாச்சு?''

''விருந்தாட்களை வழியனுப்பிட்டு படுக்க நேத்து ராவு மணி பதினொண்ணாகிப் போச்சு - இன்னி காலைல எழுந்துக்கலை. ஓய்வெடுக்கட்டும்னு வீணாம்மாவும் எழுப்பலை... பிறகு மூச்சு ஒரு மாதிரி இழுபடவும் டாக்டருக்கு சொல்லிவிட்டு, கூடவே அனந்தன் ஐயாவுக்கும் தெரிவிச்சாங்க...''

''ஓ...'' தாத்தாவைத் தவிர வேறேதும் நினைப்பில் ஒட்டாமல், அவர் அறையை நோக்கி நடந்தவளை டாக்டர் எதிர்கொண்டார் - இறுகிய அவரது முகம் இவளுக்கு வேண்டிய... இல்லை... வேண்டாத சேதியைச் சொன்னது. ன் உயிரும் ஒடுங்கினது போலிருக்க, அருகிருந்த நாற்காலியில் சரிந்தாள்.

கேள்விகள் அநாவசியமாய் பட்டன...

அவற்றை எழுப்பவும் அவளுக்கு சக்தியில்லை.....



இவள் தலையைக் கோதிய அனந்தன் டாக்டரை வழியனுப்ப உடன் போனான் - சக்கையான உணர்வுடன் சிலையாய் அமர்ந்திருந்தாள் -

மனசாட்சி மட்டும் உரக்க அவளை விரல் நீட்டி குற்றம் சொன்னது -

'நேற்று நீ இங்கேயே இருந்திருக்கணும்... தாத்தாவிற்குத் துணையாய் நின்றிருக்கணும்...'

சரி... இன்று காலையிலேனும் போன் போட்டு அவரோடு பேசியிருக்கலாம் - 'ஸாரி தாத்தா - இதோ உங்களைப் பார்க்க வந்துட்டேயிருக்கேன்'னு...' என்று.

பலர் முன்னிலையில் தங்கள் உறவை அவர் வெளிப்படுத்திய பிறகு தான் - அவரது ஒரே உறவு - முறுக்கிக் கொண்டு விலகிய வலியை அவரால் தாளவில்லை போலும்.

வாழ்வில் தனக்கு ஒரு நல்ல ஆதரவு மிஞ்சியிருக்கிறது என்பதைத் தான் புரிந்து வந்த நேரம் ஏனிப்படி ஆனது?

அவர் கடைசியாய் பேசினதெல்லாம் மனதிற்குள் மோதியடித்தன -

''போர்ட்ரெய்ட்னு வெள்ளைக்காரங்க சொல்றது போல எம்மகள் பவளத்தை ஓவியமாய் வரையப் பண்ணத்தான் நான் ஓவியர் தரணியை வரவழைச்சது... கலையைத் தவி வேறு எண்ணமே இல்லாதது போலிருந்தார் உங்கப்பா. ரெண்டு பேருக்குமிடையே பதினைஞ்சு வருஷ இடை வெளி - ஆக அவர்களைப் பஞ்சும் நெருப்புமாய் நினைக்க தோணலை... ஆனா நீ சொல்றது போல காதல் அ களை எப்படியோ கோர்த்து விட்டிருச்சு...'

யாரோ தன் எதிரே நிற்பது புரிய, தலையை உயர்த்தினாள் - நின்றது வீணா -

''மன்னிக்கணும் உங்க தாத்தா இறந்துட்டார்...''

அவளிடமிருந்து சேதி வெளிப்பட்டது மேலும் இவளைக் குலைய செய்தது...

''நீதான் எந்தாத்தாவக் கொன்னுட்டே...''

வீணாவின் கண்ணாடிக் கண்கள் 'என்ன உளறுகிறாய்?' என்பதாய் வெறித்தன - ''நான் பெரியவரைக் கவனிக்க வந்தவ...'

''ல்ல... நீ வந்ததற்கான காரணம் வேற... யாரையோ... இந்த சொத்தையும் கூட சுருட்டிக்கலாம்னு வந்தே... அதற்கு இடைஞ்சலாய் இந்தப் பேத்தி முளைச்ச ஆத்திரத்துல நீ தாத்தாவைக் கொன்னுட்டே... இல்லைன்னா நேற்று படுக்கும் வரை நல்லா இருந்தவர் ஏன் சாகணும்?''

''நீங்க அவரோடவே தங்கியிருந்தால் இந்த சந்தேகக் கேள்விக்கு அவசியமிருந்திருக்காது...'' அலட்டாமல் பதில் வந்தது!

அமோகாவின் கூச்சலைக் கேட்டு வந்த அனந்தன் மனைவியின் தோளைத் தொட்டான்.

''ஷ்... என்ன இது...?''

''எல்லாருமாச் சேர்ந்து எந்தாத்தாவக் கொன்னுட்டீங்க...''

''நிதானமாய் யோசி, பேசு... ஏதேனும் குடிக்கிறியா?''

''சூடாய் பால் கொண்டு வரவா?'' வீணா இயல்பாய் வினவினாள் -

''ஏன் அதுல விஷம் சேர்த்து என்னையும் கொல்லவா?''

தாத்தாவின் சடலத்தருகே வெகு நேரம் இருந்தவள், பிறகு காரில் ஏற, அனந்தனே அதை ஓட்டினான்.



''உறவு தெரிய வந்த மறுநாளே அவரை இழப்பது வேதனைதான் அமோ...''

''அதை விட உங்க ஏமாற்று அதிக வேதனை - அவரது ஒரே வாரிசுங்கறதாலதான் நீங்க என்னை அத்தனை அவசரமாய் கல்யாணம் செய்துகிட்டீங்க...? அதுவும் ஏற்கெனவே ரெண்டு பேரோடு பண்ண லீலை போதாமல்...''

''யாரைச் சொல்றே?'' அனந்தனின் முகம் சுருங்கியது.

''எனக்கு தெரிஞ்சு ரெண்டுதான் - நளினாவும் வீணாவும்... இன்னும் வேறெந்த அழகிகளெல்லாம் உண்டு உங்கப் பட்டியலில்?''

அவன் முகம் இறுகியது -

''வீணா என்னோடு படிச்சவ - வின்ஸனய்யாவிற்கு ஒரு படிச்ச, பொறுப்பான உதவியாள் தேவைன்னதும் சிபாரிசு செய்தேன் - குடும்ப பொறுப்புகளால் கல்யாணத்தைத் தள்ளிப்போட்டவ, இப்ப அது தேவையில்லைன்னு நினைக்கறா... நளினா இங்கே, என்னோடவே வளர்ந்தவ - அவதான் எனக்கு வாழ்க்கைக்குத் துணையாய் வேணும்னால் என்ன தடை எங்கக் கல்யாணத்திற்கு?''

அடக்கிய ஆத்திரத்தால் அவனது கண்கள் சிவந்திருந்த

ஆனால் அதைக் கண்டும் அமோகா அயரவில்லை.

''மற்ற எதற்கும் தடையில்லாமல்தான் இருந்திருக்கு - நான் உங்க வாரிசை - உங்களையே உரிச்சு வச்ச போலிருக்கும் அபிஷேக்கைப் பார்த்துட்டேன் - ந ணாவை அவன் அம்மான்னு கூப்பிடுறான் - அ இனிப்போடு போய் அவனை ரகசியமாய் கொஞ்சிட் வர்ரா... எல்லாம் நானே பார்த்தாச்சு...''

இப்போது அவன் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது! கூடவே இனி எப்படி சமாளிப்பது என்ற யோசனை...

''அடடா, இவளுக்கு எல்லாந் தெரிஞ்சு போச்சே... இனி எந்த புது சாடு விட்டு இவளைக் கட்டிப் போடலான்னு தானே?''

ஆழ மூச்செடுத்துவிட்டு சொன்னான் -

''இல்லை அமு... இனி உண்மைகள் எல்லாம் உடைச்சு சொல்லிடப் போறேன் - அவற்றை நம்பறதும் நம்பாததும் உன்னிஷ்டம் - ஆனா இப்ப வேண்டாம்... தாத்தாவின் இழப்பை முதலில் உம்மனசு ஜீரணிக்கட்டும்... எல்லா அதிர்ச்சிகளும் ஒருசேர வேண்டாம்... இப்ப அத்தை பாட்டி, அக்காவைக் கூட்டிட்டு தாத்தா வீட்டிற்குப் போவோம்... மற்றதெல்லாம் பிறகு...''

புண்ணைக் கீறும் வரை கடும் வேதனைத் தெறிப்பாயிருப்பது கீறி திறந்து விட்டால், ஆஸ்வாசப்படும் - அது போல உள்ளத்து சீழை வார்த்தைகளால் பிதுக்கி வெளியேற்றியவளின் நெஞ்சில் சற்று அமைதி... ஆனால் கூடவே உள்ள அந்த வெறுமை - இனி அது நேராகுமா? நிறையுமா?

வின்ஸனின் இறுதி சடங்குகள் வரை அமோகாவின் பக்கத்திற்கு ஒருவராய் அத்தைப்பாட்டியும் அகல்யாவும் அரணாய் நிற்க, அவளோ உணர்ச்சியற்று ஒரு மரத் தூணாய் இருந்தாள்.

மூன்றாம் நாள் புதைத்த இடத்தில் பால் தெளித்து விட்டு தன் அறைக்கு வந்து குளித்து படுத்தபோது, மெதுவே அகல்யா வந்து அவளருகே அமர்ந்தாள் -

''அமோ, எனக்கே இப்பதான் தெரிய வந்த ஒரு ரகசி... ஒரு உண்மையை இப்போ உனக்கும் சொல்லப் போறேன்...''

அந்தத் தொனி இளையவளை எழுப்பி அமர வைத்தது. ''நளினாவோடு நீ பார்த்த, அபிஷேக்... எம்மகன் - நான்



சுமந்து பெற்ற என் மூத்த வாரிசு'' மிக சன்னமாய் சொன்ன அகல்யாவின் கன்னங்கள் நனைந்திருந்தன....

## 23



''யாரும் ஒரே சமயத்தில் புத்திசாலியாகவும், காதலிப்பவளாயும் இருக்க முடியாதுன்னு கேள்விப்பட்டிருப்பே - அது உண்மைதான் என்று நிரூபிச்சேன் நான்...''

அகல்யாவின் நடுங்கும் உதடுகள் தன் கடந்த காலத்தைச் சொல்ல ஆரம்பித்தன -

ஒடிசலாய், சற்று மங்கிய ஓவியம் போலிருந்த தன் கணவனின் சகோதரியை திகைத்து பார்த்திருந்தாள் அமோகா.

''கமலேஷ்னு எங்க உறவில் ஒருத்தன் - எனக்கும் அவனுக்குமாய் மங்கள முடிச்சு போட்டே வீட்டில் பேச, விவரம் அத்தனை அறியாத போதே எனக்கு அவம் பேரைக் கேட்டதும் வெட்கம் பொத்துக்கும் - அப்படியான எனக்கு எப்படி அந்த வேகம், வெட்கங்கெட்டத்தனம் வந்ததுன்னு புரியலை - அவன் எனக்கு பத்து வயசேனும் மூத்தவன் - தனக்குத் தெரிந்த, எனக்குப் புரியாத பலவற்றை அவன் எனக்கும் கற்றுந் தந்ததில்... முட்டாள் நான் இருபது வயசில் கர்ப்பமானேன்!''

அமோகாவின் முகம் சிவந்தது - ஆனால் சொன்னவளின் முகமோ வேதனை வெளிறலுடன்...

''தாயில்லாமல் வளர்ந்த பொண்ணு நான் - இருபது வயசென்பது ஒண்ணும் விவரமறியாத பருவமில்லைன்னாலும் எனக்குத் தெரிஞ்ச விவரம் அவ்வளவுதான் - நான்

கர்ப்பவதிங்கறது புரியவே மூணு மாசமாச்சு! - பிறகு அப்பவை நினைச்சா அடிவயிறு கலங்கினது - அஞ்சாம் மாசம் வயிறு வீங்கவும் அத்தைப்பாட்டியிடம் போய் சொன்னேன்..."

பேச வாய் வராத அமோகாவின் கரங்கள் நீண்டு அகல்யாவின் கைகளை ஆதரவாய் பற்றின.

"எங்கே, யாரிடம் போய் கருவைக் கலைக்கன்னு புரியாமல் என்னை அவங்க கிராமத்திற்குக் கூட்டிட்டுப் போனாங்க..."

"அந்தக் கமலேஷைக் கல்யாணம் செய்திருக்க எதும் முயற்சி...?"

"அந்த நரியின் கல்யாணப் பத்திரிகை எங்க கைக்கு வந்ததே - என்னை விட பணமும் பவிசுமாய் பெண் கிடைச்சதால்!? எனக்கு அபிஷேக் பிறந்த ஆறாம் மாசம் கமலேஷின் மனைவியும் பிரசவிச்சா..."

"கடவுளே..."

"அவர் இருக்கார் - அவன் பிள்ளை மூளை வளர்ச்சி குறைவுள்ளதாய் பிறந்ததாம். அந்த வருத்தத்தில் தம்பதிகளிடையே சண்டை, பிரிவுன்னாகிப் போச்சு..."

"ம்ப்ச்... அப்புறம் உங்க நிலைமை?"

பிறந்த குழந்தையை அத்தைப்பாட்டி என் கண்ணிலேயே காட்டலை... அது போச்சு போ - மறந்துடுன்னாங்க... ஆனா அப்பாவை எனக்கு மும்முரமாய் மாப்பிள்ளை தேட வச்சு, நான் மூணாம் மாசம் அப்பா வீடு திரும்பின போது... எங்கல்யாணத்திற்கான பந்தல் கால் நடப்பட்டிருந்துச்சு..."

அமோகாவின் விழிகளில் அவளது வருத்தம் ததும்பி வழிந்தது -

"ஐயோ... கொடுமைண்ணி...."



"ஆனா அத்தைப்பாட்டியின் மனசில் இரக்கமிருந்தது - தவமணிங்கற ஒரு பெண்ணிடம் எங்குழந்தையப் பாதுகாக்க, வளர்க்க ஏற்பாடு செய்திருக்காங்க..."

"ஓ... அந்த தவமணியை நான் பார்த்தேன்... அபிஷேக்கையும் லேசாய்..."

"எம்மகனை நேற்றிரவுதான் நா பார்த்தேன் அமோ... ஹையோ உடம்பெல்லாம் பூரிச்சு போச்சு தெரியுமா? பாவி நான் கவலையும் பயமுமாய் சுமந்த அந்தத் தங்கத்தை 12 வருஷங் கழிச்சு பார்த்தேன் - சாதாரணமாய் மூங்கில் மரம் பூக்காதாம் - தவறி பூத்தாலும் அது தாய் மூங்கிலுக்கு அழிவாம். அது போல முறை தவறி கரு உண்டானால் அதை சுமக்கறவ வாழ்வும் போச்சு.. அந்தப் பிள்ளையின் வாழ்வுந்தான் சுகப்படுமா? ஆனா என் அபிஷேக் சமர்த்து பையனாம் - படிப்பு, விளையாட்டிலெல்லாம் கெட்டிக்காரனாம்..."

"உங்க கணவர்.. அதாவது ஆர்த்தி அஸ்வினியின் அப்பா?"

"அவருக்கு இருதயத்தில் ஓட்டை, தெரிஞ்சே எங்களிடம் மறைச்சு நடந்தது எங்க கல்யாணம்... ஆக பரஸ்பர ஏமாற்று..."

"சந்தர்ப்பம் சில சமயம் இப்படி குழிகளைத் தோண்டிடுதுண்ணி... தடுமாறிடறோம்..."

"உண்மைதான். வாழ்க்கையை நாம லேசாய் நினைத்துவிடாதளவிற்கு அதைப் படிய வைக்க மகிழ்வோ துக்கமோ ஏதோ ஒரு பாரம் தேவைப்படுது. எனக்கு துக்கம்தான் பெரும்பாலும் வாய்த்தது..."

"இனி சந்தோஷம், நிம்மதி வாய்க்கட்டும்... நாங்க அதற்குத் துணை நிற்போம்..."

"நீயும் அனந்தனும் நிறைவாய் வாழணும்மா முதல்ல.. நீ அவனைச் சந்தேகப்பட்டு வறுத்ததாலதான் அவனு

அத்தைப்பாட்டியும் ஏன் நளினாவும் கூட இதுவரை மறைத்த உண்மைகளை எங்கிட்ட இப்ப சொன்னாள்..."

"ஏன் முன்னமே சொல்லலை? ஆண் வாரிசுன்னால் பெருமைன்னு..."

"முறையற்ற வாரிசில்லையா? அபிஷேக்கை அவ மானச் சின்னம்னுதான் ஒளிச்சு வளர்த்திருக்காங்க... ஆனா அத்தைப்பாட்டியால ரகசியத்தைத் தனியே காவந்து செய்ய முடியாமல் நளினாவின் உதவியையும் கேட்க, அவ அபிஷேக்கை தன் மகன் போல பாசங்காட்டி வளர்த்திருக்கா... 'அவனோட அப்பா அயோக்கியன் - என்னையே அம்மாவாய் நினைக்கட்டும் இந்த செல்லப் பயல்னு..."

"ம்ம்... அநாதைங்கற கறையோடு வளர வேண்டாம்னு நினைச்சிருப்பாங்க... எங்கப்பா கூட தன் பிறப்பு பற்றி அறியாதவர்தான் - ஆனா அவரப் போல உன்னதமான மனுஷனைப் பார்ப்பது அரிது அண்ணி... அபிஷேக்கும் அருமையானப் பையனாய் வளருவான்."

அகல்யாவின் விழிகள் மீண்டும் நிரம்பின - இப்போது மகிழ்வின் பெருக்கால்.

அறையின் கதவு தட்டப்பட்டது.

"அது அனந்தனாய்தான் இருக்கும் - அக்கா உனக்கு அமோவோடு பேச 15 நிமிஷந்தான் - மீதமெல்லாம் எனக்குன்னான்."

அகல்யா சிறு புன்னகையுடன் வெளியேற அனந்தன் நுழைந்து கதவை மூடினான்.

அமோகா சில நாட்களுக்கு முன்பு குடைந்த அலமாரியை, அதே பெட்டியைத் திறந்து ஒரு கடித உறையை எடுத்து அவளிடம் நீட்டினான். தாத்தாவின் காசோலைக்காய் அவள் அங்கு தேடிய போதும், மற்ற எதிலும் அவளது



கவனமில்லை. இப்போதும் அதே அலட்சியத்துடன் உறையிலிருந்த கடிதத்தை உருவிப் பிரித்தவளின் கண்கள் விரிந்தன -

அது அவளது தந்தையின் கையெழுத்தில் இருந்தது! முதலில் அது தெரிவித்த சேதியை சற்று பரபரப்பாய் வாசித்தவள், மறுபடி நிதானித்து வாசித்தபோது விவரங்கள் சற்று தெளிவாயின.

பெரியவர் வின்ஸனுக்கு அப்பா எழுதியிருந்தார் - அதாவது தன் மாமனாருக்கு -

முதல் சில வரிகளில் தாவி ஓடிய அமோகாவின் கண்கள் அடுத்த வரியில் அழுந்தியது -

'என் உடல்நிலை முன்பு போலில்லை - ஏதோ கோளாறு - சீக்கிரம் மரண அனுபவம் கிட்டும் என்று தோன்றுகிறது. என் செல்ல மகள், அமோகாவை உலகில் யாருமின்றி விட்டுச் செல்கிறேன் என்று ஒன்றுதான் குறை... அவள் உங்களது பேத்தியும்தான்.

நீங்கள் அவளது பொறுப்பேற்றுக் கொள்ள வேணும்.

லீலாவும் [அதாவது உங்களின் பவளம்] நானும் உங்களுக்கு ஏமாற்றம் அளித்திருக்கலாம் - ஆனால் நாங்கள் ஏமாறாது நிறைவாகவே வாழ்ந்தோம் - லீலாவை உயிருக்குயிராய் நேசித்தேன் மரணம் எங்களைப் பிரித்த பின்னும் எங்களின் நேசம் வாடவில்லை. ஆனால் அவளை உங்களிடமிருந்து பிரித்ததற்காய் மன்னியுங்கள். பதிலா அமோவை ஏற்றுக் கொள்ள வேணும்...

அன்பும் நன்றியுமாய்

தரணி -

புரிந்து அவள் அந்தக் கடிதத்தை மடித்த வேளை அனந்தன் பேசினான்.

''சத்தியமாய் நாம சந்தித்த அன்றிரவு உன்னைக் கரை யேறிய ஒரு கடல்கன்னியாய்தான் பார்த்தேன் அமோகா. நீ வின்ஸன்னய்யாவின் பேத்தி, ஒரே வாரிசுன்னு எனக்குத் தெரியாது. என்னா உன்னைப் போய் பார்த்து, விசாரித்து வரச் சொன்னவர், நீ அவரது பேத்தின்னு சொல்ல லியே? அதற்கான முதல் குறிப்பு திருமணத்தன்று அவர் உன் கையில் தந்த அந்த 'செக்' - அடுத்ததாய் அவர் வீட்டு விருந்தாளியான உன்னிடம் அவர் காட்டின பரிவு, பாசம்... அன்று காரில் நாம் வீடு திரும்பும்போதுதான் சரி இதுல ஏதோ விஷயமிருக்குன்னு யூகிச்சேன். இந்தக் கடிதம் மரண மடைந்த தாத்தாவின் தலையணைக்கடியில் இருந்தது.''

ஆக அந்த மௌன யோசனையைத்தான், இவள் அவன் வீணாவை நினைத்து மருகுவதாய், அவளைப் பற்றிய உண்மைகளை மறைப்பதாய் எடுத்துக் கொண்டாள்!

''மாமாவிடம், அதாவது உன் அப்பாவிடம் நான் வின்ஸனைப் பற்றிப் பேசியிருந்தால் கூட முன்பே உண்மைகள் புரிபட்டிருக்கலாம்... அன்று நாங்க கடலில் குளிக்கப் போன போதும்கூட மாமாவை நம்மோட வந்து விடத்தான் கேட்டேன் - ஒரு நோயாளியை கூட வைத்து பராமரிப்பது சிரமம்னார்... நான் செய்த ஒரே தவறு - மாமாவைத் தனியே கடலில் இறங்க விட்டது.''

''அப்பா... ஒருவேளை தற்கொலை எண்ணத்தோடு... அப்படி தனியே... கடலில்?'' தயங்கித் தவித்து கேட்டு விட்டாள்.

''அமோகா'' - சற்று அதட்டலாய் உயர்ந்தது அவன் குரல். ''மாமா கோழையல்ல... ஆனால் ஏன் கடலில் இறங்கினார்னு எனக்கும் தெளிவாயில்லை... கடைசி ஆசைன்னுவாங்களே... அப்படி ஏதேனும் இருந்திருக் கலாம். தற்கொலை செய்யப் போகிறவர் என்னை உடன் கூட்டிப் போகணும்? என் தலை வலியைக் கவனிச்ச



தால்தான் என்னை வீட்டிற்குப் போகச் சொன்னார்... இப்ப நம்ம கதைக்கு வருவோம் அமோ... உன்னில் உனக் காகவே மயங்கினவன் நான்... அந்த மழை இரவில் எனக்குள் மழையாய் இறங்கிட்டே நீ.''

அவளுள் படர்ந்த நிம்மதி முழுமையடையத் தவித்தது - அத்தவிப்புடன் மேலும் சில சந்தேகங்களைக் கேட்டாள்.

''நா இங்கே முதல் நாள்... அதாவது வந்த நாளன்று ராகுல் அண்ணா ஏதோ உங்களிடம் தனியே சொன்னார் - இந்தப் பெண்ணிடம் உண்மையைச் சொல்லலாமா... அல்லது உண்மை தெரிய வந்தால் எப்படி? என்பது போல?''

''அபிஷேக்கைப் பற்றிதான் கவலைப் பட்டிருப்பார் - உனக்கு அவன் அகல்யாவின் மகன் என்பதைச் சொல்லணுமா? - சொன்னால் நீ அக்காவை மதிப்பாயாங்கற குழப்பம் அண்ணனுக்கு...''

''அந்த வீணா?''

''சொன்னேனே - என் காலெஜ் மேட் - உடன் படிச்சவ அவ்ளோதான்.''

''அதை நான் வேலையாட்களிடம் விசாரிச்சு தெரிஞ் சுக்க வேண்டியிருந்தது. நீங்க ஏதும் சொல்லலியே.''

''அவளுக்குப் பல குடும்பப் பிரச்னைகள் - அமைதி யான ஓரிடத்தில் வேலை கிடைச்சால் நல்லதுன்ர அவள் நினைப்பிற்கும், வின்ஸன் தாத்தாவின் தேவைக்கும் ஒத்துப் போனதால் சிபாரிசு செய்தேன். அங்கே அடைஞ் கிடக்கும் வீணாவுக்கு என்னைக் கண்டால் புது உற்சாக பொத்துக்கும். ஆனால் வின்ஸனய்யா அவளோ இயல்பாயும் கூட பேசுவதில்லை - சிரிச்சுப் பேசினா ஊர் வேண்டாத கதை கட்டும்னு சிடுசிடுப்பார் - ஆனா ஆன.. அவ அங்கே பாதுகாப்பாய் இருந்தாள்.

''ஆனா... அந்த வைர வளையலை... வீணா தான் எடுத்தான்னு எனக்கு ஒரு சந்தேகம்... என்ன விஷயம்னா...''

''தெரியும் - வீணா சொன்னா - அந்த வளையலின் அமைப்பு ரொம்பப் பிடிச்சுப் போக, அதை எடுத்துப் போய் கொச்சின் நகைக் கடையில் காட்டினாள் - அப்பதான் அது வைரங்கற விவரம் தெரிய வந்திருக்குது. சரி - இதே மாடலில் போலி வைரங்கள் பதிச்ச ஒரு-தங்க வளையல் செய்து தாங்கன்னு சொல்லிட்டு வைர வளையலை எடுத்தது போலவே வச்சுட்டா. அவ கொஞ்சம் விசித்திரமானவள்தான்.''

''இனி... அவ எங்கே போவா?''

''தாத்தா அவளுக்கென சில லட்சங்கள் வச்சிருப்பதாய் எங்கிட்ட முன்னமே சொன்னதுண்டு - ஒதுக்குபுற கிராமத்திலுள்ள ஒரு விசாலமான வீட்டையும் கூட அவ உபயோகிச்சுக்கலாம் - அதை முதியோருக்கான இல்லமாய் அவள் நடத்தினால்.''

''ஏன் வீணா கல்யாணம் செய்துக்கலை?''

அவள் குடும்பத்தில் பார்த்த சில கோளாறுகளால் அவளுக்கு அதில் நாட்டமில்லை - ஏதோ கசப்பு... அது தனி கதை... நமக்கு அவசியமில்லாதது... எல்லாப் பெண்களுக்கும் என்னை மாதிரி அழகான, அற்புதமான ஆண் துணை அமைஞ்சிடுமா என்ன? ராகுலண்ணன் நிலையும் கூட பரிதாபம்தான் - திருமணமானபின் குடும்பத்தைப் பிரிஞ்சிருப்பது - ஆனா சரளாண்ணியின் அப்பத்தாதான் தம்பதிகளுக்கு ரொம்ப எடுத்துச் சொன்னாங்க போல - அண்ணி அசைஞ்சு தந்த பாடில்லை - ஆக அண்ணன் கோவைக்கே போக வேண்டியதுதான்... அவருக்கேற்ற ஒரு வேலை அங்கே கிடைச்சிருக்குது... நளினாக்கும் இப்ப வரும் வரன் முடிவாகிடும்னு நினைக்கறேன்.''

''ம்ம்... அத்தைப்பாட்டி சொன்னாங்க..'' தனக்கும் ஒரு சில விவரங்கள் தெரியும் என்று காட்டிக் கொள்ள முயன்றாள்!



''வீணா மற்றபடி இறுகி இருந்தாலும் சில சமயம் படபடப்பானது அவளது குணம். இல்லைன்னா வளையலை ஏன் யாரிடமும் சொல்லாமல் எடுக்கணும்? நகை கடை மானேஜர் எனக்குத் தெரிஞ்சவர்ன்றதால் அது போலீஸ் கேஸாகாமல் தப்பினது.''

''உங்களைக் கண்டதும் வர்ற துள்ளல் தனி அன்று மாலை உங்களைக் கடற்கரையில் நளினாவோடக் கண்டதும்... எனக்கும் சற்று பதட்டமாகித்தான் போச்சு... இப்பப் புரியுது.''

''முழுசாய் சொல்லிடறேன் - அபிஷேக்கை யாரே
ஒரு பெண் தேடி வந்ததாய் தவமணி சொல்லியிருக்கா
அந்தப் பெண் மெக்ருன் இனிப்போட வந்ததில் நளின
விற்குள் கலக்கம்... வேறு யாருக்கோ நம்ப ரகசியம் தெரிஞ்
போச்சுன்னு என்னிடம் சொன்னதைத்தான் நீ கண்
முறுக்கிகிட்டே. அதுபற்றி விசாரிக்க நானும் அலைந்தேன்

''சகலத்தையும் என்னோடு பகிர்ந்து கொண்டிருந்
தால் பிரச்சனையே இல்லையே... ஒளிவும் மறைவுந்த
அத்தனைக் குழப்பத்திற்கும் ஆதாரம்?''

''ஒத்துக்கறேன் அமோ... கல்யாணத்திற்கு நான் அ
சரப்பட்டதற்கும், இதற்கும் ஒரே காரணம்தான்.''

அவன் கைகள் அவள் முகத்தை மிருதுவாய் ஏந்தி

''இந்தப் பொக்கிஷம், பேரழகு எங்கை விட்டு நழு
மோங்கற பயம்! அந்த மழை இரவில் மின்ன
ஒளியில் காட்சி தந்த ஒரு கடல் மோகினி, நான் கொ
விலகினால்கூட என் கை விட்டுப் போயிருவாளோ
பதட்டம்... இத்தனை பேரழகி எப்படி இத்தனை
கல்யாணமாகாமல்... காத்திருந்தான்ர... பிரமிப்பு!''

''எனக்கொன்றும் வயசு முப்பதோ நாற்பதோ இல்லை

''இல்ல செல்லம்'' என்றபடி அவளை நெஞ்
சேர்த்து கொண்டான்.

''நான் தேடி வந்தவரின் மகள் நீ என்பதும்... நான் கண்டு பிரமித்து அழகி மறு நிமிஷம் என் காரில் வந்து ஏறியதும்... ம்ப்ச்... எல்லாம் ஏதோ கடவுளே சம்மதித்தது போலிருந்தது. அன்றிரவு உங்கப்பாவோடு நான் வெகு நேரம் பேசியதும், நீ எங்களுக்குத் தோசை சுட்டுப் பரிமாறி, தேநீர் தந்த தெல்லாம் இன்னும்கூட ஒரு கனவுதானோன்ற பிரமிப்பு...''

அவனது இதயத் துடிப்போடு பேச்சையும் கேட்டபடி நின்றவள் சற்றே விலகி அவனை புதிதாய் பார்ப்பது போல நிமிர்ந்து நோக்கினாள்.

எல்லா சந்தேகங்களும் புடைத்து நீக்கப்பட்ட சந்தோஷத்தில் அவனை விழி நிரம்பப் பார்த்தாள் -

'மினுமினுங்கற உங்கண்ணு என்னை நனைக்குது அமோ... குளிருது..''

தோள்களைக் குலுக்கினான்.

''எனக்குந்தான்'' - என்றாள் மிருதுவாய்.

''என்ன... மனசுக்குள்ள மழையா... குளிரா?''

''ம்ம்... ஆச்சரியமும்தான் - முன்பின் தெரியாத உங்களின் காரில் முதல் நாளிரவு ஏறியது... பிறகு தினம் தினம் நீங்க என் வீட்டிற்கு வந்தது... அவசரமாய் நடந்த கல்யாணம்... எல்லாமே.''

''இடையே எத்தனைக் குழப்பங்கள் அமு... வெளிப்படையாய் சொல்லாதது எந்தப்புதான்.. ஆனா நேர்மையும் எளிமையுமான நீ என்னை வெறுத்திடுவியோ, விலகிடுவியோன்ர...''

அவனை தொடர விடாமல் தழுவிக் கொண்டாள்... மழையும் மண்ணும் போல இருவரும் குழைந்து கலந்த அந்த அணைப்பின் சுகத்தில் மற்ற கசடுகளெல்லாம் கரைந்து போய், காதல் வாசம் மட்டும் கிளர்ந்து எழும்பியது...